# இத்தாலி நாட்டு

# வித்தகத் தமிழர்



அமுதன் அடிகள்

# இத்தாலி நாட்டு வித்தகத் தமிழர்

அமுதன் அடிகள்

விடியல் பதிப்பகம்
அ. பெ. எண். 154
திருச்சிராப்பள்ளி—620 001.

நூல் : இத்தாலி நாட்டு வித்தகத் தமிழர்

ஆசிரியர் : அமுதன் அடிகள்

உரிமை (C) : அமுதன் அடிகள் (1943)

ஆண்டு : சூன், 1995

பொருள் : ஆராய்ச்சி

பக்கங்கள் : 208

விலை : ரூ. 30-00

பதிப்பு : முதல் பதிப்பு

அச்சகம் : கவிக்குயில் அச்சகம்
47, நல்ல தம்பி தெரு
திருவல்லிக்கேணி
சென்னை—600 005.

வெளியீடு : விடியல் பதிப்பகம்
அ.பெ.எண் 154
திருச்சிராப்பள்ளி—620 001



**மேதகு இரா. ஆ. சுந்தரம் ஆண்டகைக்கு**
**உரித்தாக்கல்**

தஞ்சை மண்ணில் அரும்பணிகள்
தகவாய்ப் புரிந்து தழைத்தோங்கி
நெஞ்சில் நிலைத்த பேரறிஞன்
நிகரில் முனிவன் வரலாற்றைத்
தஞ்சை மண்ணின் முதலாயர்
தகைசால் சுந்தரம் ஆண்டகையெம்
நெஞ்சில் நிறைந்த அவரடிக்கே
நினைந்திந் நூலைச் சாத்துகின்றேன்

**அமுதன் அடிகள்**

டாக்டர் சூ. இன்னாசி
எம்.ஏ.; பி.எச்.டி; (மதுரை)டி.லிட்.; (சென்னை)
பேராசிரியர்—தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.

# அணிந்துரை

தவத்திரு அமுதன் அடிகள் திருமறைத் தொண்டராக மட்டும் செயல்பட்டு வருபவரல்லர்; தமிழ்மொழி உணர்வினராகவும் பணியாற்றி வருகிறார் என்பதற்குச் சில நூல்கள் இதற்கு முன்னரே சான்றுகளாக உள்ளன. அவ்வரிசையில் மேலும் ஓர் அணிகலனாக இந்நூல் அமைந்துள்ளது.

வீரமாமுனிவர் வாழ்வு பற்றிய நூல்களும் ஆய்வுகளும் இதற்கு முன் வெளிவந்துள்ளன. அவற்றுள் வெளிப்படாத சிலவற்றைக் காட்டியும் தம்கருத்தை ஆங்காங்கே நிலை நாட்டியும் தாம் தமிழன்பர் மட்டுமல்லர்; தகுதி வாய்ந்த ஆய்வாளர் என்பதையும் இந்நூலாசிரியர் மெய்ப்பிக்கிறார்.

வீரமாமுனிவரின் பிறப்பிடம், குடும்பம் பற்றிய குறிப்புக்கள், இளமைக்கால வரலாற்றுச் செய்திகள் புதியனவாகத் தோன்றுகின்றன. இதற்கு முன் வெளிவந்துள்ள நூல்கள் அனைத்தையும் ஆய்ந்தறிந்து அவற்றுள் எழுந்த

ஐயங்களை வினாக்களாகத் தொடுத்து விடை காணும் முறை சிறந்த ஆய்வு நெறியாகும். தேம்பாவணி இயற்றப் பட்ட ஊர் பற்றிய ஆய்வு எதிர்கால ஆய்வுக்குக் களம் அமைத்துத் தந்துள்ளது. வீரமாமுனிவரின் விவேகம் பற்றிய சிந்தனை ஆசிரியரின் நடுநிலைப் போக்கைக் காட்டுகிறது.

ஆற்றொழுக்கான நடை, பொருத்தமான தலைப்புகள், வரலாற்று முறையிலான ஆய்வுப் போக்கு ஆகியவை நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன. ஆசிரியரின் பன் னாட்டுப் பயணம், பல்துறைப் படிப்பு, பன்மொழி அறிவு முதலியவை நூலின் வெற்றிக்குத் துணையாகின்றன.

இனி வீரமாமுனிவர் பற்றிய ஆய்வு நூல்களுள், குறிப் பிடத் தக்க ஒன்றாக இதுவும் திகழும். வீரமாமுனிவரின் பல்துறைப் புலமையையும் பல்வகை ஆற்றலையும் வெளிக்கொணரும் வகையில் அமைந்த இந்நூல், அமுதன் அடிகளின் திறமையையும், புலமையையும் யாவரும் உணர்ந்து போற்றக் கருவியாகவும் அமைந்துள்ளது. வீரமாமுனிவர் புகழுக்கு இந்நூல் ஒரு கலங்கரை விளக்கம். வெள்ளி விழாவைக் காணும் அடிகளுக்கு இது ஒரு புகழ் விளக்கு. ஆண்டுதோறும் இதுபோல ஒரு நூலை அடிகள் படைத்தருள இறையருளை வேண்டுகிறேன். வெள்ளி விழா நாயகரை வாழ்த்துகின்றேன்.

சென்னை
17-6-95

அன்பன்,
கு. இன்னாசி

# என்னுரை

மூன்றாண்டுகளுக்கு முன்னரே எழுதத் தொடங்கிய இந்நூலைப் பல்வேறு பணிகள் காரணமாக நிறைவு செய்ய இயலாமல் தவித்தபோது என் மனதில் அலை மோதிக்கொண்டிருந்த கவலை உணர்வினைச் சொல்லி வடித்தல் இயலாததாகும். அதனை இப்போது நிறைவு செய்து, என் மறைப்பணி வெள்ளிவிழாவின்போது வெளி யிடுவதை அரும்பேறாகவே கருதுகின்றேன். நூலை நிறைவு செய்ய என்னுள் தோன்றாத் துணையாக நின்று இயக்கிய இறையருளை எண்ணி வியக்கின்றேன்.

தனிநாயகம் அடிகளார் இயற்றிய 'தமிழ்த்தூது' என்னும் நூலில் அமைந்துள்ள 'காப்பியக் கவிஞர் வீரமா முனிவர்' என்னும் கட்டுரையை என் மாணவப் பருவத்தில் பயின்று, அதன் வாயிலாக முனிவரின் அருமை பெருமை களை முதன்முதலாக உணர்ந்தேன். அதற்கும் முன்னரே என் அருமைத்தாத்தா—தந்தைவழித்தாத்தா மட்டுமல்ல. என் தமிழ்த்தாத்தாவும் அவர்களே—திருமிகு. தர்ம பிச்சை அவர்களின் மடியிலமர்ந்து என் மழலைப் பருவத் தில் தேம்பாவணிப் பாடல்களை அவர்கள் பாட நான் கேட்டு மகிழ்ந்துள்ளேன். பொருள்புரிந்து கொள்ளவியலாத அப்பருவத்திலேயே முனிவரின அறிமுகத்தை நான் பெற்றதை இன்றும் எண்ணி மகிழ்கின்றேன்.

பின் பலரும் முனிவரைப்பற்றி இயற்றிய கட்டுரை களையும் நூல்களையும் பயின்றபோது அவற்றில் உண்மைச்செய்திகளும் செவிவழிச்செய்திகளும் கலந்திருந் தமையால் எது உண்மை என அறிந்துகொள்ள இயலாமல் மயங்கினேன். அவ்வமயம் லியோன் பெஸ் அடிகளார் இயற்றிய 'பெஸ்கி அடிகளாரின் வாழ்வும் பணியும்' என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன். ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த இத்தகைய நூலைப் போலத் தமிழில் ஒரு நூல் எழுதப்படவில்லையே என வருந்தினேன்.

ஆகவே, செண்பகனூர் திரு இதயக்கல்லூரியின் பழஞ்சுவடிக் காப்பகத்தில் இரு கோடை விடுமுறைகளைச் செலவிட்டு, நூலெழுதத் தேவையான குறிப்புக்களைத் திரட்டினேன். முனிவர் எழுதிய நூல்களையும், முனிவரைப்பற்றி எழுதப்பட்ட நூல்களையும் சேகரித்தேன். ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியம், இலத்தீன், தமிழ் ஆகிய பல்வேறு மொழிகளிலும் முனிவரைப்பற்றி வரையப் பட்ட நூல்களைப் படித்தேன். முனிவர் பிறந்த ஊராகிய காஸ்திலியோனே நகருக்குச் நேரில் சென்று கள ஆய்விலும் ஈடுபட்டேன்.

இத்தகைய அருமுயற்சியின் பயனாக வெளிவரும் இந் நூலை எழுதும் பணியில் உறுதுணையாக நின்று ஊக்க மொழி கூறி உதவிய அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகும். குறிப்பாக இந்நூலுக்கு அரியதோர் அணிந்துரை நல்கிச் சிறப்பித்துள்ள ஆராய்ச்சி அறிஞர் சு. இன்னாசி அவர்களுக்கும், நூலைக் குறுகிய காலத்தில் விரைவாக அச்சிட்டு உதவிய கவிக்குயில் அச்சகத் தாருக்கும் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என் சமயப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் என்னை ஊக்குவித்து, நான் இதழியலும், தமிழும், பிறமொழி களும் பயில வாய்ப்பு வழங்கி என்னை ஆளாக்கி என் நெஞ்சத்தில் என்றும் நிறைந்து நிலைத்து வாழும் மேதகு சுந்தரம் ஆயர் அவர்களுக்கு இந்நூலை உரித்தாக்கிச் செஞ்சோற்றுக்கடன் கழித்து மகிழ்கின்றேன்.

‘இத்தாலி நாட்டு வித்தகத் தமிழர்’ என்னும் இந்நூல் முனிவரின் புகழைத் தமிழகத்தில் பரப்பும் ஆற்றல் மிக்க கருவியாக அமைந்து செயல்பட வேண்டும் என்பதே என் வேணவா.

13-6-1995 அமுதன் அடிகள்
திருச்சிராப்பள்ளி.

# நூலின் உள்ளே...

| | | ப. எண் |
|---|---|---|
| 1. | முனிவரின் தனிப் பெருமை | 1 |
| 2. | பிறப்பும் கல்வியும் | 6 |
| 3. | இந்தியாவுக்குப் பயணம் | 11 |
| 4. | மதுரைப் பணிக்களம் | 15 |
| 5. | பணி தொடங்குகிறது | 20 |
| 6. | அன்றையத் தமிழகம் | 23 |
| 7. | தென்பாண்டி மண்ணில் முனிவர் | 27 |
| 8. | சோழ மண்டலத்தில் | 29 |
| 9. | உயிருக்கு உலையா? | 33 |
| 10. | முனிவரின் தமிழாசிரியர் யார்? | 42 |
| 11. | செல்லுமிடமெல்லாம் சிறப்பு | 50 |
| 12. | ஏலாக்குறிச்சியில் முனிவர் | 53 |
| 13. | முனிவரின் தமிழாற்றல் | 56 |
| 14. | தேம்பாவணி இயற்றப்பட்ட ஊர் | 59 |
| 15. | கருத்து மோதலில் கனிந்த நூல்கள் | 63 |
| 16. | விந்தையிலும் விந்தை இது! | 68 |
| 17. | வித்தகர் போற்றும் வேதியர் ஒழுக்கம் | 74 |
| 18. | அரியலூர் மழவராயரின் அன்பளிப்பு | 76 |
| 19. | சந்தா சாகிப்புடன் நட்பு | 80 |
| 20. | ஆற்காட்டில் முனிவர் | 89 |
| 21. | முனிவருக்கு விவேகம் போதாது | 92 |
| 22. | முனிவரின் வாழ்க்கை முறை | 95 |
| 23. | நீதிக்காக்க நிமிர்ந்து நின்றவர் | 99 |
| 24. | பெயர் மாற்றங்கள் | 103 |
| 25. | முனிவரின் பன்மொழிப்புலமை | 106 |
| 26. | முனிவரின் மருத்துவப்புலமை | 112 |
| 27. | பல்கலைப்புலமை | 114 |
| 28. | இணையற்ற எழுத்துச்சீரமைப்பு | 116 |
| 29. | முனிவரின் நண்பர்கள் | 123 |
| 30. | முனிவர் பணிபுரிந்த ஊர்கள் | 127 |
| 31. | முதுமையிலும் உழைப்பு | 133 |
| 32. | முனிவரின் இறுதிக்காலம் | 136 |
| 33. | முனிவர் இயற்றிய நூல்கள் எத்தனை? | 140 |
| 34. | துணைநின்ற நூல்கள் | 190 |



வீரமாமுனிவரின் திருமுழுக்குப் பதிவேடு



முனிவர் பிறந்த காஸ்தில்யோனே ஆலயம்



முனிவர் பிறந்த ஊரில்
அவரது மூன்றாம் நூற்றாண்டு நினைவுச் சிலை



காஸ்தில்யோனே நகராட்சி மன்றத்தில் முனிவரின் நினைவுச் சிலை திறப்புவிழா




முனிவர் நினைவுப் பள்ளி - அவர் பிறந்த ஊரில்



வீரமாமுனிவர் சாலை - அவர் பிறந்த ஊரில்

# 1. முனிவரின் தனிப்பெருமை

தமிழ் மொழி வரலாற்றில் கிறித்தவர்களின் பணி போற்றுதற்குரிய ஒன்றாகும். அவருள்ளும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சமயப்பணி புரிவதற்காகத் தமிழகம் வந்த மறைத்தொண்டர் பலர் ஆற்றியுள்ள பணி வியப்புக் குரியது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத இவர்கள் தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழியைப் பயின்று, அம்மொழியில் நூல்கள் இயற்றுமளவுக்குச் சிறந்து விளங்கினர் என்பது மலைப்புக்குரிய செய்தி. அதுவும் சமயப் பணியாற்றுவதற்காகக் குறித்த இடத்தில் தங்காமல், அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்த இவர்களுக்குத் தமிழைப் பயிலவும், தமிழில் நூல்கள் இயற்றவும் நேரம் எவ்வாறு கிடைத்திருக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை. தாங்கள் பழகியிருந்த தட்பவெப்ப நிலைக்கு மாறாகச் சுட்டெரிக்கும் வெயில், முற்றிலும் மாறுபட்ட உணவுப் பழக்கம், அதிலும் மேலை நாட்டவரின் புலாலுணவுப் பழக்கத்தை விட்டொழித்த மரக்கறி உணவு, சைவத் துறவிகளைப் போல உடையணிந்து வாழும் வழக்கம்—இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, எப்படித்தான் இவர்களால் தமிழகத்தில் வாழ முடிந்தது, பல்வேறு பணிகளுக்கிடையில் நேரமில்லாமல் தவித்த நிலையிலும் தமிழைப் பயின்று நூல்களை எவ்வாறு இயற்ற முடிந்தது என்னும் வினாக்கள் நம்முள்

எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காண்பதும் எளிதல்ல.

ஆனால் இவர்கள் தமிழைக் கற்றார்கள் என்பதும், இவர்களுள் சிலர் தமிழில் நூல்கள் இயற்றி இறவாப் புகழ் பெற்றார்கள் என்பதும் வரலாறு காட்டும் உண்மை.

இத்தகைய மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களுள் குறிப் பிடத்தக்கவர் அண்டிறீக்கிப் பாதிரியார். 1546—1600 ஆகிய ஆண்டுகளில் தென்பாண்டி நாட்டுத் தூத்துக்குடிப் பகுதியில் வாழ்ந்து பணியாற்றிய இவரே 'முதல் ஐரோப்பியத் தமிழறிஞர்' என்று போற்றப்படுகின்றார். இவர் மொழி பெயர்த்த தம்பிரான் வணக்கம், கிரீசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு ஆகிய நூல்களே முதலில் அச்சேறிய தமிழ் நூல்கள் என்னும் பெருமையைப் பெறுகின்றன. தமிழ் அகரமுதலி ஒன்றை இவர் தொகுத்ததாகவும் போர்த்துக்கேய மொழியில் தமிழ் இலக்கண நூலை இவர் இயற்றியதாகவும் இவர் எழுதிய மடல்களிலிருந்தே நாம் அறிகின்றோம்.

பதினாறாம் நூற்றாண்டில் கோவாப் பகுதியில் பணி யாற்றிய தெஃபாரியா என்னும் துறவி தமிழில் அச்சுக் களை வார்த்தெடுத்தார். இவ்வெழுத்துக்கள் கொல்லம், கொச்சி, புன்னைக்காயல் ஆகிய இடங்களில் அமைந் திருந்த அச்சகத்தில் பயன்படுத்தப்பட்டன. இவற்றைப் பயன்படுத்தியே தம்பிரான் வணக்கம், கிரீசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு ஆகிய நூல்கள் அச்சிடப் பட்டன, 'தமிழ் அச்சுத் துறைத் தந்தை' என இவர் போற்றப்படுவது மிகவும் பொருத்தம்.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழகத் தில் பணிபுரிந்த பல மேலை நாட்டுத் துறவியர் தமிழின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர். இவர் களுள் தமிழ் இலக்கணம் எழுதிய பல்தசார்த கோஸ்தா (1610—73), கஸ்பார் தெ அகில்லார் (1588) ஆகிய துறவி

யரும், போர்த்துக்கேய—தமிழ் அகரமுதலியைத் தொகுத்த அந்த்தாம் தெ ப்ரொயென்சா (1625—66), பிரெஞ்சு தமிழ் அகர முதலியைத் தொகுத்த லூயிசு தெ பூர்சு, பல உரைநடை நூல்களை இயற்றிய ஜாக்கொமோ தெ ரோஸ்ஸி போன்ற துறவியரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரைப் பகுதியில் பணி புரியத் தொடங்கிய இராபர்ட் தெ நோபிலி என்னும் தத்துவ போதகர் (1577—1656) 'தமிழ் உரைநடையின் தந்தை' எனப் போற்றப்படுகின்றார். தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய பன்மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர், தமிழில் 40 நூல்களை இயற்றியதோடு தெலுங்கிலும் வடமொழியிலும் பல நூல்களை இயற்றியதாக அறிகிறோம். தமிழராக மாறித் தமிழராகவே வாழ்ந்து, தம்மைப் போன்ற பிறதுறவியரும் தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடித்து வாழ வழிவகுத்த பெருமை இவருக்கு உரியது.

இலக்கணம், அகர முதலி, உரைநடை நூல்கள் எனப் பலவகை நூல்களை இயற்றியது உண்மையே. எனினும் மேற்குறித்த மூன்றுவகை நூல்களோடு தேம்பாவணி என்னும் பெருங்காப்பியமும், திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களும் யாத்த பெருமை வீரமாமுனிவருக்கு உரியது. யாரும் முனைந்திராத பல துறைகளில் முதல்வராக முனைந்து பணியாற்றிய வீரமாமுனிவரின் தமிழ்ப் புலமையும் ஆற்றலும் ஈடு இணையற்றவை என்பது மிகையல்ல.

வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகம் மறுத்தல், லுத்தேர் இனத்தியல்பு, பரமார்த்த குரு கதை, வாமன் கதை முதலிய உரைநடை நூல்கள் முனிவரால் இயற்றப் பட்டவை. 'தமிழ் உரைநடைக்குத் தந்தை தத்துவ போதகரே என்ப. அது உண்மையெனினும் இவரால் அது

வளம் பெற்று மிக்குயர்ந்தது' எனத் தவத்திரு. தனி நாயகம் அடிகளார் கூறுவதை எவரும் மறுக்கவியலாது.

தமிழை முறையாகப் பயின்று துறைபோகிய வித்தகர் வீரமாமுனிவர். அதனால்தான் தேம்பாவணி போன்ற பெருங்காப்பியத்தை அவரால் இயற்ற முடிந்தது. அதனாலேயே செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணத் திறவுகோல் போன்ற இலக்கண நூல்களை இலத்தீன் மொழியிலும், ஐந்திலக் கணத் தொன்னூல் விளக்கம் என்னும் நூலைத் தமிழிலும் இயற்ற அவரால் முடிந்தது. தமிழ் இலக்கண வரலாற் றில், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் தொகுத்துக் கூறும் நூல், முனிவரால் இயற்றப்பட்ட தொன்னூல் விளக்கமே ஆகும். அவ்வாறே செந்தமிழுக்கு ஓர் இலக்கணமும், கொடுந் தமிழுக்கு (பேச்சுத் தமிழுக்கு) ஓர் இலக்கணமும் தனித் தனியாக இயற்றி, தமிழில் மொழியியலுக்கு வித்திட்ட பெருமை வீரமாமுனிவர்க்கு உரியது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனியிடம் பெற்ற திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்து, ஐரோப்பிய அறிஞர் களிடையே தமிழின் பெருமை பரவ வழிவகுத்தவர் முனிவர். உலக அரங்கில் தமிழ் இலக்கியத்தை முதன் முதலாக மொழிபெயர்த்து அறிமுகப்படுத்திய தனிப் பெருமை வீரமாமுனிவருக்கு உரியதாகும்.

அவ்வாறே சதுரகராதி என்னும் முதல் தமிழ் அகர முதலியைத் தொகுத்துப் பெருமை பெற்றார் முனிவர்.

இவ்வாறு பல 'முதல்' பெருமைகளுக்கு உரியவராகிய முனிவரைப் பற்றிப் பலர் பல நூல்களை இயற்றியுள்ளனர். அவற்றுள் பல ஆதாரமில்லாமலே பல செய்திகளை எடுத் துரைக்கின்றன. கோனான்குப்பத்தில் வாழும் காலத்தில்

முனிவர் தேம்பாவணியை இயற்றியதாகவும், ஆவூரில் முனிவர் நெடுங்காலம் வாழ்ந்ததாகவும். அவர் சந்தா சாகிப்புக்குத் திவானாகத் திகழ்ந்ததாகவும், அவரிடமிருந்து இறையிலி நிலங்களாகச் சில ஊர்களைப் பெற்றதாகவும் பலர் பல தவறான (ஆதாரமில்லாத) செய்திகளை எழுதியுள்ளனர். முனிவரின் தமிழாசிரியர் யார் என்பது பற்றியும் பலர் தவறான செய்திகளைப் பரப்பியுள்ளனர்.

ஆகவே ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு முனிவரின் வாழ்வும் பணியும் பற்றி ஒரு நூல் எழுதப்பட வேண்டுமென்பது காலத்தின் கட்டாயமாகி விட்டது. அதனை நிறைவு செய்யும் வகையில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. ஆதாரமில்லாமல் இந்நூலில் எச்செய்தியும் எழுதப்படவில்லை என்பது உண்மை.

# 2. பிறப்பும் கல்வியும்

இத்தாலிய நாடு இயற்கை வளம் கொழிக்கும் நாடு. அதிலும் வட இத்தாலி மலைவளம் செறிந்த எழில் கொஞ்சும் நாடு. வட இத்தாலியின் வெனிஸ் மாநிலத்தில் மாந்த்துவா (Mantova) மாவட்டத்தில் ஒரு சிறிய குன்றின் மேல் அமைந்துள்ள 'காஸ்தில்யோனே தெல்லெ ஸ்திவ்யேரெ' (Castiglione delle Stiviere) என்னும் ஊர் தான் வீரமாமுனிவரின் பிறப்பிடம். 'காஸ்தில்யோனே' என்னும் பெயரில் இப்பகுதியில் வேறு ஊர்களும் உண்டு. எனவே, 'தெல்லெ ஸ்திவ்யேரெ' என்பதைக் சேர்த்தே இவ்வூர்ப் பெயர் இன்று வழங்கப்படுகின்றது. ஸ்திவ்யேரே ஆற்றின் கரையில் அமைந்துள்ள காஸ்தில்யோனே என்பது இதன் பொருள். இவ்வூரிலேயே 8-11-1680 அன்று முனிவர் பிறந்தார்.

முனிவர் திருமுழுக்குப் பெற்ற கோயில் இன்று இல்லை. 1706—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ப்ரெஞ்சுப் படையெடுப்பின்போது அது அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் முனிவரின் திருமுழுக்குப் பதிவேடு இன்றும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. 13-11-1680 அன்று திருமுழுக்குப் பெற்ற முனிவருக்கு 'கொஸ்தான்ஸோ ஜொஸெஃபோ எவுசேபியோ பெஸ்கி' (Costanzo Gioseffo Eusebio Beschi) என்று பெயரிடப் பட்டது. பெஸ்கி என்பது குடும்பப் பெயராகும். ஜ்யு

செப்பே (Giuseppe) என்பதே ஜோசப் என்னும் பெயரின் இத்தாலிய வடிவம் என்றாலும் திருமுழுக்குப் பதிவேட்டில் 'ஜோஸெஃபோ', என்னும் வடிவமே காணப்படுகின்றது. இது மாந்த்துவா வட்டார வழக்கமாக இருக்கலாம். எவுஸேபியோ என்னும் பெயர் திருமுழுக்குப் பதிவேட்டில் மட்டுமே காணப்படுவதாகும். அப்பெயரை முனிவரே கூடப் பயன்படுத்தவில்லை. முனிவர் இத்தாலிய மொழியிலும் இலத்தீன் மொழியிலும் மற்ற இரு பெயர்களையே தம் கையொப்பமாக இடுகின்றார்.

தந்தையாரின் பெயரை 'முனைவர் (டாக்டர்) கௌதியோஸோபெஸ்கி' என்றும், தாயின் பெயரை 'எலிசபெத்தா' என்றும் பதிவேடு குறிக்கின்றது. தந்தையின் பெயர் 'கவுண்ட் (பிரபு) கண்டோல்ஃபோ பெஸ்கி' என்றுதான் முனிவரின் வரலாற்றை உரிய ஆதாரங்களுடன் ஆராய்ந்து எழுதிய பெஸ் அடிகளார் குறித்துள்ளார். முனிவரைப் பற்றி இத்தாலிய மொழியில் எழுதப்பெற்ற இரு நூல்களும் அவ்வாறே குறிக்கின்றன. ஆனால், முனிவரது பிறப்பின் மூன்றாம் நூற்றாண்டு நிறைவினையொட்டி அந்தோனியோ சொர்ரெந்த்தீனோ எழுதிய நூல் திருமுழுக்குப் பதிவினை நிழற்படமாக வெளியிடுவதோடு, அக்கையெழுத்துப் பகுதியை காஸ்தில்யோனேஊரின் அன்றைய (1980) பங்குத் தந்தை 'மரினோ பார்பியேரி' அடிகளார் படியெடுத்துக் கொடுத்ததையும் குறிப்பிடுகின்றது. மரீனோ அடிகளார் முனிவரின் தந்தையார் பெயரை 'கௌதியோசோ(Gandioso) என்றே குறிப்பிடுகின்றார். பதிவேட்டைக் கூர்ந்து கவனித்துப் படித்தால் கௌதியோசோ என்பதே சரியான பாடமாகத் தோன்றுகிறது.

முனிவரின் தந்தையார் உயர்குடியைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் முனைவர் பட்டம் பெற்றவர் என்பது மட்டுமல்ல, அவரது பெயருக்கு

முன்னால் 'சிறப்பும் மாண்பும் மிக்க' என்னும் அடை மொழியும் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அதோடு குதிரைப்படைத் தலைவர் என்னும் குறிப்பும் பதிவேட்டில் காணப்படுகின்றது. இதனைச் சிலர் 'கவுண்ட் (பிரபு)' எனத் தவறாகப் படித்துள்ளனர்,

முனிவருக்குத் திருமுழுக்கு வழங்கிய முனைவர் ஜொவான்னி பாத்திஸ்தா கொர்ராதீனி' வட்டாரத் தலைமைக் குருவாக இருந்தவர்; சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றவர்; காஸ்தில்யோனே சிற்றரசராகிய 'இரண்டாம் ஃபெர்தினாந்தோ'வின் செயலராகஇருந்தவர். ஞானத் தந்தையாகப் பொறுப்பேற்றவர் ஜூலியோ போஸியோ அடிகளார்; ஞானத்தாய் ஓனெஸ்தா பெல்லீனி அம்மையார். இவர் காஸ்தெல்லானோ டியேகோ லூயிஜ் பெல்லீனி என்பவரின் துணைவியார்.

பெஸ்கி குடும்பம் இன்று காஸ்தில்யோனே ஊரில் மிகவும் பெருகியுள்ள குடும்பம். 1981-ஆம் ஆண்டுக்குரிய தொலைபேசி அட்டவணையில் 69பேர் 'பெஸ்கி' என்னும் குடும்பப் பெயரைத் தாங்கியோராக உள்ளனர். எனவே, முனிவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இன்னார் எனச் சுட்டுதல் இன்று எளிதல்ல. முனிவர் பிறந்த வீடும் இது வெனச் சுட்டுதல் இயலாது. இன்று காஸ்தில்யோனே ஊரில் பெஸ்கி மாளிகைகள் காணப்படுவது உண்மையே. எனினும் அவற்றில் காலத்தால் பிற்பட்ட கட்டடக் கலையே காணப்படுவதால் அவை முனிவர் காலத்துக் கட்டடங்கள் அல்ல. பிரெஞ்சுப் படையெடுப்பின்போது முனிவரது பெற்றோர் வாழ்ந்த மாளிகை அழிவுற்றது என்பது பொருந்தும்.

முனிவர்தம் பெற்றோர் பற்றிய குறிப்புக்களோ, முனிவரின் உடன்பிறந்தோர் பற்றிய குறிப்புக்களோ நமக்குக் கிடைக்கவில்லை. முனிவர் தமிழகத்திலிருந்து தம் உடன்பிறந்தாருக்கோ உறவினருக்கோ எழுதிய மடல்

களும் நமக்குக் கிடைக்கவில்லை. எனவே முனிவரின் குடும்பம் பற்றிய விவரம் எதையும் நம்மால் கூறவியலாது.

திருமுழுக்குப் பதிவேடும் நமக்குக் கிடைக்கவில்லை யென்றால் முனிவரின் முழுப்பெயர், பெற்றோரின் பெயர், குடும்ப நிலை பற்றிய எவ்விவரமும் நமக்குக் கிடைத்திருக் காது. திருமுழுக்கப் பதிவினைத் தேடியறிந்து கண்டு பிடித்தவர் பொறியியல் துறைப் பேராசிரியராகிய அகொஸ்தீனோ அகொஸ்தீனி என்பவர். அதனை வெளிப் படுத்தியவர் எமிலியோதேஃஸா.

காஸ்தில்யோனே இளவரசர் இரண்டாம் ஃபெர்தி னாந்தோவின் மகனாகப் பிறந்த அலோய்சியுஸ் கொன்சாகா பின்னாளில் இயேசு சபையில் சேர்ந்தார். இளமையிலேயே இறந்த இவர் இன்று புனிதராகப் போற்றப் பெறுகின்றார். காஸ்தில்யோனே மக்கள் இன்றும் கொன்சாகாவை அறிந்த அளவுக்கு முனிவரை அறிந்திருக்கவில்லை. பங்குத் தந்தை மரீனோ பார் பியேரி அடிகளின் முயற்சியால் இன்று காஸ்தில்யோனே யில் பெஸ்கி தொடக்கப்பள்ளி நிறுவப்பட்டுள்ளது. இப் பள்ளியில் பீற்றர் பெஸ்கி என்னும் சிற்பி வடித்த முனிவரின் பளிங்குச் சிலையும், காஸ்தில்யோனே நகராட்சி மன்றத்தில் ஒரு செப்புச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன. முனிவரது பிறப்பின் மூன்றாம் நூற்றாண்டு விழா தமிழகத்தில் கொண்டாடப்பட்டதைப் போலவே இவ்வூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முனிவரின் இளமைக் காலத்தைப் பற்றிய குறிப்புக் கள் ஏதும் நமக்குக் கிடைக்கவில்லை சொம்மர்ஃபோகல் அடிகளார் மூலம் நமக்குக் கிடைத்துள்ள குறிப்புகள் வருமாறு:

21-10-1698 — அன்று நொவெல்லாராவில் உள்ள இயேசு சபைப் புதுமுகத் துறவு

இல்லத்தில் பெஸ்கி சேர்ந்தார். அப்போது அவருக்குப் பதினெட்டு வயது.

1700 செப்டம்பர் முதல்
1701 வரை —ரவென்னா நகரில் தொடக்க நிலை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1701—1703 —பொலோஞா நகரில் மெய்யியல் பயின்றார்.

1703—1706 —நடுநிலை, உயர்நிலை வகுப்புக்களுக்கு இலக்கணம் இலக்கியமும் கற்பித்து வந்தார்.

1706—1710 —சமயக் கல்வி பயின்றார்.

1709 —ஆம் ஆண்டில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

# 3. இந்தியாவுக்குப் பயணம்

இந்தியாவில் சமயப்பணி புரியவேண்டும் என்னும் எண்ணம் பெஸ்கியின் உள்ளத்தில் எழுந்த காலம் எதுவெனத் தெரியவில்லை. ஆனால் 3. 12. 1706 அன்று பொலோஞாவிலிருந்து பெஸ்கி எழுதிய ஒரு மடலில் தாம் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாக அந்தோனியோ சொர்ரெந்த்தீனோ தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய எண்ணம் எழுவதற்கு மற்றொரு காரணமும் இருந்திருக்கலாம். தென்னிந்தியாவில் மதுரைப் பகுதியிலும் கர்நாடகப் பகுதியிலும் சமயப்பணி புரிந்த குருக்களின் தொகை குறைவாகவே இருந்தது. ஆகவே இப் பகுதிகளில் சமயப்பணிபுரிய இன்னும் பலர் தேவை என்பதை ஐரோப்பியக் கத்தோலிக்கருக்கு உணர்த்துவதற்காக மதுரை மறைப்பணிக்களத்திலிருந்து பிரான்சிஸ் லய்னெஸ் அடிகளாரும், கர்நாடகப் பகுதியிலிருந்து வெனான்ஸ் புஷே அடிகளாரும் 1704-ஆம் ஆண்டு ஐரோப்பா சென்றனர். இளைஞரான பெஸ்கி இவ்விருவரையும் சந்தித்திருக்க வாய்ப்பு உண்டு, ஏனெனில் இவ்விருவரும் இயேசு சபையைச் சார்ந்த குருக்கள். ஆகவே இருவரும் இயேசு சபைக் குருமடங்களுக்குச் சென்று தென்னிந்தியாவில் சமயப்பணி புரிய முன்வருமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்திருப்பார்கள் என நம்ப இடமுண்டு. இருவருள் பிரான்சிஸ் லய்னெஸ் அடிகளார் மயிலாப்பூர் துணை

ஆயராக 1708-ஆம் ஆண்டு லிஸ்பன் நகரில் திருநிலைப் படுத்தப்பட்டார். அவர் 1710-ஆம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். பெஸ்கி வேறொரு கப்பலில் லிஸ்பலினிலிருந்து புறப்பட்டு 1710-ஆம் ஆண்டு இந்தியா வந்து சேர்ந்தார்.

1711-ஆம் ஆண்டுமடல் பெஸ்கி மதுரை மறைப்பணிக் களத்துக்கு மார்ச் (1711) திங்களில் வந்ததாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் பெஸ்கி 4-11-1711 அன்று திருச்சியை அடுத்துள்ள ஆவூரிலிருந்து எழுதிய மடலில் 8-5-1711 அன்று மதுரை மறைப்பணிக் களத்துக்குத் தாம் வந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

மதுரைப் பகுதியில் பணியாற்ற வேண்டுமென்னும் வேணவா நிறைவேறிய நிலையில், பெஸ்கி உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவராகிய மிக்கேல் ஆஞ்சலோ தாம்புரீனி அடிகளார்க்கு விடுத்த மடல் அவரது மன நிலையைக் காட்டுகின்றது.

"இயேசு கிறிஸ்துவில் பெருவணக்கத்துக்குரிய

தந்தை அவர்களே,

> நான் விரும்பி எதிர்பார்த்திருந்த மறைப்பணிக் களத்துக்கு வந்து சேர்ந்துவிட்ட நிலையில், தங்களுக்கு அளப்பரிய நன்றி கூறுதல் என் கடமையென உணர்கின்றேன்.
>
> இம்மறைமாநிலத்தை அடைந்தபோது சபைத் தலைவர்களிடம் மறைப்பணிக் களத்தில் நான் சேர்வதற்காகத் தாங்கள் கொடுத்தனுப்பிய கடிதத்தைக் காட்டியதும், அம்மறைப்பணிக் களத்துக்காக என்னை ஆயத்தம் செய்து கொள்ளுமாறு அவர்கள் ஆணை பிறப்பித்தனர். மேத்திங்கள் 8-ஆம் நாள் மாட்சிமிக்க புனித மிக்கேலின் திருவிழாவன்று நான் மறைப்பணிக் களத்தை அடைந்தேன். இந்நாட்டுக்கு வந்துற்றதைப் பற்றி நான் அடையும் மகிழ்ச்சியைக் கடவுள் ஒருவரே

அறிவார். ஐரோப்பிய வாழ்க்கை முறையை விட மிகவும் வேறுபட்டுள்ள இவ்வாழ்க்கை முறையை என் உடல் எளிதாக ஏற்றுக்கொண்டு விட்டது. இம்மறைப் பணிக்களத்தில் கடந்த ஆறு மாதங்களாக வாழ்ந்து வரும் என் உடல் நலம் நன்றாகவே உள்ளது. என் பாவங்கள் காரணமாக இங்கு வாழ நான் தகுதியற்ற வனாகி விடாமல் கடவுள் அருள்புரிய வேண்டும். ஒரு தந்தையைப் போல என்மீது அன்பு பொழிந்து வரும் தங்கள் ஆசியை நாடுகின்றேன். அதனால் நான் இறக்கும் வரையில் சபையின் உண்மையான மகனாக வாழவும், எப்போதும் எதிலும் கடவுளின் காட்சியை யும் மனிதரின் மீட்பையும் மனதில் கொண்டு உழைக்கவும் தகுதி பெறுவேனாக.

ஆவூர். 4-11-1711

பெஸ்கி மதுரைப் பணிக்களத்துக்கு வந்த அதே ஆண்டில் நவம்பர்த் திங்களில் ஜோசப் சராவ்யா என்னும் அடிகளாரும் அக்களத்துக்கு வந்து சேர்ந்தார். இருவரை

---

இந்தியாவில் பணியாற்றிவந்த இயேசு சபையினர் உரோமையிலுள்ள தங்கள் படைத் தலைவருக்கு ஆண்டு தோறும் ஒரு விரிவான மடல் எழுதி முந்தைய ஆண்டில் தாங்கள் ஆற்றியபணிகளை விரித்துரைப்பது வழக்கம். இதனை ஆண்டறிக்கை என்பது பொருந்தும். அவ்வளவு விரிவாக இம்மடல்கள் அமைந் துள்ளன. இத்தகைய ஆண்டுமடல் எழுதும் பொறுப் பினை ஒவ்வோர் ஆண்டும் ஒரு குரு ஏற்பார். தென்னிந் தியாவில் மலபார் மறைமாநிலத்தில் மதுரை, முத்துக்குளித் துறை (தூத்துக்குடி), திருவாங்கூர் ஆகிய மறை பகுதிகள் அமைந்திருந்தன. மதுரை மறைப்பகுதியிலிருந்து ஆண்டுதோறும் அனுப்பப்பட்ட மடல்களே பெஸ்கியின் வரலாற்றை அறிய நமக்கு மிகவும் துணை புரிகின்றன.

யும் சேர்த்து மதுரைப் பணிக்களத்தில் பன்னிரண்டு குருக்கள் பணியாற்றி வந்தனர். தெற்கே திருநெல்வேலி முதல் வடக்கே வேலூர் வரை விரிந்திருந்த அம்மறைப் பணிக்களத்தில் பல்வேறு ஊர்களில் வாழ்ந்த கத்தோலிக் கருக்குச் சமயப் பணி ஆற்றவும், கத்தோலிக்க சமயத்தைப் பிறருக்கு எடுத்தோதவும் குருக்கள் தொகை போதுமான தாக இருக்கவில்லை. 1711-ஆம் ஆண்டு மடல் 'பதினாறு குருக்களாவது தேவை' எனக் குறிக்கின்றது. ஆனால் மதுரைப் பணிக்களத்தில் பதினான்கு பேருக்கு மேல் குருக்கள் எப்போதுமே இருந்ததில்லை.

# 4. மதுரைப் பணிக்களம்

பெஸ்கி இயேசுசபைத் துறவியாக வாழ்ந்தவர். இச் சபை இலொயோலா இஞ்ஞாசியார் என்பவரால் 1534-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கத்தோலிக்க சமயத்தில் இத்தகைய ஆண், பெண் துறவியர் சபைகள் பல உண்டு. ஒவ்வொரு சபையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகத் தொடங்கப்படுதல் வழக்கம். மார்ட்டின் லூத்தர் என்னும் செருமனி நாட்டு அகஸ்தீனியன் துறவி பதினாறாம் நூற்றாண்டில் பாப்புவின் அதிகாரத்தினின்று பிரிந்து தனித் திருச்சபையைத் தொடங்கிய காலத்தில், பாப்புவின் அதிகாரத்தை வலுப்படுத்தி, மாற்றுச் சீர்திருத்தத்தை உறுதிப்படுத்தும் வகையில் இயேசு சபை தொடங்கப் பெற்றது. பாப்பு அனுப்பும் இடங்களுக்குச் சென்று சமயப் பணி ஆற்றுவதில் இயேசு சபையினர் சிறப்புக் கவனம் செலுத்தினர். இஞ்ஞாசியாரின் தோழராகிய பிரான்சீஸ் சவேரியார் 1543-ஆம் ஆண்டு முதல் 1549-ஆம் ஆண்டு வரை கேரளத்திலும் தமிழகத்திலும் கடற்கரைப் பகுதிகளில் சமயப் பணி புரிந்தார். மலாக்கா ஜப்பான் ஆகிய நாடுகளிலும் அவர் சமயப் பணியாற்றினார்.

இந்தியா முதலிய நாடுகளில் சமயப் பணிக்குரிய அருளாட்சிப் (ஞான ஆதிக்கப்) பொறுப்பு பாப்பரசரால் போர்த்துக்கல் மன்னருக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் 15-ஆம் நூறறாண்டு முதல் பணியாற்றி

வந்த பல சபைக் குருக்களும் போர்த்துக்கல் மன்னரின் அருளாட்சிப் பொறுப்பில் பணிபுரிந்து வந்தனர். குருக்களின் வாழ்க்கைச் செலவுத் தொகைக்கும் போர்த்துக்கல் மன்னரே பொறுப்பேற்றிருந்தார். இதனால் செலவு மிகுதியே எனினும் போர்த்துக்கல் மன்னர்களின் ஆழ்ந்த சமயப் பற்றினை இது எடுத்துக்காட்டுகின்றது. தங்கள் அருளாட்சிப் பொறுப்பிலிருந்த பகுதிகளுக்கு மறை ஆயர்களை நியமிக்கும் சிறப்புரிமை பாப்பரசரால் போர்த்துக்கல் மன்னர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இத்தகைய அருளாட்சிப் பொறுப்பு 1450-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

உரோமையிலிருந்த இயேசு சபைத் தலைவருக்குக் கீழ் பல மறைமாநிலங்கள் அமைந்திருந்தன. அவற்றுள் மலபார் மறைமாநிலமும் ஒன்று. இம்மறை மாநிலத்தின் ஒரு பகுதியாக மதுரை மறைப்பணிக்களம் விளங்கியது. மறைமாநிலத் தலைவருக்குக் கீழ் மறைப் பணிக்கள முதல்வர் ஒருவர் பொறுப்பேற்றிருந்தார்.

பெஸ்கி மதுரைப் பணிக்களத்தில் தொண்டாற்ற வந்த காலத்தில் சார்லஸ் மிக்கேல் பெர்த்தோல்தி அடிகளார் மறைப்பணிக்கள முதல்வராகப் பணிபுரிந்து வந்தார். இத்தாலியராகிய அவர் பணியாற்றி வந்த ஆவூருக்கு வந்து தங்கியிருந்த காலத்திலேயே பெஸ்கி தாம் மறைப்பணிக்களத்துக்கு வந்து சேர்ந்த விவரத்தை உரோமையிலுள்ள சபைத் தலைவருக்கு மடலாக எழுதினார். பெஸ்கி ஆவூரில் தங்கிப் பணியாற்றினாரா என்பது ஐயத்துக்கு உரியது. ஆனால் தமது நாட்டவரும், வயதில் முதிர்ந்த குருவுமாகிய பெர்த்தோல்தி அடிகளாரைச் சந்திக்கவும், அவருக்கு உதவிபுரியவும், அடிக்கடி ஆவூர் சென்றார் என்பது உறுதி.

பொதுவாக அன்றைய இந்தியாவில் போர்த்துக்கேசியரின் செல்வாக்கு மிகுந்திருந்த இடங்களிலேயே

கத்தோலிக்கர் வாழ்ந்து வந்தனர். குருக்களுள் பெரும்பாலோர் போர்த்துக்கேயராகவே இருந்தனர். அவர்கள் இந்தியாவில் வாழ்ந்தாலும் போர்த்துக்கேயப் பண்பாட்டையே கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர். ஐரோப்பாவைப் போலவே இந்தியாவிலும்குருக்கள் கருப்பு உடை அணிவதே அன்றைய வழக்கமாக இருந்தது.

ஆனால் மதுரைப் பகுதி மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது. 1606-ஆம் ஆண்டு முதல் 1645 - ஆம் ஆண்டு வரை அங்குப் பணியாற்றிய இராபர்ட் தெ நொபிலி அடிகளார் ஐரோப்பிய வாழ்க்கை முறையை விட்டு, இந்தியப் பண்பாட்டை மேற்கொண்டு இந்தியத் துறவியாகவே வாழ்ந்தார். காவி உடை அணிந்து, சைவ உணவு உண்டு வாழ்ந்த அவர் சைவ, வைணவ சமயங்களை நன்கு கற்றறிந்தார். இந்தியப் பண்பாட்டைத் தமது பண்பாடாகக் கொண்டொழுகியதோடு தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய இந்திய மொழிகளை நன்கு கற்றார். தமிழில் முதன் முதலாக உரைநடை நூல்களை எழுதியதால் அவர், 'தமிழ் உரைநடைத் தந்தை' என்று போற்றப் படுகின்றார். அவர் தமிழில் 40 நூல்களுக்குமேல் எழுதியதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இராபர்ட் தெ நொபிலியும் அவரோடு பணிபுரிந்தவர்களும் அவருக்குப் பின் மதுரைப் பணிக்களத்தில் பணிபுரிந்தவர்களும் இந்திய மரபுக்கேற்பத் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டனர். இராபர்ட் தெ நோபிலி தத்துவ போதகர் என்றும், ஜான் தெ பிரிட்டோ அடிகளார் அருளானந்தர் என்றும், புத்தேரி அடிகள் பெரிய பரஞ்சோதி நாதர் என்றும், வெனான்ஸ் பூஷே அடிகளார் சஞ்சீவிநாதர் என்றும் பெயர் மாற்றம் செய்து கொண்டனர். அவ்வாறே பெஸ்கியும் தம் பெயரைத் தைரியநாத சுவாமி என்று மாற்றிக் கொண்டார். பின்பு அதுவே வீரமாமுனிவர் என மாற்றம் பெற்றது.

நொபிலியின் பணிமுறை மாற்றத்துக்குத் தகுந்த காரணம் உண்டு. தமிழகத்தில் கடலோரப் பகுதிகளி லேயே முதலில் கிறித்தவம் பரவியது. பிரான்சிஸ் சவேரியார் காலம் தொடங்கிப் பல குருக்கள் அப்பகுதியில் சமயப் பணி புரிந்து வந்தனர். கடலோரப் பகுதிக் கிறித்து வர்களில் சிலர் மதுரையில் பாண்டிய மன்னனிடம் பணி புரிந்து வந்தமையால் அம்மக்களின் ஆன்மீக நலன் நாடி ஒரு குரு மதுரையில் தங்கிப் பணியாற்றி வந்தார். இவ்வாறு பணிபுரிந்து வந்த கொன்சாலோ ஃபர்னாண்டஸ் அடிகளாருக்குத் துணை புரியவே நொபிலி அனுப்பப் பட்டார். கொன்சாலோ அடிகளார் மதுரையில் கருப்பு உடை அணிந்தவராகவும், போர்த்துக்கேய வாழ்க்கை முறையைக் கைவிடாதவராகவும் வாழ்ந்து வந்தார். கடலோரப் பகுதிமக்கள் அனைவருமே கிறித்தவராக மாறி விட்டமையால் அப்பகுதியில் போர்த்துக்கேய வாழ்க்கை முறை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆனால் கிறித்தவர் மிகக் குறைந்த தொகையினராக வாழ்ந்து வந்த மதுரையில் அவ்வாழ்க்கை முறை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே கொன்சாலோ அடிக ளாரை அந்நியராகக் கருதிய மதுரை மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அவரால் கிறித்தவ சமயத்தைப் பிறருக்கு எடுத்தோத இயலவில்லை.

1606-ஆம் ஆண்டு அங்கு வந்த நொபிலி இந்நிலையைக் கண்டு மனம் நொந்தார். கொன்சாலோ அடிகளாரை மக்கள் ஏற்றுக் கொள்ளாமைக்குக் காரணமென்ன என்று ஆராய்ந்தார். அவரது போர்த்துக்கேய வாழ்க்கை முறையே காரணம் என்று தெளிந்தார்.

இந்திய மக்களையும் அவர்களது பண்பாட்டையும் புரிந்து கொள்வதற்குத் தமிழும், வடமொழியும் அறிந் திருத்தல் இன்றியமையாதது என்பதை நொபிலி உணர்ந் தார். ஆகவே, தமிழையும் வடமொழியையும் கற்கத் தொடங்கி, விரைவில் அம்மொழிகளில் புலமை பெற்றார்.

அம்மொழிகளில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் வல்லவ ரானார். தெலுங்கு மொழியையும் திறம்படக் கற்றார்.

தமிழையும் வடமொழியையும் கற்ற நொபிலி சைவ, வைணவ, வேதாந்த சமய நூல்களையும் பயின்று அவற்றில் வல்லுநரானார். அதன்பின் தமது பெயரைத் 'தத்துவ போதகர்' என்று மாற்றிக் கொண்டார். சைவ உணவை மட்டுமே உண்பவராக, அதுவும் ஒரு நாளில் ஒரு முறை (மாலை நான்கு மணிக்கு) உண்பவராகத் தம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டார். காவி உடையும் கமண்டலமும் தலைப்பாகையும் பூநூலும் அவரது உடலை அணி செய்தன. எல்லா வகையிலும் இந்தியத் துறவியாக வும் இந்தியச் சமயங்களை அறிந்தவராகவும், அச்சமய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தமிழில் தெளிவாக உரையாடவும் உரையாற்றவும் வல்லவராகவும் அவர் விளங்கினார். ஆகவே மதுரை மக்கள் அவரை மதித்து, எளிதாக ஏற்றுக் கொண்டனர். அம்மக்களிடையே சமயப் பணி புரிவது அவருக்கு எளிதாயிற்று.

மலபார் மறைமாநிலத்தின் ஒரு பகுதியாக அமைக்கப் பட்ட பணிக்களத்தில் பணிபுரிந்த இயேசு சபைக் குருக்கள் அனைவரும் தத்துவ போதகரின் வாழ்க்கை முறையைப் பின்பற்றியே வாழ்ந்தனர்.

வீரமாமுனிவரும் இவ்வாழ்க்கை முறையைப் பின் பற்றி, பெயராலும் பண்பாட்டாலும் தமிழராகவே வாழத் தொடங்கினார்.

# 5. பணி தொடங்குகிறது

லிஸ்பன் நகரிலிருந்து கோவா நகருக்கு செப்டம்பர் அல்லது அக்டோபர்த் திங்களில் வந்து சேர்ந்த பெஸ்கி சில நாள் ஓய்வுக்குப் பின் தெற்கு நோக்கிப் பயணமானார். மலபார் மறைமாநிலத்தின் தலைமையகம் முதலில் கொச்சியில்தான் இருந்தது. ஆனால் போர்த்துக் கேயருக்கும் ஆலந்து நாட்டவருக்குமிடையே நிகழ்ந்த அதிகாரப் போட்டியில் வெற்றிபெற்ற ஆலந்து நாட்டவர் கொச்சியிலிருந்து இயேசு சபைக் குருக்களை விரட்டினர்; அவர்களின் ஆலயங்களை அழித்தனர்; அவர்களின் சொத்துக்களைச் சூறையாடவும் பறித்துக் கொள்ளவும் தயங்கவில்லை. எனவே, மலபார் மறை மாநிலத் தலைவர் கொச்சியை விட்டுப் புறப்பட்டு, தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் 'பிள்ளைத் தோப்பு' என்னும் இடத்தில் தம் தலைமையகத்தை அமைத்துக் கொண்டார். அந்த இல்லம் 1705-ஆம் ஆண்டு நெருப்புக்கு இரையாக்கப்பட்டதால் தென்பாண்டி நாட்டில் திருச்செந்தூருக்கு அருகிலுள்ள 'மணப்பாடு' என்னும் ஊரில் மறைமாநிலத் தலைவர் வாழ்ந்து வந்தார். இங்குத்தான் தம் மறைமாநிலத் தலைவரைப் பெஸ்கி சந்தித்திருக்க வேண்டும். ஏற்கனவே குறித்தவாறு தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய இடங்களில் சிறிது காலம் தங்கித் தமிழைப் பயின்ற பின், மதுரைப் பணிக்களத்துக்குச் செல்லுமாறு மறைமாநிலத் தலைவர் பெஸ்கியைப் பணித்தார்.

அக்காலத்தில் தமிழகத்தில் பணிபுரிய வந்த இயேசு சபைக் குருக்கள் அம்பலக்காடு, தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய இடங்களிலேயே தமிழைப் பயின்றனர்.

பெஸ்கி ஏற்கனவே ஐரோப்பாவில் தமிழைக் கற்றிருக்கவும் வாய்ப்பு உண்டு. தமிழகத்தில் பணியாற்றி வந்த இயேசு சபைக் குருக்கள் தாங்கள் எழுதும் நூல்களை இயேசு சபைத் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்தல் வழக்கமாக இருந்தது. யேசுசபைக் குருவும், முதல் ஐரோப்பியத் தமிழ் அறிஞர் என்று போற்றப்படுபவரும், தம்பிரான் வணக்கம், கிரிசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு ஆகிய நூல்களின் மொழிபெயர்ப்பாசிரியரு மாகிய என்ரீக்கோ என்ரீக்கஸ் அடிகளார் ஏற்கனவே பதினாறாம் நூற்றாண்டில் தூத்துக்குடிப் பகுதியிலுள்ள புன்னைக்காயலில் பணிபுரிந்தவர். அவர் 'தமிழ்இலக்கணக் கலை' (Arte Grammatica de la linga Malabar) என்னும் தமிழ் இலக்கண நூலைப் இயற்றியிருந்தார். அவருக்குப் பின் கஸ்பார் தெ அகில்லார், பல்தசார் த கோஸ்தா ஆகிய யேசு சபைக் குருக்கள் தமிழ் இலக்கண நூல்கள் எழுதினர். இந்நூல்களின் படிகள் ஐரோப்பாவில் கிடைத்திருக்க வாய்ப்பு உண்டு. ஆகவே பெஸ்கி ஐரோப்பாவிலேயே தமிழ் இலக்கணத்தைக் கற்கத் தொடங்கியிருக்கலாம்.

சிறிது காலம் முத்துக்குளித்துறையில் (தூத்துக்குடிப் பகுதி) தங்கி, முனிவர் தமிழைப் பயின்றார். புதிதாகத் தமிழகத்துக்கு வரும் குருக்கள் தூத்துக்குடி, மணப்பாடு, புன்னைக்காயல் ஆகிய ஊர்களில் தங்கித் தமிழ் மொழியைப் பயில்வது வழக்கமாக இருந்தது. முனிவர் தமிழகம் வருமுன் 'எமானுவேல் பிமன்த்தேல் அடிகளார்' 1708-ஆம் ஆண்டு மணப்பாட்டில் தங்கித் தமிழ் பயின்றதாக அறிகின்றோம்.

வீரமாமுனிவர் 8. 5. 1711 அன்று மதுரைப் பணிக் களத்தைச் சார்ந்த காம நாயக்கன் பட்டிக்குச் சென்றார்.

தூத்துக்குடிப் பகுதியில் மற்றக் குருக்களைப் போலவே கருப்பு உடை அணிந்திருந்த பெஸ்கி, காவியுடை அணிந்த 'தைரியநாத சுவாமி'யாகக் காமநாயக்கன்பட்டியில் லூயிசு நோயல் தெ பூர்ஸ் அடிகளார்க்கு உதவியாளராகத் தமது சமயப் பணியைத் தொடங்கினார்.

வீரமாமுனிவர் காமநாயக்கன்பட்டியில் தமது பணியைத் தொடங்கிய ஆண்டில், மதுரை மறைப்பணிக் களத்தில் பணியாற்றியோர் பட்டியல் நமக்குக் கிடைத்துள்ளது.

அருள். சார்லஸ் மிக்கேல் பெர்த்தோல்தி —ஆவூர்
திரு
" அந்தோணி தீயாஸ் —கல்பாளையம்
" இஞ்ஞாசி கர்தோசோ —வடு கர்பட்டி
" மனுவேல் நூஞஸ் —கூறைப்பட்டி
" மனுவேல் மச்சாதோ —கூனம்பட்டி—ஏலாக்குறிச்சி
" பீற்றர் மார்ட்டின் —மறவநாடு
அருள் மனுவேல் தோஸ் ரெயிஸ் —மலையடிப்பட்டி
திரு.
" லூயிஸ் நோயல் தெ பூர்ஸ் —காமநாயக்கன்பட்டி
" அகுஸ்தீன் கப்பெல்லி —மறவநாடு
" அந்தோணி பிரான்சீஸ் சேவியர் ரிக்கார்தி —மதுரை.

இவர்களோடுவீரமாமுனிவரும், சராவ்யாவும், சேர்ந்து பன்னிருவர் 1711-ஆம் ஆண்டில் மதுரை மறைப்பணிக் களத்தில் தொண்டாற்றினர். ஏறக்குறைய 100 வேதியர்கள் இவர்களுடன் பணிபுரிந்தனர். ஏறத்தாழ 1, 50, 000 கத்தோலிக்கர்கள் இவர்களின் பணியால் பயன் பெற்றனர். அதோடு பிற மக்களுக்கும் கிறித்து பெருமானின் நற்செய்தியை அவர்கள் எடுத்துரைத்தனர்.

# 6. அன்றையத் தமிழகம்

அன்றைய மதுரை இறைப்பணிக் களத்தின் பொருளாதாரநிலை வளமாக இருக்கவில்லை. பணிக்களத்தின் முதல்வர்கள் போதுமான செல்வம் இல்லாத நிலை பற்றி ஆண்டுதோறும் வருந்தியே எழுதினர். 1734-ஆம் ஆண்டு மதுரைப் பணிக்களத்தில் 10 குருக்களும் ஏறக்குறைய 100 வேதியர்களும் தொண்டாற்றினாலும், மொத்த வருமானம் ரூ. 7, 000/—தான். இக்குறைந்த தொகையைக் கொண்டே குருக்களுக்கும் வேதியர்களுக்கும் செலவுத் தொகை வழங்கப்படவேண்டும். பிற செலவுகளும் செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் எஞ்சு தொகையினைக் கொண்டே கோயில்களை பழுதுபார்க்க வேண்டும், தேவைப்படும் இடங்களில் புதிய கோயில்களைக் கட்டியெழுப்பவும் வேண்டும். இதனால் அன்றைய கோயில்கள் பெரும்பாலும் கூரைக் கோயில்களாகவே அமைந்திருந்தன. ஆவூர், காமநாயக்கன்பட்டி, திருச்சி பழைய கோயில் ஆகியவைதாம் விதிவிலக்காக அன்று கற்கட்டடங்களாக அமைந்து விளங்கின.

கோவா பகுதியிலிருந்த தென்னை, பனந்தோப்பிலிருந்தே மேற்குறித்த வருமானம் மதுரை மறைப்பணிக் களத்துக்குக் கிடைத்தது. அவ்வருமானம் நிலையில்லாத வருமானம். உதாரணமாக, 1739-ஆம் ஆண்டில் கோவாவை மராட்டியர் கைப்பற்றிய போது அவ்வாண்டில் வருமானமே இல்லாமற் போயிற்று. அவ்வப்போது, மறை

மாநிலத் தலைவர் கடன் கொண்டாவது சமயப் பணி தொடர்ந்து நடைபெற வகை செய்து வந்தார். சில வேளைகளில் மறைமாநிலத்துக்கு நன்கொடைகளும் கிடைப்பதுண்டு.

அன்றைக்குக் குறுநில மன்னர்கள் பலராக இருந்த தால் அவர்களுக்கிடையே நடைபெறும் போர்களும் படை யெடுப்புக்களும் மக்களைப் பெரிதும் பாதித்தன. சில மன்னர்கள் கத்தோலிக்க மக்கள் மீதும் குருக்கள் மீதும் வன்முறையைக் கையாண்டு அவர்களைச் சிறையில் அடைத்ததும் உண்டு.

1682-ஆம் ஆண்டு முதல் 1711-ஆம் ஆண்டு வரை தஞ்சை நாட்டை ஆண்டு வந்தவர் மராட்டிய மன்னராகிய ஷாஜி. இவர் கிறித்துவர்கள் மீது காழ்ப்புக் கொண்டு அவர்களைப் பெரிதும் துன்புறுத்தி வந்தார். கி.பி முதல் நூற்றாண்டில் உரோமை நாட்டில் கிறித்துவர்களை வாட்டி வதைத்த நீரோ மன்னரைப் போலக் கொடிய வராக இருந்த ஷாஜி மன்னரை 1712-ஆம் ஆண்டு மடல் 'தஞ்சை நீரோ' என அழைக்கின்றது.

ஜோசப் கர்வாலோ, சார்லஸ் மிக்கேல் பெர்த்தோல்தி என்னும் இரு குருக்களை ஷாஜி சிறையில் அடைத்திருந் தார். கர்வாலோ அடிகளார் சிறையிலேயே 14-11-1701 அன்று உயிர் துறந்தார். பெர்த்தோல்தி அடிகள் பல மாதங்களாகச் சிறையில் துன்புறுத்தப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டார்.

தஞ்சை அரசில் கிறித்தவர்கள் நிம்மதியாக வாழ இயலாத சூழ்நிலையில், தஞ்சை அரசின் எல்லைக்கு வெளி யில், கொள்ளிடத்தின் வடகரையில் ஏலாக்குறிச்சி என்னும் சிற்றூரில் சீமோன் தெ கர்வாலிய அடிகளால் ஒரு கோயில் கட்டியெழுப்பப்பட்டது. தஞ்சை அரசில் வாழ்ந்து வந்த கிறித்துவர்கள், அரியலூர் மழவராயரின் ஆட்சிக்கு உட் பட்டிருந்த ஏலாக்குறிச்சிக்கு வந்து சமயக் கடமைகளை

நிறைவேற்றிச் செல்வர். ஏலாக்குறிச்சியிலிருந்த குருக்களும் இரவு நேரங்களில் தஞ்சை அரசின் எல்லைக்குள் மறைவாக வந்து சமயப்பணி புரிவது வழக்கம்.

அரியலூர் மழவராயர் பொதுவாகக் கிறித்தவரை நன்றாக நடத்தி வந்தார். எனினும் அவ்வப்போது அவரது மனநிலை மாறுவதும் உண்டு. 1708-ஆம் ஆண்டில் ஒருமுறை ஏலாக்குறிச்சிப் பகுதியில் வேட்டைக்காக வந்த மழவராயர், கோயிலுக்குள் நுழைந்து அங்கிருந்த மரியன்னையின் ஓவியத்தைக் கவர்ந்து சென்று தம் அரண்மனையில் வைத்துக் கொண்டார். அவ்வாறே கோக்குடி என்னும் ஊரிலுள்ள கோவிலிலிருந்த ஒரு புனிதரின் திருச்சிலையை அவர் கவர்ந்து சென்றதும் உண்டு.

தஞ்சைப் பகுதிக் கிறித்தவர்களுக்கு அடைக்கலமாக விளங்கியது ஏலாக்குறிச்சி மட்டுமல்ல. தஞ்சைக்கு மேற்கிலுள்ள கூனம்பட்டி என்னும் சிற்றூரிலும் கோயில் ஒன்று இருந்தது. தஞ்சைக் கிறித்தவர்கள் இங்கும் சென்று வருவது வழக்கம். ஏலாக்குறிச்சி கோயில் கட்டிய கர்வாலிய அடிகளார் கூனம்பட்டிக் கோயிலைப் புதுப்பித்து உதவினார்.

ஷாஜி மன்னர் இறந்ததும் இனித் தங்களுக்குத் துன்பம் இருக்காது என்று தஞ்சைப் பகுதிக் கிறித்துவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஷாஜிக்குக் குழந்தைகள் இல்லாததால் அவருக்குப் பின் அவரது உடன் பிறந்தாராகிய சரபோஜி தஞ்சை மன்னராகப் பொறுப்பேற்றார். சரபோஜி தொடக்கத்தில் கிறித்தவர்களுக்குத் துன்பம் எதுவும் கொடுக்கவில்லை. 12-12-1712 அன்று மனுவேல் மச்சாதோ அடிகளார் தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லம் என்னும் ஊருக்குச் சென்று, கிறித்துப் பிறப்பு விழாவை அங்குக் கொண்டாடும் அளவுக்கு அமைதி நிலவியது.

ஆனால் விரைவிலேயே சரபோஜி மன்னரும் கத்தோலிக்கர்களுக்கு எதிரியாக மாறினார். இம்மாற்றத்துக்குக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை.

மதுரை, மறவநாடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய பல குறுநில அரசுகளில் மதுரை மறைப் பணிக்களம் அன்று பரவியிருந்தது. ஆற்காட்டு நவாபுக்கு இம்மன்னர்கள் திறை செலுத்தி வந்தனர். மன்னர்கள் உரிய காலத்தில் திறை செலுத்தாத போது, ஆற்காட்டு நவாபு தம் படைகளை அனுப்பிக் கட்டாயமாகத் திறை பெறுவதுண்டு. இவ்வாறு படைகள் ஆற்காட்டிலிருந்து தெற்கு நோக்கி வரும்போது வழியில் அவை மக்களுக்கு விளைத்த துன்பங்கள் அளப்பரியவை. இவை, போதாவென்று குறுநில மன்னர்கள் தமக்குள்ளேயே மோதிக் கொள்வர். அரச குடும்பத்துக்குள்ளேயே அரசுரிமை குறித்துக் கருத்து வேற்றுமை எழுந்தால் ஒரே குடும்பத்தினர் தமக்குள் வன்முறைகளில் ஈடுபடுவதுமுண்டு.

முனிவர் மதுரை மறைப்பணிக்களத்தில் பணியாற்றச் சென்றபோது அப்பகுதியில் அரசியல் குழப்பங்களும் வன்முறைச் செயல்களும் மிகுந்திருந்தன எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

# 7. தென்பாண்டி மண்ணில் முனிவர் (1711-12)

இத்தகைய இடர்ப்பாடுகள் மிகுந்த சூழ்நிலையில்தான் வீரமாமுனிவர் நெல்லைக்கு அருகிலுள்ள காமநாயக்கன் பட்டியில் நோயல் தெ பூர்ஸே அடிகளாரின் துணைக் குருவாக 8-5-1711 அன்று பொறுப்பேற்றார்.

முனிவரைவிட ஒரு வயது மூத்தவராகிய பூர்ஸே அடிகளார் சில மாதங்களுக்கு முன்புதான் மதுரை மறைப் பணிக்களத்துக்கு வந்திருந்தார். பிரான்சு நாட்டவராகிய பூர்ஸே அடிகளார் சீனநாட்டு டோன்கின் மறைக்களத்தில் பணியாற்றுவதற்காக அனுப்பப்பட்டு 1704-ஆம் ஆண்டு தம் நாட்டிலிருந்து புறப்பட்டார். போர்த்துக்கல் மன்னரின் இசைவாணை பெறாமல் கோவா வந்து சேர்ந்த அவர் தம் சொந்த நாட்டுக்குத் திரும்ப வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மிகுந்த மனத்துயரத்துடன் அவர் போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்று மன்னரிடம் இசைவாணை பெற்றார், ஆனால் டோன்கின் செல்லாமல் மதுரைக் களத்தில் பணிபுரிய விரும்பியதால் அவ்வாறே இசைவு பெற்றார். 1711-ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் காமநாயக்கன் பட்டியில் அவர் பொறுப்பேற்றார்.

மலபார் மறை மாநிலத்தில் 'கல்வியில் சிறந்தவர்' என்று கருதப்பட்ட பூர்ஸே அடிகளார் முனிவருக்குச் சமயப் பணியில் நன்கு பயிற்சியளித்தார். அடிகளார்

தமிழில் புலமை பெற்றவர். தமிழ்-பிரெஞ்சு அகராதி ஒன்றினை (780 பக்கங்கள்) அவர் தொகுத்துப் புகழ் பெற்றார்.

தூத்துக்குடிப்பகுதியில் தொடங்கிய தமது தமிழ்ப் பயிற்சியை முனிவர் காமநாயக்கன்பட்டியிலும் தொடர்ந் தார் என்பது தெளிவு. தமது சமயப் பணியார்வம் காரண மாக அவர் சமயத் தொண்டினையும் சிறப்புற ஆற்றினார் என நாம் உறுதியாக நம்பலாம். காமநாயக்கன்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு பூர்லே அடிகளார் பணி யாற்றிய் பகுதியில் புதுப்பட்டி, குருக்கள்பட்டி ஆகிய சிற்றூர்கள் முனிவரின் பொறுப்பில் விடப்பட்டன. குருக்கள்பட்டி இன்று இல்லை. அது அழிக்கப்பட்டு ஐயனூர் என்னும் பெயரால் புதிய ஊராக உருவாகி விட்டது. அப்பகுதியில் ஒரு கோயிலின் இடிபாடுகளைத் தாம் கண்டதாகப் பெஸ்அடிகளார் கூறுவார். அதன் அருகிலுள்ள ஆண்டிப்பட்டியில் இன்றும் ஒரு கத்தோலிக்கக் கோயிலைக் காணலாம்.

குருக்கள்பட்டியில் முனிவர் எத்தனை மாதகாலம் பணியாற்றினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. அநேகமாக ஆறுமாத காலமே அவர் அங்குப் பணியாற்றி யிருக்க வேண்டும். ஏனெனில் நவம்பர்த் திங்களில் அவர் ஆவூரில் இருந்ததாக, 4-11-1711 அன்று அவர் ஆவூரிலிருந்து எழுதிய மடலால் அறிகின்றோம்.

குருக்கள்பட்டிப் பகுதியில் முனிவர் ஆற்றிய பணி களைப் பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. புல்லுக் காட்டு வலசை என்னும் ஊரில் சேவியர் பொர்கேஸே அடிகளார் கட்டத் தொடங்கியிருந்த கோயிலை முனிவர் கட்டி முடித்ததாகப் பெஸ் அடிகளார் கூறுவதொன்றே நமக்குக் கிடைத்துள்ள செய்தியாகும்.

# 8. சோழ மண்டலத்தில்

1712-ஆம் ஆண்டு மடல் முனிவர் சோழ மண்டலப் பகுதியில் பணிபுரிந்ததை விவரிக்கின்றது. எனவே, 1711-ஆம் ஆண்டில் முனிவர் ஆவூரை விட்டுச் சோழ மண்டலப் பகுதிக்கு வந்துவிட்டார் என நாம் நம்பலாம். அதற்கு இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் அருளானந்தர் இறைப்பணியாற்றினார் என்பதும் இங்கு நினைவு கூரத் தக்கது.

சோழ மண்டலப் பகுதி இன்றைய தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியும் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியும் சேர்ந்ததாகும். அப்பகுதியை உடையார் என்னும் குறுநில மன்னர் ஆண்டு வந்தார். அவரது முழுப் பெயர் நமக்குத் தெரியவில்லை. அவர் கிறித்துவர்களைத் துன்புறுத்தியதால் பல கிறித்துவர்கள் அவரது அரசை விட்டு வேறு ஊர்களுக்குச் சென்றனர் என்பதை 1712-ஆம் ஆண்டு மடல் தெரிவிக்கிறது. அவரது அரசு எல்லைக்குள் 'கோடாலி' என்னும் ஊரில் கிறித்துவக் கோவில் இருந்தது. கோடாலியை விட்டு வந்த கிறித்தவர்களுக்குச் கூவத்தூர் புகலிடமாகியது. பின் அங்கும் கிறித்துவருக்கு எதிர்ப்பு மிகுதியாகவே, அவர்கள் கூவத்தூரையும் விட்டு வேறு ஊர் களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

இந்நிலையில் முனிவர் இப்பகுதியில் பணிபுரிய அனுப்பப்பட்டார். சோழ மண்டலப் பகுதி முழுவதும் அயராமல் சுற்றிப் பணிபுரிந்த முனிவர் அங்குப் பல

துன்பங்களுக்கு ஆளானார். முனிவர் இப்பகுதிக்கு வந்த காலம் மழைக்காலம். எனவே, நீர் நிறைந்த ஆறுகள் பல வற்றைக் கடந்தே அவர் பணிபுரிய வேண்டியதாயிற்று. குறுநில மன்னரின் எதிர்ப்பு மிகுதியாக இருந்ததால் அவர் பெரும்பாலும் இரவிலேயே பயணம் செய்தார்.

முனிவரின் அயராத பணியை அப்பகுதி வாழ் கத்தோலிக்க மக்கள் பெரிதும் பாராட்டினர். 'விண்ணின்று வந்த 'வானவரைப் போலக்' கருதி அவரை மக்கள் வரவேற்றனர்.

குறுநில மன்னரின் எதிர்ப்புக் காரணமாக இப்பகுதி யில் குருக்கள் சில ஆண்டுகளாகப் பணியாற்ற இயல வில்லை. எனவே அக்காலத்தில் அப்பகுதியில் சமயச் சடங்குகள் நிறைவேற்றப்பட இயலாமல் போயிற்று. இதனால் சில கத்தோலிக்கர்கள், சமயத்தை விட்டு விலகிச் சென்றனர்; சிலர் விலகும் நிலையில் இருந்தனர்.

இத்தகையோரையெல்லாம் முனிவர் தமது அன்பா லும் அயராத உழைப்பாலும் அரவணைத்துக் காத்தார். முனிவரது உழைப்பின் விளைவாகப் பலர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினர்.

கொள்ளிடத்தின் வடகரையில் கோடாலிப் புதூருக்கு அருகில் எய்யலூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் இருந்த கத்தோலிக்கக் கோயில் ஆற்காட்டு இளவரசரின் பொருளுதவியோடு கட்டப்பட்டதாகும்.

ஒருமுறை கடலூருக்கு வந்த ஆங்கில ஆளுநர், ஆற்காட்டு இளவரசரைச் சந்திக்கச்சென்றார். அவ்வமயம் தமது நண்பராகிய பிரான்சிஸ் தொலு என்னும் இயேசு சபைக் குருவை ஆளுநர் தம்முடன் அழைத்துச் சென்றார். ஆளுநர் இளவரசரைச் சந்தித்து உரையாடியபோது, தொலு அடிகளாரும் உடனிருந்தார். அப்பகுதியிலுள்ள கிறித்துவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று தொலு அடிகளார் இளவரசரைக் கேட்டுக் கொண்டார். அவ்

வேண்டுகோளுக்கிணங்கிய இளவரசர் கிறித்துவர்களுக்கு ஆதரவு வழங்குவதாக வாக்களித்தது மட்டுமல்ல, ஒரு கோயிலைக் கட்டுவதற்குப் பொருளுதவி புரிவதாகவும் வாக்களித்தார்.

அவ்வமயம் கோடாலியிலிருந்த கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது. ஆயினும் அதைச் சீர் செய்வதைவிட, இளவரசரின் பொருளுதவியைக் கொண்டு கொள்ளிடக் கரையில் எய்யலூரில் ஒரு கோயிலைப் புதிதாகக் கட்டியெழுப்ப இயேசு சபைத் தலைவர்கள் முடிவு செய்தனர். இப்புதிய கோவிலை யார் கட்டியது என்பதும், கோவில் கட்டப்பட்ட ஆண்டு எது என்பதும் உறுதியாகத் தெரியவில்லை.

புதிய கோவிலுக்கு மக்கள் மிகுதியாகச் செல்லாமல் கோடாலியிலிருந்த பழைய கோயிலுக்கே சென்றனர். எனவே, எய்யலூர்க் கோயில் பழுதடைந்து 1710-ஆம் ஆண்டு கொள்ளிடத்தில் எழுந்த வெள்ளத்தின் காரணமாக முழுவதும் அழிந்துவிட்டது, என்று 1713-ஆம் ஆண்டு மடல் கூறுகிறது.

வெள்ளத்தால் அழிந்த எய்யலூர்க் கோயிலை 1712ஆம் ஆண்டு மனுவேல் நூஞஸ் அடிகளார் கட்டினார் என்று 1713-ஆம் ஆண்டு மடல் கூறுகின்றது. அதோடு ஒரு குருக்கள் இல்லத்தையும் அவர் கட்டியதாகவும், அதன் பின்னர் அங்குப் பொறுப்பேற்ற முனிவர் சுற்றுச்சுவர், கோயிலுக்கு வந்து செல்லும் மக்கள் தங்குமிடம், வெள்ளப் பெருக்கால் வரும் நீரைத் தேக்கி வைக்கும் குளம் ஆகியவற்றை அமைத்ததாகவும் 1713-ஆம் ஆண்டு மடல் கூறுகின்றது.

எனவே, முனிவர் எய்யலூரில் கோயிலைக் கட்டியதாக 1712-ஆம் ஆண்டு மடல் குறிப்பிடுவது தவறான செய்தி என்பது தெளிவு. ஏனெனில் 1713-ஆம் ஆண்டு மடல் கோயிலையும் குருக்கள் இல்லத்தையும் கட்டியது மனுவேல் நூருஸ் அடிகளார் என்றும், பிற வசதிகளை

அமைத்தது முனிவர் என்றும் மிகத் தெளிவாகவே கூறுகின்றது. இம்மடலை எழுதியவர் லூயிஸ் நோயல் தெ பூர்ஸே அடிகளார் என்பதால் இதுவே சரியான செய்தி என நாம் உறுதியாக நம்பலாம். ஏனெனில் பூர்ஸே அடிகளார் முனிவரை நன்றாக அறிந்தவர். இவருக்குத் துணைக் குருவாகவே முனிவர் காமநாயக்கன் பட்டியில் தமது சமயப் பணியைத் தொடங்கினார்.

எய்யலூரிலிருந்த பழைய கோயில் பழுதுப்பட்டதால் அது இடிக்கப்பட்டு, அதன் அருகில் அண்மைக் காலத்தில் ஒரு புதிய கோயில் கட்டப்பட்டுள்ளது. பழைய கோயிலின் தரைமட்டப் பகுதியை நாம் இன்றும் காணலாம்.

எய்யலூர்ப் பகுதியில் பணிபுரிந்தபோது, முதுகில் வந்த ஒரு கட்டியால் முனிவர் துன்புற்றார். அது அவரது உயிருக்கே கேடு விளைவிக்கக் கூடியதாக இருந்தது. எனினும், விரைவில் முனிவர் முழுநலம் பெற்றார் என்றும், கிறித்து பெருமானின் உயிர்ப்புப் பெருவிழாவை முனிவர் கொண்டாடினார் என்றும் 1713-ஆம் ஆண்டு மடல் எடுத்துரைக்கின்றது.

1713-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் முனிவர் சோழமண்டலப் பகுதியை விடுத்துக் குருக்கள்பட்டியில் பொறுப்பேற்கச் சென்றார். குருக்கள்பட்டியில் இருந்த நோயல் தெ பூர்ஸே அடிகளார் எய்யலூரில் பொறுப்பேற்றதுடன் மதுரை மறைப்பணிக் களத்தின் முதல்வராகவும் நியமிக்கப்பட்டார்.

முனிவர் பணியாற்றிய சோழமண்டலப் பகுதியில் ‘கோடாலி’ இன்று ‘கோடாலிப் புதூர்’ என்னும் பெயருடன் விளங்குகின்றது. கூவத்தூரும், எய்யலூரும் அதே பெயருடன் அமைந்துள்ளன. அய்யம்பேட்டை இன்று தென்னூர் வரதராசன் பேட்டை என்னும் பெயருடன் விளங்குகின்றது. இன்று கோடாலிப் புதூரில் கத்தோலிக்கர் எவருமில்லை. ஆனால் எய்யலூர், கூவத்தூர், தென்னூர்—வரதராசன் பேட்டை ஆகிய ஊர்களில் இன்றும் கத்தோலிக்கர் வாழ்ந்து வருகின்றனர்.

# 9. உயிருக்கு உலையா?

மீண்டும் குருக்கள் பட்டியில் (டிசம்பர் 1713, 15) பொறுப்பேற்ற முனிவர் அதை அடுத்துள்ள காமநாயக்கன் பட்டி, கயத்தாறு ஆகிய ஊர்களுக்கும் பொறுப்பேற்றிருந்தார். குருக்கள் பட்டி இன்று அழிந்து விட்டதெனினும் காமநாயக்கன்பட்டியிலும் கயத்தாற்றிலும் கத்தோலிக்கர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

குருக்கள்பட்டியில் பணியாற்றி வந்தபோது முனிவரின் உயிருக்கே ஊறு விளைவிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதைப் பற்றி உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவர் மிக்கேல் ஆஞ்சலோ தாம்புரீனி அடிகளாருக்குக் காம நாயக்கன்பட்டியிலிருந்து 12-1-1715 அன்று தாம் எழுதிய மடலில் முனிவர் குறிப்பிடுகின்றார்.

இதே நிகழ்ச்சியைப் பற்றி,

1. ஜோசப் சராய்வா அடிகளார் 25-8-1715 அன்று எழுதிய 1714-ஆம் ஆண்டு மடல்.

2. நோயல் லூயிஸ் தெ பூர்ஸே அடிகளார் பிரான்சு நாட்டுப் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்த தெ சூதே அம்மையார்க்கு 28-1-1715 அன்று எழுதிய மடல்.

3. ப்ரோவியாஸ் அந்தோணி ப்ரோந்தோலீனி அடிகளார் இயேசுசபைத் தலைவருக்கு லிஸ்பன் நகரி

லிருந்து 20-3-1720 அன்று இத்தாலிய மொழியில் எழுதியனுப்பிய ஒரு குறிப்பு ஆகிய ஆதாரங்களைக் கொண்டு நாம் விவரமாக அறிய முடிகிறது.

அப்பகுதியில் ஒருவர், கிறித்துவரிடையே ஒரு கிறித்துவரைப் போலவும் முகமதியரிடையே முகமதியரைப் போலவும் இந்துக்களிடையே இந்துவைப் போலவும் நடித்துப் பொருளுதவி பெற்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட முனிவரின் வேதியர் ஒருவர் கடுஞ்சினம் கொண்டு அவரை ஒரு மரத்தில் கட்டி வைத்து அடித்தார். முனிவரிடம் அவர் சென்று முறையிடவே முனிவர் அவருக்கு ஆறுதல் கூறி அவரிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் திருப்பிக் கொடுக்கப்படும் என்று வாக்களித்தார். குருக்கள்பட்டியிலிருந்த கிறித்தவ மக்களும் அவருக்கு ஆறுதல் கூறி நன்கொடையும் வழங்கினர்.

ஆனால், அவர் அருகிலுள்ள ஆலங்குளத்தில் படைவீடு அமைத்துக் கொண்டிருந்த மதுரைப் படைவீரர்களுள் முகமதியராக இருந்தவர்களைக் கண்டு, முகமதியராகிய தம்மைக் குருக்கள்பட்டியிலுள்ள முனிவரும் கிறித்தவர்களும் மரத்தில் கட்டிவைத்து அடித்தனர் என்று முறையிட்டார். அம்முகமதிய வீரர்கள் கடுஞ்சினம் கொண்டு, தங்கள் படைத்தலைவராகிய எல்லமராயரைக் கண்டு இக்குற்றத்துக்கு ஏற்ற தண்டனை கிறித்தவர்களுக்கு விதிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். அடிபட்டவரும் படைத்தலைவரின் பேராசையை அறிந்து, முனிவர் குருக்கள்பட்டிக் கோவிலில் மிகுந்த பொற்காசுகளைப் பதுக்கி வைத்திருப்பதாக அவரிடம் தெரிவித்தார். படைத் தலைவர் முனிவரையும் வேதியரையும் சிறைப்படுத்துமாறும், கோயிலையும் குருக்கள் இல்லத்தையும் கொள்ளையிடுமாறும் தம் வீரர்களுக்கு ஆணை பிறப்பித்தார். இது 21-12-1714 அன்று நிகழ்ந்தது.

படையினர் குருக்கள்பட்டியை அடைந்தபோது அங்குக் கண்ட சவரியடியான் என்னும் வேதியரே முகமதிய நண்பரை மரத்தில் கட்டி வைத்து அடித்தவர் எனத் தவறாக எண்ணி அவரைக் கடுமையாகத் தாக்கினர். வீரர்களால் தாக்கப்பட்ட பெண்டிரும் குழந்தைகளும் அலறித் துடித்தனர்.

முனிவரோ அவ்வமயம் ஞானேந்திரன் என்னும் வேதியரோடு கோயிலில் கிறித்து பிறப்பு விழாவுக்காகக் குடில் அலங்காரம் செய்வதில் முனைந்திருந்தார். அழுகை யோசையைக் கேட்ட முனிவர் கோயிலுக்கு வெளியில் வந்தபோது படை அதிகாரிகளுள் ஒருவர் அவரை அடையாளம் கண்டு கொண்டு, ஆரத் தழுவி வாழ்த்தினார். அதே வேளையில், படைத்தலைவரின் ஆணையுடன் முனிவரைச் சிறைப்படுத்தவே தாங்கள் வந்திருப்பதை அதிகாரி அவருக்கு வருத்தத்துடன் தெரிவித்தார். முனிவரோ மிகவும் அமைதியாக, "உலகிலிருந்து ஒதுங்கி வாழும் துறவியாகிய என்னைச் சிறைப்பிடிக்க இத்தனைப் பேர் வரவேண்டியதில்லையே. படைத்தலைவர் சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே," என்று பதிலிறுத்தார்.

வீரர்கள் முனிவரையும் சவரியடியான், ஞானேந்திரன் ஆகிய வேதியர்களையும் சிறைப்பிடித்துப் படைத்தலைவரிடம் அழைத்துச் சென்றனர். எஞ்சிய வீரர்கள் படைத் தலைவரின்மகன் தலைமையில் பொற்குவியலைத் தேடிக் கோயிலையும் குருக்கள் இல்லத்தையும் சோதனையிட்டனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்ததோ பெருத்த ஏமாற்றமே! வீரர்களை வழிகாட்டி அழைத்து வந்த முகமதியரோ தமக்குப் பெரும் தண்டனை கிடைக்கும் என்று அஞ்சி அவ்விடத்தை விட்டு யாருமறியாமல் அகன்றுவிட்டார்.

வீரர்கள் தொடர்ந்து தேடியபோது, கிறித்தவர்கள் கழுத்தில் அணிந்துகொள்ளும் உலோகச் சுரூபங்கள்

சிலவற்றைக் கண்டார்கள். புத்தாண்டு நாளன்று தம் கிறித்தவர்களுக்கு வழங்குவதற்காக முனிவர் அவற்றை வைத்திருந்தார். அவற்றைப் பொற்காசுகள் என எண்ணிய வீரர்கள் அவற்றையும், கோயிலில் இருந்த வழிபாட்டு உடைகளையும் கையில் கிடைத்த பிற பொருட் களையும் எடுத்துக் கொண்டு ஆலங்குளம் சென்ற டைந்தனர்.

இதற்கிடையில் முனிவரையும் வேதியர்களையும் அழைத்துப் பேசிய படைத்தலைவர், முனிவர் தமது சமயத்தைப் பற்றிப் பேசியதைக் கண்டு சினம் கொண்டு அவர்களுக்கு விலங்கிடப் பணித்தார். வீரர்கள் முனிவ ரையும் வேதியர்களையும் கடுமையாகத் துன்புறுத்திப் பொற்காசுகளை அவர்கள் மறைத்து வைத்திருந்த இடத்தை அறிய முயன்றனர். இம்முயற்சி தோல்வியில் முடியவே மறுநாள் விடியற் காலையில் அவர்களைக் கொன்றுவிடுமாறு படைத்தலைவர் எல்லமராயன் கட்டளையிட்டார்.

இதனையறிந்த கிறித்தவர்கள் அப்பகுதியில் ஆற்ற லும் செல்வாக்கும் மிகுந்தவர்களாக விளங்கிய சில கிறித் தவப் பிரமுகர்களுக்கு இச்செய்தியை அறிவித்தனர்.

முனிவரின் அங்கியைக் களைந்து அவரை அரையாடை யோடு நிறுத்திய வீரர்கள், அவரைக் கயிற்றால் அடிக்கவும், கழுத்தைச் சங்கிலியால் பிணைத்துக் கொலைக் களத்துக்கு அழைத்துச் செல்லவும் ஆயத்தமாயினர். அவ்வமயம் மேற்குறித்த கிறித்தவப் பிரமுகர்கள் எல்லமராயனைக் கண்டு பேசித் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி முனிவரையும் வேதியரையும் விடுவிக்க ஏற்பாடு செய் தனர். படைத்தலைவர் முனிவருக்குச் சால்வையும் வேதியர்களுக்குத் தாம்பூலமும் வழங்கினார். முனிவரும் எல்லமராயனுக்குச் சில அன்பளிப்புக்களை வழங்கினார்.

தாம் ஏற்றுக் கொண்டுள்ள சமயத்தின் உண்மை களுக்குச் சான்று பகரும் வகையில் தம் உயிரையே இழக்கக்

கிடைத்த வாய்ப்புத் தவறிவிட்டதே என்று முனிவர் பெரிதும் வருந்தினார்.

இந்நிகழ்ச்சி நடந்த போது அருகிலுள்ள வடக்கன் குளத்தில் பணியாற்றி வந்த ப்ராந்தோலீனி அடிகளாரும், முனிவருக்கு முன் (1713 வரை) குருக்கள்பட்டியில் பணி யாற்றி வந்த தெ பூர்ஸே அடிகளாரும் இதைப்பற்றி விரிவாகவே எழுதியுள்ளனர். ஆனால் முனிவரோ இதைப் பற்றிச் சுருக்கமாகவே தம் மடலில் குறிப்பிட்டுள்ளார்.

குருக்கள் பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த முனிவர் கயத்தாற்றுக்கு அடிக்கடி சென்று தங்குவதுண்டு. மதுரை மறைப்பணிக் களத்தில் மிகவும் பாதுகாப்பான ஊர் என்னும் சிறப்பினைக் கயத்தாறு அன்று பெற்றிருந்தது.

அப்பகுதியில் முனிவர் ஆற்றிய சமயப் பணியால் பலர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினர். அவர்களுள் பெரும்பாலோர் உயர்குடி மக்களாவர். அவ்வாறு புதிதாகக் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியோருள் சுக்குச் சேர்வைக்காரர் என்பாரும் ஒருவர். கல்வியில் சிறந்த அவர் கயத்தாறு நகரின் அதிகாரியாக இருந்தார். கோட்டைத் தலைவராகிய மழவராயருக்கு அவர் மைத்துனர். முனிவருக்கு முன் அப்பகுதியில் பணியாற்றிய பூர்ஸே அடிகளாரிடம் சேர்வைக்காரர் தாம் கத்தோலிக்க சமயத்தைத் தழுவ விரும்புவதாக அடிக்கடி தெரிவித்து வந்தார். சேர்வைக்காரரின் சமய ஆர்வத்தை உறுதி செய்து கொள்வதற்காக பூர்ஸே அடிகளார் அவருக்குத் திருமுழுக்கு வழங்குவதற்குக் காலந்தாழ்த்தி வந்தார். சேர்வைக்காரர் திருமுழுக்குப் பெற்றால் அதனால் அப் பகுதியில் மிகுந்த எதிர்ப்பு எழும் என்று அடிகளார் எண்ணி அஞ்சியதும் அக்காலத்தாழ்வுக்கு மற்றொரு காரணம்.

அடுத்து வந்த வீரமாமுனிவரோ இனியும் சேர்வைக் காரருக்குத் திருமுழுக்கு வழங்குவதைக் காலந்தாழ்த்துவது முறையல்ல என்று எண்ணினார். ஊர்ப் பிரமுகர்களுள் ஒருவராகிய அனந்தாசிப்பிள்ளை என்பவருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் முனிவர் ஏற்கனவே திருமுழுக்கு வழங்கி யிருந்தார். இந்நிகழ்ச்சி கயத்தாற்றுப் பாளையம் முழு வதுமே கத்தோலிக்க சமயத்தைத் தழுவிவிட்டது என்னும் வதந்தி அடுத்திருந்த பாளையங்களில் பரவிடக் காரண மாயிற்று.

அதனால் அப்பகுதியில் உள்ள சைவ வைணவக் கோயில்கள் மூடப்பட்டுவிட்டன என்றும் அச்சமயங்கள் பழிக்கப்பட்டன என்றும், பக்கத்துப் பாளையங்களில் மக்கள் பேசலாயினர். ஆகவே, முனிவர் மீதும் அவரது கத்தோலிக்க சமயத்தின் மீதும் பலர் பகைமை கொண்ட னர். ஆனால், மழவராயரும் கயத்தாற்றுப் பிரமுகர் களுள் இருவரும் முனிவரின் நண்பர்களாக இருந்ததால் யாரும் முனிவர் மீது வெளிப்படையாகச் சினம் கொள்ளத் துணியவில்லை.

ஆலங்குளத்தில் முனிவர் சிறைப்பட்டிருந்தபோது எல்லமராயனைச் சந்திக்கச் சென்றிருந்த உலோகநாதன் என்பவர் கயத்தாற்றில் பெரிய மணியமாக இருந்தவர். கிறித்தவர்கள் மீது மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தவர். எப்படியாவது கிறித்தவர்களையும் கிறித்தவக் குருக்களை யும் அழித்துவிட வேண்டும் என்று விரும்பியவர். ஆலங் குளம் நிகழ்ச்சியை நேரில் கண்ட உலோகநாதன், அடுத்த நாளே முனிவரும் வேதியர்களும் கொல்லப்படவிருப்பதை ஒரு மடல் மூலம் கயத்தாற்றிலுள்ள தம் நண்பர்களுக்கு அன்றிரவே தெரிவித்து, தங்கள் ஊரில் மட்டும் கிறித்தவர் களை இன்னும் சகித்துக் கொண்டிருப்பது பெருந்தவறு என்று வலியுறுத்தினார்.

உலோகநாதன் ஏற்கனவே தூத்துக்குடியில் நீண்ட காலம் வாழ்ந்து பொருள் திரட்டியவர். ஆனால்,

அங்குள்ள போர்த்துக்கேயக் குருக்களின் அந்நியமான ஐரோப்பிய வாழ்க்கை முறையைக் கண்டு வெறுப்புக் கொண்டவர். முனிவர் இந்திய வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்தாலும், அவரும் பிறப்பால் ஐரோப்பியரே ஆதலின் உலோகநாதன், முனிவர் மீதும் கிறித்தவர்கள் மீதும் வெறுப்புக் கொண்டார். அப்பகுதியில் கிறித்தவ சமத்தைத் தழுவிய மக்கள் இந்து சமயக் கடவுளரைப் பழித்தும் இழித்தும் பேசியமை உலோகநாதனின் வெறுப்பை மிகுதியாக்கிற்று.

முனிவரும் வேதியரும் கொல்லப்படுவது உறுதி என எண்ணிய உலோகநாதன் உடனே கயத்தாற்றுக்குத் திரும்பினார். அவ்வூர் மக்களை ஒன்றுதிரட்டி இந்தியப் பண்பாட்டுக்கு ஒவ்வாத ஐரோப்பிய வாழ்க்கை முறையையும், புதிய கிறித்தவர்கள் இந்து சமயத்தைப் பழித்துப் பேசுவதையும் விளக்கிச் சொல்லி அவர்களுக்கு வெறுப் பூட்டினார். அதன் விளைவாகக் கயத்தாற்றில் இருந்த கோவிலும் குருக்கள் இல்லமும் மக்களால் அழிக்கப் பட்டன.

அதுமட்டுமல்ல, இனிக் கயத்தாற்றில் கத்தோலிக்கக் குருக்கள் யாரும் நுழையக் கூடாதென்றும், கோயிலும் குருக்கள் இல்லமும் கட்டப்படக் கூடாதென்றும் அம் மக்கள் தீர்மானித்தனர். அவ்வூரிலுள்ள கிறித்தவர்கள் அனைவரும் துன்புறுத்தப்பட்டனர்; சுக்கு மேசர்வைக்காரர், அந்தாசிப் பிள்ளை ஆகியோரும் கூடத் துன்புறுத்தப் பட்டனர். ஆனால், எவ்வளவுதான் துன்புறுத்தப்பட்டாலும் அக்கிறித்தவர்களுள் யாருமே தங்கள் சமய நெறியை விட்டு விலகவில்லை. குருக்கள்பட்டியிலும், கயத்தாற்றிலும் நிகழ்ந்த துன்பங்களைப் போலவே தென்காசியிலும் தொல்லைகள் தொடர்ந்தன.

தென்காசியில் இரு கிறித்துவக் கோயில்கள் இருந்தன. ஏனெனில் அங்குக் கத்தோலிக்கர் பெருந்தொகையினராக

வாழ்ந்து வந்தனர். இரு ஊர்களிலும் நிகழ்ந்தவற்றை அறிந்த தென்காசி அதிகாரி தாமும் கிறித்தவர்களை வதைக்கத் திட்டமிட்டார். தென்காசியிலுள்ள கிறித்த வர்களுடைய வீடுகளைப் பூட்டி முத்திரை பதித்தார் இதனால் கிறித்தவர்கள் தங்கள் வீடுகளுக்கு உள்ளேயே நுழையாமலிருக்க வகை செய்தார்.

பின் அவ்வதிகாரி பதினெட்டுக் குதிரை வீரர்களையும் சில காலாட்படை வீரர்களையும் அழைத்துக் கொண்டு குருக்கள்பட்டிக்குச் சென்றார். எல்லமராயனின் படை வீரர்களால் குருக்கள்பட்டியில் கண்டுபிடிக்க முடியாத பொற்குவியலைக் கண்டுபிடித்துவிடத் தம்மால் முடியும் என்று அவர் நம்பினார்.

எல்லமராயனால் துன்புறுத்தப்பட்ட தம்மை நலம் விசாரிப்பதற்காக வந்ததைப் போல நடித்த அதிகாரியின் வஞ்சகத் திட்டத்தை விரைவில் முனிவர் புரிந்து கொண்டார். தாம் துறவியென்றும் தம்மிடம் பொன் இல்லை என்றும் முனிவர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதிகாரி அதை நம்பவில்லை. முனிவர் இருந்த இடத்தை விட்டு அசைய இயலாத வகையில் தம் வீரர்களைக் காவலாக வைத்துவிட்டுக் கோயிலிலும் குருக்கள் இல்லத்திலும் இல்லாத பொற்குவியலைத் தேடிய அதிகாரி இறுதியில் தோல்வியை ஒப்புக் கொண்டு வெளியேறினார். முனிவரிடம் பொற்குவியல் இருப்பதாகச் சொல்வதெல்லாம் பொய்க்கதைகள் என்பது அனைவருக்கும் இப்போது தெளிவாக விளங்கியது,

தென்காசிப் பகுதியில் கிறித்தவர்களுக்கு இழைக்கப் பட்ட துன்பத்தைப் போக்கிடப் பெரிதும் உதவியவர் சின்னானஞ்சத் தேவர். இவர் பாதுகாப்புப் படையில் பணியாற்றியவர். இவரும் தொடக்கத்தில் கிறித்தவர் களுக்கு எதிராக இருந்தவரே. விரைவில் முனிவரின்

நட்பாலும் சிறிய அன்பளிப்புக்களாலும் கவரப்பட்டு நண்பராக மாறிவிட்டார்.

கிருத்தவக் குருக்களிடம் செல்வம் மிகுதியாக இருந்த தாக அக்காலத்தில் பலரும் நம்பினர். போதகத்திலும் சமயச் சடங்குகளிலும் மட்டுமே ஈடுபட்டு வந்த கிறித்தவக் குருக்கள் எத்தகைய உடல் உழைப்பும் இல்லாமலேயே வாழ்வதும், வேதியருக்கு ஊதியம் வழங்குவதும், கோவில் களும் இல்லங்களும் அமைப்பதும் எவ்வாறு இயலும் என்பது அன்றைய மக்களுக்குப் புரியவில்லை. எனவே, அத்துறவியரிடம் பொற்குவியல் இருந்தாக வேண்டும் என்று அவர்கள் எண்ணினர். இத்தகைய எண்ணம் முனி வருக்குக் குருக்கள்பட்டியில் துன்பம் விளைத்ததைப் போலவே பிற இடங்களிலும் துறவியருக்குத் தொல்லை உண்டாகக் காரணமாயிற்று.

# 10. முனிவரின் தமிழாசிரியர் யார்?

குருக்கள் பட்டியில் கிறித்தவர்களுக்கு எதிரான பகைமை குறையத் தொடங்கியது. விரைவில் கயத்தாறு மக்கள் மனமும் மாறத் தொடங்கியது.

எனினும், தமக்கும் தம் கிறித்துவர்களுக்கும் ஏற்பட்ட துன்பங்களாலும் ஓயாத அலைச்சலாலும் முனிவரின் உடல்நலம் குன்றியது. தக்க மருத்துவமும் ஓய்வும் முனிவரைக் குணப்படுத்தினாலும் பழைய நிலைக்கு அவர் திரும்ப நீண்ட நாளாயிற்று.

அதோடு அப்பகுதியில் வன்முறையும் குறையவில்லை. வெளியூர்களுக்குப் பயணம் செய்வது ஆபத்தாகக் கருதப் பட்டது. ஆகவே, முனிவர் குருக்கள்பட்டியிலேயே தங்கித் தமிழ்மொழியைச் சிறப்பாகப் பயில்வதில் ஈடுபட்டார்.

தமிழ்ச் சமுதாயத்தில் புலவர்கள் பெரும் மதிப்புப் பெற்றவர்களாக வாழ்ந்தனர். சங்க காலத்தில் மட்டு மன்று, பதினெட்டாம் நூற்றாண்டிலும் அந்நிலையே உலவியது. தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்பதால்

---

* இவ்வதிகாரத்தில் எடுத்தாளப்பட்டுள்ள கருத்துக்களுள் பெரும்பாலானவை முனைவர் சூ. இன்னாசி அவர்களின் 'சதுரகராதி ஆராய்ச்சி', 'வீரமாமுனிவ மாலைகள்' என்னும் நூல்களிலிருந்து எடுக்கப் பட்டவை.

தாமும் தமிழ் மக்களுள் ஒருவராகக் கருதப்படுவது எளிதாகும் என்பதை முனிவர் உணர்ந்திருந்தார். தமிழை நன்றாகக் கற்று இலக்கிய நூல்களை இயற்றுவதால், தமது சமயக் கோட்பாடுகளைத் தமிழறிந்தோருக்கு உணர்த்தலாம் என்பதாலும் முனிவர் தமிழ்க் கல்வியில் முழுக்கவனம் செலுத்தினார்.

முனிவருக்குத் தமிழைக் கற்பித்தவர் யார் என்பதைச் சுட்டிக்காட்ட எத்தகைய ஆதாரங்களும் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. முனிவர் தாமே எழுதிய மடல்களிலும் சரி, அக்காலத்தில் பணிபுரிந்த பிற இயேசு சபைத் துறவியர் எழுதிய மடல்களிலும் சரி, முனிவரின் தமிழாசிரியரைப் பற்றிய எக்குறிப்பும் நமக்குக் கிடைக்கவில்லை. முனிவர் இயற்றிய நூல்களில்கூட எத்தகைய குறிப்புமில்லை.

முனிவர் தாம் இயற்றிய தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களில் திருவள்ளுவர், ஔவையார், கம்பர், திருத்தக்க தேவர் ஆகிய புலவர் பெருமக்களைக் குறித்து எழுதியிருந்தும்கூடத் தம் ஆசிரியர் யாரெனக் கூறவில்லை. தம் செந்தமிழ் இலக்கணத்தின் முன்னுரையில், "இந்நாட்டவருள் கூட மிகச் சிலரே தமிழில் வல்லோராகத் திகழ்கின்றனர்," என்று குறிப்பிடும்போதுகூடத் தம் ஆசிரியர் பெயரைச் சுட்டவில்லை.

விருத்தப்பாடலில் 'அளவொத்து வருதல்' என்றால் என்ன என்பதை எந்த நூலிலும் அறிய இயலவில்லை என்றும், தாம் இதுபற்றிக் கேட்டபோது எந்தத் தமிழறிஞரும் இதனைத் தமக்கு விளக்க இயலவில்லை என்றும் முனிவர் தம் 'செந்தமிழ் இலக்கண' நூலில் குறிப்பிடுகின்றார். இந்த இடத்தில் கூட முனிவர் தம் ஆசிரியர் யார் என்பதைக் குறிப்பிடவில்லை.

தமிழ் இலக்கணத்தைத் தாம் நீண்ட காலம் வருந்தி யுழைத்துப் பயின்றதாகக் கூறும்போதும் முனிவர் தமக்குப் பயிற்றுவித்த ஆசிரியரைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

ஆனால் விறலிவிடுதூது, கூளப்ப நாயக்கன் காதல் என்னும் நூல்களை இயற்றிய சுப்ரதீபக் கவிராயரே முனிவரின் தமிழாசிரியர் என இன்று சிலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். தங்கள் கூற்றுக்கு ஆராய்ச்சி முறையிலமைந்த ஆதாரங்களை அவர்கள் காட்டவு மில்லை.

சுப்ரதீபக் கவிராயரின் வாழ்க்கைக் குறிப்புகள் பற்றி இதுவரை யாருமே தெளிவாக எழுதவில்லை. 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலில் தமிழ்ப் புலவர் பலரின் வரலாற்றை வழங்கியுள்ள சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் வரலாறு தெரியப்படாத புலவர்களின் பட்டியலி லேயே சுப்ரதீபக் கவிராயரைச் சுட்டுகின்றார்.

கவிராயர் தோன்றிய ஊர் எனப் பழநி, திருமங்கலம், கொழுனை ஆகிய பல ஊர்கள் அறிஞர்களால் காட்டப் படுகின்றன. எனவே, கவிராயர் தோன்றிய ஊர் எது என்பதும் யாருக்கும் உறுதியாகத் தெரியவில்லை.

கவிராயர் வாழ்ந்த காலம் பற்றியும், பல்வேறு கருத்துக்கள் உள்ளன. உறுயான ஆதாரங்களுடன் இதுவரை எவருமே கவிராயர் வாழ்ந்த காலத்தை நிறுவவில்லை.

விறலிவிடுதூது கவிராயரால் இயற்றப்பட்டது உண்மையாயின், அதுவே அவர் முனிவரின் ஆசிரியர் அல்லர் என்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது.

"கொடுந்தமிழில் உயர்வுக்கு அடையாளமாக 'நீ' என்பதை 'நீர்' எனவும், 'அவன்' என்பதை 'அவர்' எனவும் வழங்குதல் போலச் செந்தமிழில் பெயர் உரிச்

சொல்லிலோ வினைச் சொல்லிலோ வழங்குவதில்லை என்பதை மனதில் கொள்க. 'என்றான்', 'சொன்னான், என்பவற்றுக்குப் பதிலாக உயர்வாகக் கூறும் 'என்றார்' 'சொன்னார்' போன்ற வழக்குகளை உரைநூல்களில் அரிதாகவே கண்டுள்ளேன். கவிஞர்களிடையேகூட இது வழங்குவது கடினம். சிந்தாமணி நூலில் மட்டும், செறிந்த மகிழ்ச்சியையும் அன்பையும் புலப்படுத்தும் வகையில் ஒரே ஒருமுறை இச்சொல்லாட்சியைக் கண்டுள்ளேன்'' என முனிவர் எழுதுகின்றார்,

ஆனால் அதற்கு மாறாகக் கவிராயரின் 'விறலிவிடு தூது' நூலில் உயர்விப் பன்மை பயன்படுத்தப்பட்டிருப்பதை,

''வந்தார்நம் ஐயர் என்னை வாவென்றார் காவிரியில்
சந்திபண்ணி இக்கரையில் தாண்டினார்—இந்த ஊர்க்கு
என்மார்க்கம் சொல்லாதே என்று சொன்னார்''

என்னும் வரிகளில் காணலாம்.

கவிராயரிடம் முனிவர் தமிழ் கற்றிருந்தால் இவ்வழக்கினை அறிந்திருக்கும் வாய்ப்பு முனிவருக்குக் கிடைத்திருக்குமன்றோ?

சுப்ரதீபக் கவிராயரிடம் முனிவர் தமிழ் கற்றது மட்டுமன்று, முனிவர் இயற்றிய நூல்களுக்கும் உண்மையான ஆசிரியர் கவிராயரே என்பாரும் உளர். கவிராயர் எழுதியதையே முனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்தார் என்றும் அவர்கள் எழுதுகின்றனர். கவிராயரின் வறுமையையும் முதுமையையும் பயன்படுத்தி முனிவர் அவரை ஏமாற்றி, கவிராயர் எழுதிய நூல்களைத் தாம் எழுதியதாக வெளிப்படுத்தினார் என்றும் எத்தகைய ஆதாரமுமின்றிச் சிலர் எழுதுவதைக் காணும்போது பெரும் வேதனை எழுகின்றது.

முனிவர் எழுதிய பரமார்த்த குரு கதையில் வரும் நாய் ஆற்றைக் கடத்தல், நிழலுக்கு வாடகை கேட்டல் ஆகியவை கிரேக்க இலக்கியமாகிய ஈசோப் கதைகளி லிருந்து எடுக்கப்பட்டவை என்பதும், பேராசை மிக்க ஒரு மன்னன் சிறுநீர் வரி விதித்த கதை இலத்தீன் எழுத்தாள ராகிய பூவனல் என்பார் எழுதியது என்பதும் இன்று அறிஞரால் நிறுவப்பட்டவை. பரமார்த்த குரு கதையைக் கவிராயர் எழுதினாரெனில் தமிழ்ப் புலவராகிய கவிராயர் இலத்தீனும் கிரேக்கமும் கற்றறிந்தது எவ்வாறு என்பதை நிறுவ வேண்டுமல்லவா? ஆனால் அவ்வாறு நிறுவ முயலாம லேயே அல்லது இயலாமலேயே, அத்தகையோர் பொய்யை யும் புனைகதைகளையும் வரலாறுபோலக் காட்டி மக்களை ஏமாற்றுவது ஏன் என்பது புரியவில்லை. ஆராய்ச்சி உணர்வே இல்லாத அவர்கள் தம்மையும் தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளர் பட்டியலில் இணைத்துக் கொள் வது விந்தையிலும் விந்தையன்றோ?

சுப்ரதீபக் கவிராயர் இலக்கண வல்லுநராகத் திகழ்ந் தார் என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லை. முனிவரோ செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணத் திறவுகோல் ஆகிய இலக்கண நூல்களை இலத்தீன் மொழியிலும், தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைத் தமிழ்மொழியிலும் இயற்றிப் புகழ்பெற்றவர். இலக்கண நூல்களை இயற்றி யறியாத கவிராயரே இவற்றை இயற்றினார் என யாராவது கூறுவார்களா? அவ்வாறே சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி, போர்த்துக்கேய-இலத்தீன்-தமிழ் அகராதி ஆகிய மூன்று அகராதி நூல்களை முனிவர் தொகுத்துள்ளார். அகராதிகளைத் தொகுத்தறியாத கவிராயரே இவற்றைத் தொகுத்தவர் என யாரே னும் கூறுவரோ? தேம்பாவணி, விறவிவிடு தூது ஆகிய இருநூல்களின் சொல்லாட்சியை நடுவுநிலை தவறாது ஆராய்வோருக்கு இரு நூல்களும் வெவ்வேறு

ஆசிரியரால் இயற்றப்பட்டவை என்பது எளிதில் புலனாகும். ஆகவே சுப்ரதீபக் கவிராயரின் நூல்களைப் பல் துறைப் புலவராகிய முனிவர் தமது பெயரில் வெளிவரச் செய்தார் என்னும் கூற்று ஆதாரமற்ற அப்பட்டமான கட்டுக்கதை என்பதில் ஐயமேதும் இல்லை.

தென்பாண்டி நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரியைச் சார்ந்த சுப்பிரமணிய தீட்சிதரே முனிவரின் ஆசிரியர் என்னும் கருத்தைத் தமது 'தேமபாவணித் திறன்' நூலில் முனைவர் பா. வளன் அரசு வெளியிட்டுள்ளார். அதே நூலில் ''வீரமாமுனிவரின் ஆசிரியர் சுப்பிரமணிய தீக்கிதர் என்று சதுரகராதி குறிக்கின்றது'' என்றும் அவர் எழுதியுள்ளார்.

அவ்வாறு சதுரகராதி குறிப்பிடவே இல்லை என்பதே நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

சுப்பிரமணிய தீட்சிதர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதையும், தொடக்கத்தில் முனிவர் வாழ்ந்த நெல்லை மாவட்டத்தில் தீட்சிதர் வாழ்ந்தவர் என்பதையும், தீட்சிதர் இயற்றிய பிரயோக விவேகம் போன்று முனிவரின் தொன்னூல். விளக்கம் உரையுடன் அமைந்துள்ளது. என்பதையும், தீட்சிதரைப் போலவே முனிவரும் வடமொழியிலும் தமிழிலும் புலமை பெற்று விளங்கினார் என்பதையும் முனிவருக்கு முதலில் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்தவர் தீட்சிதரே என்பதற்குரிய வாய்ப்புக்களாக முனைவர் வளன் அரசு சுட்டிக் காட்டுகின்றார். இது பொருந்துமா என்பதைக் கீழே காண்போம்.

வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களில் அகத்தியம், அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம், தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், பாட்டியல், புறப்பொருள் வெண்பாமாலை, பேரகத்தியம், பொருத்தவியல், மயேச்சுரர்

யாப்பு, யாப்பருங்கலக் காரிகை, விருத்தப் பாட்டியல், வீர சோழியம், யாப்பருங்கலம், வெண்பாப்பாட்டியல் போன்ற இலக்கண நூல்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. கம்பராமாயணம், காசிக் காண்டம், சிந்தாமணி, சிலப்பதி காரம், திருக்குறள், திரிகடுகம், இருமொழிமாலை, நைடதம், நாலடியார், பாரதம் போன்ற இலக்கியங்கள் சுட்டப்படுகின்றன. ஆனால் சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய இலக்கண நூலாகிய பிரயோக விவேகம் எங்குமே சுட்டப்பெறவில்லை, தீட்சிதர்பற்றிய குறிப்பும் எங்குமே இடம்பெறவில்லை.

தமிழ்ப்புலவருள் தலையாயவர் என்று சிந்தாமணி யாசிரியரைத் தம் செந்தமிழ் இலக்கண நூலில் புகழ்ந்து போற்றும் முனிவர், தம் ஆசிரியரை அந்நூலில் சுட்டா திருப்பாரா என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தீட்சிதர் தம் 'பிரயோக விவேகம்' நூலில் பயன் படுத்தியுள்ள பிரதீகம், திரமிளம், பிரதிக்கினை போன்ற சொற்கள் சதுரகராதியில் இடம்பெறவில்லை. சிவபெரு மானின் பெயர்களாக அம்பலத்தாடி, குடக் கூத்தாடி, நூரோதி, வேடதாரி, சோமயாசி என்னும் சொற்களைத் தீட்சிதர் காட்டுகின்றார். ஆனால் சிவபெருமானின் பெயர்களாக எழுபத்தைந்துக்கு மேற்பட்டவற்றைத் தம் சதுரகராதியில் சுட்டிக் காட்டும் முனிவர் மேற்குறித்த பெயர்களைச் சுட்டவேயில்லை. பிரயோகவிவேகம் ஆசிரியரிடம் தமிழ் பயின்றவராயின் அப்பெயர்களை முனிவர் அறியாதிருத்தல் இயலாதன்றோ?

தொடக்கத்தில் முனிவர் தம் யேசுசபைக் குருக்களிட மிருந்தும், என்ரீக்கஸ் அடிகளார் இயற்றிய தமிழ் இலக்கண நூலிலிருந்தும் தமிழ் கற்றிருக்க வேண்டும். பின் ஆங்காங்குப் பலரிடம் அவர் தமிழ் கற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் முனிவர் தம் பெருமுயற்சியால்

தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்து புலமைபெற்றார் என்று கொள்வதே பொருத்தமாகும்.

சுப்பிரதீபக் கவிராயரிடமும் சுப்பிரமணிய தீட்சிதரிடமும் முனிவர் தமிழ் பயின்றார் என்பதை மெய்ப்பிக்க எத்தகைய ஆதாரமும் நமக்குக் கிடைக்கவில்லை. அதோடு அகச் சான்றுகளை முன்வைத்து ஆராயும்போது சுப்பிரமணிய தீட்சிதரிடமும் சுப்பிரதீபக் கவிராயரிடமும் முனிவர் தமிழ் கற்றிருக்க இயலாது என்னும் உண்மையும் நமக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது.

# 11. செல்லுமிடமெல்லாம் சிறப்பு

குருக்கள்பட்டியிலிருந்து முனிவர் இராமநாதபுரம் மாவட்டத்துக்கு (1715) மாற்றப்பட்ட போது, அப்பகுதியில் போர்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன. இராமநாதபுரம மன்னர் திருவுடையத் தேவர் என்னும் விசய இரகுநாத சேதுபதி (1711 - 1725) கிறித்தவர்களுக்கு ஆதரவாக இருந்தார். அவரது சகோதரர் வடுகநாதத் தேவர் முனிவருக்கு ஒரு மடல் விடுத்து, தம்மைச் சந்திக்க வருமாறு அன்புடன் அழைத்தார். ஆனால் போரின் காரணமாக முனிவர் இராமநாதபுரத்துக்குச் செல்ல இயலவில்லை. தமக்குக் குறிக்கப்பட்ட பகுதியில் சமயப் பணியாற்றவும் அவரால் முடியவில்லை.

வாய்ப்புக் கிடைத்த போது அப்பகுதியிலுள்ள கிறித்தவர்கள் ஆவூருக்கோ மதுரைக்கோ சென்று சமயக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியாற்ற இயலாத முனிவர் வாளாவிருக்கவில்லை. ஏலாக்குறிச்சிக்குப் சென்று பணிபுரியுமாறு (1716 தவக்காலம்) அவர் பணிக்கப் பட்டதால் அங்குச் சென்றார். ஏலாக்குறிச்சிப் பகுதியில்

மறைப்பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்த எம்மானுவேல் மச்சாதோ அடிகளார் சரபோசி மன்னரால் வல்லம் சிறையில் (1715 ஜூலை 4 – 1717 ஜூன்) அடைக்கப்பட்டிருந்தார். எனவே, அவருக்குப் பதிலாகப் பணியாற்றும் பொறுப்பு முனிவருக்கு வழங்கப்பட்டது.

ஏலாக்குறிச்சியில் பணியாற்றிய இக்காலத்தில் முனிவர் ஒருவகை அரிப்பு நோயாலும் கட்டிகளாலும் துன்புற்றார். எனினும் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் பெருந்தொகையாக வந்து கொண்டிருந்ததால் முனிவர் தம் உடல்நலனைப் பற்றிக் கவலைப்படாமல் ஓயாத பணியில் ஈடுபட்டார்.

விரைவில் முனிவர் மதுரைக்கு மாற்றப்பட்டார். அங்கு அதிகாரியாக இருந்த யதுவேங்கிட நாயக்கர் முனிவரை மிகுந்த அன்புடன் வரவேற்றார். மதுரைச் பகுதியில் சமயப் பணியாற்றவும், தேவையான கோவில்களைக் கட்டவும் முனிவருக்கு அவர் இசைவு தந்தார்.

சம்பட்டியில் கோயில்கட்ட விரும்பி முனிவர் அவ்வூருக்குச் சென்றபோது அவ்வூர் மக்களால் மிகுந்த மதிப்புடன் வரவேற்கப்பட்டார். கோவிலுக்கு வரைபடம் தயாரித்த முனிவர் முதலில் தாம் தங்கியிருப்பதற்குச் சிறிய இல்லம் ஒன்றைக் கட்டிக் கொண்டார். பின் கோவில் கட்டும் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்குத் தக்க இடமில்லாவிடினும் மக்கள் பெருந்திரளாக முனிவரை நாடி வந்தனர். கோவிலும் விரைவில் எழுப்பப்பட்டது. ஆனால் மண்ணால் எழுப்பப்பட்ட அக்கோவில் பெருமழை பெய்தபோது இடிந்துவிழுந்தது.

முனிவரும் கடுங்காய்ச்சலால் துன்புற்றார். இதனால் மதுரைப் பகுதியில் சுற்றிப் பணியாற்ற முனிவருக்கு இயலாமற் போயிற்று.

1716-ஆம் ஆண்டில் இராமநாதபுரம், மதுரைப் பகுதிகளில் பணியாற்றுமாறு முனிவர் பணிக்கப்பட்டிருந்தாலும், சூழ்நிலைகள் காரணமாக அப்பகுதிகளில் முறையாகப் பணியாற்ற முனிவரால் இயலவில்லை. எனினும் அவர் மற்றக் குருக்களுக்குத் தேவைப்படும்போதெல்லாம் உதவிபுரியச் சென்றார். இவ்வாறு பல இடங்களுக்கு முனிவர் அலைந்து திரிந்ததும் அவர் காய்ச்சலால் துன்புறுவதற்குக் காரணமாயிற்று.

# 12. ஏலாக்குறிச்சியில் முனிவர்

முனிவர் தென்னகத்தில் பணிபுரிந்த முதல் ஆறு ஆண்டுகளில் குருக்கள்பட்டி, கோடாலி, கூவத்தூர், அய்யம்பேட்டை, எய்யலூர், இராமநாதபுரம், ஏலாக் குறிச்சி, மதுரை ஆகிய இடங்களில் தொண்டாற்றினார். இவற்றுள் குருக்கள்பட்டியில் இருமுறை (1711, 1713-15) தொண்டாற்றினார்.

ஏற்கனவே சில மாதங்கள் அவர் பணிபுரிந்த ஏலாக் குறிச்சிக்கு மீண்டும் 1716-ஆம் ஆண்டின் இறுதியில் அவர் அனுப்பப்பட்டார். அவ்வாண்டு யேசுபெருமானின் பிறப்பு விழாவை அவர் ஏலாக்குறிச்சியிலேயே கொண்டாடினார்.

ஏலாக்குறிச்சி, முனிவரின் வாழ்வில் சிறப்பிடம் பெற்ற ஊராகும். தமிழகத்தில் தாம் பணிபுரிந்த காலத்தின் பெரும்பகுதியை முனிவர் இவ்வூரிலேயே செலவிட்டார். தேம்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவ லூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி முதலிய இலக்கிய நூல்களும், லூத்தேர் இனத்தார் இயல்பு, வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகம் மறுத்தல் முதலிய உரைநடை நூல்களும், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் ஆகிய இலக்கண நூல்களும், சதுரகராதியும் முனிவர் ஏலாக் குறிச்சியில் பணியாற்றியபோது இயற்றியவை தாம்.

இப்பகுதியில் நீண்ட காலமாக நிலவிய அமைதியும்; அரியலூர் மழவராயரின் நட்புறவும் முனிவர் சமயப் பணியுடன் தமிழ்ப்பணி புரியவும் உறுதுணையாக அமைந்தன. அரியலூர் மழவராயரின் எல்லைக்குள்தான் ஏலாக்குறிச்சி அமைந்திருந்தது.

ஏலாக்குறிச்சியைப் போலவே, தஞ்சைக்கு மேற்றிசையில் கூனம்பட்டியிலும் ஒரு கோவில் இருந்தது. முனிவர் ஏலாக்குறிச்சியிலும் கூனம்பட்டியிலுமாக மாறி மாறித் தங்கிப் பணிபுரிந்து வந்தார். இக்காலத்தில் தஞ்சைப் பகுதி முனிவரின் பொறுப்பில் இருந்தது. தஞ்சை மன்னர் கிறித்துவர்களிடம் பகைமை பாராட்டிக் கிறித்துவக் குருக்களைத் தம் அரசின் எல்லைக்குள் வாழ்ந்து பணியாற்ற அனுமதிக்காததால் தான் முனிவர் ஏலாக்குறிச்சியிலும், கூனம்பட்டியிலும் வாழ வேண்டியிருந்தது. இதைத் தமது 1732-ஆம் ஆண்டு மடலில் முனிவரே குறிப்பிடுகின்றார். அவ்விடங்களிலிருந்து இரவு நேரங்களில் அவர் தஞ்சை அரசின் எல்லையைக் கடந்து சென்று சமயப் பணியாற்றி வந்தார். மக்களும் எல்லையைக் கடந்து ஏலாக்குறிச்சிக்கோ கூனம்பட்டிக்கோ சென்று முனிவரைச் சந்தித்துத் தம் சமயக் கடமைகளை நிறைவேற்றி வந்தனர்.

ஏலாக்குறிச்சியிலும், கூனம்பட்டியிலும் இருந்த கோயில்கள் முனிவரால் கட்டப்பட்டவை அல்ல. அவை முனிவர் அவ்விடங்களில் பணியாற்றச் செல்வதற்குப் பல ஆண்டுகள் முன்பே கட்டப்பெற்றவை. இதுபற்றி ஏற்கனவே கூறியுள்ளோம்.

ஏலாக்குறிச்சியில் வாழ்ந்த காலத்தில் முனிவர் பிளவை நோயால் வருந்தினார். அதன் விளைவாக நாற்பது நாட்கள் முனிவர் படுக்கையில் இருக்க நேர்ந்தது.

நோயிலிருந்து நலம் பெற்றதும் முனிவர் மீண்டும் தம் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

பணிமிகுதியாலோ நோயிலிருந்து முழுநலம் பெறுமுன் பணியில்ஈடுபட்டதாலோ மீண்டும் அதேநோய் முனிவரைப் பாதித்தது. ஆகவே புதுச்சேரிக்குச் சென்று முனிவர் தம் நோய்க்கு மருத்துவம் பெற்றார். மதுரைப் பணிக்களத்தில் தொண்டாற்றிய யேசுசபைச் குருக்களுக்காகப் புதுச்சேரியில்ஓர் இல்லம் அமைக்கப்பட்டிருந்தது. நோயுற்ற போதும், ஓய்வு தேவையென உணரும்போதும் மறைப் பணிக்களக் குருக்கள் புதுச்சேரிக்குச் செல்வது வழக்கம்.

புதுச்சேரியிலிருந்து திரும்பிய முனிவர் வடுகர்பட்டியில் (இன்று வடுகர்பேட்டை) பணியாற்றுமாறு பணிக்கப் பட்டார். இங்கு 1717-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் முனிவர் பணிபுரிந்தார்.

# 13. முனிவரின் தமிழாற்றல்

பதினெட்டாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த தமிழ்ப் புலவர்கள் இருவருள் வீரமாமுனிவர் ஒருவர் எனத் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ இயற்றிய அறிஞர் கால்டுவெல் ஐயர் எழுதியுள்ளார். உரைநடையிலும் செய்யுள் நடையிலும் முனிவர் இயற்றிய நூல்களை-குறிப்பாக அவர் இயற்றிய ‘தேம்பாவணி’யைப் பெரிதும் பாராட்டுவார் கால்டுவெல்.

திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் அறிஞர் போப் ஐயர். அவர் முனிவரைத் ‘தமிழறிஞருள் மிகச் சிறந்தவர்’ எனப் போற்றுகின்றார். முனிவர் திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இலத்தீனில் மொழி பெயர்த்து எழுதியதை நாம் அறிவோம். முனிவரின் இலத்தீன் மொழிபெயர்ப்பு போப் ஐயரின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு உறுதுணையாக இருந்தது.

‘கீழ்த்திசை அறிஞருள் மிகவும் புகழ்பெற்றவர் முனிவர்’ என எமிலியோ தேசா என்னும் இத்தாலிய அறிஞரும், ‘திராவிட மொழியியல் வல்லுநர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த முன்னோடி முனிவரே’ எனக் ‘கமில் சுவலபில்’ என்னும் செக்கோஸ்லாவாகிய நாட்டுத் தமிழறிஞரும் போற்றியுள்ளனர்.

முனிவர் வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பலரும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

தே பூர்ஸே அடிகளார் முனிவருடன் காமநாயக்கன் பட்டியில் பணியாற்றியவர்; மதுரை மறைப்பணிக் களத்

தின் முதல்வராகவும் தொண்டு புரிந்தவர். கர்நாடகப் பகுதியில் பணிபுரிந்த கார்கம் அடிகளார் முனிவரிடம் தமிழ் கற்பது பற்றி எழுதும்போது (12-1-1721) 'முனிவரினும் சிறந்த தமிழறிஞரைக் காண்பது அரிது' என பூர்ஸே அடிகளார் குறிப்பிடுகின்றார். கற்பதற்குக் கடினமான தமிழ் இலக்கியங்களைப் பயின்றுள்ள முனிவர் மிகச் சிறந்த தமிழ்க் கவிஞராக விளங்குவதாக அவரே 1715-ஆம் ஆண்டு மடலில் எழுதுகின்றார். தமிழகம் வந்து ஐந்தாண்டு நிறையுமுன்னரே முனிவர் பெற்ற தமிழ்ப்புலமை வியந்து பாராட்டுதற்கு உரியது.

மதுரை மறைப்பணிக் களத்தின் முதல்வராக 1721-24 ஆம் ஆண்டுகளில் பணிபுரிந்த மனுவேல் மச்சாதோ அடிகளார் இயேசு சபைத் தலைவருக்கு எழுதிய (30-8-1722) ஒரு மடலில் முனிவரின் எழுத்தாற்றலைப் புகழ்ந்து பாராட்டுகின்றார்.

முனிவர் தமிழில் மிகச் சிறந்த புலமை பெற்றவர் என்று 1727-ஆம் ஆண்டு மடலில் ப்ரோஸ்பெரோ ஜூலியானி அடிகளார் எழுதுகின்றார். இவரது பெயரைச் சிலர் தவறாக 'புரோஸ்பர் குபிஸியானி' என்று குறித்துள்ளனர். தரங்கம்பாடியிலிருந்த சீர்திருத்தத் திருச்சபையாரின் மாறுபட்ட கோட்பாடுகளை மறுத்து ஒரு நூல் எழுத வேண்டுமென முனிவரை மறைப்பணிக்கள முதல்வர் தோமினிக் மதெய்ரா அடிகளார் கேட்டுக் கொண்டதாக அவர் எழுதுகின்றார். முனிவரின் கூர்ந்த அறிவு, கல்வி, ஆர்வம், பணிகள், மொழிப்புலமை ஆகியவை பற்றியும் ஜூலியானி அடிகள் குறிப்பிடுகின்றார்.

1727-ஆம் ஆண்டில் முனிவர் எழுதிய 'வேதியர் ஒழுக்கம்' என்னும் நூல் தரங்கம்பாடித் திருச்சபையாராலும் பயன்படுத்தப்பட்டது என்னும் உண்மை முனிவரின் உரைநடையாற்றலைத் தெளிவாகப் புலப்படுத்துவதாகும்.

1726-ஆம் ஆண்டில் முனிவருக்கு வேறு ஒரு பணி வழங்கப்பட்டது. முனிவரின் தமிழ்த்திறனையும் தமிழ்ப் பண்பாடு பற்றிய அவரது அறிவாற்றலையும் அறிந்த அன்றைய மயிலாப்பூர் ஆயர் மேதகு ஜோசப் பிஞ்ஞேயிரோ ஆண்டகை இராமநாதபுரம் பகுதிக்குத் தம்மோடு முனிவரை அழைத்துச் சென்றார். அங்கு 1693-ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட அருளானந்தர் என்னும் இயேசு சபைத் துறவியின் வாழ்க்கைக் குறிப்புக் களைச் சேகரிப்பதும், அவரால் நிகழ்ந்த புதுமைகளைப் பற்றிய செய்திகளைத் திரட்டுவதுமே பிஞ்ஞேயிரோ ஆண்டகை அங்குச் சென்றதன் நோக்கமாகும். தமிழறிந்த முனிவர் தம் பணியில் உறுதுணையாக இருப்பார் என்பதை உணர்ந்ததாலேயே ஆயர் முனிவரை உடனழைத்துச் சென் றார். அவ்வாறே முனிவர் தமக்கு உறுதுணையாக இருந் தார் என்று அவரே எழுதியுள்ளார்.

முனிவர் சமய அறிவிலும் தமிழ்ப்புலமையிலும் மிகச் சிறந்தவர் என்றும் தமிழர்கள் பலரைவிடத் தமிழை அவர் நன்றாகக் கற்றறிந்தவர் என்றும் கால்மெத் அடிகளார் 28-9-1730 அன்று தம் மடலில் எழுதியுள்ளார்.

இன்று வாழும் நாம் முனிவர் இயற்றிய பல இலக்கிய, இலக்கண, அகராதி, உரைநடை, மொழிபெயர்ப்பு நூல் களைக் கொண்டு அவரது சிறந்த தமிழ்ப்புலமையை அறி கின்றோம். ஆனால், 'இறைவாக்கினர் எவரும் தம் மக்க ளால் பாராட்டப்படுவதில்லை' என்னும் விவிலியக் கூற்றுக்கு மாறாகத் தம்மோடு மறைப்பணிக் களத்தில் உழைத்த பல துறவிகளால் முனிவர் தாம் வாழ்ந்த காலத் திலேயே போற்றப்பட்டுள்ளார் என்னும் உண்மை வியத்தற் குரியதாகும். இவ்வுண்மை முனிவரின் உயர்ந்த தமிழறி வுக்குத் தக்க சான்றாக விளங்குகின்றது. முனிவர் சுப்பிர தீபக் கவிராயரின் நூல்களைத் தம் பெயரில் உலவச் செய் தார் என்னும் பொறுப்பற்ற கூற்று, இலக்கிய வரலாற்றையே திரித்துக் கூறும் மாபெருந் தவறு என்பதை இச்சான்றுகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

# 14. தேம்பாவணி இயற்றப்பட்ட ஊர்

முனிவர் இயற்றிய இலக்கிய நூல்களுள் தேம்பாவணியே தலை சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. இன்றும் தேம்பாவணி ஆசிரியராகவே வீரமாமுனிவர் தமிழகத்தில் பலராலும் அறியப்படுகின்றார்.

முனிவர் தேம்பாவணியை இயற்றிய ஆண்டு 1726 எனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும் இதற்குரிய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் முனிவர் தேம்பாவணியை இயற்றிய ஊர் எது என்பதுதான் தெளிவாகத் தெரியவில்லை.

பெரும்பாலும் கோனான்குப்பம் என்னும் ஆரியனூரில் முனிவர் தேம்பாவணியை இயற்றினார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் இதற்கு எத்தகைய ஆதாரமும் யாரும் இது வரையில் தரவில்லை. முனிவரின் மடல்களிலும் சரி, அக்காலத்து ஆண்டுமடல்களிலும் சரி, இது பற்றிய எக்குறிப்பும் இல்லை.

முனிவர் கோனான்குப்பம் சென்றதாகக் கூட நமக்கு வரலாற்றுச் சான்று எதுவும் கிடைக்கவில்லை.

1722-ஆம் ஆண்டு முதல் 1728-ஆம் ஆண்டு வரை பிரான்சிஸ் பெரைய்ரா அடிகளார் கோனான்குப்பத்தில் தங்கிப் பணியாற்றியதாக அறிகின்றோம். ஆகவே

1726-ஆம் ஆண்டில் முனிவர் கோனான்குப்பத்தில் பொறுப் பேற்றிருக்கவில்லை என்பது தெளிவு. 1722-ஆம் ஆண்டுக்கு முந்திய வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

1728-ஆம் ஆண்டு முதல் 1742-ஆம் ஆண்டு வரை பெர்நார்ந்து கோமஸ் அடிகளார் கோனான்குப்பத்தில் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

அதுமட்டுமல்ல, 1731-ஆம் ஆண்டு மடலை எழுதும் முனிவர் கோனான்குப்பம் பற்றிய செய்திகளைத் தொகுத்து வழங்கும்போது, அது தமக்கு அறிமுகமான ஊர் என்பதைக் குறிப்பாகக் கூட உணர்த்தவில்லை.

இதற்கு மாறாக அய்யம்பேட்டையைப் பற்றி அம்மடலில் எழுதும்போது, ''எய்யலூரைச் சுற்றியுள்ள பகுதி செழுமையானது. காவிரியிலிருந்து ஒரு சோழ மன்னன் கால்வாய் வெட்டி இப்பகுதிக்கு வளமையூட்டியதால் 'இது சோழ மண்டலம்' என அழைக்கப்படுகின்றது'' என விரிவாக எழுதி, அய்யம்பேட்டைப் பகுதி தமக்கு அறிமுக மான பகுதி என்பதை உணர்த்துகின்றார். ஆகவே முனி வருக்கும் கோனான்குப்பத்துக்கும் எத்தகைய தொடர்பு மில்லை என உறுதியாகக் கூறலாம்.

ஏலாக்குறிச்சியில் 1716—ஆம் ஆண்டு பொறுப்பேற்ற முனிவர் புதுச்சேரியில் தம் நோய்க்கு மருத்துவம் பெற்ற பின், உடல்நிலை காரணமாக 1717-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் முதல் 1720 வரை வடுகர்பட்டியில் பணியாற்றிய தாக அறிகின்றோம்.

அதற்குப் பின் முனிவர் பணியாற்றிய இடம் எதுவென அறிவதற்குரிய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், 1726-ஆம் ஆண்டில் ஆயர் ஜோசப் பிஞ்ஞேபி ரோவுடன் அருளானந்தரைப் பற்றிய செய்திகளைச்

சேகரிப்பதற்காக முனிவர் இராமநாதபுரம் மாவட்டத்துக்குச் சென்றதாக அறிகின்றோம். இப்பணி தொடங்கிய ஆண்டு 1721-ஆதலின், 1721 முதல் 1726 வரை முனிவர் இப்பணியில் ஈடுபட்டிருந்ததாக ஊகிக்க இடமுண்டு.

அப்பணியை முடித்தபின் 19-12-1726 அன்று மயிலாப்பூர் சாந்தோமிலிருந்து முனிவர் உரோமைக்கு எழுதிய மடலில் 'ஏற்கனவே தஞ்சைப் பகுதிக்குப் பொறுப்பேற்றுள்ள குரு' என்றே தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். எனவே, தேம்பாவணி இயற்றப்பட்ட 1726-ஆம் ஆண்டில் முனிவர் ஏலாக்குறிச்சியில் பொறுப்பில் இருந்தார் என்பது தெளிவு.

16-7-1728 அன்று எழுதப்பட்ட மடலும் முனிவர் தஞ்சைப் பகுதியில் பொறுப்பேற்றி ருந்ததை விரித்துக் கூறுகின்றது.

1737-ஆம் ஆண்டின் பணிப்பட்டியல் முனிவர் கூனம் பட்டியில் (அதாவது தஞ்சைப் பகுதியில்) பொறுப்பேற்றிருந்ததாகவே உரைக்கின்றது.

1740-ஆம் ஆண்டுப் பட்டியல் முனிவர் திருச்சியில் பணிபுரிந்ததாகக் கூறுகின்றது.

ஆகவே 1726-ஆம் ஆண்டு முதல் 1737-ஆம் ஆண்டு வரை முனிவர் ஏலாக்குறிச்சியிலும் கூனம்பட்டியிலும் தங்கித் தஞ்சைப் பகுதியில் பணி புரிந்தது உறுதியாகத் தெரிகிறது.

கோனான்குப்பம் தான் ஆரியனூர் என்றும், அங்கு முனிவர் ஒரு கோவிலை எழுப்பி, இந்திய உடையணிந்த மரியன்னையின் உருவத்தைத் தாமே வரைந்து அதற்கொப்ப ஒரு திருச்சிலையை மயிலாப்பூர் ஆயரின் மூலம் மணிலாவில் செய்வித்துக் கொணர்ந்தார் என்றும், பெரிய நாயகி அம்மன் என்னும் பெயரைச் சூட்டி அவ்வன்னை

யைப் போற்றிப் பதினைந்து பாடல்கள் இயற்றினா ரென்றும் முத்துச்சாமிப்பிள்ளை எழுதியுள்ளார்.

கோனான்குப்பத்தில் வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றினார் என்னும் செய்தி முதன்முதலாக முத்துச் சாமிப்பிள்ளையின் நூலிலேயே காணப்படுகிறது.

ஆனால் தமது கூற்றுக்கு உரிய சான்றுகள் எதையுமே முத்துச்சாமிப் பிள்ளை தரவில்லை.

எனவே, ஆதாரமில்லாமல் முத்துச்சாமிப் பிள்ளை கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது.

கோனான்குப்பத்திலேயே முனிவர் தேம்பாவணியை இயற்றினார் என ஆராய்ச்சியாளர்கள்கூட எவ்வித ஆதாரமுமின்றி எழுதுவதும் பேசுவதும் விந்தையாக உள்ளது.

## 15. கருத்து மோதலில் கனிந்த நூல்கள்

தஞ்சைப் பகுதியில் முனிவர் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் சீர்திருத்தத் திருச்சபையாரின் தலைமையிடமாகத் தரங்கம்பாடி அமைந்திருந்தது. டென்மார்க் மன்னரின் ஆதரவில் அத்திருச்சபையார் தமிழகத்தில் பணியாற்றி வந்தனர். பார்த்தலோமேயு சீகன்பால்கு ஐயர் தரங்கம்பாடியில் 1706-ஆம் ஆண்டு முதல் 1716-ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர். தரங்கம்பாடியில் தமிழ் அச்சகம் ஒன்று அமைத்துச் சீர்திருத்தத் திருச்சபையாரின் பல நூல்களை அச்சிட்டு வெளியிட அவர் வழிவகுத்தார். தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் இலத்தீன் மொழியில் அவர் இயற்றினார்.

தென்னக மக்களிடையே கத்தோலிக்கத் திருச்சபையார் ஒரு புறமும், சீர்திருத்தத் திருச்சபையார் மறுபுறமாகத் தத்தம் சமயத்தைப் போதிப்பதில் முனைந்திருந்தனர். இதனால் இவ்விரு சபையார்களிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. தஞ்சைப் பகுதியில் ஏற்கனவே கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்திருந்த பலர் சீர்திருத்தச் சபையைத் தழுவியபோது இயேசுசபையார் மனம் கொதித்தனர். இப்போக்கினைத் தடுத்து நிறுத்திட ஆவன செய்ய முயன்றனர்.

ஏலாக்குறிச்சியை அடுத்துள்ள திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் மரியன்னையை 'அடைக்கல அன்னை'

என்னும் பெயரில் அழைத்துப் போற்றிட முனிவர் விரும்பியதற்குக் காரணமே லூத்தரன் திருச்சபையார்தாம். அப்பகுதிக் கத்தோலிக்கருள் பலர் லூத்தரன் சபையில் சேரத் தொடங்கினர். இதனால் நெஞ்சம் பதைத்த முனிவர் மரியன்னையின் அருள் துணையை வேண்டினார். துன்பத்தில் அடைக்கலம் தரும் மரியன்னையை 'அடைக்கல அன்னை' என அழைத்திட இசைவு தருமாறு மயிலாப்பூர் ஆயரின் ஒப்புதலை வேண்டிப் பெற்றார். அதன் பின்னரே திருக்காவலூர்க் கோவில் அடைக்கல அன்னையின் பெயரால் அழைக்கப்படலாயிற்று. 'திருக்காவலூர்க் கலம்பகம்' என்னும் சிற்றிலக்கிய நூலை அடைக்கல அன்னையைப் புகழ்ந்து முனிவர் எழுதினார். தஞ்சைப் பகுதிக் கத்தோலிக்களுக்குத் திருக்காவலூர்க் கோவில் அடைக்கலம் தந்த காரணத்தாலும் முனிவர் அவ்வன்னையை 'அடைக்கல அன்னை' என்று அழைத்தது பொருத்தமே.

தம்மை எதிர்கொண்ட சமய மாற்றப் பிரச்சினையின் போதும் முனிவர் அடைக்கல அன்னையை அணுகினார். திருக்காவலூர் மயிலாப்பூர் ஆயரின் ஆன்மீகப் பொறுப்பில் இருந்ததால் ஆயருக்கு முனிவர் ஒரு மடல் எழுதி, ஆண்டு தோறும் அடைக்கல அன்னையின் திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமெனத் தம் கத்தோலிக்கருக்கு அறிவுறுத்தி ஒரு சுற்றுமடல் எழுதுமாறு ஆயரைக் கேட்டுக் கொண்டார். அடைக்கல அன்னையின் அருந் துணையால் இப்பிரச்சினைக்கு வெற்றி காண முடியும் என முனிவர் உறுதியாக நம்பினார்.

முனிவர் விரும்பி வேண்டியவாறே திருக்காவலூர்ப் பகுதிக் கத்தோலிக்கருக்கு மயிலாப்பூர் ஆயர் மடல் விடுத்தார். அவரின் அறிவுரையும், முனிவரின் தூண்டுதலும் ஒன்று சேர, திருக்காவலூரில் அடைக்கல அன்னையின் விழா ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாயிற்று.

அதன்பின் தரங்கம்பாடி சீர்திருத்தச் சபையார் கத்தோலிக்கரைத் தம் பக்கம் கவர முயற்சி செய்வதை நிறுத்தி விட்டனர். முனிவர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

திருக்காவலூர்க் கோவிலுக்குக் கத்தோலிக்க மக்கள் பெருந்திரளாக வரத் தொடங்கினர். இருபது முப்பது ஆண்டுகளாகச் சமயச் சடங்குகளில் கலந்து கொள்ளாத கத்தோலிக்கர்கள் கூட மனம் மாறிக் கோவிலுக்கு வரத் தொடங்கினர். அடுத்துள்ள கோயில்களில் பணியாற்றும் இயேசுசபைக் குருக்கள் பலர் முனிவரின் அழைப்பினை ஏற்றுத் திருவிழாவின்போது திருக்காவலூருக்கு வந்து உதவிபுரிந்தனர். ஆயினும் பெருந்திரளாக வந்த மக்கள் தொகையைச் சமாளிக்க இயலாமல் முனிவர் திணறினார்.

திருநாளின் சிறப்பு கத்தோலிக்க மக்களைத் தங்கள் சமய நெறியில் உறுதிப்படுத்த உதவுமென்பதை முனிவர் உணர்ந்தார். எனவே 29-1-1731 அன்று இயேசுசபைத் தலைவருக்கு ஒரு மடல் எழுதி, திருவிழாவைச் சிறப்பாகத் கொண்டாடப் பாப்புவின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு வேண்டுகின்றார். திருவிழாக் கொண்டாடப்படும் நாள் இயேசு பெருமானின் உயிர்ப்புப் பெருவிழாவை அடுத்து வரும் மூன்றாம் ஞாயிறு என்றும் தம் மடலில் அவர் குறிப்பிடுகின்றார்.

அதோடு முனிவர் அமைந்துவிடவில்லை. திருவிழாவில் கலந்து கொண்டு தக்க முறையில் ஒப்புரவு அருட்சாதனத் தைப் பெற்றுத் திருவிருந்தில் பங்கு கொள்ளும் கத்தோலிக் கருக்குப் 'பரிபூரண பலன்' வழங்குமாறு பாப்புவை வேண்டி இசைவு பெற்றுத் தருமாறும் அவர் தம் சபைத் தலைவரைக் கேட்டுக் கொண்டார்.

முனிவரின் வேண்டுகோள் பாப்புவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தம் வேண்டுகோளை நிறைவேற்றி

உதவிய தம் சபைத் தலைவருக்கு 8-2-1734 அன்று முனிவர் எழுதிய மடலில் இவ்வுதவிக்குத் தம் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றார்.

தரங்கம்பாடித் திருச்சபையாரின் கருத்துக்களைத் தம் கத்தோலிக்க மக்கள் ஏற்றுக் கொண்டுவிடாமலிருக்கக் கத்தோலிக்கக் கோட்பாடுகளைத் தம் மக்களிடையே பரப்ப முனிவரும் பிற இயேசுசபைத் துறவியரும் விரும்பினர். அதனால் 'வேத விளக்கம்' என்னும் நூலைத் தம் மறைப்பணிக்கள முதல்வர் தோமினிக் மதெய்ரோ அடிகளாரின் ஆணைப்படி முனிவர் 1728-ஆம் ஆண்டில் இயற்றினார். பதினெட்டு அதிகாரங்களைக் கொண்ட இந்நூல் ஏறக்குறைய முன்னூறு பக்கங்களைக் கொண்டது.

தரங்கம்பாடி லூத்தரன் சபையார் 'திருச்சபைப் பேதகம்' என்னும் பதின்மூன்று பக்க நூலை எழுதி முனிவரின் நூலுக்கு மறுப்புத் தெரிவித்தனர். அந்நூலுக்குப் பதிலாக நூற்றிருபது பக்க அளவில் 'பேதகம் மறுத்தல்' என்னும் நூலை முனிவர் இயற்றினார். அதில் லூத்தரன் சபையாரின் எழுபத்தெட்டுக் கருத்துக்களை மறுத்தெழுதினார்.

சீகன்பால்கு ஐயர் இயற்றிய தமிழ் இலக்கணம், தமிழ் அகராதி ஆகிய நூல்களும் விவிலிய முழுமையையும் அவரும் ஷூல்ட்ஸ் ஐயரும் தமிழில் மொழி பெயர்த்ததும் எழுத்துப் பணி மூலம் லூத்தரன் சபை பரவிடக் காரணமாக அமைந்தன. விவிலியத்தைப் போர்த்துக்கேய மொழியிலும் லூத்தரன் சபையார் பெயர்த்ததோடு தமிழ், தெலுங்கு, போர்த்துக்கேயம் ஆகிய மும்மொழிகளிலும் அவர்கள் தங்கள் சமய நூல்களை இயற்றி அச்சிட்டுப் பரப்பினர்.

லூத்தரன் சபையாரின் தமிழ் நூல்களில் மொழிப் பிழையும் கருத்துப் பிழையும் மலிந்திருப்பதாக முனிவர்

கருதினார். எனவே, 'லூத்தேர் இனத்தார் இயல்பு' என்னும் நாற்பது பக்க நூலை முனிவர் எழுதினார். இந்நூல் அங்கதச் சுவையோடு தரங்கம்பாடி லூத்தரன் திருச்சபையாரைச் சாடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் அநேகமாக 1735-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது பெஸ் அடிகளாரின் கருத்து.

முனிவர் லூத்தரன் சபையாருக்கு எதிராக எழுதி, திருக்கடையூர்ப் பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்க மக்களுக்காக வெளியிட்ட நூல் ஒன்று உண்டு. 'வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம்' என்பது அதன் பெயர். இந்நூல் அநேகமாக 1725-ஆம் ஆண்டு எழுதப்பட்டிருக்கலாம் என்றும் பெஸ் அடிகளார் (பக். 196) எழுதியுள்ளார்.

தஞ்சைப் பகுதியில் மிகுந்த ஆர்வமுடன் பணியாற்றிய முனிவர், லூத்தரன் சபையாரின் குறைகளைத் தம் தமிழ் நூல்களின் மூலம் மிகத் தெளிவாகவும் திண்ணமாகவும் புதுக் கத்தோலிக்கருக்குப் புலப்படுத்தியுள்ளார் அதன் பின் 'லூத்தரன் சபையார் நமக்கு எதிராகச் செயல்படவில்லை' என்று 1736-ஆம் ஆண்டு மடல் குறிப்பிடுகின்றது.

தவறில்லை. பேசுசபையாரின் அன்றைய வறுமைநிலை பல அச்சகங்களை நிறுவ இடம் கொடுத்திராது என்பது தெளிவு.

ஆனால் முனிவர் இயற்றிய நூல்கள் எதுவுமே அவ்வச் சகத்தில் அச்சிடப்படவில்லை. முனிவர் காலத்தில் அவ்வச்சகம் செயல்நிலையில் இருந்ததாகத் தெரிய வில்லை. அவரது நூல்களுள் பெரும்பாலானவை அவர் மறைந்து மிகப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் புதுச்சேரி மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பெற்றன.

தேம்பாவணி முதல் காண்டம் (1851), இரண்டாம் காண்டம் (1852) மூன்றாம் காண்டம் (1853) ஆகியவை புதுவை மிஷன் அச்சகத்திலேயே அச்சிடப் பெற்றன. அவ்வாறே 'கித்தேரியம்மாள் அம்மானை' (1849) சென்னை ஞானோதயா அச்சகத்திலும், 'திருக்காவலூர்க் கலம்பகம்' (1872) சென்னை தத்துவபோதினி அச்சகத்திலும், 'வேத விளக்கம்' (1840), (பேதசம் மறுத்தல்) (1758), (லூத்தேர் இனத்தார் இயல்பு), (1842) ஆகிய உரைநடை நூல்கள் புதுவை மிஷன் அச்சகத்திலும் அச்சிடப் பெற்ற தாக அறிகின்றோம்.

தமிழில் 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூலை எழுதிய வீரமாமுனிவர், 'க்ளாவிஸ்' (திறவுகோல்), செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய தமிழ் இலக்கண நூல்களை இலத்தீன் மொழியில் இயற்றி னார். வெளிநாடுகளிலிருந்து தமிழகத்துக்குச் சமயப் பணியாற்ற வரும் இயேசு சபைக் குருக்கள் ஏற்கனவே இலத்தீன் மொழியறிவு பெற்றவர்கள், தமிழகத்துக்கு வருமுன்பே இலத்தீன் மொழிவழியாக அவர்கள் தமிழைக் கற்றுக் கொள்ளப் பேருதவியாக அமையும் என்பதாலேயே முனிவர் இவ்வாறு இலத்தீன் மொழியில் தமிழிலக்கண நூல்களை இயற்றினார்.

இவற்றுள் 1728-ஆம் ஆண்டில் முனிவர் இயற்றிய கொடுந்தமிழ் இலக்கணம், முனிவரின் வாழ்நாளிலேயே அச்சிடப் பெற்றது. உண்மை என்னவெனில், முனிவர் எழுதிய நூல்களுள் 'கொடுந்தமிழ் இலக்கணம்' மட்டுமே அவரது வாழ்நாளில் அச்சிடப் பெற்ற நூலாகும்.

அதிலும் பெரிய விந்தை என்னவெனில் எந்தத் தரங்கம்பாடி லூத்தரன் திருச்சபையாருக்கு எதிராக முனிவர் பல உரைநடை நூல்களை இயற்றிப் போராடினாரோ, அதே தரங்கம்பாடி லூத்தரன் சபையாரே முனிவரின் 'கொடுந்தமிழ் இலக்கண'த்தைத் தங்கள் அச்சகத்தில் 1738-ஆம் ஆண்டில் அச்சிட்டார்கள். சிறிய 'ஆக்டாவோ' அளவில் 175 பக்கங்களைக் கொண்டதாக இந்நூல் அச்சிடப் பெற்றது.

அதுமட்டுமல்ல, அவ்வாறு தரங்கம்பாடி அச்சகத்தில் முனிவரின் இலக்கண நூலை வெளியிட அன்று மயிலாப்பூரில் இருந்த கத்தோலிக்க ஆயர் மேதகு ஜோசப் பிஞ்ஞெய்ரோ ஆண்டகை 2-11-1737 அன்று இசைவு வழங்கினார். இவ்விசைவினைப் பற்றி 1740-ஆம் ஆண்டு பட்டியலும் குறிப்பிடுகின்றது.

இன்னொரு செய்தியையும் நாம் குறிப்பிட வேண்டும். தரங்கம்பாடிப் பகுதியில் சமயப் பணியாற்றிய கிறிஸ்டோபர் தெயடோசியுஸ் வால்தர் அடிகளார் இயற்றிய தமிழ் இலக்கணச் சிந்தனைகள் (58 பக்கங்கள்) முனிவரின் கொடுந்தமிழ் இலக்கணத்தோடு இணைத்து அச்சிடப்பெற்றது.

ஹெர்வாஸ் அடிகளார் 1885-ஆம் ஆண்டில் இயற்றிய ஒரு நூலின் வழியாக (Idea dell' Universo) கொடுந்தமிழ் இலக்கணம் போர்த்துக்கேய மொழியில் பெயர்க்கப்பட்டிருந்ததாக அறியமுடிகிறது.

பிற்காலத்தில் இவ்விலக்கணத்தின் இலத்தீன், ஆங்கிலப் பதிப்புக்கள் கத்தோலிக்கராலும், பிற கிறித்தவ சபையினராலும் வெளியிடப்பெற்றன.

'கொடுந்தமிழ் இலக்கணம்' பிற இலக்கண நூல்கள் பெற்றிராத ஒரு தனிச்சிறப்பைக் கொண்டது. தமிழ் மொழியில் எத்தனையோ இலக்கண நூல்கள் இதுவரை எழுதப் பெற்றுள்ளன. அவையனைத்துமே செந்தமிழுக்கு இலக்கணம் வகுப்பனவாகவே அமைந்துள்ளன. ஆனால் செந்தமிழுக்கும் கொடுந்தமிழுக்கும் (பேச்சுத் தமிழுக்கும்) இடையிலுள்ள பெரும் வேறுபாடுகளை எளிதாக உணர்ந்த வீரமாமுனிவர், 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்' என இருவேறு இலக்கண நூல்களை இயற்றியமை வியப்புக்குரியது. இதனால் தமிழில் மொழியியலுக்கு வித்திட்ட பெருமையை வீரமாமுனிவர் பெறுகின்றார்.

தமிழகத்தில் சமயப் பணியாற்ற வரும் இயேசு சபைக் குருக்கள் செந்தமிழைக் கற்பதைவிட, பேச்சுத் தமிழைக் (கொடுந்தமிழைக்) கற்பதே மிகவும் தேவையானதாகும். தமிழ் மொழியறிவு மிகுதியாகப் பெற்றிராத நிலையில் தமிழைக்கற்க முனைவோர் செந்தமிழ்—கொடுந்தமிழ் வேறுபாடுகளைக் கண்டு மலைப்புறுவர் என்பது உறுதி. எனவே அத்தகைய மலைப்பைப் போக்கிடும் வகையிலேயே முனிவர் கொடுந்தமிழ் இலக்கணத்தை இயற்றினார்.

இது இயேசு சபையாருக்கும் லூத்தரன் சபைக் குருக்களுக்கும் மிகுந்த பயனைத் தந்தது என்பதில் ஐயமில்லை. கத்தோலிக்கரல்லாத பிற கிறித்தவ சபைகளைச் சார்ந்த கிறிஸ்டோபர் ஹென்றி ஹோர்ஸ்ட் 1806-ஆம் ஆண்டிலும், ஜார்ஜ் வில்லியம் மேஹன் 1848-ஆம் ஆண்டிலும் 'கொடுந்தமிழ் இலக்கண'த்தை ஆங்கிலத்

தில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். இரேனியஸ் ஐயர் இயற்றி 1834-ஆம் ஆண்டில் வெளியிட்ட தமிழ் இலக்கணம், முனிவரின் இலக்கண நூலின் அடிப்படையில் இயற்றப்பட்டது எனப் போப் ஐயர் கூறுகின்றார்.

கத்தோலிக்கத் திருச்சபையார்க்கும் பிற கிறித்தவ சபைகளுக்குமிடையில் அக்காலத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் கசப்பான ஒரு சூழ்நிலையையே உருவாக்கி இருந்தன. அதனையும் வென்று நின்ற பெருமை வீரமா முனிவருக்கே உரியது.

# 17. வித்தகர் போற்றும் 'வேதியர் ஒழுக்கம்'

முனிவரின் காலத்தில் மதுரை மறைப்பணிக் களத்தில் ஏறக்குறைய நூறு வேதியர்கள் பணியாற்றி வந்தனர். குருக்கள் தொகை மிகமிகக் குறைவாக இருந்த அக்காலத் இவ்வேதியர்களின் பணி சிறப்பு மிக்கதாகும். அக்காலத் தில் தமிழகத்திலிருந்து ஐரோப்பாவுக்கு எழுதப்பட்ட பல மடல்களில் சில வேதியர்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. அவர்களின் பணிகளும் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வேதியர்களுக்கு எத்தகைய பயிற்சி வழங்கப் பட்டது என்பதையும் எவ்விடத்தில் அத்தகைய பயிற்சி வழங்கப்பட்டது என்பதையும் நம்மால் அறிய இயல வில்லை.

ஏலாக்குறிச்சியில் முனிவரை முதல்வராகக் கொண்ட ஒரு பள்ளியில் வேதியர்கள் செந்தமிழைக் கற்றார்கள். ஆனால் அவர்கள் கத்தோலிக்க சமய அறிவினை எவ்வாறு பெற்றார்கள் என்பதை அறிய இயலவில்லை.

வேதியர்களின் வாழ்வும் பணியும் பற்றி விரிவாக முனிவர் எழுதிய நூல்தான் 'வேதியர் ஒழுக்கம்'. இந்நூல் அக்காலத்து வேதியர்களுக்குப் பாடநூலாகவே விளங்கியது எனலாம். இருபது அதிகாரங்களைக் கொண்ட இந்நூல் முனிவரின் காலத்தில் அச்சிடப்படாமலே கையெழுத்துப் படியாக வழங்கி வந்தது. பின்பு புதுவை மிஷன் அச்சகத் தில் 1843-ஆம் ஆண்டில் இந்நூல் முதல் பதிப்பாக அச்சிடப்

பட்டது. அதன்பின் அது பல பதிப்புக்களாக வெளி வந்தது. கத்தோலிக்கரல்லாத பிற கிறித்துவ சபையின ரும் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டதாகவும் பயன் படுத்தியதாகவும் பெஸ் அடிகளார் (பக். 87) கூறுகின்றார்.

'' முனிவர் இயற்றிய இலக்கண நூல்களுக்கும் அகராதி களுக்கும் அடுத்த நிலையில் மிகுந்த சிறப்புக்குரிய நூல் 'வேதியர் ஒழுக்கம்' நூலே'' என்பது எலிஜா ஹூல் என் னும் வெஸ்லியன் திருச்சபைக் குருவின் கருத்தாகும். 'முனிவரின் உரைநடை நூல்களுள் இதுவே மிகச் சிறந்தது' எனப் போப் ஐயர் தம் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப் பின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

முனிவரால் தமிழில் இயற்றப்பட்ட 'வேதியர் ஒழுக்கம்' ஜே. பி. திரிங்கால் அடிகளாரால் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டு வெளியிடப் பெற்றது.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள கீழச்சேரியில் வாழ்ந்த ஒரு கிறித்துவ வேதியர் இந்நூலை' 'அத்யாபக சிலாமு' என்னும் பெயரில் தெலுங்கு மொழியில் பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு 1891-ஆம் ஆண்டு கென்னடி அடிகளால் நெல்லூரில் வெளியிடப் பெற்றது.

இவ்வாறு முனிவர் இயற்றிய 'வேதியர் ஒழுக்கம்' பலராலும் போற்றப்பட்டு பல மொழிகளிலும் பெயர்க்கப் படும் சிறப்புக்கு உரியதாயிற்று.

# 18. அரியலூர் மழவராயரின் அன்பளிப்பு

முனிவர் தங்கிப் பணியாற்றி வந்த ஏலாக்குறிச்சி - திருக்காவலூர் அன்று அரியலூர் மழவராயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதியாகும். மழவராயர் மதுரை மன்ன ருக்குத் திறை செலுத்தி வந்த சிற்றரசராக விளங்கி வந்தார். முனிவர் காலத்தில் குமார ரெங்கப்ப ஒப்பில் லாத மழவராயர் (1715 - 1750) அரியலூர்ச் சிற்றரசராக விளங்கினார்.

திருக்காவலூரில் கோயிலைச் சுற்றி அழகிய மலர்த் தோட்டம் அமைத்திருந்தார் முனிவர். முனிவருக்கு மலர் களின் மீது பிரியம் மிகுதி. அதனாலேயே அவர் 'மலர் களின் தந்தை' என்று அழைக்கப்பட்டார் என தெ. பூர்ஸே அடிகளார் பாரீசிலிருந்த ஸ்டீபன் சூசியே அடிகளாருக்கு 12-1-1721 அன்று எழுதிய ஒரு மடலில் குறிப்பிட்டுள்ளார். பாரீசிலிருந்து தமக்கு மலர் விதைகளை வருவித்துத் தருமாறு முனிவர் ஒருமுறை தெ. பூர்ஸே அடிகளாரைக் கேட்டுக் கொண்டார். அவரும் தமது நண்பராகிய சூசியே அடிகளார்க்கு மலர்விதைகள் அனுப்புமாறு எழுதினார். மலர்விதைகளும் வந்து சேர்ந்தன, ஆனால் அவை தமிழகம் வந்து சேர நீண்ட நாட்கள் ஆயினமையால் தமது வீரியத்தை இழந்து பயனற்றுப் போயின.

ஒருமுறை திருக்காவலூர் மலர்த் தோட்டத்தினுள் புகுந்துவிட்ட பசுவை முனிவரின் தோட்டக்காரன் வன்மை

யாக அடித்துக் காட்டுக்குள் துரத்திவிட்டான். இது ஊருக்குள் பெரும் சிக்கலை எழுப்பியது. முனிவர் பல முறை கேட்டபோதும் தோட்டக்காரன் தான் பசுவை அடிக்கவே இல்லையென மறுத்து விட்டான். ஏற்கனவே முனிவர் மீதும் கிறித்தவர்கள் மீதும் கசப்புணர்வு கொண்டிருந்த ஊர்மக்கள் முனிவரின் வேதியரே பசுவை அடித்தவர் என்று குற்றம் சாட்டினர். அக்குற்றம் மெய்ப்பிக்கப் பட வேண்டும் என்று முனிவர் பலமுறை வாதாடியும் அவர்கள் செவிமடுக்காமல் அரியலூர் மழவராயரிடம் முறையிட்டனர்.

உடனே தாமும் மழவராயரைச் சந்தித்து நடந்ததை விளக்கிச் சொல்ல முனிவர் அரியலூருக்குப் புறப்பட்டார். ஊர் எல்லையில் மழவராயரின் முதலமைச்சரை முனிவர் சந்தித்தார். நடந்ததை அறிந்த முதலமைச்சர் முனிவரை ஊருக்குத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டதோடு அவரது வேதியரை விட்டுச் சென்றால் தாம் அவரது முன்னிலையில் ஊராருடன் பேசிச் சிக்கலைத் தீர்த்து வைப்பதாகவும் கூறினார். முதலமைச்சர் பின் ஊராரை அழைத்துப் பேசி, தீர ஆராயாமல் முனிவரின் வேதியரைக் குற்றம் சாட்டியதற்காக அவர்களைக் கடிந்து கொண்டார்.

ஊரார் மீது கொண்ட சினத்தின் காரணமாக முனிவர் ஏலாக்குறிச்சிக்குப் போகாமல் கோக்குடிக்குச் சென்றார். கோக்குடியும் மழவராயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஊர்தான்.

அவ்வமயம் அரியலூர் மழவராயர் வேட்டைக்காகப் புறப்பட்டு வந்தார். அவர் ஏலாக்குறிச்சிக்கு வந்தபோது ஊர்மக்கள் அவரைச் சுற்றி நின்று, கிறித்துவர்கள் தங்கள் பசுக்களை வதைத்துக்கொல்வதாக முறையிட்டனர்; கிறித்துவக் கோயிலை இடித்துத் தள்ளிவிட்டு, கிறித்தவர்களை ஊரைவிட்டுத் துரத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் மழவராயரோ அம்மக்களை அறிந்தவராத லின், அவர்கள் கூறியதை நம்பவில்லை. இனிமேல் இதுபற்றி பேசவே கூடாதென்று பணித்து அவர்களை அனுப்பிவைத்தார்.

மழவராயரிடம் பணிபுரிந்தோருள் ஒருவர் கிறித்துவர். மழவராயர் அவரை அழைத்து முனிவர் எங்கே சென்றுள்ளார் என்று கேட்டறிந்து கொண்டார். பின் தாமே கையொப்பமிட்ட ஒரு மடலை அவ்வலுவலர் மூலம் முனிவருக்கு அனுப்பி, முனிவரை உரிய மரியாதைகளுடன் ஏலாக்குறிச்சிக்கு உடனே அழைத்து வருமாறு பணித்தார்.

இச்செய்திகளை முனிவர் தமது 1731-ஆம் ஆண்டு மடலில் குறிப்பதால் இவை 1730-ஆம் ஆண்டு நிகழ்ந்தவை என நாம் அறியலாம்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் மழவராயருக்கும் முனிவருக்கும் நட்புறவு தொடர்ந்தது என நாம் ஊகிப்பதில் தவறில்லை.

மீண்டும் 1735-ஆம் ஆண்டில் முனிவரைச் சந்திக்க மழவராயர் வந்ததாக சால்வதோர் தோஸ் ரெய்ஸ் அடிகளார் எழுதிய 1735-ஆம் ஆண்டு மடலின் மூலம் அறிகின்றோம்.

முனிவரைச் சந்திக்க வந்த மழவராயர் இரவு நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்ததாகவும். பெரும்பாலும் கத்தோலிக்க சமயத்தைப் பற்றியே உரையாடிக் கொண்டிருந்ததாகவும் அம்மடல் குறிப்பிடுகின்றது.

சந்திப்பின் முடிவில் முனிவருக்குப் பல அன்பளிப்புகளை வழங்கிய மழவராயர், கோயிலும் குருக்கள் இல்லமும் அமைந்திருந்த இடத்தையும் அதை அடுத்திருந்த இடத்தையும் அடைக்கல அன்னை கோயிலுக்கு நன்கொடையாக வழங்கினார். இதனை ஒரு கருங்கல்லில் பொறித்தும் வழங்கினார். இக்கருங்கல் பட்டயம்

(சிலாசாசனம்) இன்று திருக்காவலூர்க் கோவில் சுவரில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

பட்டயத்தின் வாசகம் வருமாறு;

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1957 இராக்ஷத ஆடி மீ 26 ஸ்ரீமது ராஜமானிய ராஜ-ஸ்ரீ அரியலூர்......... ரங்கப்ப மழவராயர் ஏலாக்குறிச்சித் திருக்காவலூர் வீராண்தேவன் வழிக்குக் கிழக்கு, கோவிலூர் வழிக்கு மேற்கு, குட்டைக்குத் தெற்கு, பெரிய ஏரிக்கு வடக்குட் பட்ட யாவும் சருவேசரன் கோயிலுக்குச் சிலாசாதனமாகத் தந்தோம். சந்திராதித்தரும் கல்லுங் காவெரியும் முள்ளளவும் சுகமே இருக்கவும். இந்தத் தருமத்து விகாதஞ் செய்பவன் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்திற்குள்ளாகிப் பஞ்சமாப் பாதகனாகக் கடவான்."

முனிவர் தமது தமிழறிவாலும், சமய ஞானத்தாலும் அனைவருடனும் எளிதாகப் பழகும் இனிய பண்பாலும் பல பெரியோர்களுடன் நட்புறவை வளர்த்துக் கொண் டார். இந்நட்புறவுகள் முனிவருக்கு மட்டுமல்ல, மதுரை மறைப்பணிக் களத்தில் பணிபுரிந்த பலருக்கும் சமயப் பணி யில் பெரிதும் துணையாக இருந்தன.

அரியலூர் மழவராயருக்கு முதுகில் இராசபிளவை வந்திருந்ததாகவும், அதைத் திருக்காவலூர்க் கோயில் குளத்துத் தண்ணீரைக் கொண்டு முனிவர் குணமாக்கி யதாகவும் ஒரு செவிவழிச் செய்தி நிலவுகிறது. முழுநலம் பெற்ற மழவராயர் மனநிறைவோடு கோயிலைச் சுற்றி யிருந்த நிலத்தைக் கொடையாக வழங்கினார் என்றும் அதே செவிவழிச் செய்தி கூறுகிறது. ஆனால் அதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை என்பதே உண்மை.

# 19. சந்தா சாகிப்புடன் நட்பு

1732-ஆம் ஆண்டில் தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் போர்கள் மீண்டும் நடை பெறலாயின. புதிதாகத் தஞ்சையில் பொறுப்பேற்ற மன்னரிடம் திறைபெறுவதற்காக முகலாயப்படை தஞ்சைப் பகுதிக்கு வந்தது. சோழ மண்டலத்து மக்களைத் துன்புறுத்துவதும் கொல்லுவதும் பெண்களை அவமானப்படுத்துவதுமாகிய பல கொடிய செயல்களில் அவர்கள் ஈடுபட்டனர். இறுதியில் தாங்கள் விரும்பியவாறே மன்னரிடம் திறையைப் பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றனர்.

திறையைச் செலுத்திய தஞ்சை மன்னர் அத்தொகை யைத் தம் மக்களிடமிருந்து மிகுந்த வரியைத் தண்டுவதன் மூலம் ஈடு செய்தார். பின் தம் கவனத்தை மறவ நாட்டின் மீது செலுத்தி, தாமே மூன்றாண்டுகளுக்கு முன் அரியணை யில் இருத்திய கட்டத் தேவர் மீது தஞ்சை மன்னர் படை யெடுத்துச் சென்றார். மூன்றாண்டுகளுக்கு முன் தாமே பதவியிழக்கச் செய்த பவன சங்குவை மீண்டும் அரியணை யில் இருத்தவே இப்போரை மேற்கொண்டதாகத் தஞ்சை மன்னர் காரணம் காட்டினார். ஏற்கெனவே மறவ நாட்டின் மூன்றிலொரு பகுதியினர் தமக்குத் திறை செலுத்தி வந்த நிலையில், மறவநாடு முழுமையையும் கைப்பற்றி அந்நாட்டு மன்னனாகத் தம் மகனுக்கு முடி

சூட்டுவதே தஞ்சை மன்னரின் உண்மையான எண்ணமாக இருந்தது.

கட்டத்தேவரின் போதுமான படையும் படைக்கலங்களும் இல்லாத காரணத்தால் அவர் தஞ்சை மன்னரிடம் தோற்றுப் போயிருப்பார். ஆனால் தஞ்சை மன்னருக்குத் திறைசெலுத்தி வந்த பண்டாரம் என்னும் சிற்றரசர் தஞ்சை மன்னர் படையெடுத்து வருவதுபற்றிக் கட்டத் தேவருக்கு மறைவாகச் செய்தியனுப்பியதால், தேவர் தஞ்சைப் படைகளை எதிர்கொள்ள ஆயத்தமாக இருந்தார். சுற்றிலுமுள்ள சிற்றூர்களைப் பாழ்படுத்தி, மக்களைத் துன்புறுத்திக் கொள்ளையடித்த பின்னர் தமது தலைநகரை நோக்கி வந்த தஞ்சைப் படைகளைக் கட்டத்தேவர் கடுமையாகத் தாக்கினார். தஞ்சைப் படைகள் தேவரின் தலைநகரை முற்றுகையிட்டன. சிற்றரசர் பண்டாரத்தின் சதியைப் பற்றி ஐயம் கொண்ட தஞ்சை இளவரசர், அவரைக் கொன்றார். இதனால் சினம் கொண்ட தஞ்சைப் படைகளின் ஒரு பகுதியினர் தஞ்சை மன்னருக்கு எதிராகச் செயல்பட்டனர். ஆகவே இராமநாதபுரத்தில் நிகழ்ந்த இக்கடுமையான போரில் தஞ்சைப் படை தோல்வியைத் தழுவியது.

இன்னுமொரு போர் மதுரையில் நிகழ்ந்தது. மதுரையை ஆண்டு வந்த விசயரங்க கிருஷ்ணமுத்துவீர சொக்கநாத நாயக்கர் தம் எட்டு மனைவியருள் ஒருவராகிய அரசி மீனாட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு இறந்தார்.

அவரது ஆட்சியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய இரு அந்தணர்களை மீனாட்சியின் சகோதரர்கள் சிறையிலடைத்துப் பின் நாடு கடத்த முயன்றனர். அந்தணர்கள் மன்னரின் உறவினராகிய பங்காரு திருமலை நாயக்கரை மீனாட்சிக்குப் பதிலாக அரசுக் கட்டிலேற்ற முயன்றனர்.

இதனால் விளைந்த போரின்போது மீனாட்சி அரசி ஆற்காட்டு நவாப்பின் உதவியை நாடினார். நவாபு தம் மகன் சுஃப்தர் அலியையும் மருமகன் சந்தாசாகிபையும் மீனாட்சிக்கு உதவி செய்வதற்காகப் படையுடன் அனுப்பி வைத்தார்.

ஆற்காட்டு நவாபின் உதவியால் மீனாட்சி அரசி தம் பகைவர்களை வென்று ஆட்சிப் பொறுப்பைத் தக்க வைத்துக் கொண்டார். இதற்காக அவர் நவாபுக்கு மூன்று இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது.

இப்போரைப் பற்றிய விவரங்களைக் கல்பாளையத்தி லிருந்து தாம் எழுதிய 1732ஆம் ஆண்டு மடலில் ஜோசப் வியேரா அடிகளார் எழுதியுள்ளார்.

1733-ஆம் ஆண்டிலும் திருச்சிராப்பள்ளி தஞ்சைப் பகுதிகளில் கடுமையான போர்கள் தொடர்ந்தன. மதுரை, மைசூர், தஞ்சை, ஆற்காட்டுப் படைகள் அப்பகுதி யில் பாசறை அமைத்திருந்தனர். படைவீரர்களும் சரி யான கட்டுப்பாடின்றி வாழ்ந்து வந்தனர். நினைத்த போதெல்லாம் ஊர்களுக்குள் புகுந்து மிகுந்த அழிவை விளைவித்தனர்.

ஆவூரில் பணியாற்றி வந்த பெர்த்தோல்தி அடிகளார் முகலாய வீரர்களின் செலவுக்குப் பணம் தந்து அவர்களின் பாதுகாப்பைப் பெற்றார். எனினும் மற்றப் படைகளின் வீரர்கள் வந்து துன்பம் விளைவிக்கலாம் என்னும் அச்சம் அப்பகுதியை ஆட்கொண்டிருந்தது.

ஏலாக்குறிச்சிப் பகுதியில் பணியாற்றிவந்த முனிவர் தம் நாட்டவராகிய பெர்த்தோல்தி அடிகளாரைச் சந்திக்கவும் உதவி புரியவும் ஆவூருக்கு அடிக்கடி செல்வ துண்டு. போர்வீரர்கள் ஆவூர்ப் பகுதிக்குள் நுழையும் போது முனிவர் அங்கிருந்தால் அவ்வீரர்களை எதிர் கொண்டு சென்று நன்னயமாகப் பேசி அவர்களை அனுப்பி விடுவார்.

ஆவூரை அடுத்துள்ள பகுதியில் ஆண்டு வந்த தொண்டைமான் என்னும் குறுநில மன்னரின் வீரர்கள் அடிக்கடி ஆற்காட்டுப் படைவீரர்களின் பாசறைகளைக் கொள்ளையடிப்பதுண்டு ஒருமுறை அவ்வாறே கொள்ளை நிகழ்ந்த போது அக்கொள்ளைக்குக் காரணம் ஆவூர் மக்களே என்று தவறாக எண்ணிய ஆற்காட்டு வீரர்கள், அவர்களை அழித்துவிடக் கருதிப் பெருந்திரளாக ஆவூரை நோக்கி வந்தனர்.

அவ்வமயம் ஆவூருக்கு வந்திருந்த முனிவர் அவ்வீரர்களை அமைதிப்படுத்தச் சென்றார். ஆனால் வீரர்களோ ஆவூர் மக்கள் தங்களிடமிருந்து திருடியவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டும், அல்லது முனிவர் கைதியாகத் தங்களுடன் வரவேண்டும் என்று கடுஞ்சினத்துடன் கூறினர். ஆகவே, முனிவர் அவர்களுடன் சென்றார். தங்கள் வசைமொழிகளைப் பொருட்படுத்தாமல் முனிவர் துணிவுடன் இருந்ததைக் கண்ட வீரர்கள் சீற்றம் கொண்டு முனிவரைக் கொடிய வெயிலில் நிற்க வைத்துக் கொடுமைப்படுத்தினர்.

நீண்ட நேரத்துக்குப் பின் முனிவரின் வழக்கை விசாரித்த படைத்தளபதி முனிவர் மீது எக்குற்றமும் இல்லை என்று தீர்ப்பளித்தார்.

நியாயமான தீர்ப்பு வழங்கிய படைத்தலைவரை முனிவர் சந்திக்க விரும்பவே, படைத்தலைவரும் முனிவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். முனிவரைக் கட்டித் தழுவி வரவேற்ற படைத்தலைவர் தமக்குச் சரியாசனத்தில் முனிவரை அமரச் செய்தார் என்று ஜோசப் வியேரா அடிகளார் 1733-ஆம் ஆண்டு மடலில் வரைகின்றார்.

1732-ஆம் ஆண்டில் முனிவர் சந்தித்த இப்படைத் தலைவரே சந்தா சாகிபு. இவர் ஆற்காட்டில் இருந்த போது அப்பகுதியில் பணியாற்றிய இயேசு சபைக் குருக்

களுடன் நட்புறவு பாராட்டி வந்தவர். சாகிபை முன் பொரு முறை முனிவர் சந்திக்க விரும்பியும் எக்காரணத் தாலோ இயலாமற் போயிற்று.

இப்போது முனிவருடன் சாகிபு நெருங்கிய நட்புறவு பூண்டார். அவருக்குப் பல அன்பளிப்புகளை வழங்கி அடிக்கடி தம்மைச் சந்திக்க வருமாறு முனிவரைக் கேட்டுக் கொண்டார்.

சந்தா சாகிபு முனிவருக்கு வழங்கிய மதிப்பையும் மரியாதையையும் கண்ட படைவீரர்களும் அவருக்கு மிகுந்த மதிப்பளித்துப் போற்றலாயினர்.

சந்தா சாகிபு திருச்சிராப்பள்ளிப் பகுதியில் கோலோச்சிக் கொண்டிருந்த வரையில் ஆவூரிலும் பிற ஊர்களிலும் இருந்த கத்தோலிக்கக் கோயில்களுக்கு எத்தகைய இடையூறும் ஏற்படவில்லை.

1735-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கி லுள்ள கல்பாளையும் என்னும் ஊரிலிருந்த கோயில் முகமதிய வீரர்களால் அழிக்கப்படக்கூடிய அபாயம் எழுந்தபோது முனிவர் சந்தா சாகிபைக் கண்டு பேசினார். தமது மெய்க்காவலர்களையே திருச்சிராப்பள்ளிப் பகுதியி லுள்ள கத்தோலிக்கக் கோயில்களுக்குக் காவலர்களாகச் சந்தா சாகிபு அவ்வமயம் ஏற்படுத்தினார்.

1736-ஆம் ஆண்டில் திருச்சிப் பகுதியில் மீண்டும்போர் தொடங்கியது. முன்பு மீனாட்சியை அரசுக் கட்டிலில் ஏற்றிய சந்தா சாகிபு, இம்முறை அவரைப் பதவியிறக்கி விட்டுப் பங்காரு திருமலை நாயக்கரை மதுரை மன்ன ராக்க முயன்றார். இதற்குக் காரணம் என்னவெனில், மீனாட்சி அரசியின் ஆட்சியில் அவரது சகோதரரது அதிகாரமே கொடிகட்டிப் பறந்தது. அவரது கொடுமை யைப் பொறுக்கவியலாத மக்கள் ஆற்காட்டு நவாபுக்கு ஆளனுப்பி, பங்காரு திருமலை நாயக்கரைத் தங்கள் மன்ன

ராக அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர். 1736-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் பங்காரு திருமலையுடன் சந்தா சாகிபைப் பெரும்படையோடு நவாபு அனுப்பி வைத்தார். சந்தா சாகிபு ஐந்து மாத காலம் முற்றுகையிட்டபின் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைக் கைப்பற்றினார். இதனால் எழுந்த போரிலும் முன்பு போலவே வன் முறைகள் மிகுந்திருந்தன. ஊர்களைக் கொள்ளையடித்து மக்களைத் துன்புறுத்துவது வழக்கமாயிற்று. இதனால் கிறித்துவ மக்களும் பாதிக்கப்பட்டனர். கிறித்தவக் கோயில்களும் சில முறை அழிவுக்கு உள்ளாயின.

ஆனால் சந்தா சாகிபு பாசறை அமைத்துத் தங்கி யிருந்த பகுதிகளில் கிறித்துவக் கோயில்களுக்கும் மக்க ளுக்கும் எத்தகைய தீங்கும் இழைக்கப்படவில்லை, எனவே, வன்முறை தலைவிரித்தாடிய பகுதிகளிலிருந்து கிறித்துவரும் கிறித்துவரல்லாதாரும் இப்பகுதிக்குப் புகலிடம் தேடி ஓடி வந்தனர்.

பிற படைகளால் கிறித்துவக் கோயில்களுக்கு இடுக்கண் நேரவிருந்தால் அப்பகுதியிலுள்ள குருககள் சந்தாசாகிபின் உதவியை நாடுவர். அவரும் தம் வீரர்களை அனுப்பிக கோயில்களுக்கு அழிவு நேரிடாமல் பாதுகாப்பார்.

மதுரை மன்னராகப் பங்காரு திருமலை நாயக்கர் முடிசூட்டப்பட்டிருந்தாலும் உண்மையில் நாட்டை ஆணடுவந்தவர் சந்தாசாகிபு தான். எனவே, திருச்சிராப் பள்ளியை அடுத்திருந்த பகுதிகளில் இயேசு சபைக் குருக்களும், கிறித்துவ மக்களும் எத்தகைய துன்பமு மின்றிப் பாதுகாப்புடன் வாழ்ந்து வந்தனர்.

“ஒரு கிறித்துவ மன்னர் கூடச் சந்தா சாகிபைப் போலக கிறிததுவக் குருக்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டியிருக்க இயலாது” எனச் சின்ன சவேரியார் என்று

அழைக்கப்பட்ட ரோஸ் அடிகளார் 1743-ஆம் ஆண்டு ஒரு மடலில் குறிக்கின்றார்.

இவ்வாறு சந்தா சாகிபு கிறித்துவர்களுக்கு உதவியதற்கு அவர் முனிவருடன் கொண்டிருந்த ஆழ்ந்த நட்புறவே காரணம். முனிவரை முன்னிட்டு அப்பகுதியில் பணியாற்றி வந்த பிற இயேசு சபைக் குருக்களையும் சந்தா சாகிபு மதித்துப் போற்றி வந்தார். தாம் முற்றுகையிடும் பகுதிகளில் கிறித்துவக் கோயில்கள் இருந்தால் முன்னதாகவே தம் வீரர்களை அங்கு அனுப்பிப் பாதுகாப்புக் கொடுக்கவும் சந்தா சாகிபு ஏற்பாடு செய்து வந்தார்.

சந்தா சாகிபு முனிவரைத் தம் திவானாக ஏற்படுத்தினார் என்றும், முனிவருக்கு 'இஸ்மத்தி சந்நியாசி' என்னும் பட்டம் வழங்கினார் என்றும் அவருக்கு இறையிலி நிலங்களாக உக்சலூர், மாலவாய், அரசூர், நல்லூர் என்னும் ஊர்களை வழங்கியதாகவும் அ. முத்துசாமிப் பிள்ளை தம் நூலில் எழுதிவைத்துள்ளார். ஆனால், அவற்றை மெய்ப்பிக்க எத்தகைய ஆதாரமுமில்லை. இயேசு சபையாரின் மடல்களோ, ஆண்டு மடல்களோ இதுபற்றி நமக்கு எக்குறிப்பும் வழங்கவில்லை. எனவே, இவற்றைச் செவிவழிக் கதைகளாகவே நாம் கொள்ள வேண்டும். முனிவரின் அறிவும், ஆற்றலும், இனிய பண்பு நலன்களும் அதிகார நிலையிலுள்ளோரையும் ஈர்த்து நட்புறவு பூணும், திறமும். அதனால் கிறித்துவர்களுக்கு விளைந்த நன்மைகளுமே இத்தகைய கதைகள் உருவாகிடக் காரணங்கள் எனலாம்.

1737–40—ஆம் ஆண்டுகளில் மராட்டியத்தில் நிகழ்ந்த போர்களின் விளைவாக, கோவாவில் மலபார் மறைமா நிலத்துக்கு உரிமையாக விருந்த நிலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் வரவில்லை. இதனால் மறைமாநிலத் தலைவர் பொருளாதார வசதிக் குறைவி

னால் துன்புற்றார். அதுபோல பல நல்லவர்கள் அவருக்கு உதவி செய்தனர். இத்துன்ப நிலையை அறிந்த சந்தா சாகிபு முன்னூற்றைம்பது பொற்காசுகளை அனுப்பியுதவி னார் என அன்றைய மறைமாநிலத் தலைவர் லூயிஸ் தெ வாஸ்கொன்செல்லோஸ் அடிகள் ஒரு மடலில் தெரிவிக் கின்றார்.

1739—ஆம் ஆண்டுவரை ஏலாக்குறிச்சியில் பொறுப் பேற்றிருந்த முனிவர் 1740—ஆம் ஆண்டில் திருச்சிராப் பள்ளிக்கு மாற்றப்பட்டார். பொதுவாக ஆவூரைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றிய அடிகளாரே திருச்சிராப்பள்ளிர்குப் பொறுப்பேற்பது வழக்கம். அவ் வாறாயின் 1740—ஆம் ஆண்டில் முனிவர் ஆவூரில் பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஆனால் உண்மை அதுவன்று, மிகப் பல ஆண்டுசளாக ஆவூரில் பணியாற்றி வந்த சார்லஸ் மிக்கேல் பெர்த்தோல்தி அடிகளார் 1740—ஆம் ஆண்டில் இறந்தபின் பிரான்சிஸ் பெரெய்ரா அடிகளார் ஆவூரில் பொறுப்பேற்றார். ஆகவே முனிவர் திருச்சிராப்பள்ளிக்கு மட்டுமே பொறுப்பேற்றிருந்தார் என்பதே உண்மை.

அதே 1740-ஆம் ஆண்டில் சந்தா சாகிபின் அரசியல் அதிகாரம் குறையத் தொடங்கியது. மராட்டியப் படையினர் அவ்வாண்டில் ஆற்காட்டின் மீது போர் தொடுத்துச் சந்தா சாகிபின் மாமனாராகிய தௌஸ்த் அலிகானைக் கொன்றனர். அதன்பின் மராட்டியப் படைகள் தெற்கு நோக்கிச் சென்று சந்தா சாகிபுடன் போர் தொடுத்தன. பல தோல்விகளுக்குப் பின், சந்தா சாகிபு 1742-ஆம் ஆண்டு மராட்டியப் படைத் தலைவ ராகிய ராக்கோஜி போன்ஸ்லேயிடம் சரணடைந்தார்.

அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவோ, என்னவோ முனிவர் 1742ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கு மாற்றப் பட்டார்.

பொதுவாக முத்துக்குளித்துறைக்கும் மதுரை மறைப் பணிக்களத்துக்குமிடையே ஆள்பரிமாற்றம் மிகுதியாக நடைபெறுவதில்லை. ஆள் பற்றாக்குறை காரண மாகவோ, உடல்நலக் குறைவு காரணமாகவோ இது அவ்வப்போது நடைபெறுவதுண்டு. மதுரைப் பணிக் களத்தில் வாழ்ந்த இயேசு சபைக் குருக்களின் கடுமையான வாழ்க்கை முறை, சில ஐரோப்பியருக்கு ஒத்துக் கொள்வ தில்லை. அதனாலும் சில குருக்கள் மதுரைப் பணிக் களத்தை விட்டு முத்துக்குளித்துறை (தூத்துக்குடி)ப் பகுதிக்கு மாற்றலாகிச் செல்வதுண்டு.

முனிவர் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டமைக்கு மேற் குறித்த காரணங்களுள் எதுவும் பொருத்தமாகத் தோன்ற வில்லை. சந்தா சாகிபு சிறைப்பட்டபின், அவரது நெருங்கிய நண்பராகிய முனிவர் திருச்சிராப்பள்ளிப் பகுதி யில் பணியாற்றுவது இயலாது என்பதை உணர்ந்த மலபார் மறைமாநிலத் தலைவர் கயத்தான் பர்ரெத்தோ அடிகளார் அவரைத் தூத்துக்குடிப் பகுதிக்கு மாற்றி யனுப்பினார் என்று கொள்வதே பொருத்தமாகும்.

சத்தாராவில் சிறையிலிருந்த சந்தா சாகிபு சில ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீண்டும் திருச்சிப் பகுதிக்குப் பொறுப்பேற்றார் என்றும் மீண்டும் முன்பு போலவே அவர் கிறித்துவர்களுக்கு ஆதரவளித்து வந்தார் என்றும்புத்தாரி அடிகளார் எழுதிய (1749—1751) மடல்களிலிருந்து அறிகின்றோம்.

# 20. ஆற்காட்டில் முனிவர்

சந்தா சாகிபுடன் கொண்டிருந்த நட்பின் தொடர்பாக முனிவர் ஒரு முறை ஆற்காட்டுக்குச் சென்றிருந்ததாக அறிகின்றோம். சந்தா சாகிபின் ஆதரவு காரணமாகத் திருச்சிராப்பள்ளி, தஞ்சைப் பகுதிகளில் கிறித்துவர்கள் துன்பமின்றி வாழ்ந்து வந்தனர் என்பதை முன்னரே கண்டோம். சந்தா சாகிபு ஆற்காட்டு நவாபின் படைத்தலைவர். எனவே, தம் மக்களுக்குச் சந்தா சாகிபு மூலம் பாதுகாப்பு வழங்கி வருவதற்காக முனிவர் நவாபுக்கு நன்றி செலுத்தவே ஆற்காடு சென்றார் என்று நாம் ஊகிக்கலாம்.

அதுமட்டுமல்ல, நவாபும் முனிவரின் அருமை பெருமைகளையும் கல்விச் சிறப்பையும் தவ வாழ்வையும் பற்றி அறிந்திருந்ததால் அவரும் முனிவருக்குப் பல மரியாதைகளையும் சலுகைகளையும் வழங்கி வந்தார். இதற்காகவும் முனிவர் நவாபின் தலைமையகத்துக்கு நேரில் சென்று நன்றி தெரிவிக்க விரும்பியிருக்கலாம்.

முனிவர் உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவருக்கு எழுதி, தம் கைப்பட ஒரு நன்றி மடலும், ஐரோப்பாவிலிருந்து நவாபுக்குச் சில அன்பளிப்புகளும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். நவாபின் ஆட்சியில் கிறித்துவ மக்கள் நலமுற வாழ்ந்து வந்ததை அறிந்த சபைத் தலைவரும் முனிவர் கேட்டுக் கொண்டவாறே

செய்தார். நவாபு கிறித்துவர்களுக்குச் செய்துவரும் நன்மைகளுக்காகவும், தங்கள் சமயத்தைப் பிறமக்களுக்கு எடுத்துரைக்க வழங்கியிருக்கும் உரிமைக்காகவும், கோயில் களையும் குருக்கள் இல்லங்களையும் அழிவுறாமல் பாதுகாக்க உறுதுணை புரிவதற்காகவும், தஞ்சைப் பகுதி யில் கிறித்துவ மக்கள் அனுபவித்து வந்த துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தமைக்காகவும் அம்மடலில் சபைத் தலைவர் நவாபுக்கு நன்றி தெரிவித்து எழுதினார். முனிவ ரோடு நவாபு கொண்டிருந்த ஆழ்ந்த நட்புறவு பற்றியும் அம்மடலில் சபைத் தலைவர் குறிப்பிட்டு, அதற்காகவும் நவாபுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

இக்கடிதம் 29-10-1739 அன்று எழுதப்பட்டதாக அறிகின்றோம்.

இக்கடிதத்தையும் சபைத் தலைவர் அனுப்பியிருந்த அன்பளிப்புக்களையும் எடுத்துக் கொண்டு முனிவர் ஆற்காட்டுக்குச் சென்றார். நாவாபுடன் தாம் கொண்டி ருந்த நட்பை உறுதிசெய்து கொள்ள முனிவருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

மதுரையில் மீனாட்சியை அரசியாக்கிய சந்தா சாகிபு பங்காரு திருமலை நாயக்கரைச் சிறைப்பிடித்து ஆற்காட்டுக்கு அனுப்பி வைத்தார். ஒருமுறை ஆற்காட்டுக் குச் சென்றிருந்த முனிவர், நாயக்க மன்னர்களின் மரபு வழியை ஒரு மர வடிவத்தில் ஓவியமாகத் தீட்டி பங்காருவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். பங்காருவின் முன்னோர்களது 222 ஆண்டுக் கால மரபு வழியை அவ்வோவியம் சுட்டிக் காட்டியது. மரத்தின் இலைகளை அரியணையாகக் காட்டி, ஒவ்வொன்றிலும் ஒரு நாயக்க மன்னரின் உருவத்தை முனிவர் தீட்டியிருந்தார். அம்மரபு வழி மரத்தில் தமது உருவத்தைக் கண்ட பங்காரு திருமலை நாயக்கர் பெரிதும் மகிழ்ந்தார்.

பங்காரு திருமலை நாயக்கர் திருவண்ணாமலையிலும் சிறிது காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு வழங்கப்பட்டிருந்த காவற்படையில் அறுபது கிறித்துவ வீரர்களும் இருந்தனர். ஒரு முறை உயிர்ப்புத் திருவிழா வன்று கிறித்துவ வீரர்கள் அருகிலிருந்த அத்திப்பாக்கத்தி லுள்ள கோவிலுக்குச் சென்று திருவழிபாட்டில் கலந்து கொண்டு திரும்பினர். தமக்குச் சொல்லாமல் கிறித்துவ வீரர்கள் கோவிலுக்குச் சென்று வந்ததை அறிந்த பங்காரு மிகவும் மனம் வருந்தினார், "உரோமைச் சந்நியாசிகளை நான் பெரிதும் மதிக்கின்றேன். நான் அரியணையில் இருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதையும் கோவில் கட்டிக் கொடுப்பதையும் பெருமையாகக் கருதுவேன்" என்று வீரர்களிடம் கூறினார். அத்திப்பாக்கத்திலிருந்த த்ரெய்ப்ளே அடிகளாரிடம் தம் வீரர்களை அவ்வப்போது அனுப்பி, தமக்காக இறைவனை மன்றாடுமாறு பங்காரு நாயக்கர் கேட்டுக் கொள்வார் என அடிகளார் தாம் எழுதிய ஒரு மடலில் குறிப்பிடு கின்றார்.

# 21. முனிவருக்கு விவேகம் போதாது!

மலபார் மறைமாநிலத் தலைவர்கள் ஆண்டுதோறும் உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவர்களுக்கு அறிக்கைகள் அனுப்பும்போது தங்கள் பகுதியில் பணி புரியும் ஒவ்வொருவரைப் பற்றியும்குறிப்புக்கள் வரைவது வழக்கம். அவற்றுள் சில இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அவை முனிவரைப் பற்றிக் கூறும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

1715-ஆம் ஆண்டறிக்கை முனிவரை ''மிகச் சிறந்த அறிவாளி... போதுமான அளவு விவேகத்துடன் தீர்மானித்துச் செயல்படுபவர்...பல திறமைகள் நிரம்பப் பெற்றவர்... துணிச்சல் மிக்கவர்'' என்று விரித்துக் கூறுகின்றது.

1718-ஆம் ஆண்டு அறிக்கையோ 'மிகச் சிறந்த அறிவாளி... ஆனால் சிந்தித்துச் செயல்படுவதில் பக்குவம் போதாது...முக்கியத்துவமில்லாத காரியங்களில் பக்குவமின்றிச் செயல்படுகின்றார். விவேகம் போதாது'' என்று முனிவரைப் பற்றிக் கூறுகின்றது.

1737-ஆம் ஆண்டறிக்கையும், ''முனிவருக்கு ஆட்சி செய்யும் திறமை இல்லை; செலவு செல்வதிலும் கட்டடங்கள் கட்டுவதிலும் விருப்பம் மிகுதி; சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்தவர்களைச் சந்திப்பதில் ஆவம மிகுதி'' என்று குறிககின்றது.

எனினும் 1731-ஆம் ஆண்டில் அவர் மதுரை மறைப் பணிக் களத்தின் முதல்வருக்கு ஆலோசகராகப் பொறுப் பேற்றிருப்பதைக் காண்கிறோம். 1737-ஆம் ஆண்டில் பதவி உயர்வு பெற்றவராய் இரண்டாம் ஆலோசகர் என்னும் நிலையில் முனிவர் பணியாற்றுனார்.

முனிவர் மதுரை மறைப்பணிக் களத்தின் மேற் பார்வையாளராகவும், பின் அம்பலக்காட்டில் குருத்துவக் கல்லூரியின் மேற்பாற்வையாளராகவும் பணியாற்றியதாக முனிவரின் வரலாற்றைத் தக்க ஆவணங்களுடன் ஆராய்ந்து எழுதியுள்ள பெஸ் அடிகளார் (பக். 166–167) கூறுகின்றார். இயேசு சபையில் இம்மேற்பார்வையாளர் (Visitor) பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். இது மறைமாநிலத் தலைவரின் பதவிக்குச் சமமானது என்று கூடக் கூறலாம். மறைப்பணிக் களத்திலுள்ள பணித் தளங்களுக்குச் சென்று அங்குள்ள இயேசு சபைக் குருக் களையும் மக்களையும் சந்தித்து, அங்குக் காணப்படும் குறைநிறைகளை ஆராய்ந்து குறைகளைப் போக்கும் வழிவகைகளை எடுத்துரைப்பதும் இவையனைத்தையும் பற்றி உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவருக்கு நேரிடையாக அறிக்கை அனுப்புவதும் மறைப்பணிகள மேற்பார்வையாளரின் பொறுப்பாகும். இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்குத் தக்க விவேகமும் அறிவாண்மையும் தேவை என்பதில் ஐயமில்லை.

அவ்வாறாயின் முனிவரின் அறிவாண்மையும் விவேக முப் அவரது வாழ்வின் இறுதிப் பகுதியிலேயே அவரது மேலதிகாரிகளால் உணரப்பட்டது எனலாம்.

1742-ஆம் ஆண்டில் முனிவர் தூத்துக்குடிப் பகுதியில் பணியாற்றும் போது மறைமாநிலத்தின் ஆலோசகராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

1743-ஆம் ஆண்டுஅறிக்கை, "அறிவாண்மை மிக்கவர், எதையும் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவு செய்ய வல்லவர்;

எனினும் விவேகம் போதாது. இலக்கியத் துறையிலும் சமயப் பணியிலும் மிகச் சிறந்தவர்'' என்று முனிவரைப் பற்றிக் கூறுகின்றது.

முனிவரின் இலக்கியத் திறமைகளை நாம் நன்கறிவோம். அதனாலேயே அவர் எல்லாத் துறைகளிலும் மிகச் சிறந்தவர் என நாம் எண்ணுவது இயல்பேயாயினும், உண்மை அதுவன்று என்பதையே மேற்குறித்த ஆண்டறிக்கைகள் நமக்கு உணர்த்துகின்றன. அமைதியாக விருப்பு வெறுப்பின்றிச் சிந்தித்துப் பார்த்தால் ஒருவரிடம் எல்லாத் திறமைகளுமே நிறைந்திருப்பதில்லை என்னும் உண்மையை நாம் உணர முடியும்.

முனிவர் பல மொழிகளிலும் குறிப்பாகத் தமிழ் மொழியிலும் பலரும் பெற்றிராத திறமையினைப் பெற்றிருந்தார் என்பதில் ஐயமில்லை. மருத்துவத் துறையிலும் இசைத் துறையிலும் கூட அவர் புலமை பெற்றிருந்தார் என்பதை அவரது நூல்கள் மூலம் அறிகின்றோம்

ஆனால் முனிவருக்குப் பக்குவம் போதாது, விவேகம் போதாது எனப் பல ஆண்டுக் காலமாக அவரது மேலதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளமையையும் நாம் ஒதுக்கி விட இயலாது. இக்கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் வெவ்வேறு மேலதிகாரிகள் (1715: ஜான் தெ கோஸ்தா அடிகளார்; 1718: அந்துவான் தியாஸ் அடிகளார் 1737: பிரான்சிஸ் கர்தோசா அடிகளார்; 1743; கயத்தான் பர்ரெத்தோ அடிகளார்,) எனவே பலரும் முனிவர் மீது தவறான கருத்துக் கொண்டிருப்பார்கள் என நாம் எண்ணுவது தவறு.

மலபார் மறைமாநிலத்தின் அன்றைய யேசு சபை அதிகாரிகள், முனிவரைப் பற்றிக் கொண்டிருந்த கண்ணோட்டங்களாகவே அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# 22. முனிவரின் வாழ்க்கை முறை

மலபார் மறை மாநிலத்தில் ஒரு பகுதியே மதுரை மறைப்பணிக்களம் என்றாலும் மதுரைப் பணிக்களத்தில் பணியாற்றி வந்த இயேசு சபைக் குருக்களின் வாழ்க்கை முறை முற்றிலும் வேறுபட்டிருந்ததை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இம் மறைப்பணிக்களத்தை நிறுவிய தத்துவ போதகர் என்னும் இராபர்ட் தெ நோபிலி அடிகளார், தாமும் தன் உடன் குருக்களும் தமிழ்த் துறவி களாகவே வாழும் வாழ்க்கை முறையைத் தொடங்கினார். ஐரோப்பியரின் வாழ்க்கை முறையும் பண்பாடும் மதுரைப் பகுதி மக்களுக்கு அந்நியமாக இருந்ததால் அவர்கள் போர்த்துக்கேயப் பண்பாட்டு முறையை ஏற்றுக் கொள்ள வில்லை. அப்பண்பாட்டைப் பின்பற்றிய கிறித்தவக் குருக்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களைப் பண்பாடு கெட்டவர்களாகவே கருதினர். தாழ்த்தப்பட்ட (ஆதி திராவிட) மக்களை இழிவாகக் கருதுவதைவிட இன்னும் அதிகம் இழிவாகவே போர்த்துக்கேயப் பண்பாட்டு வழி வாழ்ந்தவர்களைக் கருதினர். இதனால் சமயப்பணி தடைபட்டது. இக்குறையைக் களையவே தமிழ்ப் பண்பாட்டில் வாழும் துறவியாகத் தத்துவ போதகர் தம்மை மாற்றிக் கொண்டார். அவரைப் பின்பற்றித் தமிழ்ப் பண்பாட்டைத் தழுவி வாழ்ந்த ஐரோப்பியத் துறவியருள் முனிவரும் ஒருவர். எனவே முனிவரும் தமிழ்த் துறவியாகவே வாழ்ந்து வந்தார்.

முனிவரின் வாழ்க்கை முறையைச் சுருக்கமாகச் சொன்னால்.

—ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு,
அதுவும் மரக்கறி உணவு
—இருக்கைகள் ஏதுமின்றித் தரையில் அமர்தல்
—காவிஉடை—இடுப்பில் வேட்டியும்
மேலே அங்கி போன்ற உடையும்,
தலைப்பாகையும் தலைப்பாகையின் மீது
ஒரு துண்டும் அணிந்திருத்தல்
—பயணத்தின்போது பித்தளைப் பாத்திரத்தில்
தண்ணீர் எடுத்துச் செல்லுதல்
—காலில் மரத்தால் செய்யப்பட்ட பாதக் குறடு.

புலால் உணவினைச் சாதாரண உணவாக உண்டு பழகிவிட்ட ஐரோப்பியத் துறவிகளுக்கு மரக்கறி உணவை மட்டுமே உண்டு வாழ்வது மிகவும் கடினமாக இருந்தது. அதனால் உடல் பலவீனமடைந்து விட்டதாக நினைத்தவர்களும் உண்டு.

உணவுக் கடுமையோடு வெயிலின் கொடுமை அத் துறவியரைப் பெரிதும் வாட்டியது. "வெயில் தாங்காமல் முகத்தின் தோல் உரிந்தது, கால் வீங்கியது; இது நீங்க ஒரு மாதமாகியது" என்று முனிவருடன் காமநாயக்கன் பட்டியில் பணியாற்றிய தெ. பூர்ஸே அடிகளார் 24-8-1710 அன்று எழுதிய ஒரு மடலில் குறிப்பிடுகின்றார்.

வாழ்வும் பணியும் கடுமையாக இருந்ததாலோ என்னவோ முதலில் 1722 - ஆம் ஆண்டிலும், பின் 1734-ஆம் ஆண்டு முதல் தாம் இறக்கும் வரையிலும் (1735) தெ பூர்ஸே அடிகளார் தூத்துக்குடிப் பகுதியிலுள்ள மணப்பாடு என்னும் ஊரில் பணியாற்றச் சென்றார். மதுரைப் பணிக்களத்தின் கடுமையான தவ வாழ்வைத் தாங்க இயலாமல் சில குருக்கள் தூத்துக்குடிப் பகுதிக்கு மாற்றல் கேட்டுச் சென்றதாகவும் வரலாறு கூறுகின்றது.

தூத்துக்குடிப் பகுதியில் வாழ்ந்த இயேசு சபைக் குருக்கள் ஐரோப்பியப் பண்பாட்டைக் கடைப்பிடித்தே வாழ்ந்தனர், மதுரைப் பகுதிக் குருக்களைப் போலத் தமிழ்த் துறவியராக வாழவில்லை. புனித சவேரியார் இப்பகுதியில் சமயப் பணியாற்றிய (1543 - 49) காலத்தி லிருந்தே தூத்துக்குடிப் பகுதியில் குருக்கள் இவ்வாறு வாழ்ந்து வந்ததால் இது அப்பகுதியில் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. மதுரைப் பகுதியில் பிரச்சினை எழுந்த தாலேயே தத்துவ போதகர் மக்களின் உணர்வை மதித்துத் தமிழ்த் துறவு வாழ்க்கை நெறியைப் பின்பற்றத் தொடங் கினார்.

கடந்த நூற்றாண்டில் சென்னைக் கல்விச் சங்கத்தில் தலைமைப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய அ. முத்துச் சாமிப் பிள்ளை தமிழகமெங்கும் சென்று முனிவரின் வரலாற்றுக் குறிப்புக்களையும், முனிவர் எழுதிய நூல் களையும் திரட்டித் தொகுத்தவர். அவர் முனிவரின் வாழ்க்கை முறையைத் தாம் எழுதிய ‘வீரமாமுனிவர் சரித்திர வரலாறு’ என்றும் நூலில் கூறியுள்ளார்.

''மடத்திலிருக்கும்போது கோயிச் சந்தனம் நெற்றியி லிட்டுக் கொண்டும், தலைக்குச் சூரிய காந்திப் பட்டுக் குல்லாவும், அரைக்கு நீர்க்காவிச் சோமனும், திருநெல் வேலிக் கம்பிச் சோமன் போர்வை முக்காடுமிட்டுக் காலில் பாதக் குறடும் அணிந்திருப்பார். வெளியில் செல்லும் போது பூங்காவி அங்கியும், பூங்காவி நடுக்கட்டும், வெள்ளைப் பாகையும், இளங்காவி உத்தரிய முக்காடும், கையில் காவியுருமாலையும், காதில் முக்குக் கடுக்கனும், செம்பொட்டுக் கடுக்கனும் விரலில் தம்பாக்கு மோதிரமும், கையில் தண்டுக் கோலும் காலில் சோடும் அணிந்து செல்வார். பல்லக்கின் மெத்தையின் மேலிட்டிருக்கும் புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்து, இரு புறமும் வெண்சா

மரமும் மயில் தோகையும் வீசவும் தங்கக் கலசம் வைத்த காவிப்பட்டுக் குடை பிடிக்கவும் பயணம் செய்வார்'' என்றெல்லாம் முத்துச்சாமிப்பிள்ளை கூறியிருப்பதை மிகைக் கூற்றாகவே நாம் கொள்ள வேண்டும். ஏனெனில் நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்களுக்கு முரணான செய்தியாகும் இது.

ஏற்கனவே நாம் கூறியிருக்கும் முனிவரின் உடைவிவரம் தெ பூர்ஸே அடிகளார் ஐரோப்பாவுக்கு எழுதிய மடலில் தாம் அணிந்திருப்பதாகக் கூறும் உடை விவரத்தைப் பின்பற்றியதாகும். முனிவரும் தெ பூர்ஸே அடிகளாரும் காமநாயக்கன்பட்டியில் ஒன்றாகப் பணியாற்றியவர்களாதலின் இருவரின் ஆடை அணியும் முறையும் வாழ்க்கை நெறி முறைகளும் ஒத்திருந்ததாகக் கொள்ளுதல் தவறன்று.

முனிவரின் முன்னோடியாகிய தத்துவ போதகரின் தோற்றத்தை நொபிலியுடன் பணியாற்றிய பல்தசார் தா கோஸ்தா என்னும் அடிகளார் ஓவியமாகத்தீட்டி, அதைப்பற்றி இலத்தீன் மொழிக் கவிதையொன்றில் விரிவாகக் கூறுகின்றார். கோஸ்தா அடிகளார் கூறும் முறையிலேயே தத்துவ போதகரைப் பின்பற்றி வாழ்ந்து சமயப் பணியாற்றிய இயேசு சபைக் குருக்களும் உடையணிந்திருப்பர் எனக் கொள்வது பொருத்தமே. தாம் அணிந்திருக்கும் உடை தட்பவெப்ப நிலைக்கு ஏற்றதாக இல்லையென்று முனிவரே தம் 1731-ஆம் ஆண்டு மடலில் கூறுகின்றார்.

ஆகவே, முத்துச்சாமிப் பிள்ளையின் கூற்று மிகைக் கூற்றாகவே கருதப்பட வேண்டும்.

# 23. நீதி காக்க நிமிர்ந்து நின்றவர்!

மதுரை மறைப்பணிக் களத்தில் ஏறக்குறைய 100 வேதியர்கள் பணியாற்றி வந்தனர் என அறிகின்றோம். வேதியர்களின் வளர்ச்சியில் முனிவர் தனிக் கவனம் செலுத்தி வந்தார் என்றும் ஆண்டு மடல்கள் மூலம் நாம் அறிகின்றோம்.

வேதியர்களுக்குத் தக்க சமய அறிவினைப் புகட்டுவதற்காகவே 1729-ஆம் ஆண்டு 'வேதியர் ஒழுக்கம்' என்னும் உரைநடை நூலை அவர் எழுதினார். வேதியர்கள் தமிழில் சிறப்புப் பயிற்சி பெற்றால் அது அவர்கள் நன்முறையில் சமயப்பணி ஆற்றிட உதவும் என்பதால் ஏலாக்குறிச்சியில் ஒரு செந்தமிழ்க் கல்லூரி நிறுவப்பட்டதையும் அக்கல்லூரியின் முதல்வராக முனிவரே நியமிக்கப்பட்டதையும் அவரே எழுதிய 1731 ஆம் ஆண்டுமடல் வழியாக நாம் அறிகின்றோம்.

மதுரை மறைப்பணிக் களத்தில் பணியாற்றி வந்த வேதியருள் பலர் 1730-ஆம் ஆண்டில் ஏலாக்குறிச்சியில் தியானம் செய்தனர் என்றும், மேலாண்மையினரின் ஆணைப்படி தியான உரைகளை வழங்கியவர் முனிவரே என்றும் 1730-ஆம் ஆண்டு மடலில் ஜோசப் வியேரா அடிகளார் வரைந்துள்ளார்.

இவ்வாறு வேதியரின் தமிழறிவையும் சமய அறிவையும் சமய நெறியுணர்வையும் வளர்ப்பதில் முனிவர் தனிக் கவனம் செலுத்தி வந்ததை நாம் அறிகின்றோம்.

அதோடு வேதியர்களுக்குச் சரியான ஊதியம் வழங்கப் படவில்லை என்று முனிவர் நீதிக்காகக் குரல் கொடுப்பதை யும் அவர் உரோமையிலுள்ள சபைத் தலைவருக்கு எழுதிய இரு மடல்களில் 1731, 1734 காண்கின்றோம்.

பல ஆண்டுகளுக்கு முன்பே வேதியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் விலை உயர்வு காரணமாகத் தம் காலத்தில் போதாமலிருக்கும் நிலையை முனிவர் தம் மடலில் சுட்டுகின்றார். வறட்சியில்லாத காலத்தில் கூட விலை உயர்ந்தே இருப்பதையும் முனிவர் விளக்கு கின்றார்.

இயேசு சபைத் துறவியர் நான்கு வேதியருக்கு வழங்கும் ஊதியம் லூத்தரன் குருக்களால் ஒரு வேதி யருக்கு வழங்கப்பட்டு வருவதையும் முனிவர் தம் சபைத் தலைவருக்கு நினைவூட்டுகின்றார்.

வேதியர்களின் ஊதியம் இருபத்தைந்து விழுக்காடா வது உயர்த்தப்படவேண்டும் என இந்தியாவிலுள்ள தம் மேலதிகாரிகளிடம் வாதாடித் தோல்வி கண்ட பின்னரே சபைத் தலைவருக்கு முனிவர் எழுதுகின்றார்.

1730—ஆம் ஆண்டில் மணிலாவின் ஆளுநராகவிருந்த வில்லா புவெந்தெ பிரபு மலபார் மறைமாநிலத் தலைவர் லூயிஸ் பிராங்க்கோ அடிகளார்க்கு ஒரு பெருந் தொகையை அனுப்பி, அதை மதுரை, மலபார் மறைப் பணிக் களங்களின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்து மாறு கேட்டுக் கொண்டார். அத்தொகையில் பாதி மலபார் மறைபணிக்களத்துக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. எஞ்சிய பகுதி மதுரைப் பணிக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மலபார் மறைப்பணிக் களத்தில் ஒரே ஒரு குருதாம் பணியாற்றி வந்தார். அவர் 'நேமம்' என்னுமிடத்தில் பணியாற்றி வந்தார். ஆனால், மதுரைப் பணிக்களத்திலோ ஒன்பது இடங்களில் ஒன்பது குருக்கள் பணியாற்றி வந்தனர். எனவே, நன்கொடையைப் பாதியாகப் பிரித்துக் கொண்டது தவறு என முனிவர் வாதிடுகின்றார்.

அது தவிர, நேமம் கோவிலுக்கு வருமானம் மிகுதியாக இருப்பதால் நன்கொடையை அவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது முறையல்ல என்பது முனிவரின் கருத்து. அதோடு கோவா பகுதியிலிருந்து மதுரை மறைப்பணிக் களத்துக்காக எதிர்பாராத வகையில் ஒரு பெருந்தொகை அனுப்பப்பட்டதையும் தலைவருக்கு முனிவர் நினைவூட்டுகின்றார்.

ஆகவே, போதுமான நிதி வசதியில்லை என்பதைக் காரணமாகக் காட்டி வேதியர்களின் ஊதியத்தை உயர்த்தாமலிருப்பது தவறு என்று கூறும் முனிவர், 'வளமையாக வாழுமளவுக்கு ஊதியம் வழங்காவிட்டாலும் ஏழைகளைப் போல எளிமையாக வாழுமளவுக்காவது வேதியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தம் மறைமாநில மேலதிகாரிகளுக்கு அறிவுரை கூறுமாறு தம் சபைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.

29-1-1731 அன்று மேற்குறித்த மடலை முனிவர் தம் சபைத் தலைவருக்கு எழுதும்போது அத்தலைவர் யாரென்பது கூட முனிவருக்குத் தெரியாது. ஏனெனில், அதற்கு முன்பு தலைவராக இருந்த தாம்புரீனி அடிகளார் 28-2-1730 அன்று இறந்துவிட்டார். 30-11-1730 அன்று புதிய தலைவராக பிரான்சிஸ் காட்ஸ் அடிகளார் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட செய்தி, மதுரை மறைப்பணிக் களத்தில் பணிபுரிந்தவர்களுக்குத் தெரியாது. புதிய

தலைவர் இன்னாரென்று தெரியாமலேயே தாம் எழுதுவதாக முனிவர் தம் மடலில் குறிப்பிடுகின்றார். தலைவரின் பெயரினைக் கூட அறியாத நிலையிலும் வேதியரின் ஊதிய உயர்வுக்காக—நீதிக்காக முனிவர் குரல் கொடுக்கத் தயங்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

1733—ஆம் ஆண்டின் இறுதியில் சபைத் தலைவரிடமிருந்து முனிவருக்குப் பதில் வருகின்றது. தலைவர் வேதியர்களின் ஊதிய உயர்வுக்கு ஆதரவாக எழுதியும் கூட ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை.

ஆகவே முனிவர் மீண்டும் 8-2-1734 அன்று சபைத் தலைவருக்கு எழுதினார்.

ஊதியம் குறைவாக இருப்பதால் வயதில் முதியவர்கள் வேதியராகப் பணியாற்ற முன்வரவில்லை. இளைஞர்களோ பொறுப்புக்களைச் சரியாகச் செய்யவில்லை. இதனால் மதுரை மறைப்பணிக்களத்தின் சமயப்பணி சிறப்புக்குன்றி வருவதாக முனிவர் சபைத்தலைவருக்கு எழுதினார்.

ஒவ்வொரு குருவும் மூன்று பணியாளர்களைப் பணியமர்த்தி வந்ததாகவும், ஓரிரு இளைஞர்களைத் தம்முடன் வைத்திருந்து அவர்களுக்குப் பயிற்சியளித்துத் தக்க காலத்தில் வேதியர்களாகப் பணியமர்த்தி வந்ததாகவும் முனிவர் எழுகின்றார். இவையெல்லாம் ஒவ்வொரு குருவுக்கும் உரிய அவசியச் செலவுகள் என்று குறிப்பிடும் முனிவர், இத்தகைய அவசியச் செலவுகளைக்கூட அந்தூரனெஸ் அடிகளார் தடுப்பதாகவும் சபைத் தலைவருக்குத் தெரிவிக்கின்றார்.

வேதியர்களின் ஊதிய உயர்வுக்காக முனிவர் செய்த முயற்சி வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. எனினும் முனிவரின் முயற்சிகள் போற்றற்குரியவை என்பதில் ஐயமில்லை.

# 24. பெயர் மாற்றங்கள்

முனிவரின் இயற்பெயர் 'கான்ஸ்டன்ஸ் யுசேபியுஸ் ஜோசப் பெஸ்கி' என்றும், ஐரோப்பாவுக்குத் தாம் எழுதும் மடல்களில் பொதுவாக முனிவர் கான்ஸ்டன்ஸ் ஜோசப் பெஸ்கி என்று, கையொப்பமிடுவது வழக்கம் என்றும் நாம் அறிவோம்.

மதுரை மறைப்பணிக்களத்துக்கு வந்தபின் மற்ற குருக்களைப் போலவே முனிவர் தம் பெயரை மாற்றி, 'தைரிய நாதர்' என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டார்.

செந்தமிழ்த்தேசிகன், வீரஆரியன், வீரமாமுனிவர் என்னும் பெயர்களாலும் அவர் வழங்கப்பட்டாலும், 'வீர மாமுனிவர்' என்னும் பெயரே காலத்தை வென்று நிலைத் திருப்பதை நாம் அறிவோம்.

தேம்பாவணியை முனிவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிய பொழுது அங்குக் குழுமிய புலவர்கள் தைரியநாதர் என்னும் அவரது பெயரை மாற்றி, 'வீரமாமுனிவர்' என வழங்கினர் என்று கூறப்படுகின்றது.

மூன்றாம் தமிழ்ச் சங்கத்துக்குப் பின் 1901-ஆம் ஆண்டில்தான் பாண்டித்துரைத் தேவரால் நான்காம்

---

இவ்வதிகாரத்தில் காணும் கருத்துக்கள் முனைவர் சூ. இன்னாசி எழுதிய 'சதுரகராதி ஆராய்ச்சி' என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டவை.

தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. எனவே, முனிவரின் காலத்தில் மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்ததாகச் சொல்வது ஆதாரமில்லாத செய்தியாகும்.

முனிவர் காலத்திய பல்வேறு மடல்களில் முனிவரைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவருக்கு 'வீர மாமுனிவர்' என்னும் பெயரோ பட்டமோ யாராலும் வழங்கப்பட்டதாக அவற்றில் எத்தகைய குறிப்புமில்லை.

கத்தோலிக்கராக இருந்து பின் லூத்தரன் திருச்சபையைத் தழுவிய இராசநாயக்கர் என்னும் வேதியர் 18-3-1729 அன்று எழுதிய மடலில், "ஏலாக்குறிச்சியிலுள்ள உரோமை சபைச் சார்ந்த 'தைரியநாதர்' என்னும் குரு தம் வேதியருக்கு ஒரு நூல் இயற்றித் தந்துள்ளார். அந்நூல் நம் கிறித்துவர்களைக் குழப்புவதாகவும், அவரது கிறித்துவர்களை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது'' என எழுதுகின்றார். இம்மடல் முனிவரைத் 'தைரிய நாதர்' என்றே குறிப்பதைக் காண்கிறோம். எனவே, 1729-ஆம் ஆண்டில் கூட— அதாவது தேம்பாவணியை இயற்றி மூன்றாண்டுகள் கடந்த பின்னரும் கூட — முனிவரின் பெயர் 'தைரியநாதர்' என்றே வழங்கியதை அறியலாம்.

கப்புச்சின் சபைத் துறவியாகிய மார்செல் தெ கிராடிஸ்கா என்பவர் 1731-ஆம் ஆண்டில் எழுதிய ஒரு நூலில் ''பெஸ்கி அடிகளார் முதலில் 'தைரிய நாத சுவாமி' என்னும் பெயரைக் கொண்டிருந்தார்'' என்று குறிக்கின்றார்.

சதுர்கராதியின் இறுதியில் ஆக்கியோன் வரலாறாகக் கூறப்பட்டிருக்கும் ஆசிரியப் பாவில் முனிவரின் பெயர் 'வீர ஆரியன்' என்று சுட்டப்பட்டுள்ளது. தம் காப்பியத் தலைவனாகிய வளனைத் தேம்பாவணிப் பாயிரத்தில் 'ஆரிய வளன்' என முனிவர் குறிப்பதையும் 'கான்ஸ்டன்ஸ்' என்னும் பெயருக்குத் தைரியம், வீரம் என்பது பொருள்

என்பதையும் மனதில் கொண்டால் 'கான்ஸ்டன்ஸ் ஜோசப்' என்னும் தம் பெயரையே அவர் 'வீர ஆரியன்' என மொழிபெயர்த்துக் கொண்டார் என்பது தெளிவாகும்.

தம் பெயரை முதலில் 'தைரிய நாதர்' என்றும், இடையில் 'வீர ஆரியன்' என்றும் மொழிபெயர்த்த முனிவரே. பின்னர் தம் பெயரை 'வீரமாமுனிவர்' என்று மாற்றிக் கொண்டார் என்பதே பொருத்தமெனத் தோன்றுகிறது.

அதன்பின் இலக்கியங்களிலும் நாட்டுவழக்கிலும் அவரது பெயர் 'வீரமாமுனிவர்' என்றே வழங்கப்படுவதாயிற்று. 1843-ஆம் ஆண்டில் முனிவரின் வரலாற்றை முதன்முதலாக எழுதி வெளியிட்ட அ. முத்துச்சாமிப் பிள்ளையும் வீரமாமுனிவர் என்றே குறிக்கின்றார்.

> "மறைமொழி வாயினன் மலிதவத் திறைவன்
> நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்
> வீரமா முனி வியன்ற மிழாக"...

என்று தேம்பாவணிச் சிறப்புப் பாயிரமும்,

> 'அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும்
> விரித்து விளக்கினன் வீரமா முனியே'

எனத் தொன்னூல் விளக்கச் சிறப்புப் பாயிரமும் வீரமா முனிவர் என்றே அவரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

# 25. முனிவரின் பன்மொழி புலமை

வீரமாமுனிவர் தமிழில் மட்டுமல்ல, வேறு பல மொழி களிலும் புலமை பெற்றிருந்தவர் என்பதைப் பல ஆவணங் கள் நிறுவுகின்றன. தம் தாய்மொழியாகிய இத்தாலிய மொழியோடு, இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், போர்த்துக்கேயம், இஸ்பானியம், பிரெஞ்சு, தமிழ், வட மொழி ஆகிய மொழிகளையும் அவர் கற்றுத் தேர்ந் திருந்தார்.

தமிழகத்தில் பல ஆண்டுகள் (1710—47) உழைத்தவ ராயினும் முனிவர் தம் தாய்மொழியாகிய இத்தாலிய மொழியினை மறந்தவரல்லர். அவரது முன்னோடியாகிய தத்துவ போதகர் (இராபர்ட் தெ நொபிலி) தம் தாய் மொழியாகிய இத்தாலிய மொழியினைப் பெரிதும் மறந்த வராய், அம்மொழியினைப் போர்த்துக்கேய மொழியுடன் கலந்து எழுதுவதை அவரது மடல்களில் காண்கின்றோம். ஆனால் முனிவரோ இத்தாலிய மொழியைத் திறம்படக் கையாள்வதை அவரது மடல்களில் காணலாம்.

மொழியை மட்டுமல்ல, தம் தாய்நாட்டையும் முனிவர் மறந்தவர் அல்லர். 'எனையீன்ற இணையா இத்தாலிய நாடு' என்றும், 'ஈரறமும் முச்சீரும் சுகமோர் ஏழும் நிமிர் இத்தாலிய நாடு' என்றும் முனிவர் பாடும் வரி களில் அவரது தாய்நாட்டுப் பற்றுப் புலப்படுகின்றது.

முனிவரின் இலத்தீன் மொழிப் புலமைக்கு அவர் இலத்தீன் மொழியில் எழுதிய நூல்களே தக்க சான்றாக

விளங்குகின்றன. 'செந்தமிழ் இலக்கணம்', 'கொடுந்தமிழ் இலக்கணம்', 'இலக்கணத் திறவுகோல்' ஆகிய நூல்களை முனிவர் இலத்தீன் மொழியிலேயே இயற்றினார். முனிவரின் இலத்தீன் மொழிப் புலமையை இந்நூல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அத்துடன் முனிவர் தமிழ் - இலத்தீன் பேச்சுத் தமிழ் அகராதி, போர்த்துக்கேயம் - இலத்தீன் - தமிழ் அகராதி ஆகிய அகராதி நூல்களைத் தொகுத்துள்ள பாங்கும் முனிவரின் இலத்தீன் மொழிப் புலமையைப் புலப்படுத்துகின்றது. இவ்விரு அகராதிகளுக்கும் சதுரகராதிக்கும் முனிவர் எழுதிய முன்னுரை, உரோமையிலுள்ள யேசு சபைத் தலைவருக்கு மதுரை மறைமாநிலத்தின் சார்பாக முனிவர் எழுதிய 1731 - ஆம் ஆண்டு மடல், பல்வேறு சமயங்களில் முனிவர் தம் சபைத் தலைவருக்கு விடுத்த பல மடல்கள் ஆகியவை இலத்தீன் மொழியில் அமைந்துள்ளன. முனிவர் இலத்தீன் மொழியை எளிதாகவும், திறமையாகவும், அழகுறவும் கையாள வல்லவர் என்பதை இவற்றால் அறிகின்றோம். இலக்கண நூல்களை இலத்தீனில் எழுதிடவும், அகராதிகளைத் தொகுக்கவும் முனிவரால் இயன்றதெனில், அவரது இலத்தீன் மொழிப்புலமைக்கு வேறு சான்றுகள் வேண்டுவதில்லை.

திருக்குறள் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் முனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளமை நாமறிந்த செய்தியே. தாம் தமிழில் எழுதிய பரமார்த்த குரு கதையையும், வாமன் கதையையும் கூட முனிவர் இலத்தீனில் பெயர்த்து எழுதியுள்ளார். பரமார்த்தகுரு கதையை மொழி பெயர்க்கும் போது இலத்தீன் நடையழகை விட அதைத் தமிழ் மூலத்துக்கு ஒத்த வகையில் மொழிபெயர்ப்பதையே கவனத்தில் கொண்டுள்ளதாக முனிவர் குறிப்பிடுவதே அவர் இலத்தீன் மொழியினைத் திறம்படக் கையாள வல்லவர் என்பதை மெய்ப்பிக்கின்றது.

போர்த்துக்கேய மொழியை முனிவர் எங்குப் பயின்றார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இத்தாலியிலுள்ள பொலோஞா நகரில் சமயக் கல்வி பயிலும்போது முனிவர் போர்த்துக்கேய மொழியினைப் பயின்றார் என்பதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. அன்று தமிழகத்தில் பணிபுரிந்த யேசுசபைக் குருக்களுள் பெரும்பாலோர் போர்த்துக்கேய நாட்டவராதலாலும் அவர்கள் பணிபுரிந்த பகுதி போர்த்துக்கேய மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாதலாலும் அக்குருக்களிடையே போர்த்துக்கேய மொழியே பொதுமொழியாக வழங்கி வந்தது. எனவே தமிழகத்தில் சமயப் பணியாற்ற விரும்பிய முனிவர், தாம் தமிழகத்துக்கு வருமுன்பே போர்த்துக்கேய மொழியைப் பயின்றிருப்பார் என நாம் ஊகிக்கலாம்.

முனிவர் இயற்றிய 'கொடுந்தமிழ் இலக்கணம்' (பக். 11, 12, 134, 159) அவரது போர்த்துக்கேய மொழியறிவினைச் சுட்டிக்காட்டுகின்றது.

எனினும் போர்த்துக்கேயம் - இலத்தீன் - தமிழ் என்னும் அகராதியைத் தொகுக்குமளவுக்கு முனிவர் பெற்றிருந்த புலமை நம்மை வியக்கச் செய்கின்றது. இந்த அகராதியின் முன்னுரையிலிருந்தே அவரது போர்த்துக்கேய மொழிப்புலமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

முனிவர் இஸ்பானிய மொழியினையும் அறிந்திருந்த உண்மை கொடுந்தமிழ் இலக்கணத்தின் மூலம் (பக். 12) நமக்குப் புலனாகின்றது. எனினும் அம்மொழியில் முனிவர் எத்துணைப் புலமை பெற்றிருந்தார் என்பதை நம்மால் அறிய இயலவில்லை. அம்மொழியில் முனிவர் நூல் இயற்றியதாகவும் அறிவதற்கில்லை.

முனிவர் கிரேக்கமும், எபிரேயமும் பயின்றிருந்தார் என்பது தெளிவு. செந்தமிழ் இலக்கணமும் (பக். 17, 169) கொடுந்தமிழ் இலக்கணமும் (பக். 121) இதனை நமக்குத்

தெரிவிக்கின்றன. அனேகமாகப் பொலோஞா நகரில் சமயக் கல்வி பயின்ற போதே இம்மொழியினை முனிவர் பயின்றார் என நாம் ஊகிக்கலாம். ஏனெனில் கிரேக்கம் முதலிய செம்மொழிகளைப் பயில்வது அன்றைய ஐரோப்பியக் கல்வித் திட்டத்தில் இன்றியமையாததாக இருந்தது. இந்நிலை அண்மைக்காலம் வரை ஐரோப்பாவில் நீடித்தது. இன்றும் கத்தோலிக்க சமயப் பணியாளர்கள் மேலை நாடுகளில் கிரேக்க, எபிரேய மொழிகளைப் பயின்றுவருவது கண்கூடு.

முனிவர் பிரெஞ்சு மொழியினை அறிந்திருந்தார் என கோர்து அடிகளார் 2-11-1733 அன்று எழுதிய ஒரு மடல் வழியாக நாம் அறிகின்றோம். முனிவர் இலத்தீன் மொழியில் யாத்த ஒரு பஞ்சாங்க நூலைப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்த கோர்து அடிகளார் அம்மொழி பெயர்ப்பினை மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து உதவுமாறு முனிவருக்கு எழுதியதை அம்மடலால் அறிகின்றோம். முனிவர் பிரெஞ்சு மொழியினை அறிந்திருந்தார் என்று தம் மடலில் கோர்து அடிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். கார்கம் அடிகளாரும் இதே கருத்தினை ஒரு மடலில் தெரிவிக்கின்றார். முனிவரின் பிரெஞ்சு மொழியறிவு செந்தமிழ் இலக்கணம் கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய இரு நூல்களிலும் தெளிவாகத் தெரிகின்றது.

முனிவர் பிரெஞ்சு—தமிழ் அகராதியொன்றினையும் தொகுத்ததாக அறிகின்றோம். இவ்வகராதியைத் தமக்குப் படியெடுத்து உதவுமாறு மாஹே மறைப் பணிக்கள முதல்வர் எம்மானுவேல் அடிகளாரைக் கேட்டுக் கொண்டதோடு, அதற்காக இருபது ரூபாய் அவரிடம் கொடுத்து வந்ததாக ஆங்க்கெத்தில் தூப்பெரோன் அடிகளார் 1758—ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்களில் எழுதிய ஒரு மடலில் குறிப்பிடுகின்றார். இது முனிவர் இறந்த (1747) பதினொரு ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்ட மடலாதலின் இச்செய்தி உண்மை என்றே

கருதப்படவேண்டும். எனினும் முனிவர் தொகுத்த பிரெஞ்சு அகராதி நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் முனிவர் பிரெஞ்சு—தமிழ் அகராதியைத் தொகுக்கவில்லை என முனிவரின் எழுத்துப்படைப்புக்களை ஆராய்ந்த ஜூலியன் வென்சோன் கருதுகின்றார். முனிவரின் வரலாற்றினைத் தக்க ஆதாரங்களுடன் இயற்றி வழங்கிய லெயோன் பெஸ் அடிகளாரும் இக்கருத்தினை ஏற்றுக் கொள்கின்றார்.

முனிவர் ஆங்கிலம்—தமிழ் அகராதியொன்றினைத் தொகுத்தார் என்று அருள்திரு. எலிஜா ஹூல்போன்றோர் கூறுகின்றனர். அத்தகைய அகராதியினை எவரும் கண்டதாகச் சான்றுகள் கிடைத்தில.

முனிவர் ஆங்கில மொழியினை அறியாதவர் என்பதற்கு ஒரு சான்று உள்ளது. கொடுந்தமிழ் இலக்கணத்தில் (பக். 13) டகர எழுத்தின் இருவகை ஒலிப்பு முறையினை விளக்கும் முனிவர் "இதே போன்று, இதே ஒலியுடன் ஒலிக்கப்பெறும் எழுத்து ஆங்கிலத்தில் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது" எனக் கூறுவதால் முனிவருக்கு ஆங்கில மொழி தெரியாது என முடிவுசெய்வதில் தவறில்லை,

முனிவர் வடமொழியில் நூலெதுவும் எழுதியதாகத் தெரியவில்லை. எனினும் அவர் இயற்றிய சதுரகராதியும் கொடுந்தமிழ் இலக்கணமும் முனிவரது வடமொழிப் புலமையை நிறுவுகின்றன.

கொடுந்தமிழ் இலக்கணத்தில் பல்வேறிடங்களில் முனிவரின் வடமொழிப் புலமை குறிப்பால் உணர்த்தப்படுகின்றது. முதல் அதிகாரத்தில் ஆறாம் பிரிவு வடமொழி எழுத்துக்களைப் பற்றியதாக அமைந்துள்ளது.

சதுரகராதி முன்னுரையில் 'தமிழ் அகராதிக் கருவூலத்தை வளமாக்கச்கிரந்த (வடமொழிச்)ச் சொற்களைச் சேர்த்திருக்கின்றேன்' என்று கூறும் முனிவர், சதுரகராதியின் ஒரு பிரிவாகிய பெயரகராதியில் மிகப் பல

வடசொற்களைத் தொகுத்துப் பொருள் கூறியுள்ளார். தமிழ் இலக்கிய இலக்கண வழக்குகளில் இடம் பெறாத பல வடசொற்களைப் பெயரகராதியில் காணும்போது நமக்கு வியப்பு மேலிடுகின்றது. இதனாலும் தொன்னூல் விளக்கத்தில் இடம்பெறும் இலக்கண விதிகளாலும் முனிவர் வடமொழியில் புலமைபெற்றிருந்தார் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

முனிவர் தெலுங்கு மொழியில் இலக்கண நூல் இயற்றியதாக ஒரு செவிவழிச் செய்தி உண்டு. எலிஜா ஹூல் பாதிரியாரும் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதனை நிறுவிடத் தக்க ஆவணங்கள் கிடைக்காமையால் முனிவரின் தெலுங்குமொழி அறிவு பற்றி நாம் எதுவும் கூறுதற்கில்லை.

முனிவர் பெர்சிய, இந்துஸ்தானி மொழிகளை மூன்று திங்களில் கற்று, அம்மொழிகளில் சந்தா சாகிபுடன் உரையாடுமளவுக்குத் தேர்ச்சி பெற்றார் என ஒரு செவிவழிச் செய்தி உண்டு. முத்துச்சாமிப்பிள்ளை எழுதிய வீரமா முனிவர் வரலாற்றிலும் இச்செய்தி இடம் பெறுகின்றது. ஆனால் இதனை உறுதிசெய்யும் ஆவணங்கள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் நாம் இதனை ஏற்பதற்கில்லை.

முனிவரின் பன்மொழிப் புலமை நம்மை வியக்க வைப்பதாகும். இத்தாலிய நாட்டில் தம் இளமைப் பருவத்தில் பல மொழிகளைப் பயின்ற முனிவர், இந்தியாவுக்கு வந்த பின்னும் தம் மொழிப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட்டமை நம்மை மலைக்கச் செய்கிறது. அதுவும் இடையறாத பல்வேறு பணிகளுக்கிடையில் அவர் தம் முப்பதாம் வயதுக்குப் பின் தமிழையும், வடமொழியையும் கற்றுத் தேர்ந்த முறைமை பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

முனிவர் தம் தமிழ்ப்புலமையால் மட்டுமல்ல, பன்மொழிப் புலமையாலும் வரலாற்றில் இடம் பெற்றுத் திகழ்கின்றார்.

## 26. முனிவரின் மருத்துவப் புலமை

முனிவரின் மருத்துவத் திறமை பற்றிய செவிவழிச் செய்திகள் தமிழகத்தில் மிகுதியாக உலவுகின்றன. 'வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரைகள்' என்னும் பெயரால் சில ஆண்டுகளுக்கு முன் தமிழ், ஆங்கில மொழி இதழ்களில் விளம்பரங்கள் வெளிவந்ததுண்டு.

'முனிவர் இரண்டு மருத்துவ நூல்களை இயற்றினார். —ஒரு வேளை அவை மூன்றாகவும் இருக்கலாம். ஒரு நூல் அச்சிடப் பெற்றதை அறிவேன். ஆனால் கையெழுத்துப் பிரதிகளை எங்கே தேடமுடியும்?' என கௌசானல் அடிகளார் நெல்லை மாவட்டத்துப் பாளையங்கோட்டையிலிருந்து 8-8-1899 அன்று எழுதிய ஒரு மடலில் குறிக்கின்றார். ஆயினும் அவர் முனிவரின் மருத்துவ நூல்களின் பெயர்களைச் சுட்டவில்லை. வைத்திய முறை, நிலக்கண்டி, வீரமெழுகு, இரத்தினச் சுருக்கம், வைத்திய முறை, நசகாண்டம், மேகனாதி எண்ணெய் ஆகியவை முனிவர் இயற்றிய மருத்துவ நூல்கள் எனப் பலராலும் சுட்டப்படுகின்றன. ஆயினும் இவற்றை உண்மையென நிறுவுதற்குரிய ஆவணங்களெதுவும் நமக்கு இதுகாறும் கிடைக்கவில்லை.

எனினும் முனிவரின் மருத்துவத் துறையறிவு சதுரகராதி, தமிழ்—இலத்தீன் பேச்சுமொழி அகராதி ஆகியவை மூலமாக நமக்குத் தெளிவாகின்றது. சதுரகராதியை

விடத் தமிழ்—இலத்தீன் பேச்சுமொழி அகராதியில் மருத்துவச் சொற்களும், மருத்துவக் குறிப்புகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன.

நோய்களைச் சுட்டும் பெயர்களுக்குப் பொருள் கூற முற்படும்போது முனிவர் அவற்றின் வகைகளையும் பல இடங்களில் சுட்டுகின்றார். எடுத்துக்காட்டாகக் காய்ச்சலின் வகையாக விடும் காய்ச்சல், விடாக் காய்ச்சல், நாலாமுறைக் காய்ச்சல், மூன்றாமுறைக் காய்ச்சல், குளிர் காய்ச்சல், சுரக் காய்ச்சல்,வறைக்காய்க்சல், உட்காய்ச்சல், அஸ்திக்காய்ச்சல், பித்தக் காய்ச்சல், மந்தாரக் காய்ச்சல், கடும் காய்ச்சல், அகோரக் காய்ச்சல், தோஷக் காய்ச்சல், பெருவாரிக் காய்ச்சல், கொள்ளைக் காய்ச்சல் என விரித்துக் கூறுகின்றார். அவ்வாறே பிளவை, உரோகம், வாதம், காயம், வலிப்பு ஆகிய நோய்களும் பலவகையினவாக இருப்பதை முனிவர் விளக்குகின்றார்.

நோய்களின் வகைகளை விரித்துரைக்கும் முனிவர் நோய்களைப் போக்கும் மருந்து வகைகளையும், மருந்து தயாரிக்கும் முறைகளையும் தம் தமிழ்—இலத்தீன் பேச்சு மொழி அகராதியில் எடுத்தோதுகின்றார். மருந்து தயாரிப்பதில் கடுக்காயின் விதையையும், சுக்கின் தோலையும் நீக்குவது வழக்கம் என மருந்து தயாரிப்பு முறை பற்றி முனிவர் நுணுக்கமாகக் கூறுவது வியப்புத் தருவதாகும்.

இவ்வளவு விரிவான மருத்துவக் குறிப்புக்கள் முனிவரின் பிற நூல்களிலோ அகராதிகளிலோ காணப்படுவதைவிட, அவரியற்றிய தமிழ்—இலத்தீன் பேச்சுமொழி அகராதியிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றன. தஞ்சைப் பகுதியில் சமயப் பணியாற்றிய போது இலக்கியப் பணியில் தக்க கவனம் செலுத்திய முனிவர், தம் வாழ்வின் இறுதிக் காலத்தில் தூத்துக்குடிப் பகுதியில் வாழ்ந்த காலத்தில் மருத்துவத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார் என நாம் கருத இடமுண்டு.

# 27. பல்கலைப் புலமை

மருத்துவத் துறையில் புலமை பெற்றிருந்த முனிவர் பிற கலைகளிலும் புலமை பெற்றிருந்ததாக அறிகின்றோம். 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' எனக் கூறும் நாம், அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களை அறிய வேண்டு மாயின் முனிவரின் சதுரகராதியையே நாடவேண்டும். அகராதி முதலாக அவத்தைப் பிரயோகம் ஈறாக அறுபத்து நான்கு கலைகளையும் முனிவர் சதுரகராதியில் நமக்குப் பெயர் சொல்லி அறிமுகப்படுத்துகிறார்.

கலைகளின் உட்பிரிவுகளைப் பற்றியும் முனிவருக்குப் பரந்த அறிவு உண்டென்பதைத் தொகையகராதி காட்டு கின்றது. சிற்பக் கலையின் உறுப்புக்களெனக் கல், உலோகம், செங்கல், மரம், மன், சுதை, தந்தம், வண்ணம், மெழுகு, கண்ட சருக்கரை ஆகியவற்றைச் சுட்டும் பிங்கல நிகண்டு, சிற்ப நூல்களைப் பற்றி மௌனம் சாதிக்கிறது. முனிவரோ சிற்ய நூல்களைப் பற்றித் தெளிவாக அறிந்து முப்பத்தொரு நூல்களின் பெயர்களைக் குறிக்கின்றார்.

அவ்வாறே இசைக்கலை பற்றிய முனிவரின் தெளிந்த அறிவை நாம் தொகையகராதியில் காணலாம். இசை

---

இவ்வதிகாரத்தை எழுதுவதற்கு முனைவர் சூ. இன்னாசி இயற்றிய 'சதுரகராதி ஆராய்ச்சி' பெரிதும் பயன்பட்டது.

வகைகளையும் இராகத் தகுதிகளையும், தாளங்களையும் தாளப் பிரமாணங்களையும் அவற்றை விளக்கும் நூல் களையும் பற்றிய விவரங்கள் தொகையகராதியில் கூறப் படுகின்றன. ஒவ்வொரு பாவுக்கும் உரிய இராகம், காலத்துக்குரிய இராகம் என முனிவர் இசைபற்றி விரிவாகவே எழுதியுள்ளார். முப்பத்திரண்டு இராகங் களின் பெயர்களையும் அவற்றின் சாதிகளையும் மனைவி களையும் தேவதைகளையும் பற்றி முனிவர் விளக்கமாகக் குறிக்கின்றார். "இவையன்றிப் பலவகைப்பட வழங்கும் இராகம் பலவுளவை கூறிற் பெருகும்" என முனிவரே கூறுவதால் முனிவரின் இசைத்துறைப் புலமை மிக ஆழமானது என்பதை நாம் எளிதாக உணரலாம். அவ்வாறே தாளங்கள் பற்றிய பல்வகைக் குறிப்புகளையும் நாம் சதுரகராதியில் கண்டு வியப்படைகின்றோம்.

முனிவரின் ஓவியத் திறமும் நாம் வியந்து பாராட்டுதற் குரியதாகும்.

மதுரை நாயக்க மன்னர்களின் மரபு வழியை ஒரு மரமாக ஓவியத்தில் தீட்டி ஒவ்வோர் இலையையும் ஒரு நாயக்க மன்னரின் முகமாகத் தீட்டி, முனிவர் பங்காரு திருமலை நாயக்கருக்கு அன்பளிப்பாக வழங்கினார் என்பதையும் நாயக்கர் அதனைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார் என்பதையும் நாம் ஏற்கனவே குறித்துள்ளோம்.

# 28. இணையற்ற எழுத்துச் சீரமைப்பு

தமிழ் வரி (எழுத்து) வடிவம் தோன்றிய காலம் இது வென்று எவரும் வரையறுக்க இயலாது. தமிழ் வரிவடிவத்தைத் தோற்றுவித்தவர் எவர் என அறிவதும் இயலாத ஒன்று. ஆனால் தமிழ் வரிவடிவம் நீண்ட கால அளவில் உருவானது என்பதும், அது தனியொரு மனிதராலோ குழுவாலோ உருவாக்கப்பட்டதல்ல என்பதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

காலப்போக்கில் தமிழ் வரிவடிவம் பல மாற்றங் களைப் பெற்றுள்ளது என அறிஞர்கள் கூறுவதை எவரும் மறுப்பதில்லை, கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் இவ்வுண்மையை எடுத்துரைக்கின்றன.

தொல்காப்பிய எழுத்ததிகாரம்

''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையும் அற்றே''

என்று கூறுகிறது. அவ்விதிக்கு ஒத்தவகையில் மெய் யெழுத்துக்களைப் போலவே எகரமும் ஒகரமும் புள்ளிவைத்து அக்காலத்தில் எழுதப்பட்டன. இன்றைய 'எ' என்னும் எழுத்து அன்று 'எ̇' என்றும், இன்றைய 'ஏ' என்னும் எழுத்து அன்று 'எ' என்றும் எழுதப்பட்டன. அவ்வாறே இன்றைய 'ஒ' என்னும் எழுத்து 'ஒ̇' என்றும், 'ஓ' என்னும் எழுத்து 'ஒ' என்றும் எழுதப்பட்டன.

பனையோலையில் எழுதிய அக்காலத்தில் நடைமுறையில் மெய்யெழுத்துக்கும் புள்ளி வைப்பதில்லை; எகர ஒகரக் குறில்களுக்கும் புள்ளி வைப்பதில்லை. ஏனெனில் பனையோலையில் எழுத்தாணியால் எழுதும்போது புள்ளி வைத்தால் ஓலையில் ஓட்டை விழுந்து விடுமல்லவா? இதனால் ஏடுகளைப் படிப்பதில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. எகர ஏகாரங்களுக்கும், ஒகர ஓகாரங்களுக்கும் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டதால் படிப்பதில் ஏற்பட்ட இடர்ப்பாடு பிற்காலத்தில் போக்கப்பட்டு, எ—ஏ, ஒ—ஓ என வேறுபடுத்தி எழுதப்பட்டது. இச்சீர் திருத்தத்தைச் செய்தவர் யார் என்று நமக்குத் தெரியவில்லை.

வீரமாமுனிவரே இச்சீர்திருத்தத்தைச் செய்தவர் என வா. செ. குழந்தைசாமி ('தமிழ் எழுத்துச் சீரமைப்பு,' 1990, பக். 31-32) கருதுகின்றார். ஆனால் இதற்கு எத்தகைய ஆதாரத்தையும் அவர் சுட்டவில்லை. நமக்கும் எத்தகைய ஆதாரமும் கிடைக்கவில்லை.

முனிவர் 1728-ஆம் ஆண்டில் தாம் எழுதிய 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்னும் இலத்தீன் நூலின் முதல் அதிகாரத்தில் 'எழுத்துக்களின் எண்ணிக்கையும் வடிவமும்' என்றும் தலைப்பின்கீழ் பின்வருமாறு கூறுகின்றார்:

"எ (குறில்), ஏ (நெடில்) இவையிரண்டினையும் குறிக்கும் வடிவம் ஒன்றே. அவ்வாறே ஒ (குறில்), ஓ (நெடில்) இவையிரண்டினையும் குறிக்கும் வடிவம் ஒன்றே. ஆனால் வேறுபாடு காட்டுவதற்காக நெடிலுக்கு எத்தகைய குறியும் இல்லாமல் விட்டு விட்டு குறில்மீது - என்னும் குறியை எழுதுமாறு முன்னோர் வகுத்துள்ளனர். இவ்வாறு எத்தகைய குறியுமில்லாமல் எழுதப்படும் மெய் என்பது மேய் (நெடில்) என வாசிக்கப்படுகிறது. இது மேய்த்தல் என்பதைக் குறிக்கும். ஆனால்

மெய் என்பது மெய் (குறில்) என வாசிக்கப்படுகிறது; இது உண்மை எனப் பொருள்படும். 'இவ்வாறே குறியில்லாத பொய்' என்பது 'போய்' (நெடில்) என வாசிக்கப்படும். இதற்குச் 'சென்று' என்பது பொருள். ஆனால் 'பொய்' என்பது 'பொய்' (குறில்) என வாசிக்கப்படும். இது 'மெய் இன்மை' எனப் பொருள்படும். ஆனால் சில இடங்களைத் தவிர வேறெங்கும் இக்குறிகள் பயன்படுத்தப்படுவதை நான் கண்டதில்லை. இதற்கு ஏடெழுதுவோரின் ஊக்கமின்மை காரணமாக இருக்கலாம். இக்குறிகள் பயன் படுத்தப்படுமாயின் தொடக்க நிலையில் (தமிழைப்) பயில் வோருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எகர ஏகாரங்களையும் ஒகர ஓகாரங்களையும் வேறு படுத்திக் காண்பதற்கு நான் இன்னொரு எளிய முறை யினைக் கண்டுபிடித்துள்ளேன். கொம்பு என அழைக்கப் படும் 'ெ' வடிவம் அவ்வாறே பயன்படுத்தப்பட்டால் எகர ஒகரக் குறில்களாகும், ஈகாரத்துக்குச் சுழிக்கப்படுவது, போலக் கொம்பை மேலே சுழித்தால் — அதாவது 'ே'— ஏகார ஓகாரங்களைக் குறிக்கும். அதாவது 'மெய்' என்பது குறிலாகவும், 'மேய்' என்பது நெடிலாகவும் அமையும். அவ்வாறே 'பொய்' என்பது குறிலாகவும் 'போய்' என்பது நெடிலாகவும் விளங்கும். இதைப் பலர் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டுள்ளனர்.''

கொடுந்தமிழ் இலக்கணத்திலும் சதுரகராதி முன்னுரையிலும் முனிவர் குறித்துக்காட்டும் எழுத்துச் சீர்திருத்தம், கொம்பு என அழைக்கப்படும் 'ெ', 'ே' என்னும் இரு குறிகளைப்பற்றியதேயாகும். எ—ஏ, ஒ—ஓ என்னும் உயிரெழுத்தின் குறில் நெடில் வடிவங்களைப் பற்றி முனிவர் இந்நூல்களில் எழுதவில்லை. உயிர்மெய் யெழுத்துக் குறில் நெடில் வடிவங்களைப்பற்றியே — கொம்புகளைப் பற்றியே—பேசுகிறார். இதை நாம் தெளி வாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறாயின் எ—ஏ, ஒ-ஓ என்னும் எழுத்துச் சீர் திருத்தத்தைச் செய்தவர் யார்? நமக்குத் தெரியவில்லை. வீரமாமுனிவரே இச்சீர்திருத்தத்தைச் செய்தவர் என்றால் முனிவர் அதைத் தம் நூல்களுள் ஒன்றிலாவது குறித்திருப்பாரல்லவா? அதுமட்டுமல்ல, எ-ஏ, ஒ-ஓ என்னும் எழுத்துக்கள் முனிவரின் காலத்தில் வேறுபாடின்றி எ-ஏ, ஒ-ஓ என்று எழுதப்பட்டிருக்குமாயின் முனிவர் அவற்றைச் சீர்படுத்தியிருப்பார் எனவும் நாம் திண்ணமாக நம்பலாம்.

இந்நிலையில் முனிவர் 1730-ஆம் ஆண்டில் இயற்றிய 'தொன்னூல் விளக்கம்' என்னும் நூலில் எழுத்துச் சீரமைப்பு பற்றி எதுவும் கூறியிருக்கிறாரா எனவும் காணுதல் நல்லது. எழுத்ததிகாரத்தில் 'எழுத்தின் வகுப்பு' என்னும் பிரிவில் பன்னிரண்டாவது நூற்பா,

'நீட்டல் சுழித்தல்
குறில்மெய்க்கு இருபுள்ளி'

என்று கூறுகிறது. இதன் பொருள் என்ன?

பழைய பொருளையே இந்நூற்பா கூறுவதாக முனைவர் சூ. இன்னாசி கருதுகின்றார்.

"தம் தொன்னூல் விளக்கத்தில் முன்னைய இலக்கண நெறிகட்கு ஏற்ப 'நீட்டல் சுழித்தல் குறில்மெய்க்கு இருபுள்ளி' என இலக்கணம் வகுத்து, அதற்கேற்ப உரையும் எழுதினார். ஆனால் தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில் தாம் புதுவதாகக் கண்டு தந்த எழுத்துச் சீர்திருத்தம்பற்றி 'எகரவொகரக் குறில் நெடில்களை வேறுபடுத்திக் காட்டப் புதியமுறையைக் கண்டுபிடித்திருக்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன்' எனக் கூறித் தற்காலத்தில்

வழங்கும் குறில் வடிவ, நெடில் வடிவக் கொம்புக் குறியீடுகளைச் சுட்டுகிறார்.''

என்பது (வீரமாமுனிவ மாலைகள் 1985, பக். 63) அவர் கூற்று. அதாவது முனிவரின் தொன்னூல் விளக்க நூற்பா எகர ஏகார, ஒகர ஓகார எழுத்துச் சீர்திருத்தம் எதையும் சுட்டவில்லையென்று அவர் கூறுவதாகவே நாம் கொள்ள முடியும்.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையு மற்றே'

என்னும் தொல்காப்பிய நூற்பா கூறும் கருத்தையே முனிவரும் தம் தொன்னூல் விளக்கத்தில் கூறியுள்ளதாக முனைவர் இன்னாசி சொல்வதாகவே நாம் கொள்ள வேண்டும்.

ஆனால் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் தமது 'தொன்னூல் விளக்கம் — திறனாய்வு, மூலம், விளக்கம்' என்னும் நூலில், இதற்கு மாறான கருத்தைத் தெரிவிப்பதைக் காண்கிறோம்.

'எழுத்துக்களின் வரிவடிவத்தில்
மாற்றத்தைச் செய்தார் தொன்னூல் விளக்க
ஆசிரியர். 'மெய்யின் இயற்கை புள்ளியொடு
நிலையல்', 'எகர ஒகரத் தியற்கையுமற்றே'

என்ற நிலையிலிருந்து

நீட்டல் சுழித்தல்
குறில்மெய்க்கு இருபுள்ளி
என்ற நிலைக்கு மாற்றினார்.'

என முனைவர் சுப்பிரமணியன் (பக். 26) எழுதுகின்றார். அதோடு,

'வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டினுள்
என்றென்றும் தமிழறிஞரிடையே நினைவில்

> நின்று கூற வைப்பது அவர் செய்த எழுத்துச் சீர்திருத்தமே எனில் மிகையாகாது. எகர ஒகரக் குற்றெழுத்தின்மேல் நீண்ட புள்ளியும் மெய்யெழுத்துக்களின்மேல் சுழித்த புள்ளியும் வைக்கும் பழக்கத்தை உண்டாக்கினார்'

என அவர் எழுதுவதால் எ̄, ஒ̄ என எழுதும் பழக்கத்தை உருவாக்கியவர் வீரமாமுனிவரே என முனைவர் சுப்பிரமணியன் கருதுவது தெளிவாகிறது. அவ்வாறாயின் எகரமும் ஒகரமும் புள்ளி வைத்து எழுதப்படும் தொல்காப்பியர் கால விதியை மாற்றி, புள்ளிக்குப் பதிலாக எ̄, ஒ̄ என எகர ஒகரங்களின் மேல் நீண்ட புள்ளி (கோடு) வைக்கும் பழக்கத்தை முனிவர் உருவாக்கியதாக முனைவர் சுப்பிர மணியன் கூறுவதாகக் கொள்ளலாம்.

இதற்கு ஆதாரம் முனிவரின் 'நீட்டல் சுழித்தல் நூற்பாவே என்பது தெளிவு.

தொன்னூல் விளக்கம் வேதகிரி முதலியார் பதிப்பு (1838) இந்நூற்பாவுக்குப் பின்வரும் விளக்கம் (பக். 9) தருகிறது:

> '...எகரம் ஏகாரம், ஒகரம் ஓகாரம் எப்போதும் ஒருவடிவாகையானும் மயக்க நீப்பதுவேண்டி மேற்புள்ளிகொடுத்தார் புலவர். ஆகையில் குற்றெழுத்தின் மேனீண்ட புள்ளியும் ஒன்றெழுத்தின் மேற்சுழித்த புள்ளியும் வருமென்றுணர்க.
> (உ-ம்) எ̄ரி = எரி, ஒ̄தி = ஒதி...'

ஆகவே வேதகிரி முதலியார் பதிப்பில் காணும் விளக்கத்தையே முனைவர் ச. வே. சுப்பிரமணியன் ஏற்றுக் கொண்டு எழுதியுள்ளார்.

தொன்னூல் விளக்க உரையாசிரியர் முனிவரே என்பது முனைவர் சுப்பிரமணியனின் (பக். 24) கருத்து. இது முனைவர் இன்னாசியும் வேறு பலரும் பொதுவாக

ஏற்றுக்கொள்ளும் கருத்தேயாகும். அவ்வாறாயின் வேதகிரிமுதலியார் பதிப்பில் காணப்படும் கருத்து முனிவரின் கருத்தேயாகும் என்று கொள்வதில் தவறில்லை.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால்,

அ) தொல்காப்பியர் காலத்தில் எ̄—எ, ஒ̇—ஒ என்னும் வடிவங்களே வழக்கில் இருந்தன.

ஆ) அதனை மாற்றி எ̄—எ, ஒ̄—ஒ என்னும் அமைப்பினை உருவாக்கித் தந்தவர் வீரமாமுனிவர்.

இ) ெ̄—ெ, என வழங்கிய முறையினை மாற்றி ெ,ே என்னும் வழக்கினை உருவாக்கியவர் வீரமாமுனிவர்.

ஈ) ஓ, ஓ என்னும் நெடில் வடிவங்களை உருவாக்கியவர் யாரென அறுதியிட்டுக் கூறவியலாது.

# 29. முனிவரின் நண்பர்கள்

சமுதாயத்தில் உயர்நிலையில் செல்வாக்குடன் வாழ்ந்த பலர் முனிவருக்கு நண்பர்களாக இருந்தனர் என்பதை நாம் அறிய முடிகிறது.

சந்தா சாகிபுடனும் ஆற்காட்டு நவாபுடனும் அவருக்கு இருந்த நெருங்கிய நட்பு அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

21-12-1714 அன்று குருக்கள் பட்டியில் முனிவருக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டபோது தமக்குத் தெரிந்த சில இளவரசர்களும் அதிகாரிகளும் தம்மை அத்தண்டனையினின்று விடுவிக்க உதவினர் என முனிவரே எழுதியுள்ளார். எனவே, முனிவர் தமிழகத்துக்கு வந்து மூன்றரை ஆண்டுகளுக்குள் குருக்கள்பட்டிப் பகுதியில் உயர்நிலையில் வாழ்ந்த சில இளவரசர்களையும் அதிகாரிகளையும் தமக்கு நண்பராக்கிக் கொண்டார் என அறியலாம்.

அவ்வமயம் முனிவரை வீரர்கள் தங்கள் படைத்தலைவரிடம் அழைத்துச் சென்றபோது முனிவரைச் சூழ்ந்து சென்ற பலருள் உயர்குடிக் கிறித்துவப் பெண்கள் இருவரும் இருந்ததாக அறிகின்றோம். முனிவருக்குக் கொலைத் தண்டனை வழங்கப்பட்ட செய்தியை அப்பெண்களே குருக்கள்பட்டியிலுள்ள கிறித்தவர்களுக்கு அறிவித்தனர் என ப்ராந்தோலீனி அடிகளார் எழுதுகின்றார்.

1715-ஆம் ஆண்டில் முனிவர் மறவ நாட்டில் பணி யாற்றச் சென்றபோது, மறவநாட்டு மன்னரின் சகோதர ராகிய வடுகநாதத் தேவர், முனிவர் தம்மைச் சந்திக்க வரவேண்டுமென்று மிகுந்த பணிவோடு மடலெழுதி யனுப்பினார் என 1716-ஆம் ஆண்டு மடல் கூறுகின்றது.

1716-ஆம் ஆண்டில் முனிவர் மதுரைப் பகுதியில் சமயப் பணியாற்றச் சென்றபோது மதுரையின் முக்கிய அதிகாரிகளுள் ஒருவராகிய யதுவேங்கடபதி நாயக்கர் அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றதாக அறிகின் றோம். சம்பட்டியில் ஒரு கோயிலும் குருக்கள் இல்லமும் கட்டியெழுப்பவும் அவ்வதிகாரி ஒப்புதல் வழங்கினார் என்றும் வரலாறு கூறுகின்றது.

மதுரை அரசின் முன்னாள் முதலமைச்சராகிய ஒரு முதலியார் (இவரது முழுப்பெயர் என்னவென்று தெரிய வில்லை) முனிவரைச் சந்தித்துத் தமிழ் இலக்கியங்கள், இலக்கணம், வான்நூல் ஆகியவை பற்றிக் கலந்துரை யாடியதாக முனிவரே எழுதிய 1731-ஆம் ஆண்டு மடல் குறிப்பிடுகின்றது. அவ்வாறே அரியலூர் மழவராயரின் முதலமைச்சர் முனிவரிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டதாகவும், ஏலாக்குறிச்சி மக்கள்மீது சினம் கொண்டு கோக்குடி சென்றிருந்த முனிவரை மழவராயரே திரும்பவும் ஏலாக்குறிச்சிக்கு வரவழைத்து மரியாதை செய்வித்து அனுப்பினார் என்றும் அதே மடல் விளக்கு கின்றது.

1733-ஆம் ஆண்டில் சந்தாசாகிபைச் சந்தித்தது முதல் அவருக்கும் முனிவருக்குமிடையே நிலவிய நெருங்கிய நட்புறவைப் பற்றி நாம் நன்றாக அறிவோம். சந்தா சாகிபு முனிவரைத் தமது திவானாக நியமித்து ஆண்டு தோறும் பன்னிரண்டாயிரம் ரூபாய் வருமானம் தரக் கூடிய நான்கு ஊர்களை அவருக்கு மானியமாக வழங்கி னார் என்னும் செவிவழிச் செய்திகள் உருவாகும் அளவுக்கு

அவர்களது நட்பு மக்களிடையே புகழ் பெற்றிருந்தது என்பதையும் நாம் அறிவோம். மலபார் மறைமாநிலம் நிதிக் குறைவால் துன்புற்றபோது சந்தா சாகிபு மறைமாநிலத் தலைவர் வாஸ்கொன்செல்லோஸ் அடிகளாருக்கு 350 பொற்காசுகள் வழங்கியுதவிய நிகழ்ச்சியை அவ்வடிகளாரே விரிவாக எழுதியுள்ளார். முனிவர் சந்தா சாகிபுடன் கொண்டிருந்த நட்பு மதுரை மறைமாநிலம் முழுமைக்குமே நன்மை விளைவிக்குமளவுக்கு உயர்ந்த நட்பாக இருந்ததையறிந்து நாம் வியப்புறுகின்றோம்.

1734-ஆம் ஆண்டில் ஏலாக்குறிச்சிக்கு முனிவரைச் சந்திக்க வந்த அரங்கப்ப மழவராயர் ஏலாக்குறிச்சி திருக்காவலூர்க் கோயிலுக்கு நன்கொடையாக நிலம் வழங்கிய நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அக்கொடையை எடுத்துரைக்கும் கற்சாசனம் இன்றும் ஏலாக்குறிச்சிக் கோயிலில் உள்ளது.

1735-ஆம் ஆண்டில் தஞ்சை அரசராகப் பொறுப்பேற்றிருந்த பிரதாப்சிங் முனிவரிடமும் கிறித்துவ சமயத்திடமும் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்ததாகவும், தம் தந்தையின் சினத்தைப் பொருட்படுத்தாமல் அவர் முன் னிலையிலேயே கிறித்துவ சமயத்தைப் பற்றி உயர்வாகப் பேசியதாகவும் 1735-ஆம் ஆண்டு மடல் தெரிவிக்கின்றது. பிரதாப்சிங்கின் மனைவி முனிவரை நேரில் சந்திக்க இயலாத நிலையிலிருந்ததால் தமது நம்பிக்கைக்குரிய ஒரு கிறித்துவ அலுவலரை முனிவரிடம் அடிக்கடி அனுப்பித் தமக்காக இறையருளை மன்றாடுமாறு கேட்டுக் கொண்டதாகவும், அடிக்கடி முனிவருக்கு அன்பளிப்புக்கள் அனுப்பி வந்ததாகவும் அதே மடல் குறிப்பிடுகின்றது.

சிறிது காலத்துக்குள் பிரதாப்சிங் மனம் மாறிக் கிறித்துவர்களுக்கு எதிராகச் செயல்பட்டபோது, மன்னரின் நண்பரும் தம் நண்பருமாகிய சித்தோஜி என்பாருக்கு எழுதி, கிறித்துவர்களுக்கு எதிரான வன்முறையை முனிவர்

நிறுத்தச் செய்தார் என்றும் அம்மடல் கூறுகின்றது. எனவே தஞ்சை அரசவையில் முனிவருக்கு நெருக்கமான நண்பராகச் சித்தோஜி விளக்கினார் என்றும் மன்னர் பிரதாப்சிங்கின் பட்டத்தரசி முனிவர் மீது பெருமதிப்புக் கொண்டிருந்தார் என்றும் நாம் அறியலாம்.

மதுரை அரசராகப் பின்பு பொறுப்பேற்ற பங்காரு திருமலை நாயக்கர் ஆற்காட்டுச் சிறையிலிருந்தபோது முனிவர் அவரைச் சந்தித்து அவரது மரபுவழி ஓவியத்தை வரைந்து அன்பளிப்பாக வழங்கி அவரை மகிழ்வித்ததாக அறிகின்றோம். அவர் அரசரானபின் சால்வதோர் தோஸ் ரெய்ஸ் அடிகளாரைச் சந்தித்து உரையாடி அவரது சமயப் பணிக்குப் பாதுகாப்பு வழங்கியதற்குக் காரணம் முனிவரோடு அம்மன்னர் கொண்டிருந்த நட்புறவே எனலாம்.

ஆற்காட்டு நவாபு தௌஸ்த் அலிகானுடன் முனிவர் நட்புறவு பூண்டிருந்தார் என்றும், அதற்காகவும் பிற உதவிகளுக்காகவும் நன்றி கூறி 29-10-1739 அன்று இயேசு சபைத் தலைவர் நவாபுக்கு மடல் எழுதினார் என்றும் நாம் அறிகின்றோம்.

பல குறுநில மன்னர்கள், அரியலூர் மழவராயர், தஞ்சை மன்னரின் நண்பர், சந்தா சாகிபு, ஆற்காட்டு நவாபு எனப் பல பெருங்குடி மக்களுடன் முனிவர் நட்புறவு பூண்டொழுகியதை வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது.

ஆனால் இந்நட்புறவுகளால் முனிவர் தமது சொந்த ஆதாயத்தைத் தேடியவரல்லர். அவற்றால் தமது சமயத்துக்கும், கிறித்துவர்களுக்கும், சகோதர குருக்களுக்கும் தேவையான ஆதரவையும் உதவிகளையுமே பெற்றார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

# 30. முனிவர் பணிபுரிந்த ஊர்கள்

தமிழகத்தில் ஏறக்குறைய முப்பத்தாறு ஆண்டுக் காலம் பணியாற்றிய முனிவர் பல ஊர்களில் தங்கிப் பணி புரிந்துள்ளார். தம் பணி தொடர்பாகப் பல ஊர்களுக்குச் சென்றும் தொண்டாற்றியுள்ளார். இவைபற்றிய குறிப்புக்கள் அக்காலத்து ஆண்டு மடல்களுள் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துக் காண்பது பயன்தரும்.

## 1. குருக்கள் பட்டி

முனிவர் தமிழகத்தில் முதன்முதலாகப் பணிப் பொறுப்பேற்றது இவ்வூரிலும் புதுப்பட்டியிலும்தான். தென்காசிக்கு அருகிலுள்ளவை இவ்வூர்கள். குருக்கள்பட்டி இன்று அழிந்துவிட்டது. முனிவர் பணிபுரிந்த இடம் குருக்கள்பட்டிக்கு அருகிலுள்ள ஐயனூர் என அருகிலுள்ள ஆண்டிப்பட்டி மக்கள் கூறுகின்றனர். ஐயனூருக்குத் தென்மேற்கில் 300 மீட்டர் தொலைவில் உள்ள மங்கம்மாள்புரம்தான் முனிவர் தங்கிப் பணிபுரிந்த ஊரென அவ்வூர் மக்கள் கூறுவர்.

ஆண்டுமடல்களில் குருக்கள்பட்டிதான் குறிக்கப் பட்டுள்ளதே தவிர, அவற்றில் ஐயனூரோ மங்கம்மாள் புரமோ குறிக்கப்படவில்லை.

குருக்கள்பட்டியில் முனிவர் 1711-ஆம் ஆண்டில் லூயிசு தே போர்சு அடிகளாருக்குத் துணைக்குருவாகவும்,

பின் மீண்டும் 1713-15 ஆம் ஆண்டுகளில் முழுப் பொறுப் பேற்றவராகவும் பணிபுரிந்தார்.

காமநாயக்கன்பட்டி, கயத்தாறு ஆகிய இரு ஊர்களும் இப்பகுதியில் அமைந்திருந்த முக்கிய ஊர்கள் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் பெருந்தொலகயினரா வாழும் ஊர்களாகவே இவை இன்றும் விளங்குகின்றன.

## 2. அய்யம்பேட்டை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயங்கொண்டம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய ஊர்களுக்கு அருகிலுள்ள இவ்வூர் இன்று தென்னூர் — ஐயம்பேட்டை, வரதராசல்பேட்டை என்னும் இரு ஊர்களாகப் பிரிந் துள்ளது. எனினும் முனிவர் பணிபுரிந்த காலத்துக் கோயில் வரதராசன்பேட்டையிலேயே இன்றும் அமைந்திருப்பதைக் காணலாம். அருகில் புதிய கோயில் எழுப்பப்பட்டுவிட்ட தால் பழைய கோயில் இன்று பள்ளிக்கூடமாகப் பயன் படுகிறது. இவ்விரு ஊர்களிலும் கத்தோலிக்க மக்கள் இன்று பெருந்தொகையினராக வாழ்கின்றனர்.

1712-ஆம் ஆண்டு இப்பகுதியில் பிரச்சினைகள் மிகுந்திருந்த காலம். ‘பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற் காகவே’ முனிவரை அவரது மேலதிகாரிகள் அப்பகுதிக்கு அனுப்பிவைத்ததாக 1712-ஆம் ஆண்டுமடல் தெரிவிக் கிறது. முனிவரும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார் என்று அதே ஆண்டுமடல் தெரிவிக்கிறது. முனிவர் தமிழகத்துக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே ‘பிரச்சினைகளைத் தீர்க்க வல்லவர்’ என்று மேலதிகாரி களால் கருதப்படும் அளவுக்கு அவரது திறமை வெளிப்பட் டிருந்தது என்பதையே இது புலப்படுத்துகிறது.

1712-13 ஆகிய இரு ஆண்டுகளில் முனிவர் இங்குப் பொறுப்பேற்றிருந்தபோது கோனான்குப்பம் அவரது

பொறுப்பில் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. ஏனெனில் பின்னர் 1727-ஆம் ஆண்டில் பெர்நார்து கோமஸ் அடிகள் அய்யம்பேட்டைக்கும் கோனான்குப்பத்துக்கும் பொறுப் பேற்றிருந்ததாக 1727-ஆம் ஆண்டுமடல் கூறுகிறது. ஆனால் ஏலாக்குறிச்சியில் இருந்தபோது முனிவர் கோனான்குப்பத்துடன் தொடர்பு கொண்டிருக்க இயலாது. எனவே 1726-ஆம் ஆண்டில் கோனான்குப்பத் தில் வாழ்ந்தபோது முனிவர் தேம்பாவணியை இயற்றி னார் என்பது முற்றிலும் ஆதாரமில்லாத செய்தியாகும்.

அய்யம்பேட்டைக்கு அருகிலுள்ள எய்யலூர் என்னும் ஊருக்கும் முனிவர் அடிக்கடி சென்று பணியாற்றி வந்த தாகவும், எய்யலூரிலிருந்து உரோமையிலுள்ள தம் சபைத் தலைவருக்கு முனிவர் ஒரு கடிதம் எழுதியதாகவும் வரலாறு கூறுகின்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காட்டுமன்னார் கோயிலுக்கு அருகிலுள்ள எய்யலூர், இன்று கிழப்புளியம்பட்டு எனவும் அழைக்கப்படுகிறது. இங்குக் கோயிலின் சுற்றுச் சுவர்களையும், வந்து செல்லும் மக்களுக்குத் தேவையான தங்குமிடங்களையும், வெள்ளப் பெருக்கால் வரும் நீரைத் தேக்கி வைக்கும் குளத்தையும் முனிவர் அமைத்ததாக 1713-ஆம் ஆண்டுமடல் தெரிவிப்பதை ஏற்கனவே குறித்துள்ளோம். பழைய குருக்களில்லம் இருந்த இடத்திலேயே இன்று புதிய கோயில் எழுப்பட்டுள்ளதாக இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். கோயிலுக்கு மிக அருகிலேயே கொள்ளிடம் ஆறு ஓடுகிறது.

எய்யலூரில் முனிவர்காலத்தில் 53 அடி நீளமும் 23 அடி அகலமும் கொண்டதாக அமைந்திருந்த கோயில் பழுதடைந்த காரணத்தால் இன்று இடிக்கப்பட்டுவிட்டது. பழைய கோயிலின் தரைமட்டப் பகுதியை நாம் இன்றும் காணலாம். கோயிலைச் சுற்றி இன்று 12 கிறித்தவக்

குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் வழிவழியாக இவ்வூரிலேயே வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றனர்.

வரதராசன்பேட்டை பழைய கோயிலில் உள்ள அலங்கார மாதா திருச்சிலை முன்பு எய்யலூரிலேயே இருந்ததாகவும் முனிவர் அங்கிருந்து அடிக்கடி குதிரையில் எய்யலூருக்கு வந்து செல்வார் என்றும் எய்யலூர் மக்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

அன்று கோடாலி என ஆண்டுமடல்களில் குறிக்கப் படும் ஊர் இன்று கோடாலிக் கருப்பூர் என அழைக்கப் படுகிறது. அங்கு இப்போது கோவில் எதுவும் இல்லை. ஒரே ஒரு கத்தோலிக்கக் குடும்பமே அங்கு வாழ்ந்து வருகிறது.

## 3. ஏலாக்குறிச்சி — திருக்காவலூர்

முனிவர் நீண்ட காலம் வாழ்ந்து பணியாற்றிய ஊர் இதுவே. தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை போன்ற இலக்கியங்களும், வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் மறுத்தல், லுத்தேர் இனத்தியல்பு போன்ற உரைநடைநூல்களும், கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் போன்ற இலக்கண நூல்களும் சதுரகராதியும் ஆகிய பல நூல்களை தாம் திருக்காவ லூரில் வாழ்ந்த காலத்திலேயே முனிவர் இயற்றினார். ஆகவே முனிவரின் சமயப்பணியும் இலக்கியப் பணியும் சிறந்து விளங்கிய இடம் இவ்வூரே.

இவ்வூரின் பெயர் இன்றும் ஏலாக்குறிச்சி என்றே வழங்கப்படுகிறது. முனிவர் இதனைத் திருக்காவலூர் என மாற்றியமைத்தார் என்பது உண்மையே எனினும், முனிவரே தம் கடிதங்களில் ஏலாக்குறிச்சி என்று குறிப்பிடும் உண்மையும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்க தாகும். இலக்கிய வழக்கில் முனிவர் இவ்வூரைத்

திருக்காவலூர் என்று அழைத்தார் எனினும், பொது வழக்கில் ஏலாக்குறிச்சி என்றே அழைத்தார் எனக் கொள்வது பொருந்தும்.

முனிவர் காலத்தில் ஏலாக்குறிச்சியில் இருந்த கோயிலை உள்ளடக்கியதாக இன்று புதிய, பெரிய கோயில் எழுப்பட்டுள்ளது. முனிவர் காலத்தில் கோயிலில் இருந்த மரியன்னை திருச்சிலையும், முனிவர் அங்கு நிறுவிய கித்தேரியம்மாள் திருச்சிலையும் இன்றும் அக்கோவிலில் விளங்குவதை நாம் காணலாம். அரியலூர் மழவராயர் வழங்கிய சிலாசாசனமும் கோயிலில் பதிக்கப்பட்டுள்ளது. முனிவர் காலத்தில் கோயிலுக்குச் 'சந்திராதித்தரும் கல்லும் காவிரியும் உள்ளளவும்' அரியலூர் மழவராயர் நன்கொடையாக வழங்கிய நிலத்தில் ஒரு பகுதி மட்டுமே இன்று கோயிலுக்கு உரிமையாக உள்ளது.

ஏலாக்குறிச்சியில் முனிவரும் பிற கிறித்துவக் குருக்களும் ஏன் வாழ நேரிட்டது என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். ஏலாக்குறிச்சியைப் போலவே தஞ்சை அரசு எல்லைக்குப் புறத்தே அமைந்த கூனம்பட்டியும் முனிவரின் தலைமையிடங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. தஞ்சை—திருச்சிராப்பள்ளிச் சாலையில் அமைந்துள்ள செங்கிப்பட்டி என்றும் ஊருக்குத் தென்மேற்கில் மூன்று கி.மீ தொலைவில் கூனம்பட்டி அமைந்துள்ளது. முனிவர் காலத்துக் கோயில் இன்று பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. ஊருக்கு வெளியில் சந்நியாசி திடல் என அழைக்கப்படும் இடத்தில் அமைந்துள்ள கல்லறை 1659-ஆம் ஆண்டு இறந்த முடியப்பர் அடிகளாரின் கல்லறையே என பெஸ் அடிகளார் கருதுகின்றார்.

## 4. வடுகர் பேட்டை

வடுகர்பட்டி என முனிவர் காலத்தில் அழைக்கப்பட்ட ஊர் இன்று வடுகர் பேட்டை என அழைக்கப்படுகிறது.

மதுரை மறைப்பணிக்களத்தில் இவ்வூர் மிக முக்கியமான தாக அன்று திகழ்ந்தது. ஏனெனில் மதுரை மறைப்பணிக் கள முதல்வர்களுள் பலர் அன்று வடுகர்பட்டிக்குப் பொறுப் பேற்றுப் பணிபுரிந்து வந்தனர் என வரலாறு கூறுகின்றது.

இன்று வடுகர்பேட்டையில் விளங்கும் கோயில் முனிவர் காலத்துக் கோயிலே என அவ்வூரார் நம்பு கின்றனர். ஆனால் கூனம்பட்டி, ஏலாக்குறிச்சிக் கோயில் களைவிட அளவில் பெரியதாக விளங்கும் இக்கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாக இருக்குமோ என்னும் ஐயமும் எழாமலில்லை.

வடுகர்பேட்டையில் முனிவர் வேதியர்களுக்கு வழங்கிய ஞான ஒடுக்கம்பற்றிப் பெர்த்தோல்தி அடிகளார் விரிவாக எழுதி, முனிவரின் பக்தியையும் ஞான வாழ்வை யும் நாவன்மையையும் பெரிதும் புகழ்கின்றார். இத்தகைய ஞான ஒடுக்கம் வழங்குவதில் அன்று பெரும்புகழ் பெற்றி ருந்தவரும், தூத்துக்குடி, புன்னைக்காயல் போன்று தொலைவிலுள்ள ஊர்களில் கூட ஞான ஒடுக்கம் வழங்கு வதற்கு அழைக்கப்பட்டவருமாகிய பெர்தோல்தி அடிகளார் முனிவரின் திறமையைப் புகழ்ந்துள்ளமையே முனிவரின் தகுதிக்குச் சிறந்த சான்றாகும்.

முனிவரோடு தொடர்புடைய ஊர்கள் இன்னும் பல இருப்பினும் மேற்கண்ட ஊர்களே அவரது வாழ்வில் முக்கிய இடம்பெற்ற ஊர்களாகும்.

# 31. முதுமையிலும் உழைப்பு

1740-ஆம் ஆண்டில் முனிவர் திருச்சிராப்பள்ளியில் பொறுப்பேற்ற சிறிது காலத்துக்குள் மராட்டியப்படை அந்நகரை முற்றுகையிட்டது. மூன்றாண்டுக் காலமாக நடைபெற்ற இப்போர் 1742-ஆம் ஆண்டில் முடிவுற்ற நிலையில் சந்தா சாகிபு மராட்டியரிடம் சரணடைந்தார். சாகிபின் உற்ற நண்பராகிய முனிவர் தூத்துக்குடிப் பகுதிக்கு மாற்றப்பட்டார். சந்தா சாகிபு தோல்வியுற்ற பின் முனிவர் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் பணிபுரிதல் எளிதல்ல என்பதே இம்மாற்றத்துக்குக் காரணம் என நாம் எளிதாக ஊகிக்கலாம்.

மதுரை மறைமாநிலத்தின் ஆலோசகராகிய முனிவர் தூத்துக்குடியில் பணியாற்றிவந்தார் என 1742-ஆம் ஆண்டுப் பட்டியல் உறுதி செய்கிறது. 1743-ம் ஆண்டுப் பட்டியல் முனிவரின் இருப்பிடத்தைக் குறிப்பிடாவிடினும், தூத்துக்குடியில் இரு குருக்கள் பணிபுரிந்து வந்தனர் என்று குறிப்பதால் முனிவர் அவ்வாண்டில் தூத்துக்குடியிலே பணியாற்றினார் என நாம் ஊகிக்கலாம். 1743ஆம் ஆண்டு செப்டம்பரில் தூத்துக்குடிக்கு வடக்கேயுள்ள வேம்பாறு என்னும் ஊரில் கோயில்கணக்குப் பதிவேட்டில் முனிவர் கையொப்பமிட்டிருப்பதால் முனிவர் அவ்வாண்டில் தூத்துக்குடிப் பகுதியில் பணியாற்றி வந்தார் என்பது உறுதியாகிறது. மதுரை மறைமாநிலத் தலைவர்

கயத்தான் பர்ரெத்தோ அடிகளாரே அவரை வேம்பாற்றுக்கு அனுப்பினார் என வரலாறு கூறுகின்றது.

தென்பாண்டிக் கடற்கரைப் பகுதியிலுள்ள பெரிய ஊராகத் தூத்துக்குடி திகழ்ந்தது உண்மையே எனினும் அப்பகுதியிலுள்ள கிறித்துவ ஊர்களுள் மணப்பாடு, புன்னைக்காயல் ஆகிய ஊர்களே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

மணப்பாட்டில் முனிவர் தங்கிப் பணிபுரிந்ததாகச் சிலர் கூறுவதுண்டு. ஆயினும் இதற்கு ஆதாரங்கள் ஏதுமில்லை. தூத்துக்குடியில் பணிபுரிந்த காலத்தில் முனிவர் மணப்பாடு, புன்னைக்காயல் ஆகிய ஊர்களுக்குச் சென்றிருக்க வாய்ப்பு உண்டு என்று மட்டுமே கூறமுடியும்.

தூத்துக்குடிப் பகுதியில் பணியாற்றிய போதுதான் முனிவர் தமது தமிழ்—இலத்தீன், போர்த்துக்கேயம்—இலத்தீன்—தமிழ் அகராதிகளைத் தொகுக்கும் பணியை நிறைவு செய்தார். தாம் இத்தகைய அகராதி நூல்களைத் தொகுக்க வேண்டுமென்று பலர் விரும்பியதாகவும், அவ்வாறு தொகுத்துத் தருவதாகத் தாம் ஏற்கனவே உறுதிகூறியதாகவும் முனிவர் தமிழ்—இலத்தீன் அகராதியின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். ஆகவே இப்பணியில் முனிவர் பல்லாண்டுக் காலமாக ஈடுபட்டிருந்தார் என நாம் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

அகராதியின் முன்னுரையில் தாம் மதுரை மறைப் பணிக்களத்தில் முப்பது முழு ஆண்டுகள் பணிபுரிந்திருப்பதாக முனிவர் குறிக்கின்றார். அகராதியில் துந்துபி என்னும் சொல்லுக்கு 'தமிழ் ஆண்டுகள் அறுபதில் 56-ஆம் ஆண்டு, 1742-இல் வந்தது, 1802-இல் வரும்' என்றும், ருத்திரோற்காரி என்னும் சொல்லுக்கு '57-ஆம் ஆண்டு, அது இவ்வாண்டு' என்றும், ரத்தாட்சி என்னும் சொல்லுக்கு '58-ஆம் ஆண்டு 1744-இல் வரும்' என்றும் முனிவர் குறிக்

கின்றார். ஆகவே 1743-ஆம் ஆண்டு தூத்துக்குடியில் பணியாற்றி வந்த காலத்திலேயே முனிவர் தமிழ்—இலத்தீன் அகராதியை இயற்றி நிறைவு செய்தார் என நாம் அறியலாம்.

மருத்துவமும் இசையும்பற்றியகுறிப்புகள் இவ்வகராதிகளில் மிகுந்து காணப்படுவதால், முனிவர் தூத்துக்குடிப் பகுதியில் வாழ்ந்தபோது மருத்துவத் துறையிலும் இசைத் துறையிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு அக்கலைகளைப் பயின்றார் என நாம் ஊகிக்கலாம்.

தமிழ்—இலத்தீன் அகராதியின் முன்னுரையில் தாம் 'முதுமையுற்றிருப்பதாகவும், பணிகளால் தளர்ந்திருப்பதாகவும்' முனிவர் குறிப்பிடுகின்றார். 1743-ஆம் ஆண்டில் முனிவருக்கு வயது 63 தான் என்றாலும் முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அலைந்து திரிந்து உழைத்ததாலும், போதிய உணவும் ஓய்வின்மையும் காரணமாக அவ்வப்போது நோயுற்று வருந்தியதாலும் அவர் பணிகளால் தளர்ந்திருந்தார் என்பது உண்மையே. எனினும் அத்தகைய முதுமையிலும் தளர்ச்சியிலும் அவர் இரு அகராதிகளைத் தொகுத்துத் தந்தமை வியந்து பாராட்டுதற்கு உரியதாகும்.

# 32. முனிவரின் இறுதிக் காலம்

பதினேழாம் நூற்றாண்டில் கேரள நாட்டுக் கொடுங்களூர் யேசு சபையாரின் முக்கிய ஊராகத் திகழ்ந்தது. கொடுங்களூர்ப் பேராயராகிய பிரான்சிஸ்கோ ரோஸ் தத்துவபோதகரின் மிகப் பெரும் ஆதரவாளராக விளங்கினார். ஆனால் 1662-ஆம் ஆண்டில் டச்சுக்காரர் கொடுங்களூரை முற்றுகையிட்ட போது, கொடுங்களூர் டச்சுக்காரர் வசப்பட்டால் தாங்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவது உறுதி என யேசு சபைக்குருக்கள் உணர்ந்தனர். ஆதலால் அன்றைய மறை மாநிலத்தலைவர் பிரான்சிஸ் பர்ரெத்தோ அடிகளார் வேறு ஓரிடத்தில் தங்களுக்கு இல்லம் அமைக்க ஏற்பாடு செய்யுமாறு சுவாம் தெ மாயா அடிகளாரைப் பணித்தார். அவரும் குருங்குராவிலிருந்த நாயர்குலச் சிற்றரசராகிய கைமால் என்பவரை அணுகி அம்பலக்காடு அருகில் இல்லம் அமைக்க இசைவு பெற்றார்.

1585-ஆம் ஆண்டு முதல் வைப்பிக் கோட்டையில் தாங்கள் நடத்திவந்த சிரியன் குருமடத்தை 1663-ஆம் ஆண்டுமுதல் யேசுசபையார் அம்பலக்காட்டில் நடத்தத் தொடங்கினர். இக்குருமடத்தின் முதல் தலைவராக அந்தோனி மச்சாதோ அடிகளார் பொறுப்பேற்றார்.

அம்பலக்காட்டுக்கு அருகில் அமைந்த இக்குடியிருப்பு சம்பாளூர் எனப் பெயர் பெற்றது. புனித சின்னப்பர்

போர்த்துக்கேய மொழியில் சாம் பவுலோ எனக் குறிப்பிடப்படுவதால் புனித சின்னப்பர் ஊர் என்னும் பொருள்பட அக்குடியிருப்பு சம்பாலூர் எனப் பெயர் பெற்றது. கோவாவில் யேசு சபையார் புனித சின்னப்பர் கல்லூரியை நடத்திவந்ததால், கல்லூரியின் பெயரைக் கொண்டு அவர்கள் 'புனித சின்னப்பர் (கல்லூரித்) தந்தையர்' என அழைக்கப் பெற்றனர். இது காரண மாகவே அம்பலக்காட்டின் அருகில் அமைந்த குடியிருப்பும் புனித சின்னப்பரின் பெயரால் சம்பாலூர் எனப் பெயர் பெறலாயிற்று.

சம்பாலூர்க் குருமடத்தில் மெய்யியல், இறையியல்; திருவழிபாடு ஆகிய பாடங்களுடன் சிரியக் மொழியும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

அங்கிருந்த அச்சகத்தில் தமிழ், மலையாளம், சிரியக், இலத்தீன், போர்த்துக்கேய மொழிகளிலும் அச்சிடுவதற்கு வசதி இருந்தது. கார்மெல் சபைக் குருவாகிய மத்தேயு அடிகளார் 1680-ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்றிருந்தபோது அம்பலக்காட்டில் அச்சிடப்பெற்ற பதினேழு தமிழ் நூல்களை அங்குக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு முன்பே 1661-ஆம் ஆண்டில் உரோமை யிலிருந்து தமிழ் அச்சுக்கள் இயசிந்த் தெ மாஜிஸ்த்ரிஸ் அடிகளால் கொண்டு வரப்பட்டதாக அறிகின்றோம். தத்துவபோதகர் எழுதிய உரைநடை நூல்களுள் சிலவும் அந்த்தாம் தெ ப்ரோயென்சா அடிகளாரின் போர்த்துக் கேய—தமிழ் அகராதியும் இங்குத்தான் அச்சிடப்பெற்றன. எனினும் முனிவர் காலத்தில் இவ்வச்சகம் செயல்படா மலிருந்தமைக்குக் காரணம் தெரியவில்லை.

சம்பாலூரில் தொடக்கத்தில் ஓலைக் குடிசைகளே குருக்கள் இல்லமாவும் குருமடமாகவும் பயன்பட்டன. பின்னர் லூயிசு தெ வாஸ்கொன்செல்லோஸ் அடிகள் குருமடத் தலைவராக இருந்தபோது கற்கட்டடங்கள்

எழுப்பப்பட்டன. 1732-ஆம் ஆண்டில் இக்குருமடம் 'ஐரோப்பாவிலுள்ள கல்லூரிகளைப் போலத் தோற்ற மளித்தது' என பெர்நார்து பிஸ்கோப்பிங் அடிகளார் தெரிவிக்கின்றார்.

சம்பாலூர்க் குருமடத்தின் மேலாளராக நியமிக்கப் பட்ட நிலையில் வீரமாமுனிவர் 1746—ஆம் ஆண்டில் அம்பலக்காட்டுக்கு வந்தார். முனிவரையும் சேர்த்து அங்கு அவ்வமயம் எட்டுக்குருக்கள் இருந்தனர்.

சம்பாலூர்க் குருமடம் வறுமை நிலையில் உழன்றதாக அறிகின்றோம். எனினும் சரியான உணவும் உறைவிடமும் இல்லாமல் மதுரை மறைப்பணிக்களத்தில் துன்பங்களோடு போராடியவராக ஓய்வின்றிச் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றிவந்த முனிவருக்குச் சம்பாலூர் ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

முனிவரின் இறுதிக் காலத்தைப்பற்றிய செய்திகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. எத்தகைய நோயால் பீடிக்கப்பட்டு அவர் இறந்தார் என்பதும் நமக்குத் தெரியவில்லை

எனினும் 4-2-1747 அன்று தம் 67-ஆம் வயதில் வீரமா முனிவர் இறந்தார் என்று கார்லோஸ் ஸோம்மர்ஃபோகல் அடிகளார் தெரிவிக்கும் குறிப்பின் மூலம் நாம் அறிகின்றோம், யேசுசபையில் 49 ஆண்டுகளும் மலபார் மறைமாநிலத்தில் 33 ஆண்டுகளும் பணியாற்றிய முனிவர் தாம் விரும்பிப் பணியாற்றிய மதுரை மறைப்பணிக் களத்துக்கு வெளியில், தம் அருமைத் தமிழ் மக்களை விட்டுத் தொலைவில், கேரள நாட்டு அம்பலக்காட்டை அடுத்துள்ள சம்பாலூரில் உயிர் துறந்தார்.

சம்பாலூர்ப் பகுதியும் அங்கிருந்த கோயிலும் குருமடமும் திப்பு சுல்தானின் படையெடுப்பின்போது

பாழ்படுத்தப்பட்டன. ஆகவே முனிவரின் கல்லறையை இன்று காண இயலாது. அன்றைய வழக்கப்படி சம்பாலூர்க் கோயிலில்தான் முனிவர் அடக்கம் செய்யப் பட்டிருக்க வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். ஆனால் பழைய கட்டங்களின் அழிவுச் சின்னங்களைக் கூட நாம் இன்று காண முடியவில்லை.

சம்பாலூரில் இன்று ஒரு புதிய கோயில் கட்டப் பட்டுள்ளது. கோயிலின் அருகிலுள்ள கல்லறையின் முன் உள்ள உயரமான நினைவுச் சுவரின் முன்புறத்தில் 'வீரமாமுனிவர் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டார்' என்னும் குறிப்பும், பின்புறத்தில் 'அருளானந்தர் இங்கு திருப்பலி நிறைவேற்றினார்' என்னும் குறிப்பும் இன்று காணப்படுகின்றன.

இத்தாலியத் தமிழர் என்றும், இத்தாலியக் கம்பர் என்றும், முதல் தமிழகராதி தந்த மூதறிஞர் என்றும், மொழியியலுக்கு வித்திட்ட முனைவர் என்றும், தமிழ் உரைநடையைச் செழுமைபடுத்திய செம்மல் என்றும், எழுத்துச் சீர்திருத்தத்துக்கு வித்திட்ட ஏந்தல் என்றும், மொழி பெயர்ப்பு முன்னோடி என்றும், ஆய்வுநெறி அறிஞர் என்றும், இலக்கணச் செம்மல் என்றும் போற்றப் படும் வீரமாமுனிவரின் பூதவுடல் புதைபட்டுள்ள இடம் இதுதான் என்று குறித்துக்காட்ட இயலாது என்பது உண்மையே. ஆனால் தமிழ் இலக்கிய, இலக்கண வரலாற்றில் முனிவர் பதித்துவிட்ட தனி முத்திரைகள் காலத்தால் அழியாத கலைச்சின்னங்கள் என்பதை எவரும் மறுக்கவியலாது, மறைக்கவும் முடியாது.

# 33. முனிவர் இயற்றிய நூல்கள் எத்தனை?

முனிவர் எத்தனை நூல்களை இயற்றினார் என்பது விடைகாண இயலாத வினாவாகத் தோன்றுகிறது. முனிவரைப் பற்றி எழுதிய பலரும் பலவித எண்ணிக்கைகளைத் தருவதால் குழப்பமே மேலிடுகின்றது.

'கலையும் கலைக்கோட்பாடுகளும்' என்னும் நூலில் (1884) 'தேம்பாவணியும் காப்பியக் கோட்பாடும்' என்னும் கட்டுரையின் இறுதியில் முனைவர் ஜி. ஜான் சாமுவேல், 8 செய்யுள் நூல்களையும் 12 உரைநடை நூல்களையும் 4 இலக்கண நூல்களையும் 3 அகராதிகளையும் ஒரு மொழி பெயர்ப்பு நூலையும் 9 மருத்துவ நூல்களையும்-மொத்தம் 37 நூல்கள்—குறிப்பிட்டு விட்டு 'இவை அனைத்தும் முனிவரால் எழுதப்பட்டன என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. இவை தவிர வேறுபல நூல்களும் முனிவர் இயற்றியதாகக் கூறப்படுகின்றது' என்பார்.

முனிவர் இயற்றிய பெருங்காப்பியமாகிய தேம்பாவணியைப் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர் பா. வளன் அரசு தமது ஆய்வேடாகிய 'தேம்பாவணித் திறன்' நூலில் (1988) முனிவர் இயற்றிய கடித இலக்கியங்கள் 2, உரைநடை நூல்கள் 9, சிற்றிலக்கியங்கள் 7, காப்பியம் 1, இலக்கண நூல்கள் 4, அகராதி

நூல்கள் 5, சிறுகதை நூல் 1, மருத்துவ நூல்கள் 3, மொழி பெயர்ப்பு நூல்கள் 3, தொகை நூல்கள் 2, வடமொழி நூல் 1 என மொத்தம் 38 நூல்களைச் சுட்டுகின்றார்.

பெருங்காப்பியம் 1, சிற்றிலக்கியங்கள் 7, உரைநடை நூல்கள் 11, கடித இலக்கியம் 1, இலக்கண நூல்கள் 4, அகராதிகள் 3, மொழிபெயர்ப்பு நூல் 1, மருத்துவ நூல்கள் 6, வேறு நூல்கள் 4 என மொத்தம் 38 நூல்களை முனைவர் ச.வே. சுப்பிரமணியன் தமது 'தொன்னூல் விளக்கம்—திறனாய்வு, மூலம், விளக்கம்' என்னும் நூலில் (1978) சுட்டுகின்றார்.

முனிவர் இயற்றியனவாக உரைநடை நூல்கள் 5, அகராதிகள் 3, இலக்கண நூல்கள் 3, மொழி பெயர்ப்பு நூல் 1, செய்யுள் நூல்கள் 7, தொகை நூல் 1, என 20 நூல்களைத் தம் 'தமிழ்த் தொண்டர்' என்னும் நூலில் (1950) ஜே. ஜி. சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

முனிவரின் வரலாற்றினைத் தக்க ஆதாரங்களுடன் ஆராய்ந்து எழுதிய பெஸ் அடிகளார் தம் நூலில் (1918) இலக்கிய நூல்கள் 8, உரைநடை நூல்கள் 6, கணித நூல் 1, இலக்கண நூல்கள் 4, அகராதிகள் 3 என 22 நூல்களை முனிவர் இயற்றியதாகக் குறிப்பிடுகின்றார்.

தமது 'சதுரகராதி ஆராய்ச்சி' என்னும் முனைவர் பட்ட ஆய்வு நூலில் (1981) செய்யுள் நூல்கள் 8, உரை நடை நூல்கள் 6, இலக்கண நூல்கள் 4, அகராதிகள் 3, நிருபம் 1, மொழிபெயர்ப்பு 1. நாட்கணக்கீடு 1 என 24 நூல்களை முனிவர் இயற்றியதாக முனைவர் கு. இன்னாசி குறிப்பிடுகின்றார். பின்னர் நிருபங்கள் 2 எனத் தம் 'வீரமாமுனிவ மாலைகள்' நூலிலும் (1985), அதன்பின் திருக்குறள் உரை, ஞான சூத்திரம் ஆகியவற்றையும் முனிவரின் நூல்களாகத் தம் 'வீரமாமுனிவம்—சில ஆய்வுகள்' நூலிலும் (1989) குறிப்பிடுவதால் முனைவர்

இன்னாசியின் கருத்துப்படி முனிவர் இயற்றிய நூல்கள் 27 என்பது தெளிவு.

இக்கருத்துக்களை ஆராய்ந்து தக்க முடிவினைக் காண முயல்வோம். தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, அடைக்கல நாயகி வெண் கலிப்பா, கருணாம்பரப்பதிகம், வண்ணம் என்னும் 8 செய்யுள் நூல்களை முனிவர் இயற்றினார் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்வதே. தேம்பாமாலை என்பது பல செய்யுள் நூல்களின் தொகுப்பு என்பதும் கருணாம்பரப் பதிகமும் தேவாரப் பதிகமும் ஒன்றே என்பதும் அந்நூல் களைப் புரட்டிப் பார்த்தாலே தெளிவாகும் உண்மைகள். தேவமாதா அந்தாதியும் அன்னை அழுங்கல் அந்தாதியும் ஒன்றே எனக் கொள்வதில் தவறில்லை. தேவமாதா அந்தாதி என்றொரு தனிநூல் இதுவரை கிடைக்கவு மில்லை.

பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் மறுத்தல், லுத்தேர் இனத்தியல்பு, வாமன் சரித்திரம், திருச்சபைக் கணிதம், திருக்கடையூர்த் திருச்சபைக்கு எழுதிய நிருபம், பொது நிருபம் ஆகியவை முனிவர் எழுதிய 9 உரைநடை நூல்களாகும். ஞானம் உணர்தல், ஞானக் கண்ணாடி போன்றவை முனிவரால் இயற்றப்பட்டவை அல்ல என்பது ஏற்கனவே நிறுவப் பட்டுள்ளது. மருத்துவ நூல் எதையும் முனிவர் இயற்றி னார் என்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

சதுரகராதி, தமிழ்—இலத்தீன் அகராதி, போர்த்துக் கேயம் இலத்தீன்—தமிழ் அகராதி என்னும் மூன்று அகராதி நூல்களையே முனிவர் இயற்றியதாக முனைவர் இன்னாசி தமது நூலில் நிறுவியுள்ளார்.

எனினும் 'இலத்தீன், பிரெஞ்சு, போர்த்துக்கேயம் ஆகிய மொழிகளில் பல சொற்களை விளக்கும் பொதுத் தமிழ் அகராதியைத் தவிர இப்போது இவ்வகராதியைத் தருகிறேன்' என முனிவர் 'சதுரகராதி' முன்னுரையில் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு தம் கருத்தை மாற்றியவராக, முனிவர் 'தமிழ்—பிரெஞ்சு அகராதி ஒன்று இயற்றியிருத்தல் வேண்டும் என எண்ண இடமுள்ளது' என்று முனைவர் இன்னாசி தமது 'வீரமா முனிவம்—சில ஆய்வுகள்' என்னும் நூலில்(1989) கூறுவதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

வீரமாமுனிவர் 1744-ஆம் ஆண்டில் இயற்றியதாகக் குறிக்கப்பட்டுள்ள தமிழ்—பிரெஞ்சு அகராதியின் கையெழுத்துச் சுவடி பாரீசு நகரில் தேசிய நூலகத்தில் (எண் 215) கிடைப்பதாகப் பெஸ் அடிகளார் குறிப்பிடுகின்றார். எனினும் இது முனிவர் இயற்றிய தமிழ்—இலத்தீன் அகராதியின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பே என்பது பெஸ் அடிகளாரின் துணிவு.

ஆனால், 'வீரமாமுனிவர் இயற்றிய பிரெஞ்சு—தமிழ் அகராதியைப் படியெடுத்துத் தருமாறு மாஹே நகரிலுள்ள மறைப்பணிக்கள முதல்வராகிய எம்மானுவேல் அடிகளாரிடம் இருபது ரூபாய் கொடுத்து வந்தேன்' என்று 1758-ஆம் ஆண்டில் ஆங்க்கெத்தில் துப்பெரோன் எழுதுகின்றார். முனிவர் இறந்த ஆண்டு 1747 என்பதை நினைவில் கொண்டால், முனிவர் இறந்த ஒன்பது ஆண்டுகளுக்குள், அவர் இயற்றாத பிரெஞ்சு—தமிழ் அகராதி அவர் பெயரிலேயே வழக்கில் வந்திருத்தல் இயலாது என்பதை நாம் உணரலாம். முனிவர் பிரெஞ்சு மொழியை நன்றாக அறிந்தவர் என்னும் உண்மையையும் ஒருசேர வைத்தெண்ணும்போது முனிவர் பிரெஞ்சு தமிழ் அகராதியை இயற்றியிருப்பார் என முடிவு செய்வதில் தவறில்லை. முனிவர் இயற்றியதாகப் பிரெஞ்சு—தமிழ்

அகராதியின் பல கையெழுத்துப் படிகள் ஐரோப்பிய நூலகங்களில் கிடைப்பது நம் கருத்தை உறுதிசெய்கிறது.

'செந்தமிழ் அகராதி' ஒன்றினைத் தாம் இயற்றியுள்ளதாகத் தமது 'திறவுகோல்' என்னும் இலக்கண நூலில் (பக். 48) முனிவர் குறிப்பிடுகின்றார். முனிவர் அத்தகைய பெயரில் அகராதி இயற்றியதாகத் தெரியவில்லை. சதுரகராதிக்கு முனிவர் வரைந்த முன்னுரையினை ஆராய்ந்து பார்த்தால் 'சதுரகராதி'யையே முனிவர் 'செந்தமிழ் அகராதி' என்று குறிக்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஆகவே முனிவர் இயற்றிய அகராதிகள் நான்கு என்பது எமது துணிபு.

திருக்குறள் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் முனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்தார் என்பதை ஜூலியன் வென்சோன் ஏற்றுக்கொள்ளவில்லையெனினும், பெஸ் அடிகளாரும் முனைவர் இன்னாசி போன்ற ஆராய்ச்சி அறிஞர்களும் அம்மொழிபெயர்ப்பு முனிவரால் இயற்றப்பட்டதே என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். முனிவர் தம் இலக்கண நூல்களில் ஆங்காங்கு குறட்பாக்களை மொழிபெயர்த்துள்ள உண்மையும் இதனை அரண் செய்வதாகும்.

வீரமாமுனிவர் தொகுத்த திருக்குறள் உரை நூல்கள் இரண்டு என்பதும் முனிவர் இன்னாசி அவர்களால் நிறுவப்பட்டுள்ளது. இருநூறு திருக்குறட்பாக்களைப் பரிமேலழகரின் உரையோடு முனிவர் தொகுத்துள்ளார். மற்றொரு தொகுப்பில் இருநூற்றெட்டுத் திருக்குறட்பாக்களைத் தொகுத்து அவற்றுக்குத் தாமே உரையெழுதியுள்ளார். இவ்விரண்டும் சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசைப் பழஞ்சுவடியகத்தில் ஓலைச் சுவடி வடிவில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் வீரமா

முனிவரே உரை வகுத்த திருக்குறள் தொகுப்பினை அவரது நூலாக நாம் கொள்ளவேண்டும்.

வீரமாமுனிவர் இயற்றிய இலக்கண நூல்கள் நான்கு என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும், வேறு இலக்கண நூல்களை முனிவர் இயற்றியதாகத் தெரியவில்லை.

முனிவர் இயற்றிய 'ஞான சூத்திரம்' என்னும் நூல் எஸ். சௌந்தரபாண்டியனால் கண்டுதரப்பட்டுள்ளதாக முனைவர் இன்னாசி 'வீரமாமுனிவம்—சில ஆய்வுகள்' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். இதுபற்றிய விவரம் தெரியவில்லை. முனிவரின் வாழ்வும் பணியும் நூல்களும் பற்றி ஆராய்ந்துள்ள பெஸ், வென்ஸோன் போன்றோர் இந்நூல் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

ஆகவே, முனிவர் இயற்றிய நூல்களாகக் கீழ் வருவன வற்றைக் கொள்வதே பொருத்தமாகும்.

| | | |
|---|---|---|
| பெருங்காப்பியம் (1) | : | தேம்பாவணி |
| சிற்றிலக்கியங்கள் (7) | : | திருக்காவலூர்க் கலம்பகம்<br>கித்தேரியம்மாள் அம்மானை<br>அன்னை அழுங்கல் அந்தாதி<br>அடைக்கல மாலை<br>அடைக்கல நாயகி வெண்கலிப்பா<br>கருணாம்பர (தேவார)ப் பதிகம்<br>வண்ணம் |
| உரைநடை நூல்கள் (9) | : | பரமார்த்த குரு கதை<br>வேதியர் ஒழுக்கம்<br>வேத விளக்கம்<br>பேதகம் மறுத்தல் |

லுத்தேர் இனத்தியல்பு
வாமன் சரித்திரம்
திருச்சபைக் கணிதம்
திருக்கடையூர்த் திருச்சபைக் கெழுதிய நிருபம் பொது நிருபம்.

அகராதிகள் (4) : சதுரகராதி
தமிழ்—இலத்தீன் அகராதி
போர்த்துக்கேயம்—இலத்தீன் - தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதி.

மொழிபெயர்ப்பு (1) : திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு

உரை நூல் (1) : திருக்குறள் உரை

இலக்கண நூல்கள் (4) : கொடுந்தமிழ் இலக்கணம்
செந்தமிழ் இலக்கணம்
தொன்னூல் விளக்கம்
திறவு கோல் (CLAVIS)

## 2. தேன் சொட்டும் தேம்பாவணி

முனிவர் இயற்றிய நூல்களுள் தலைசிறந்ததாகக் கருதப்படுவது தேம்பாவணியே ஆகும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத ஒருவர், தம் 30ஆம் வயதுக்குப் பின் தமிழைப் பயின்று அதில் பெருங்காப்பியம் இயற்று மளவுக்குப் புலமைப் பெற்றார் என்பது உண்மையிலேயே வியப்புக்குரிய செய்தியாகும்.

அதனாலேயே சுப்பிரதீபக் கவிராயர் இயற்றிய தேம்பாவணியை முனிவர் தமது நூலாக மாற்றிக் கொண்டார் எனச் சிலர் கூற முற்பட்டனர். கவிராயர் இயற்றிய நூல்களையும் தேம்பாவணியையும் ஆராய்ந்து

பார்த்தால் நடைவேறுபாட்டினைக் கொண்டே கவிராயர் தேம்பாவணியை இயற்றியிருக்க முடியாது என்பதை நாம் உணரலாம். முனிவர் குற்றியலிகரத்தைப் பயன்படுத்தும் பாங்கு, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை களையும் உளப்பாடில்லாத் தன்மைப் பன்மைகளையும் வேறுபாடு இல்லாமல் பயன்படுத்தும் முறை, இடைச் சொல் இடமாற்றங்கள், புணர்ச்சி மாற்றங்கள், சொற்றொடர் மாற்றங்கள் ஆகியவற்றால் முனிவரின் தனித்தன்மை புலப்படும். அத்துடன் விவிலியச் செய்தி களை முனிவர் பயன்படுத்தும் பான்மையும், தாம் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர் எனக் குறிப்பால் உணர்த்தும் தன்மையும் சுப்பிரதீபக் கவிராயருக்கும் தேம்பாவணிக்கும் எத்தகைய தொடர்புமில்லை என்பதை உறுதியாகச் சுட்டுகின்றன.

தேம்பாவணி இயற்றப்பட்ட ஆண்டு 1726 எனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். ஆனால் அவ்வாண்டில் மறவ நாட்டில் அருளானந்தரின் புனிதர் பட்டத்துக்குரிய ஆய்வில் முனிவர் ஈடுபட்டிருந்தார் என் பதை நினைத்துப் பார்க்கும்போது 1725ஆம் ஆண்டில் தேம்பாவணி இயற்றுவதற்குத் தேவையான ஓய்வு முனிவருக்குக் கிடைத்திருக்காது என்பது தெளிவாகும். இலக்கண, அகராதி நூல்களுக்கு எழுதும் முன்னுரைகளின் முடிவில் தாம் நூல் எழுதிய ஆண்டைக் குறித்துக் கையொப்பமிடும் முனிவர் இலக்கிய நூல்களுக்கு அம் முறையைக் கடைப்பிடிக்கவில்லை. எனவே தேம்பாவணி இயற்றப்பட்ட ஆண்டு இதுவே என உறுதியாகக் கூற வியலாது.

தேம்பாவணி இயற்றப்பட்ட ஊர் கோனான்குப்பமே எனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது; ஆனால் அது ஏற்றுக் கொள்ள இயலாதது என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். ஏலாக்குறிச்சியிலேயே முனிவர்

தேம்பாவணியை இயற்றினார் என்பதே பொருந்தும். ஏனெனில் 1721-ஆம் ஆண்டு முதல் முனிவர் ஏலாக்குறிச்சியில் பணிபுரிந்திருக்க வாய்ப்பு உண்டு என பெஸ் அடிகளார் கூறியிருப்பதை நாம் ஒதுக்கிவிட முடியாது.

3615 பாடல்களையும் 36 படலங்களையும் கொண்ட தேம்பாவணி 90 சந்தங்களைக் கொண்ட சிறப்புப் பெற்றது. 12,000 பாடல்களைக் கொண்ட கம்பராமாயணத்தில் 87 சந்தங்களையே கம்பர் பயன்படுத்தியிருக்க, 3615 பாடல்களைக் கொண்ட தேம்பாவணியில் தாம் 90 சந்தங்களைப் பயன்படுத்தியுள்ள பாங்கினை முனிவர் தமது செந்தமிழ் இலக்கணத்திலும் திறவுகோலிலும் பெருமையோடு குறிப்பிடுகின்றார். தாம் விரும்பியிருந்தால் ஒவ்வொரு பாடலுக்கும் வெவ்வேறு சந்தம் அமைத்துப் பாடியிருக்கத் தம்மால் இயலும் என முனிவரே கூறுகின்றார்.

தேம்பாவணி மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது உண்மையே எனினும், காண்டப் பிரிவுகளுக்குப் பொறுப்பு முனிவரல்லர் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். தேம்பாவணியைப் பதிப்பித்து அச்சிட்ட துப்புயி அடிகளாரே இக் காப்பியத்தை மூன்று காண்டங்களாகப் பிரித்து அச்சிட்டார். தேம்பாவணி இதுவரை ஏழு பதிப்புகளைக் கண்டுள்ளது.

ஆகிர்த நகர் மரியாள் எழுதிய 'கடவுளின் நகரம்' என்னும் நூலே தேம்பாவணிக்கு முதல் நூலாக அமைந்த செய்தியைப் பாவுரைப் பதிகத்தாலும் பாயிரப் பகுதியாலும் நாம் அறியலாம்.

ஆரோக்கிய நாயகரின் தேம்பாவணிக் கீர்த்தனைகள் (1866), ஜெகராவு முதலியாரின் தேம்பாவணி வசன காவியம் (1887); ஆரோக்கியசாமிப் பிள்ளையின் தேம்பா

வணிக் கருப்பொருள் (1912), ஜே. ஜி. சுந்தரத்தின் தேம்பாவணி ஆராய்ச்சி (1945) வி. மரிய அந்தோனியின் தேம்பாவணிச் சுருக்கம் (1960). தமிழ் இலக்கியக் கழகத்தின் தேம்பாவணிச் சொற்பொழிவுகள் (1960), புலவர் மணி ஜோசப்ராயரின் தேம்பாவணி வசனம் (1980) முனைவர் சூ. இன்னாசியின் தேம்பாவணித் திறன் (1983), தேம்பாவணித் தேன் (1994), முனைவர் பா. வளன் அரசின் தேம்பாவணித் திறன் (1988) ஆகிய நூல்கள் தேம்பாவணியின் புகழ் பரப்பிய நூல்களாகும்.

முனிவர் தம் இலக்கண நூல்களில் பல இடங்களில் தேம்பாவணிப் பாடல்களை மேற்கோளாகக் காட்டி மகிழ்கின்றார். அவரது 'திறவுகோல்' நூலில் மட்டும் 13 இடங்களில் தேம்பாவணியைப் பெயர் சுட்டி மேற்கோள் காட்டுகின்றார்.

தேம்பாவணிக்கு உரை இயற்றியவர் யார் என்பது பற்றிப் பல கருத்துகள் வெளியிடப்பெற்றுள்ளன.

தேம்பாவணிக்கு உரைவகுத்தது வீரமாமுனிவரின் மாணவருள் ஒருவரே என்பது பண்டித எம்.பி. மாஸ்கரேனஸ், திரு. ஜே.ஜி. சுந்தரம், அருள்திரு. இரா. ஞானப் பிரகாசம் ஆகியோரின் கருத்தாகும். இக்கருத்தை அரண்செய்யத் தக்க அகச் சான்றுகளைத் தேம்பாவணி உரையில் காணலாம். அவை பின்வருமாறு:

1. கருணையன் காட்சிப் படலத்தில் முதல் செய்யுளின் உரையில் 'கருணையன் ஆர் என்றும், அவன் அக்கொலையில் அகப் படாமையான் மரியும் சூசையும் மிக்க மகிழ்ச்சியை அடைவதற்கு காரணம் காட்டத் துடங்கினார்' எனவும் எழுதப்பட்டுள்ளது.
2. அதே படலத்தின் 1, 2, 15-ஆம் செய்யுளின் உரை 'என்றான் என்க' என முடிகிறது.

பிரிந்த மகவைக் காண் படலத்தின் 93-ஆம் செய்யுளின்உரையும் அவ்வாறே முடிகிறது.

3. புரோகிதப் படலத்து முப்பதாம் செய்யுளின் உரை முடிவில் 'பாடினவன் இத்தாலிய நாட்டில் பிறந்தவனாகையில் எனையீன்ற இத்தாலிய நாடென்றான் என்க' எனக் குறிக்கப்படுகின்றது.

இத்தகைய அகச் சான்றுகளால் கேம்பாவணிக்கு உரை வகுத்தவர் முனிவரல்லர் என நாம் துணியலாம்.

ஆனால் வீரமாமுனிவர் தம் கைப்பட எழுதிய தேம்பாவணி மூலமும் உரையும் கிடைத்துள்ளதாகவும், அறிவியல் முறையில் அக்கையெழுத்தை ஆராய்ந்து அது முனிவரின் கையெழுத்தே என நிறுவப்பட்டுள்ள தாகவும் முனைவர் ச. இராசமாணிக்கம் அடிகளார் கூறு கின்றார்கள். எனவே தேம்பாவணிக்கு முனிவர் தாமே உரையெழுதினார் என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

யேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய புனித வளனாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுதப் பெற்ற தேம்பாவணி விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் அடங்கியுள்ள பல நிகழ்ச்சிகளையும் செய்தி களையும் விரித்துக் கூறுகின்றது. வளனாரே 'தேம்பாவணி' என இக்காப்பியத்தில் சிறப்புப் பெயர் பெறுவதால், பாட்டுடைத் தலைவரின் சிறப்புப் பெயரையே இக்காப்பியம் தாங்கியுள்ளது எனலாம்.

தாந்த்தே, தாஸ்ஸோ, வெர்ஜில் முதலிய மேல் நாட்டுப் புலவர் நூல்களையும் முனிவர் தேம்பாவணியில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். 'மேல்நாட்டுக் கலையாறும் தமிழ்நாட்டுக் கலையாறும் கலக்கும்

ஏரியாம் தேம்பாவணி' என தனிநாயகம் அடிகளார் கூறுவது முற்றிலும் பொருத்தமாகும்.

## 3. சிறப்புமிக்க சிற்றிலக்கியங்கள்

### திருக்காவலூர்க் கலம்பகம்

முதல் கிறித்தவக் கலம்பகமாகிய 'திருக்காவலூர்க் கலம்பகம்' ஏலாக்குறிச்சியில் எழுந்தருளியுள்ள அடைக்கல நாயகியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டுள்ளது. தஞ்சை மன்னர்களின் கொடுங்கோன்மை காரணமாகக் கொள்ளிடத்து வடகரையிலுள்ள ஏலாக்குறிச்சிக்கு அருகில் அமைந்த கோயில் தஞ்சை அரசில் சமயப் பணி புரிந்த பல துறவியருக்கும் இருப்பிடமாயிற்று.

1728-ஆம் ஆண்டில் நிலவிய பஞ்சத்தால் எழுந்த வறுமை காரணமாகக் கத்தோலிக்கர் பலர் பிற சமயங்களைத் தழுவத் தொடங்கிய நிலையைத் தடுத்து நிறுத்தவே அடைக்கல அன்னையின் மீது முனிவர் கலம்பகம் பாடினார்.

காப்புச் செய்யுள் தவிர அந்தாதித் தொடையில் நூறு செய்யுட்களால் முனிவர் இந்நூலை இயற்றினார். புய வகுப்பு, தவம், காலம், இடைச்சி, மறம், கைக்கிளை, வண்டு, குறம், இரங்கல், தழை, அம்மானை, சமூக உல்லாசம், சித்து, சம்பிரதம், தென்றல், ஊசல், பாண், மதங்கி, தூது, வலைச்சி என்னும் இருபது உறுப்புகளைக் கொண்டது இந்நூல். இவற்றுள் சமூக உல்லாசம் முனிவர் புதிதாக உருவாக்கிய உறுப்பாகும்.

திருக்காவலூர்க் கலம்பகம் சொற்சுவையும், பொருட் சுவையும், சந்தச் சுவையும், பக்திச் சுவையும் மிகுந்த சிற்றிலக்கியமாகும். இக்கலம்பகத்திலிருந்து பல பாடல்களை முனிவர் தம் இலக்கண நூல்களில் மேற்கோளாகக்

காட்டுகின்றார். திறவுகோலில் மட்டுமே பதினைந்து பாடல்களை மேற்கோளாகக் காட்டுகின்றார். அவ்விலக்கண நூலின் இறுதியில் தேம்பாவணியுடன் திருக்காவலூர்க் கலம்பகத்தையும் கிறித்துவ இலக்கியங்களுள் ஒன்றாகச் சுட்டிக் காட்டுகின்றார் முனிவர்.

புதுச்சேரியில் அச்சிடப்பெற்ற திருப்பாவணி (1856) என்னும் தொகுப்பில் திருக்காவலூர்க் கலம்பகம் இடம் பெற்றது. 1865-ஆம் ஆண்டில் வெளிவந்த தேம்பாமாலை என்னும் தொகுப்பிலும் இது இடம் பெற்றது. பின் 1872-ஆம் ஆண்டில் தஞ்சை அருளப்ப நாவலரின் உரையுடன் கூடியதாக வெளியிடப் பெற்றது. அதன்பின் 1975, 1976, 1987-ஆம் ஆண்டுகளில் மூலமும் உரையும் வெளியிடப் பெற்றன.

## கித்தேரியம்மாள் அம்மானை

ஏலாக்குறிச்சிக் கோயிலில் புனித கித்தேரியம்மாளின் திருச்சிலையை நிறுவிய முனிவர் அப்புனிதையின்மீது அம்மானையொன்றைப் பாடி மகிழ்ந்தார். அதுதான் கித்தேரியம்மாள் அம்மானை. முனிவர் நிறுவிய திருச்சிலையை நாம் இன்றும் திருக்காவலூரில் காணலாம். தமிழகத்தில் கித்தேரியம்மாளின் புகழ் பரவிடக் காரணம் முனிவரே எனலாம்.

"ஏலாக் குறிச்சிவடக்(கு) ஏந்துநிழல் காட்டருகே
அருட்காவல் நீங்கா அடைக்கலத்தாய் கோயிலிடைத்
திருக்காவலூர் வணங்கும் செல்வமிகும் கித்தேரி'

எனத் திருக்காவலூரில் கித்தேரியம்மாள் வணங்கப்பட்டு வருவதைக் குறிக்கும் முனிவர்.

'ஈங்கிவளே தந்தபிள்ளை என்றவள்பேர் உள்ளவரும்
ஆங்கிவளே காத்தனளென் றர்ச்சனையாய்
வாழ்த்தினரும்

ஓர்புதுசஞ்சீயென ஒப்பஉரைத் தேத்தினரும்
ஆர்புதுக் கைத்தாயிவளென் றடியைப் போற்றினரும்'

என்பது போன்ற வரிகளில் புனித கித்தேசிரியம்மாள் வழியாகப் பலரும் பெற்ற நலன்களை எடுத்துக் கூறுகின்றார்.

'பேதையர்க்கோர் அம்மானை பேதையும்நான் தந்திடுவேன்' என்று முனிவர் பாடினாலும், இது மேதையரும் கற்று மகிழத் தக்கது என்று இந்நூலைப் பயில்வோர் ஏற்றுக் கொள்வர். பத்துக் கதைகளைக் கொண்ட இந்நூல் மூன்று தாழிசைகளையும் முப்பத்துமூன்று விருத்தங்களையும் 1101 அம்மானைக் கண்ணிகளையும் பெற்று அமைந்துள்ளது. ஒவ்வொரு காதையிலும் அம்மானைப் பகுதியில் வரவிருக்கும் செய்திகளின் சுருக்கத்தை முதலில் மூன்று விருத்தங்களில் முனிவர் எடுத்துரைக்கின்றார்.

1849, 1876, 1927, 1947 ஆகிய ஆண்டுகளில் இந்நூலின் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

கித்தேரியம்மாள் அம்மானையும் திருக்காவலூர்க் கலம்பகமும் ஏலாக்குறிச்சியில் இயற்றப்பட்டவை என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை இயற்றப்பட்ட காலம் பற்றிய குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை.

## அடைக்கலமாலை

அறுபது கண்ணிகளைக் கொண்டு பஃறொடை வெண்பாவால் இயற்றப்பெற்றது இந்நூல்.

'வைத்தமுடி அத்தனையும் வைத்தமணி அத்தனையும்
வைத்தமலர் அத்தனையும் வைத்ததொடை அத்தனையும்
வைத்தகவி அத்தனையும் வைத்தபுகழ் அத்தனையும்
வைத்தபதம் அத்தனையும் வைத்தபொருள் அத்தனையும்
வைத்தசிரம் அத்தனையும் வைத்தகரம் அத்தனையும்

வைத்தவிழி அத்தனையும் வைத்தமனம் அத்தனையும்
வைத்தஅறம் அத்தனையும் வைத்தவரம் அத்தனையும்
வைத்தநலம் அத்தனையும் வைத்திருக்க'

எனச் செந்தமிழ்ச் சொற்களைப் பெய்து ஓசைநயம்படப் பாடும் முனிவர்,

'தியோகி விநோதி இறாத இலாபி
தியாகி மெஞ்ஞானி தியானி இயாசி
படாத நிலாவி பகாத தயாபி
விடாத புராண வினாவி கெடாத
நிசாதி தவாதி நிவாணி தொகாத
விசாலி எனாவல் விடாமல் உசாவி

என்றும்,

ஆரிய சோபனம் ஆயிரம் ஆயிரம்
வேரிய மாலைகள் வீசினர் வாரினர்
நாமமும் ஆயிரம் நாணமும் ஆயிரம்

என்றும் வடமொழி மிகுந்திருக்கும் கண்ணிகளைப் பாடியுள்ளமை வியப்பாக உள்ளது.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் இதுவெனத் தெரியாவிடினும் இது திருக்காவலூரில் முனிவர் பணியாற்றிய காலத்தில் இயற்றப்பட்டது என்பது உறுதி. எனினும் இம் மாலையில் திருக்காவலூரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்பது வியப்பாக உள்ளது.

## அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா

ஐம்பது கண்ணிகளைக் கொண்ட வெண்கலிப்பாவால் இயற்றப்பட்டது இந்நூல். காவலூர், திருக்காவலூர் என ஊரும், அடைக்கலத்தாய் என அன்னையும் இந்நூலில் சுட்டப் பெறுவதால் திருக்காவலூர் அடைக்கல நாயகி மேல் இயற்றப்பட்டது இந்நூல் என்பது தெளிவு.

முனிவர் பெரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களைக் கையாள்வதை அவரது செய்யுள் நூல்களில் காணலாம்.

'துன்பநோய்க் குயிர்மருந்தே துயர்க்கடலின்
நிலைக்கரையே
இன்பவீட் டுயர்வழியே இருள்மயல்கொள்
உயிர்க்கொளியே'

என்னும் அருமையான சொல்லாட்சியைக் கொண்ட இந்நூலில்,

'தாம அருணாம்பரிய தயாகிரண விதுசரணே
வாமஉடு சேகரியே'

போன்ற வரிகளும் அமைந்து வியப்புத் தருகின்றன.

அடிமையாகிய தம்மை ஆளும் அரசி என்றும், தம் உயிர்ச்சுவை, உரைப் பொருள், உயிர்ச்சுகம் என்றும் இந்நூலில் அடைக்கல அன்னையைப் போற்றிப் பாடுகின்றார் முனிவர்.

## அன்னை அழுங்கல் அந்தாதி

தன்தெய்வத் திருமகன் அனுபவித்த அளவற்ற துன்பங்களையும் அவர் சிலுவையலறைந்து கொல்லப் பட்டதையும் பற்றி அவரது அன்னையாகிய கன்னிமரியாள் உற்ற துயரத்தைத் தாமும் உணர்ந்து முனிவர் எழுதியது இந்நூல். ஒரு காப்புச் செய்யுளையும் அந்தாதித் தொடையில் அமைந்த 100 கட்டளைக் கலித்துறைகளையும் இது பெற்றுள்ளது.

அந்தாதித் தொடைக்கு உரிய இலக்கணம் பிறழாமல் இயற்றப்பட்ட இந்நூல் பிற இலக்கியங்களைச் செய்வதற்கு முன்பே முனிவரால் இயற்றப்பட்டதோ என ஐயுற இடமுண்டு. தேம்பாவணியிலும் பிற சிற்றிலக்கியங்களிலும் காணப்படும் அரிய நடையும் சுவையும் இந்நூலில் இல்லாமையே மேற்குறித்த ஐயத்துக்கு இடமாகின்றது.

## கருணாம்பர (தேவார)ப் பதிகம்

பதிகம் எனக் குறிக்கப்படும் இந்நூல் 12 ஆசிரிய விருத்தங்களைக் கொண்டது. ஒவ்வொரு விருத்தமும்.

*'தாள்பணியா வாறென்னோ?'*

என முடியும் வகையில் இயற்றப்பட்டுள்ளன.

இப்பதிகம் இயற்றப்பட்ட காலமும் இடமும் சூழலும் பற்றி அறிய வாய்ப்பில்லை. நடையினைப் பார்க்கும் போது முனிவர் தமிழ்கற்ற தொடக்கத்தில் இயற்றப் பட்டதோ எனத் தோன்றுகிறது.

இறந்தோரைப் புதைப்பதற்காகக் கல்லறைக்கு எடுத்துச் செல்லும்போது பாடப்படுவது இப்பதிகம் எனச் சிலர் கூறுவர். ஆனால் அத்தகைய பாடல்களில் வழக்க மாகக் கிறித்து பெருமானின் துன்பங்கள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவை பற்றிய கருத்துக்கள் அமைந்திருக்கும். இப்பதிகத்தில் அவை இல்லாமையால் மேற்கூறிய கருத்துப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

இப்பதிகம் கற்பனைக்கு மிகுதியும் இடம்கொடாத தாகவும் பெரும்பாலும் கிறித்துவக் கோட்பாடுகளை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. இது தொடக்க நிலையில் இயற்றப்பட்டதோ என ஐயுறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

## வண்ணம்

தமது செந்தமிழ் இலக்கணத்திலும் திறவுகோலிலும் முனிவர் வண்ணம் என்னும் பாவகைக்கு வகுத்துரைத்த இலக்கணத்தினின்று அணுவளவும் பிறழாமல் இயற்றிய சிறுநூல் இது.

எட்டுக் கலைகளைக் கொண்ட இவ்வண்ணம் முதற் கலையில் தனிமுதற் கடவுளையும், இரண்டாம் கலையில்

யேசுபெருமான் பிறந்த யூத நாட்டினையும், மூன்றாம் நான்காம் கலையில் வானவர் தொழக் குகையில் தோன்றிய யேசுபெருமானையும் பாடியபின், யேசுபெருமானின் பக்தராகிய மதலேன் மரியை ஐந்தாம் கலையிலும் செசீலி என்பாரை ஆறாம் கலையிலும் பராபரை என்பாரை ஏழாம் கலையிலும் கித்தேரியம்மாளை எட்டாம் கலையிலும் பாடுகிறது. ஐந்தாம் ஆறாம் ஏழாம் எட்டாம் கலைகள் கதைத் தலைவனின் பெண்டிரைப் பாடுதல் மரபென்பதால், யேசுபெருமானின் மீது அளப்பரிய பக்தி கொண்டிருந்த பெண்டிரைப்பற்றிப் பாடி மகிழ்கின்றார் முனிவர்.

வண்ணத்துக்கே உரிய சந்தநயம் கெழும இந்நூலை முனிவர் இயற்றியுள்ள திறம் வியத்தற்குரியது.

## 4. ஒப்பற்ற உரைநடை நூல்கள்

உரையாசிரியர் காலத்துக்குப்பின் தனிநூல் இயற்றித் தமிழ் உரைநடைக்கு வித்திட்டவர் அண்டிறக்கிப் பாதிரியார் எனில் தமிழ் உரைநடைக்குத் தந்தை என்னும் பெருமை தத்துவபோதகர்க்கு உரியது. ஆயினும், தமிழ் உரை நடைக்கு வளமை சேர்த்தவர் முனிவரே என்பதில் ஐயமில்லை.

முனிவர் இயற்றிய உரைநடைநூல்களுள் வேத விளக்கம் என்னும் நூலே முதலில் எழுதப்பட்டதாகும். மதுரை மறைப்பணிக்கள முதல்வர் தோமினிக் மதெய்ரா அடிகளின் ஆணைக்கு இணங்கி 1728-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்நூல், தரங்கம்பாடிச் சீர்திருத்தக் கிறித்துவ சபையினைக் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் தழுவாமல் தடுக்க வேண்டும் என்னும் தற்காப்பு உணர்வுடன் எழுதப்பட்டதாகும். ஆகவே அச்சபையினை

நிறுவிய மார்ட்டின் லுத்தேரைக் கடுமையாகத் தாக்கி முனிவர் இந்நூலில் எழுதியிருப்பதைக் காணலாம்.

இதை மறுத்துத் 'திருச்சபைப் பேதகம்' என்னும் சிறு நூலை (13 பக்கம்) லூத்தரன் சபையார் போர்த்துக்கேயம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இயற்றி அச்சிட்டனர்.

அதற்கு எதிராகப் 'பேதகமறுத்தல்' என்னும் நூலை (1728) முனிவர் இயற்றி, அதில் 24 பேதங்களை மறுத்து வெளியிட்டார்.

பின்னர் மீண்டும் லுத்தரன் சபையாரின் நூல்களில் காணும் கொடுந்தமிழை இகழ்ந்தும், லுத்தரைக் கடுஞ் சொற்களால் சாடியும் 'லுத்தேர் இனத்தியல்பு' என்னும் நூலை முனிவர் இயற்றினார். லுத்தரன் சபையார் தரங்கம்பாடியில் அச்சிட்டு வெளியிடும் நூல்களின் புறச் சிறப்பினைப் 'புறத்து அரிய வடிவோடு எழுதிய பொற்பொறிச் சிறப்பும், அச்சுப் பதித்த அக்கர ஒழுங்கும், கவிகவியாய் அதை வகுத்த தன்மையும் தானே' கண்டு பாராட்டிய முனிவர், 'ஒரு வரி முடியாமுன்னே பார்த்த கண்ணும் வேக, உச்சரித்த நாவும் துவர்ப்ப, காதும் கைப்ப மிகவும் வருந்துதற்காரணமாகத் தொடர் எழுத்து இயைந்த வகையும், எழுத்து வழுவி எடுத்த நீசச் சொல் லும், கீழிழிந்து இடறிய சொல்லைக் கூட்டின வசனமும்' கண்டு மிகவே வருந்தியதாகக் குறிப்பிடுகின்றார்.

இம்மூன்று நூல்களின் தமிழ் நடை சிறப்பானதே எனினும், அவை கசப்பிலும் காழ்ப்பிலும் எழுந்த நூல்க ளாதலால் நடுவு நிலை நின்று அவற்றின் சிறப்பினை உணர்தல் எளிதல்ல என்பது தெளிவு.

எனினும் முனிவர் நல்ல தமிழ்ச் சொற்களைப் பெய்து பொருத்தமான உவமைகளைப் பயன்படுத்தித் தாம் விரும்பும் பொருளை வாசகர் மனதில் பதிக்க வல்லவர்

என்பதை இம்மூன்று நூல்களும் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

முனிவரின் உரைநடை வாசகரைக் கருத்தில் கொண்டு அமைந்த நடை. ஆகவே வாசகர்களுக்குப் புரியும் வகையில் எளியதாகவும், உவமைகளும் எடுத்துக்காட்டுக்களும் பொருந்தியதாகவும் அந்நடை அமைந்திருப்பதைக் காணுகின்றோம்.

முனிவர் காலத்தில் கத்தோலிக்கக் கிறித்துவருக்கும் சீர்திருத்த சபைக் கிறித்தவருக்குமிடையே நிலவிய பகைமை உணர்ச்சியை நாம் முனிவரின் உரைநடை நூல்களில் கண்டுணரலாம்.

புனித அருளப்பர் இயற்றிய காட்சியாகமத்தின் ஒன்பதாம் அதிகாரத்தில் காணப்படும் ஐந்தாம் காளத்தை அகவற்பாவாக முனிவர் இயற்றி, அதற்கு உரையெழுதும் வகையில் லுத்தேரையும் அவரது சபையாரையும் கடுமையாகச் சாடி எழுதியிருப்பதை லுத்தேரினத்தியல்பு நூலில் காணலாம். இது ஒரு புதிய உத்தி என்பது குறிப்பிடத்தக்கது.

முனிவர் இயற்றிய 'வேதியர் ஒழுக்கம்' என்னும் உரைநடைநூல் தரங்கம்பாடிச் சீர்திருத்தச் சபையாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட நூலாகும், இருபத்தெட்டு அதிகாரங்களைக் கொண்ட இந்நூலே முனிவர் இயற்றிய உரைநடை நூல்களுள் மிகச் சிறந்ததெனப் போப் ஐயர் கருதுகின்றார். இந்நூல் 1730-ஆம் ஆண்டளவில் இயற்றப்பட்டது என்பது பெஸ் அடிகளார் கருத்து.

கத்தோலிக்கக் கிறித்துவத் துறவியர்க்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய வேதியர்களின் வாழ்வும் பணியும்பற்றி அறிவுறுத்தும் இந்நூல் இலத்தீனிலும் தெலுங்கிலும் கன்னடத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது.

கத்தோலிக்கரல்லாத பிற கிறித்துவ சபையாரும் இந் நூலை அச்சிட்டுப் பயன்படுத்தியதாக அறிகிறோம்.

'பரமார்த்த குரு கதை' இன்றும் பயன்படுத்தப்பட்டு வரும் நகைச்சுவைச் சிறுகதைத் தொகுப்பு. இதனை முதலில் தமிழ் எழுதி, பின் அதனை இலத்தீனில் மொழி பெயர்த்த முனிவர் தம் தமிழ் - இலத்தீன் அகராதியின் இரண்டாம் பின்னிணைப்பாக அமைத்துள்ளார். தமிழக மக்களுக்கு அறிமுகமான கதைகளுடன் தாம் ஒரு சில கதை களைச் சேர்த்து வழங்குவதாகவும் நகைச் சுவை கலந்த இக்கதைகளைப் படிப்பதன் மூலம் பேச்சுத் தமிழைக் களைப்பின்றிக் கற்கலாம் என்று தாம் நம்புவதாகவும் பின்னிணைப்பின் முன்னுரையில் முனிவர் கூறுகின்றார்.

முனிவர் தம் காலத்து இந்து சமயத் துறவிகளை இகழ் வதற்காகவே இந்நூலை எழுதியதாகச் சிலரும், சீர்திருத்த சபைக் குருக்களை இகழ்வதற்காகவே எழுதியதாக வேறு சிலரும் கூறுவர். ஆனால் நகைச்சுவை கலந்த எளிய பாட மாக இதனை அமைக்கவே முனிவர் விரும்பினார் என்பதை அவரது முன்னுரை தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

இந்நூல் 1845, 1951, 1859, 1865 ஆகிய ஆண்டுகளில் புதுச்சேரியிலும், 1822-ஆம் ஆண்டில் இலண்டனிலும் அச்சிடப்பட்டது. பின் இலண்டன் (1861), சென்னை (1871), பெங்களூர் (1877) ஆகிய இடங்களிலும் வெளியிடப் பெற்றது. இது பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டு பிரான்சு, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் பல பதிப்புக்களைக் கண்டது. ஜெர்மன், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் இந் நூல் பெயர்க்கப்பட்டு அச்சிடப்பெற்றதாக அறிகிறோம். முனிவரின் நூல்களுள் மக்களிடையே மிகவும் புகழ்பெற்ற நூல் இதுவே என்பதில் ஐயமில்லை.

திருச்சபைக் கணிதம் என்னும் நூல் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் கொண்டாடும் திருவிழாக்களின் தேதிகளை

அறிய உதவும் ஒரு சிற்றேடு. இது அச்சிடப்படவில்லை யென்றும், 48 பக்கங்களைக் கொண்ட கையெழுத்துப் படியாகத் தாம் இதனைக் கண்டதாகவும் பெஸ் அடிகளார் குறிப்பிடுகின்றார். ஆனால் இன்று இந்நூல் காணக் கிடைக்கவில்லை.

தமிழ் ஆண்டுகளும் மாதங்களும் என்னும் சிற்றேடும் முனிவரால் இயற்றப்பட்டதாகும். 1744-ஆம் ஆண்டில் முனிவர் தொகுத்த தமிழ் - இலத்தீன் அகராதியின் மூன்றாம் பின்னிணைப்பாக இந்நூல் அமைந்திருக்கும் பிரதி கோவாவிலுள்ள மத்திய நூலகத்தில் காணப்படு கிறது. இதன் இலத்தீன் மூலமும் ஆங்கில மொழிபெயர்ப் பும் முனைவர் ச. இராசமாணிக்கம் அடிகளார் பதிப்பித்து 'அடியார் வரலாறு' நூலின் பின்னிணைப்பாக அச்சிடப் பட்டுள்ளன.

இது தமிழ் - இலத்தீன் அகராதியின் நான்காம் பின்னிணைப்பு என பெஸ் அடிகளார் கருதுகின்றார்.

இது பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டு 1802-1887-ஆம் ஆண்டுகளில் அச்சிடப் பெற்றது.

1744-ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்ட அகராதியில் இது இடம் பெற்றாலும், இது அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே முனிவரால் இயற்றப்பட்டதாக அறிகின்றோம்

1733-ஆம் ஆண்டில் கோர்து அடிகளார் பாரீசிலுள்ள சூசியே அடிகளுக்குப் பின்வருமாறு எழுதுகின்றார்.

> "ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளை அறிவதற்கு இந்தியப் பஞ்சாங்கத்தார் பயன்படுத்தும் முறையைப்பற்றி இங்குப் போர்த்துக்கேயக் குருக் களோடு பணியாற்றிவரும் ஓர் இத்தாலிய அடிக ளார் இயற்றியுள்ள சிற்றேட்டைத் தங்களுக்கு

அனுப்ப முடியும் என்று நம்பினேன். அதை மொழிபெயர்த்த பின் அவ்வடிகளாருக்கு அனுப்பி வைத்தேன். அவருக்குப் பிரெஞ்சு மொழி தெரியும். எங்களுக்கிடையில் உள்ள தொலைவு மிகுதியென்பதாலும், இந்நாட்டில் முறையான அஞ்சல்துறை இயங்காததாலும், கப்பல்கள் புறப் படுவதற்குள் அதைத் திரும்பப் பெற்றுத் தங்க ளுக்கு அனுப்ப இயலாதென நினைக்கிறேன்." (கிருஷ்ணாபுரம், 2-11-1733).

10-9-1734 அன்றும், 13-9-1735 அன்றும் கோர்து அடிகளார் சூசியே அடிகளுக்கு எழுதிய கடிதங்களில் இந்நூலைப் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிடுகின்றார்.

1733-ஆம் ஆண்டில் தே பூர்சே அடிகளார் அதே சூசியே அடிகளாருக்கு எழுதிய மடலிலும் இந்நூல்பற்றிப் பேசுவதைக் காண்கிறோம். பலரைக் கேட்டுப் பார்த்தும் பயனில்லாமல், எதைக் கேட்டாலும் 'முன்னோர்கள் விரும்பிய முறை இது' என்னும் பதிலே கிடைத்த நிலையில் மிகுந்த இடர்ப்பாடுகளுக்கிடையில்தாமே அரிதின் முயன்று, விளக்கம் கண்டு இந்நூலை இயற்றியதாக முனிவரே தே பூர்சே அடிகளார்க்கு எழுதியுள்ளார்.

ஆகவே 1733-ஆம் ஆண்டில் தாம் இயற்றிய இந்நூலை 1744-ஆம் ஆண்டு தமிழ் - இலத்தீன் அகராதியின் பின்னிணைப்பாக முனிவர் சேர்த்தார் என நாம் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் முறைப்படி காலம் கணக்கிடப்படும் வகையை முனிவர் இந்நூலில் விளக்குகின்றார். யார் துணையு மின்றி, முன்னோர் எழுதிய நூல்களின் உதவியுமின்றி முனிவர் தாமே ஆராய்ந்தறிந்து இயற்றிய இந்நூல் அவரது கூர்ந்த பேரறிவுக்குத் தக்க சான்றாக அமைந்

# 5. ஏற்றமிகு இலக்கண நூல்கள்

வீரமாமுனிவர் பலதுறை வல்லுநர். இலக்கியங்களும் உரைநடை நூல்களும் வடித்துத் தந்த அவர் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், திறவுகோல் (Clavis) என்னும் நான்கு இலக்கண நூல்களை இயற்றிப் புகழ் பெற்றார்.

## கொடுந்தமிழ் இலக்கணம்

முனிவர் இயற்றிய முதல் இலக்கண நூலாகிய இது 1728-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. முனிவரின் வாழ் நாளில் அச்சேறிய நூல் இது ஒன்றே. அதுவும் வாழ் நாளெல்லாம் முனிவர் எதிர்த்துப் போராடி வந்த தரங்கம்பாடித் திருச்சபையாரின் அச்சகத்திலேயே இது அச்சிடப் பெற்றது வியப்புத் தருவதாகும். இந்நூல் அத்தகு சிறப்பு மிக்கது என்பதையே இந்நிகழ்ச்சி காட்டுகிறது, 'அவரது கொடுந்தமிழ் இலக்கணம் சீர்திருத்தச் சபைக் குருக்களுக்கும் தமிழ் கற்போர் அனைவருக்குமே ஒப்பரிய உறுதுணையாகும்' என்பார் மேகன்.

இந்நூலைத் தரங்கம்பாடியில் அச்சிடுவதற்கு இன்றைய மயிலாப்பூர் ஆயர் மேதகு ஜோசப் பிஞ்ஞேயிர ஆண்டகை தாமே விரும்பி இசைவளித்து அச்சகத்திற்கு அனுப்பி வைத்தார்.

முனிவரின் கொடுந்தமிழ் இலக்கணத்தோடு இணைந்ததாக கிறிஸ்டொஃபர் தியோடோசியுசு வால்த்தேர் அவர்களின் 'இலக்கணச் சிந்தனைகள்' என்னும் நூலும் அச்சிடப் பெற்றது.

கொடுந்தமிழ் இலக்கணம் அச்சாகி வெளிவந்தபோது அத்துடன் வால்த்தேர் அவர்களின் இலக்கணச் சிந்தனைகளும் சேர்த்து அச்சாகியிருப்பதைக் கண்டு முனிவர் வியப்புற்றார். தமது இசைவின்றி வால்த்தேரின் நூலைத்

தம் நூலுடன் இணைத்து அச்சிட்டதை முனிவர் விரும்ப வில்லை. ஏனெனில் முனிவர் வகுத்த இலக்கண விதி களுக்கு மாறான விதிகளை வால்த்தேர் இயற்றியிருந் தார். 'இணைக்கப்பட்டுள்ள சிந்தனைகளைப் பார்வை யிட்டேன். அப்பணியையும் ஆய்வையும் போற்றுகிறேன். ஆனால் நான் எழுதிய விதிகளுக்கு மாறான விதிகளை வெளிப்படையாக அவர் எழுதியுள்ளார்' என முனிவர் ஓபுக் அவர்களுக்கு எழுதிய மடலில் குறிக்கின்றார். தம் செந்தமிழ் இலக்கணத்தை அச்சிடத் தரங்கம்பாடி அச்சகத்துக்கு முனிவர் இசைவுதர மறுத்தமைக்கு இவ் வனுபவமே காரணமாகும்.

'இங்கு (தரங்கம்பாடியில்) அச்சிடப்பட்ட நூல்களை மிகவும் குறை கூறிய ஒருவர் (முனிவர்) தாம் இயற்றிய நூலொன்றை எங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ள அத்தமிழிலக்கணம் தொடக்க நிலையிலுள்ள எங்களுக்கு மிகவே பயன்படுவாதகும்' என ஓபுக் என்பார் குறிப்பிடுகின்றார். 'சீகன்பால்க் எழுதிய இலக்கண நூலைப் பயின்று ஓரளவு தமிழைக் கற்றபின் பெஸ்கி எழுதிய இலக்கண நூலைக் கற்பது பெரும் பயனைத் தருகிறது... அதைப் படியெடுப்பதாலும் பயில்வ தாலும் இலக்கண நுணுக்கங்களைச் சிறப்பாகவும் நுணுக் கமாகவும் அறிந்து கொள்ள முடிகிறது' என்றும் அவர் எழுதுகின்றார்.

கொடுந்தமிழ் இலக்கணம் பின்னர் 1806, 1813, 1831, 1844, 1848 முதலிய ஆண்டுகளில் மறுபதிப்புக் கண்டது. முழுமையாகவும் சுருக்கமாகவும் இது பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றது. இவ்விலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு துப்புயி அடிகளார் பிரெஞ்சு மொழியில் தமிழ் இலக்கணம் எழுதி 1863-ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

இரேனியஸ் ஐயர் ஆங்கிலத்தில் இயற்றிய தமிழ் இலக்கணம் பெரிதும் போற்றப்படுவதாகும். ஆனால் இரேனியஸ் ஐயரின் இலக்கணம் முனிவரின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது எனப் போப் ஐயர் கூறுவதால் முனிவர் இயற்றிய இலக்கணத்தின் சிறப்பினை நாம் உணரலாம். பேச்சுத் தமிழுக்கு முதன் முறையாக இலக்கணம் வகுத்த பெருமை முனிவருக்கே உரியது. இதனால் தமிழில் மொழியியலுக்கு வித்திட்ட முதல்வர் என்னும் சிறப்பையும் முனிவர் பெறுகின்றார்.

## செந்தமிழ் இலக்கணம்

கொடுந்தமிழ் இலக்கணத்தை இயற்றி இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இலத்தீன் மொழியிலேயே முனிவர் 'செந்தமிழ் இலக்கண'த்தையும் இயற்றினார். இதன் முன்னுரை 13-9-1730 என்னும் தேதியைத் தாங்கியுள்ளது. கையெழுத்துப் படியாகவே பயன்பட்டு வந்த இவ்விலக்கண நூலை பெஞ்சமின் பாபிங்க்ட்டன் என்பார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1822-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இலத்தீன் மூலத்துடன் இம்மொழி பெயர்ப்பைப் பெஸ் அடிகளார் 1917-ஆம் ஆண்டில் பதிப்பித்தார்.

எழுத்து, சொல், யாப்பு, என்னும் மூவகை இலக்கணத்தை நாம் இந்நூலில் காணலாம். பொருளிலக்கணமும் அணியிலக்கணமும் இந்நூலில் இடம்பெறவில்லை. தம் ஐரோப்பிய வாசகர்கள் ஐரோப்பிய அணியிலக்கணத்தை அறிவாராதலின் தாம் அவற்றை விடுத்ததாக முனிவர் தம் முன்னுரையில் கூறுகின்றார். எனினும் உவமை உருவகம் முதலிய அணிகளைப் பற்றி யாப்பிலக்கணப் பகுதியில் முனிவர் சுருக்கமாகக் கூறுகின்றார்;

திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, நாலடியார், வில்லிபாரதம், இராமாயணம், தேம்பாவணி

ஆகிய நூல்களிலிருந்து பல மேற்கோள்களை இந்நூலில் எடுத்தாள்கிறார் முனிவர்.

திறவுகோலில் தேம்பாவணியோடு திருக்காவலூர்க் கலம்பகத்திலிருந்து மேற்கோள் காட்டும் முனிவர், செந்தமிழ் இலக்கணத்தில் கலம்பகத்திலிருந்து மேற்கோள் காட்டாதிருப்பது குறிக்கத்தக்கது. ஆகவே திருக்காவலூர்க் கலம்பகத்தை இயற்றுமுன் செந்தமிழ் இலக்கணத்தை முனிவர் இயற்றினார் எனக் கொள்வது பொருந்தும்.

## ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்

1730-ஆம் ஆண்டில் முனிவரால் இயற்றப்பட்ட இந்நூலின் பெயரே விளக்குவதுபோல எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் விரித்துக் கூறுவதாகும் இது. 1838, 1865, 1891, 1978 ஆகிய ஆண்டுகளில் பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. முதல் பதிப்பில் பதிப்பாசிரியர் களத்தூர் வேதகிரி முதலியார் வேறு நூல்களின் இலக்கணச் சூத்திரங்கள் சில வற்றையும் சில செய்யுள்களையும் மேற்கோளாகச் சேர்த்துப் பதிப்பித்தமையால் வீரமாமுனிவர் இயற்றிய வாறே தொன்னூல் விளக்கம் நமக்கு இன்று கிடைக்க வில்லை.

தொன்னூலுக்கு உரை வரைந்தவர் முனிவரே என்பதை முனைவர் இன்னாசி திறம்பட நிறுவியுள்ளார்.

பெரும்பாலும் பழைய இலக்கண விதிகளையே முனிவர் இந்நூலில் தொகுத்துக் கூறியுள்ளார். கலம்பக இலக்கணம் கூறுமிடத்துப் புயம், கைக்கிளை, தவம் காலம், வண்டு, அம்மானை, காற்று, பாணம், குறம், சித்திரங்கள், குளிர், தழை சம்பிரதம், மறம், தூது, ஊசல், மதங்கம், மடக்கு என்றும் 18 உறுப்புக்களை முனிவர்

கூறுகின்றார். ஆனால் தாம் இயற்றிய திருக்காவலூர்க் கலம்பகத்தில் புயவகுப்பு, தவம், காலம், இடைச்சி, மறம், கைக்கிளை, வண்டு, குறம், இரங்கல், தழை அம்மானை, சமூக உல்லாசம், சித்து, சம்பிரதம், தென்றல், ஊசல், பாண், மாதங்கி, தூது, வலைச்சி என்னும் இருபது உறுப்புக்களை அமைத்துப் பாடுகின்றார். தமிழில் இலக்கணம் இயற்றும்போது பண்டைய விதிகளை மாறாத முனிவர் தாம் இயற்றிய இலக்கியத்தில் புது விதிகளை அமைத்துக் கொள்வதற்கு உரிய காரணத்தை விளக்காமலிருப்பது வியப்புத் தருகிறது.

தொல்காப்பியரின் பொருளதிகாரத்தினின்று முனிவரின் பொருளதிகாரம் முற்றிலும் மாறுப்பட்டதாகும். தொல்காப்பியர் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களாகப் பொருளதிகாரத்தை வகுத்து வழங்குகின்றார்.

முனிவர் 'பொருளதிகாரத்தைப் பார்க்கின்ற நோக்கமே புதிதாக அமைந்துள்ளது' என வியக்கின்றார் முனைவர் ச. வே. சுப்பிரமணியன். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நூலுக்குரிய பயன்களைப் பொருளதிகாரம் கூறவேண்டுமென்பது முனிவரின் கருத்து.

'பொருள்நூல் என்பது புகல்பொருள் நுதலிய
உரிப்பயன் படுத்துமாறு உணர்த்தும் நூலே'

என நூற்பா வகுக்கும் முனிவர், 'புலவரால் உரைக்கத் தகும் பொருளாவன; அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. இவற்றுள் பொருள் நூல் தந்த செந்தமிழ் உணர்ந்தோர் மற்றை யாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப் படைச் சேவகமொன்றையும் விரித்துரைத்தார். இங்ஙனம் பொதுப்படாது உரைத்த நூல் சிறுபான்மையாகையின்

இங்ஙனம் அறம் முதல் நான்கிற்கேற்பப் பொதுநூலாக இவ்வதிகாரம் முடியுமெனவே கொள்க' என உரையில் தெளிவுபடுத்துகின்றார்.

'முப்பொருள் ஐவழி முந்நான்கு அகத்திணை
முப்புறத்திணை தவாமுறை ஐந்து
உரிமை என இவை பொருள்நூல் தொகையே

எனப் பொருளதிகாரத்துக்கு முடிவுரையெழுதி,

'வழக்கு, தோற்றம், தேற்றம் என்னும் முப்பொருளும்
பதிகம், காரணம், விரிவு, தொகை, துணிவு என்னும்
ஐவழியும் இயல்பு முதலாகப் பின்னவை ஈறாகப்
பின்னிரு அகத்திணையும் ஒழுக்கம், நூல், கரி
என்னும் முப்புறத்திணையும் காலம், இடம்,
பண்பு, ஒழுக்கம், சொல் என்னும் ஐவகை உரிமையும்,

ஆகிய இவற்றைத் தம் பொருளதிகாரத்தில் கூறியுள்ளதாக உரை கூறுகின்றார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும் தொன்னூல் விளக்கப் பொருளதிகாரத்தையும் ஒப்பிட்டு ஆராய்தல் பெரும்பயன் விளைக்க வல்லதாகும்.

## திறவுகோல்

முனிவர் இலத்தீன்மொழியில் இயற்றிய தமிழிலக்கண நூல்களுள் முன்னுரையின்றி நமக்குக் கிடைத்துள்ளது இந்நூல் மட்டுமே. அதனாலேயே இந்நூல் முனிவரால் இயற்றப்பட்டதன்று எனக் கருதுவோரும் உள்ளனர். ஆனால் இந்நூலைத் தொன்னூல் விளக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தாலே இது முனிவர் இயற்றிய நூலே என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். அத்துடன் தொன்னூல் விளக்கத்தின் ஆசிரியர் தாமே எனப் பொருளதிகாரத்தின் தொடக்கப் பகுதியில் இவர் கூறுவதைக் காணலாம். கொடுந்தமிழ் இலக்கணத்தின்

ஆசிரியர் தாமே என எழுத்ததிகாரத்தின் தொடக்கத்திலும், சொல்லதிகாரத்தின் நான்காம் பிரிவிலும் கூறுவதோடு தமிழ்—இலத்தீன் (கொடுந்தமிழ்) அகராதிக்கும் செந்தமிழ் அகராதி (சதுரகராதி)க்கும் தாமே ஆசிரியர் என சொல்லதிகாரத்தில் 'இடைச்சொல்' பற்றிய பிரிவில் நூலாசிரியர் கூறுகின்றார். எனவே இந்நூலை இயற்றியவர் வீரமாமுனிவரே என்பதை ஐயத்துக்கு இடமின்றி அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் நிறுவுகின்றன.

செந்தமிழ் இலக்கணத் திறவுகோல் என்னும் இந்நூல் திறவுகோல் எனவும், இலக்கணத் திறவுகோல் எனவும் வழங்கப்படுகிறது. கையெழுத்துப் படியாகவே பயன்பட்டுவந்த இந்நூல் 1876-ஆம் ஆண்டு தரங்கம்பாடி அச்சகத்தில் அச்சாக்கம் பெற்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் கூறும் இந்நூல் முனிவர் இயற்றிய தென்னூல் விளக்கத்தின் சுருக்கமாகவே கருதப்படுகிறது. எழுத்து, சொல், பொருள் அணி ஆகிய நான்கு இலக்கணங்களை மட்டுமே செந்தமிழ் இலக்கணம் கொண்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

இந்நூலின் எழுத்ததிகாரம் 14 பக்கங்களையும், சொல்லதிகாரம் 36 பக்கங்களையும், பொருளதிகாரம் 15 பக்கங்களையும், யாப்பதிகாரம் 62 பக்கங்களையும் கொண்டு அமைந்திருப்பதைக் காணலாம். முனிவர் எழுத்திலக்கணத்தையும் பொருளிலக்கணத்தையும் இத்துணைச் சுருக்கமாகவும் யாப்பிலக்கணத்தை இத்துணை விரிவாகவும் அமைக்கக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை. அதிலும் பொருளதிகாரம் உரிமை பற்றி மட்டுமே கூறுவதாகவும், அதுவும் தொன்னூல் விளக்கத்தில் தனியாக விரித்துக் கூறிய ஒழுக்க உரிமையைத் திறவுகோலில் பண்புரிமையோடு இணைத்துக் கூறுவதாகவும்

நூலை அமைத்துள்ளமைக்கு முனிவர் எத்தகைய விளக்க மும் வழங்கவில்லை.

திறவுகோலில் ஏற்கனவே தாம் இயற்றிய நூல்களுள் பெரும்பாலும் திருக்காவலூர்க்கலம்பகத்திலிருந்தும், அவ்வப்போது தேம்பாவணியிலிருந்தும் முனிவர் மேற் கோள் காட்டுவதை நாம் காண்கின்றோம். தொன்னூல் விளக்கத்தில் கலம்பகத்துக்கு உரிய பதினெட்டு உறுப்புக் களைக் கூறும் நூற்பாவை இந்நூலில் யாப்பிலக்கணப் பகுதியில் நூலின் பெயர் காட்டாமல் கூறுவதைக் காண்கிறோம்.

தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய நூல் களிலிருந்து முனிவர் இந்நூலில் மேற்கோள் காட்டுவ தாலும் தமிழ்—இலத்தீன் (கொடுந்தமிழ்) அகராதி பற்றிக் குறிப்பிடுவதாலும் இந்நூலே முனிவர் இயற்றிய நூல்களுள் கடைசியானது என நாம் முடிவு செய்யலாம்.

## 6. ஆக்கம் தரும் அகராதிகள்

பெருங்காப்பியமும் சிற்றிலக்கியங்களும் உரைநடை நூல்களும், இலக்கண நூல்களும் வகுத்துத் தமிழுக்கு முனிவர் அரும்பணியாற்றினார். எனினும் அகராதிகளைத் தொகுத்தமையே முனிவர் தமிழுக்காற்றிய அரும்பணி எனக் கருதுவோரும் உண்டு. ஏனெனில் நிகண்டுகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த தமிழகத்தில் அகர முதலாகச் சொற்களைத் தொகுத்துப் பொருள் கூறும் அகராதிகளை முதன்முதலாக இயற்றிய பெருமை முனிவ வருக்கே உரியது.

---

* முனைவர் சூ. இன்னாசி இயற்றிய 'சதுரகராதி ஆராய்ச்சி' என்னும் நூலிலிருந்து பல கருத்துக்கள் இவ்வதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1594-ஆம் ஆண்டில் இரேவணச் சித்தர் இயற்றிய அகராதி நிகண்டே தமிழில் முதல் அகர முதலியெனச் சிலர் கூறுவர். அகராதிர் பேர்த் தொகுதி, ககராதிப் போர்த்தொகுதி போன்ற பத்துப் பிரிவுகளை உடைய இந்நூலில், அகராதிப் போர்த் தொகுதியில் 'அ' தொடங்கி 'ஔ' வரையில் உள்ள சொற்களும், ககராதிப் பேர்த் தொகுதியில் 'க' தொடங்கிக் 'ளெ' வரையில் உள்ள சொற்களும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் சொற்களின் முதல் எழுத்துமட்டுமே அகரநிரலில் அமைந்துள்ளதே தவிர, இரண்டாம் எழுத்தோ அதற்குப் பின் வரும் எழுத்துக்களோ அம்முறையில் அமையப் பெற வில்லை. ஆகவே நிறைவான பொருளில் இந்நூலை அகராதி அல்லது அகரமுதலி எனல் பொருந்தாது.

பதினாறாம் நூற்றாண்டில் தென்பாண்டி நாட்டில் சமயப் பணிபுரிந்த யேசுசபைத் துறவியாகிய அண்டிறீக்கிப் பாதிரியார் தாம் ஓர் அகராதியைத் தொகுத்ததாகத் தம் மடலில் எழுதுகின்றார். இந்நூல் நமக்குக் கிடைக்க வில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் திருச்சியை அடுத்த தொட்டியம் பகுதியில் பணிபுரிந்த அந்த்தாம் தெ ப்ரோயென்சா அடிகளார் இயற்றிய தமிழ்—போர்த்துக்கேய அகராதி 1679-ஆம் ஆண்டில் அம்பலக்காட்டில் அச்சிடப் பெற்றது. 16,546 சொற்களைக் கொண்ட இவ்வகராதி தமிழ் சொற்களுக்குப் போர்த்துக்கேய மொழியில் பொருள் தருவதோடு, அகரவரிசைக்குப் போர்த்துக்கேய நெடுங்கணக்கைப் பயன்படுத்துகிறது. இந்நூலை 1966-ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாட்டின்போது தனிநாயகம் அடிகளார் ஒளிபடப் பதிப்பு முறையில் அச்சிட்டு வெளியிட்டார். தென்பாண்டி நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் பணிபுரிந்த இஞ்ஞாசியோ புருனோ (1579—1659) அடிகளால் ஒரு தமிழகராதி தொகுக்கப்

பட்டது என்னும் குறிப்பினை ப்ரோயென்சா அடிகளார் தம் முன்னுரையில் தருகின்றார் அவ்வகராதி அச்சிடப் பெற்றதா இல்லையா என்பதை நாம் அறிவதற்கில்லை, அதன் கையெழுத்துப்படியும் நமக்குக் கிடைக்கவில்லை.

முனிவர் தமிழகத்தில் தம் பணியைத் தொடங்கிய போது காமநாயக்கன்பட்டியில் நோயல் தே பூர்சே அடிகளாருக்குத் துணைவராகத் தொண்டாற்றத் தொடங்கினார் என்பதை முன்னரே குறித்துள்ளோம். பூர்சே அடிகளார் ஓர் அகராதியைத் தொகுத்தார் என்றும் அது செந்தமிழ்—கொடுந்தமிழ்ச் சொற்களைக் கலந்து தொகுக்கப்பட்டது என்றும் முனிவர் தமது தமிழ்—இலத்தீன் அகராதியின் முன்னுரையில் கூறுகின்றார். தமது அகராதியில் காணப்படும் பிழைகளைக் களைந்திட வேண்டுமென்று பூர்சே அடிகளார் விரும்பினாலும் அப் பணியைச் செய்யுமுன் அவர் இறந்ததால் தமது விருப்பத்தை (நிறைவேற்றும் பணியை) நம்மிடம் விட்டுச் சென்றார்' என முனிவர் எழுதுகின்றார். இந்நூலும் அச்சிடப் பெறவில்லை.

## சதுரகராதி

தமிழ் நெடுங்கணக்கினை அகரநிரல்படுத்தித் தமிழ்ச் சொல்லுக்குத் தமிழில் பொருள் வழங்கும் முதல் அகராதி யாக விளங்கும் பெருமையை முனிவர் இயற்றிய சதுரக ராதி பெறுகின்றது. 'திவாகரம், பிங்கலந்தை, கையாகடி போன்ற பழம் நூல்களைப் பார்வையிட்டும், அறிஞர் களுடன் கலந்துபேசியும், வடமொழிச் சொற்களையும் பொருள் விளக்கங்களையும் எடுத்தாண்டும், தாம் இவ்வக ராதியைத் தொகுத்ததாக இலத்தீன் மொழியில் வரைந்த தம் முன்னுரையில் முனிவர் கூறுகின்றார்.

கையெழுத்துப் படியாகவே வழங்கிவந்த இவ்வகராதி 1824-ஆம் ஆண்டு சென்னையில் முதன்முதலாக அச்சிடப்

பெற்றது. அதன்பின் 1827, 1835, 1845, 1848, 1860, 1872, 1875, 1876, 1928 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்து அச்சிடப்பட்டது.

பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என நான்கு பிரிவுகளைக் கொண்ட இவ்வகராதியினை மொழிக் களஞ்சியம், தமிழ்மொழிக் கருவூலம் என முனிவர் குறிப்பிட்டாலும் அவர் இந் நூலுக்கு இட்ட பெயர் சதுரகராதி என்பதே என முனிவர் வரைந்த முன்னுரையாலும் ஆசிரியப்பாவினால் அமைத்த பாயிரத்தாலும் அறிகிறோம்.

பாயிரப் பாடலில்,

'முன்னூல் தெளிந்து முன்னரீத் தந்த
தொன்னூல் விளக்கம் துதித்துக் கொண்டனர்
நாற்பதக் கருவியா நூங்கென வேண்டும்
நாற்பத விளக்கமும் நவில்கென வேண்ட....

சதுரகராதி சாற்றுதுமன்றே என முனிவர் கூறுவதால், சதுரகராதிக்கு முன்பே தாம் தொன்னூல் விளக்கத்தை இயற்றிவிட்டதைக் தெளிவாக்குகின்றார். தொன்னூல் விளக்கத்தைத் துதித்து ஏற்றுக் கொண்டவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தாம் சதுரகராதியை இயற்றுவதாகவும் பாயிரத்தில் முனிவர் கூறுகின்றார்.

அண்டிறீக்கிப் பாதிரியாரைப் போலவே முனிவரும் இலக்கணமும் அகராதியும் இணைந்து செல்ல வேண்டி யவை எனக் கருதுவதை நாம் உணரலாம். செந்தமிழ் இலக்கணம்—செந்தமிழ் அகராதி இயற்றிய முனிவர் கொடுந்தமிழ் இலக்கணம்—கொடுந்தமிழ் (தமிழ்—இலத்தீன்) அகராதி என இணைத்து நூலாக்கியுள்ளமை போற்றற்குரியது.

சதுரகராதியின் ஈற்றில் அமைந்துள்ள ஆசிரியப்பா விலிருந்து சதுரகராதி 1732-ஆம் ஆண்டில் திருக்காவ

லூரில் இயற்றப்பட்டது என்பதை நாம் தெளிவாக அறியலாம். முனிவரின் பெயர் 'வீர ஆரியன்' என அவ்வ மயம் வழங்கி வந்ததையும் அப்பாடல் உறுதி செய்கின்றது.

தொகையகராதியும் தொடையகராதியும் சதுரகராதியின் சிறப்புக் கூறுகளாகும், இவற்றுள்ளும் தொகையகராதி முனிவரின் தமிழ்ப் புலமையைத் தெளிவுறுத்துவதோடு, தமது நீண்ட கால உழைப்பின் பயனாகவே முனிவர் இதனைத் தொகுத்தார் என்பதை உணரச் செய்கிறது.

தொகையகராதியில் அங்கயோகம்—8 என்பதை இயமம், நியமம், ஆதனம், பிராணாமயம். பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனக்கூறி, பின் அவை ஒவ்வொன்றுக்கும் பிரிவும் விளக்கமும் தருகின்றார். அவ்வாறே அளவை—8, அறம்—32 என்பவற்றுக்கும் ஏற்ற விளக்கம் தந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றார், இசை—3, இசை—7, இராகத் தகுதி—7, இராகம்—32 போன்றவை குறித்த விளக்கங்கள் முனிவரின் இசைத் துறைப் புலமையை வெளிப்படுத்துகின்றன.

பிரபந்தம்—96 என்னும் தலைப்பில் 96 வகைச் சிற்றிலக்கியங்களையும் பெயர் சுட்டுவதோடு, ஒவ்வொரு வகைச் சிற்றிலக்கியத்துக்கும் உரிய இலக்கணமும் சுருக்கமாகத் தருகின்றார்.

'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என அவ்வப்போது குறிப்பிடும் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் சதுரகராதியின் துணையையே நாடவேண்டும். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நால்வகைக் கவிகளின் பெயரை நாம் அறிவோம். ஆனால் ஒவ்வொரு கவிக்குமுரிய விளக்கத்தை நாம் சதுரகராதியின் மூலமாகவே அறிந்து கொள்ள முடிகிறது.

தொல்காப்பியச் செய்யுளியல், முன்னோர் 'சொன்ன யாப்பு நெறியை விடுத்துப் புதியதாகப் புனையப்படுவதை 'விருந்து' எனக் குறிப்பதைக் காண்கிறோம். முனிவரும் தமது சொல்லகராதியில் 'இலக்கணமின்றி இலக்கணப் பாட்டுப் போற் சொல்வது கத்தியம் எனப்படும் என விளக்குகின்றார். இன்றையப் புதுக்கவிதையினைத் தொல் காப்பியர் காலத்து விருந்தும் முனிவர் காலத்துக் கத்திய மும் சுட்டிக் காட்டுவதாக நாம் புரிந்து கொள்ள இடமுண்டு.

'என்னால் இயன்றதற்கு மேலான முயற்சியாலும் மிகுந்த உழைப்பாலும் இந்நூல் முடிவு பெற்றது' என முனிவரே தம் முன்னுரையில் கூறுவதால் எத்துணைக் கடின உழைப்பின் பயனாகச் சதுரகராதியை முனிவர் தொகுத்தார் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். 12, 187 சொற்களுக்கு முனிவர் சதுரகராதியில் பொருள் கூறியுள்ளமையை நினைத்தாலே நமக்குப் பெரும் மலைப்பு ஏற்படுகிறது என்பது உண்மையிலும் உண்மை யாகும்.

## தமிழ்-இலத்தீன் (பேச்சு மொழி) அகராதி

பெரும்பாலும் தமிழ் இலத்தீன் அகராதி எனக் குறிக் கப்படும் இந்நூல் முனிவரின் இறுதிக் காலத்தில் அவரால் இயற்றப்பட்டது. இவ்வகராதியின் முன்னுரையில் தாம் முன்பு காமநாயக்கன்பட்டியில் உடன்பணியாற்றிய தே பூர்சே அடிகளாரின் அகராதியை முனிவர் குறிப்பிடு கின்றார். கையெழுத்துப் படியில் 904 பக்கங்களைக் கொண்ட இத்தமிழ்—பிரெஞ்சு அகராதி அச்சிடப்பட்ட தாகத் தெரியவில்லை. முனிவரின் இவ்வகராதி 1882-ஆம் ஆண்டில் திருச்சியில் அச்சிடப் பெற்றது. அதற்கு முன்னரே பதினேழாம் நூற்றாண்டில் இவ்வகராதியின் கையெழுத்துப்படிகள் பலவற்றைத் தாம் இந்தியாவில்

கண்டதாக பவுலீனோ தெ சாப்பர்த்தலோமெயோ அடிகள் குறிப்பிடுகின்றார்.

தமிழ்—இலத்தீன் அகராதியில் முனிவர் தமிழ்ச் சொற்களை அகரவரிசையில் தொகுத்து அவற்றுக்குரிய பொருளை இலத்தீன் மொழியில் விளக்குகிறார். தொடர்ந்து பலஆண்டுகளாகத்தாம் சேர்த்த சொற்களைக் கொண்டு இவ்வகராதியைத் தொகுப்பது 'முதியவரும் பணியால் தளர்ச்சியுற்றவருமாகிய தமக்கு' மிகவே சிரமமாக இருந்ததைத் தம் முன்னுரையில் முனிவர் குறிப்பிடுகின்றார். இவ்வகராதியில் தொகுக்கப்பட்டுள்ள 9000 சொற்களுள் பேச்சுத் தமிழ்ச் சொற்கள் மிகுதியாக இடம் பெறுவதில் வியப்பில்லை. மொழி முதல் வாராத டகர, ரகர, லகர எழுத்துக்களை முதலாகக் கொண்ட பல சொற்கள் இவ்வகராதியில் இடம் பெறுகின்றன. வடமொழி எழுத்துக்களோடு வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைச் சதுரகராதியில் முற்றிலும் தவிர்த்த முனிவர், தமிழ்—இலத்தீன் அகராதியில் ஸகர க்ஷகர எழுத்துக்களை பயன்படுத்துவதையும் ஸகர க்ஷகர எழுத்துக்களை மொழி முதலாகக் கொண்ட சொற்களைப் பயன்படுத்துவதையும் நாம் காணலாம்.

தமிழில் வழங்கும் சொற்களையும் பொருளையுமே சதுரகராதியில் விளக்கிய முனிவர் தமிழ்-இலத்தீன் அகராதியில் சொற்களைக் கொண்டுள்ள மரபுத் தொடர்களையும் நிரல்படுத்திப் பொருள் விளக்கம் தருகின்றார். கைகண்டது, கை கலக்கிறது, கைகாட்டுகிறது, கை என்னும் ஓரெழுத்தொருமொழியுடன் தொடர்புள்ள தொடர்கள் அனைத்தும் பேச்சுத்தமிழ் அகராதியில் இடம் பெறுகின்றன. சொற்பொருளைத் தெளிவுற விளக்குவதற்காக எண்பதுக்கு மேற்பட்ட பழமொழிகளை இவ்வகராதியில் முனிவர் மேற்கோளாகக் காட்டுகின்றார். பழமொழிகளோடு பழஞ்செய்யுள்களையும், செய்யுள்

தொடர்களையும் இவ்வகராதியில் முனிவர் பயன்படுத்திப் பொருளை விளக்குகின்றார்.

மருத்துவத்துறையில் முனிவருக்கிருந்த புலமை இவ் வகராதியில் தெளிவாக விளங்குகின்றது. சான்றாகக் காய்ச்சல் என்னும் சொல்லுக்குப் பொருள்கூற வந்த முனிவர் 19 வகையான காய்ச்சல்களைக் குறிக்கின்றார். உள் வலிப்பு, புற வலிப்பு, முசல் வலிப்பு என வலிப்பு வகைகளைச் சுட்டும் முனிவர் பிளவை பற்றிக் கூறும் போது கன்னப் பிளவை, பணிச்சைப் பிளவை, மயிப் பிளவை, ராசப் பிளவை என அதன் வகைகளை விரிக் கின்றார்.

மூலிகை, கொட்டைக்கிரந்தி, கருஞ்சீரகம், கோரோசனை, சாதிலிங்கம், சீனிமிளகு, சங்கொட்டை, தூதுவளை போன்ற பல மருந்துகளைக் காட்டும் இவ்வகராதி மருந்துக்குப் பயன்படக் கூடியவற்றின் வகைகளையும் சுட்டுகிறது. சூரணம், சூரியபுடம் போன்ற மருந்து தயாரிக்கும் முறைகளைக் குறிக்கும் சொற்களுக்கும், அகராதி பொருள் கூறுகின்றது. முனிவரின் பிற அகராதிகளிலும் நூல்களிலும் காணாத அளவில் மருத்துவத்துறை பற்றிய பல விளக்கங்களை இவ்வகராதியில் நாம் காணமுடிகிறது.

சமயப் பணியாளருக்கு உதவுவதற்காக முனிவர் தொகுத்த இவ்வகராதியில் கிறித்துவ சமயத் தொடர் பான பல சொற்கள் இடம்பெறுகின்றன. இச்சொற்கள் யாரால் தமிழ் வழக்குக்குக் கொண்டு வரப்பட்டன என்னும் குறிப்புக்களும் இவ்வகராதியில் இடம்பெறு கின்றன.

தமிழகத்தில் பல பகுதிகளிலும் வட்டாரங்களிலும் பயன்படுத்தும் சொற்களுக்குப் பொருள்கூறும் முனிவர்

அச்சொற்கள் வழங்கப்படும் வட்டாரங்களையும் அகராதியில் குறிக்கின்றார்.

தமிழ்-இலத்தீன் பேச்சுத்தமிழ் அகராதியின் முன்னுரையில் செந்தமிழுக்கும் பேச்சுத் (கொடுந்)தமிழுக்கும் உரிய வேற்றுமைகளைச் சுருக்கமாகத் தொகுத்தும் கூறும் முனிவர், யகர மொழி முதற்சொற்களையுக் பண்புப் பெயர், பண்புத் தொகைகளையும், வினைத் தொகையையும் பற்றி ஒரு இலக்கணச் சுருக்கமே எழுதியுள்ளார் எனலாம்.

## போர்த்துக்கேய-இலத்தீன்-தமிழ் அகராதி

தமது தமிழ்—இலத்தீன் அகராதியின் இரண்டாம் பகுதியாகவே முன்னுரையில் முனிவர் இவ்வகராதியை அமைத்துக் காட்டுகின்றாரெனினும் இது தனி அகராதியாகவே கொள்ளத்தக்கது, தனி அகராதியாகக் கொள்ளப்படுகிறது என்பது உண்மையே. இவ்வகராதி அளவில் சுருங்கியதே என முனிவர் தம் முன்னுரையில் குறிக்கின்றார், ஒரு பொருட்பன்மொழிகள் போர்த்துக்கேய மொழியில் மிகப் பலவாதலின் உரையாடலில் மிகுதியாக வழங்கும் சொற்களையே இவ்வகராதியில் முனிவர் தொகுக்கின்றார். அவ்வாறே போர்த்துக்கேய மொழிச்சொற்களுக்குப் பொருள் கூறும்போதும், அன்றாட உரையாடலுக்குத் தேவையான சொற்களுக்கு மட்டுமே முனிவர் பொருள் கூறுகின்றார். தமிழ்—இலத்தீன் அகராதியில் தீய (அருவருப்புக்குரிய) சொற்களைச் சேர்த்திருந்தாலும், இவ்வகராதியில் அவற்றைத் தவிர்ப்பதாகக் கூறும் முனிவர் 'நாம் உரையாடலில் தீய சொற்களைப் பயன்படுத்தவே கூடாது. ஆனால் பிறர் பயன்படுத்தும்போது அவற்றின் பொருளை நாம் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம்' என விளக்குகின்றார்.

தொடக்க நிலையில் தமிழ் கற்போருக்குப் பயன்படுவதற்காக இயற்றப்பட்ட இவ்வகராதி போர்த்துக்கேயச் சொற்களை அகரவரிசையில் முன்னிறுத்தி அவற்றுக்கு இலத்தீனிலும், தமிழிலும் பொருள் கூறுகிறது. சதுரகராதியில் ஒரு சொல்லுக்கு உரிய எல்லாப் பொருளையும் குறித்துக் கூறிய முனிவர், இவ்வகராதியில் இன்றியமையாத சில பொருளையே தருகின்றார். ஆயினும் சிற்சில சொற்களுக்கு வழக்கிலுள்ள எல்லாப் பொருளையும் சுட்டத் தவறவில்லை முனிவர்.

பெரும்பாலும் போர்த்துக்கேயச் சொற்களுக்கு இணையான இலத்தீன் சொற்களைக் குறித்துவிட்டுப் பின் தமிழில் பொருள்கூறும் முனிவர், சில இடங்களில் இலத்தீன் சொற்களைத் தவிர்த்துவிட்டு, போர்த்துக்கேயச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தருவது ஏன் என்பது புரியவில்லை. சில சொற்களுக்குப் பொருள் கூறும்போது வாக்கியங்களில் அமைத்துப் பொருள் விளக்குவதையும் காண்கின்றோம். ஏறக்குறைய 4000 சொற்களைக் கொண்டுள்ள இவ்வகராதியே முனிவரின் மூன்று அகராதிகளுள்ளும் மிகச் சுருக்கமான அகராதி. அந்நாளில் தமிழைக் கற்றுக்கொள்ளத் தொடங்கும் பிற நாட்டார் போர்த்துக்கேய மொழியை அறிந்தவர்களாதலின் போர்த்துக்கேய மொழியினை முன்னிறுத்தி முனிவர் இவ்வகராதியைத் தொகுத்தார் எனலாம். இது அச்சிடப் பெற்றதாகத் தெரியவில்லை.

## 7. முத்தான மொழிபெயர்ப்பு

விவிலியத்துக்கு அடுத்த நிலையில் மிகுதியான உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் திருக்குறள் தான். உலகப் பொதுமறை எனப்போற்றப்படுகின்ற திருக்குறளில் அமைந்துள்ள பெரும்பாலான கருத்துக்கள் உலக மறைகளுக்கெல்லாம் பொதுவான கருத்துக்களே.

அதனால்தான் பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களும் திருக்குறளைத் தத்தம் சமயம் சார்ந்த நூல் என உரிமை பாராட்டுகின்றனர். உலக மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்படுவதற்கு இத்தகைய பொதுத் தன்மையே காரணம் எனலாம்.

திருக்குறளின் பொதுத் தன்மையை முதன் முதலாக உணர்ந்த ஐரோப்பியர் வீரமாமுனிவரே. எல்லா மனிதருக்கும் பொதுவான கருத்துக்கள் அமைந்த திருக் குறளை ஐரோப்பிய அறிஞருலகுக்கு அறிமுகப்படுத்த விரும்பிய முனிவர், அன்று ஐரோப்பாவில் அறிஞர்களின் மொழியாகக் கருதப்பட்ட இலத்தீன் மொழியில் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் பெயர்த்து வழங்கினார். முனிவர் காமத்துப்பாலை மொழிபெயர்க்காமைக்குக் காரணம் வரையப்பட்டிருப்பதை ஒரு கையெழுத்துப் படியில் கண்டதாக வி.மி. ஞானப்பிரகாசம் அடிகளார் கூறுகின்றார். காமத்துப்பாலை அடக்கத்தோடு தவிர்த்து விட்டு, முதலிருபாலகளை மட்டுமே மொழிபெயர்த்திருப்ப தாக அக்கையெழுத்துப்படியில் வரையப்பட்டிருப்பதை அவர் எடுத்துக்கூறுகின்றார்.

முனிவர் திருக்குறளில் ஆழ்ந்த புலமைமிக்கவர். தேம்பாவணியில் முப்பதுக்கு மேற்பட்ட பாடல்களில் திருக்குறள் தொடர்களையும், கருத்துக்களையும் அவர் அமைத்திருப்பதை நாம் கண்டு மகிழலாம் தாம் இயற்றிய தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், திறவுகோல் ஆகிய நூல்களில் பல இடங்களில் அவர் திருக்குறளை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

செந்தமிழ் இலக்கணமும் திறவுகோலும் இலத்தீன் மொழியில் இயற்றப்பட்டனவாதலின் அந்நூல்களில் தாம் மேற்கோளாகக் காட்டும் குறட்பாக்களை முனிவர் இலத்தீனில் மொழிபெயர்த்து வழங்குகின்றார். இம் மொழிபெயர்ப்புக்களை அவரது திருக்குறள் மொழி

பெயர்ப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'பல வேறுபாடு களை நாம் காணலாம்.

செந்தமிழ் இலக்கணத்தின் முதல் அதிகாரத்தில் 'அகரமுதல வெழுத்தெல்லாம்' என்னும் தொடரை 'நெடுங்கணக்கு 'அ'வில் தொடங்குகிறது. (Alphabetus Incipitper) அ, என மொழிபெயர்க்கின்றார். திறவு கோலில் 'அகரவரிசையின் எல்லா எழுத்துக்களும் 'அ'விலிருந்து தொடங்குகின்றன' என மொழிபெயர்க் கின்றார், அதையே திருக்குறள் மொழிபெயர்ப்பில் 'எல்லா எழுத்துக்களும் 'அ' என்னும் எழுத்தை முதலாகக் கொண்டுள்ளன' என வழங்குகின்றார்.

இவ்வாறு ஒரே குறட்பாவை ஒவ்வொரு நூலிலும் வெவ்வேறு வகையாக முனிவர் மொழிபெயர்த்துள்ளார். இதனாலேயே திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்பு முனிவருடையதல்ல என்பார் வின்சோன். ஆனால் முனிவரின் திருக்குறட்புலமையையும் இலத்தீன் மொழிப் புலமையையும் ஒருசேரப் பார்க்கின்றபோது இது முனிவரின் அளப்பரிய ஆற்றலையே காட்டுகின்றது என நாம் தெளிவாக உணரலாம்.

முனிவரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு முதலில் தமிழில் திருக்குறளைத் தந்து, அடுத்து அதை ஒலிப்பதற்கு உறுதுணையாக உரோமை எழுத்தில் ஒலி பெயர்ப்பினைத் தந்து, பின் இலத்தீன் மொழிபெயர்ப்பைத் தருகின்றது. இறுதியில் குறள் ஒவ்வொன்றுக்கும் பொருள் அல்லது இலக்கணக் குறிப்பினைத் தருகின்றது. சிற்சில இடங்களில் மொழிபெயர்ப்புடன் நீண்ட விளக்கம் தரப்படுகின்றது. ஐரோப்பியர்கள் திருக்குறளை ஒலித்து அறிவதோடு அதன் பொருளைத் தெளிவாகவும் நுணுக்கமாகவும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதே முனிவரின் நோக்கம் என்பதை உய்த்துணரலாம்.

சிறப்புமிக்க இந்நூல் முழுமையாக இன்னும் அச்சிடப் படாதது ஒரு பெருங்குறையேயாகும். இதன் சில அதிகாரங்களை மட்டுமே வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம் வெளியிட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பு முழுமையாக வெளிவந்தால்தான் திருக்குறளுக்கு வீரமாமுனிவர் வகுத்த பொருள் விளக்கத்தை நாம் அறியமுடியும், பிற உரை களுக்கும் வீரமாமுனிவரின் உரைக்குமுள்ள வேறுபாடு களை நாம் ஒப்பிட்டு உணரமுடியும்.

*'அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது'*

என்னும் குறளில் பிறவாழி என்னும் தொடருக்கு பிறி தொரு (பிற ஆழி) கடல் அதாவது துன்பக் கடல் என்றும், அறவாழி என்பதற்கு அறத்தின் கடலாக உள்ள கடவுள் என்றும் முனிவர் பொருள்கூறுகின்றார். பிறவாழி என்ப தற்குப் பிறவிக்கடல் எனப் பொருள் கொண்ட 'பிறவிப் பௌவம்' எனக் காளிங்கரும், 'பாவக்கடல்' எனப் பருதியாரும், 'அறத்துக்குப் புறம்பே உள்ள பொருளின்பம்' எனப் பரிமேலழகரும் கொள்ளும் பொருளைவிட முனிவர் பொருள் மாறுபட்டிருக்கக் காண்கின்றோம்.

ஊழ் என்னும் அதிகாரத்துக்கு ஒருவன்தான் முற் பிறப்பில் செய்த வினை மற்றொரு பிறப்பில் விளையும் முறையைக் குறிப்பதாகப் பலரும் பொருள் கொள்ளுதல் வழக்கம். மறுபிறவிக் கோட்பாட்டை ஏற்காத முனிவர் 'ஊழ்' என்னும் சொல்லுக்குத் 'தேவ கட்டளை' 'கடவு ளின் திட்டம்' என்பதாகவே பொருள் கொண்டு பிற உரையாசிரியர்களிடமிருந்து முற்றிலும் மாறுபடுகின்றார்.

'ஊழ்' எனில் பழமை எனப் பொருள்கொள்ளும் முனிவர், பிறர் 'ஊழ்' என்பதற்குக் கூறும் பொருளை விளக்கமாகக்கூறி,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குத் துய்த்தல் அரிது.

என்னும் குறள் 'ஊழ்' அதிகாரத்துக்குத் தாம் கூறும் பொருளே பொருத்தமானது என உறுதி செய்வதாக வாதிடுகின்றார். 'ஊழ் என்பதற்கு முற்பிறவியில் செய்தவற்றின் பயன் எனக் குறளாசிரியர் பொருள் கொண்டிருக்கக் கனவிலும் கருதியிருக்கமாட்டார்' என அழுத்தமாகக் கூறுகின்றார். இறைவனின் கட்டளைகளை மீறுவோர் தண்டனையும், அவற்றின்படி ஒழுகுவோர் பரிசும் பெறுவர் என்பதையே இவ்வதிகாரம் கூறுகிறது என்றெல்லாம் இவ்வதிகாரத்தின் மொழிபெயர்ப்புக்கு முடிவுரையில் முனிவர் கூறுவதை நாம் காணலாம்.

'மக்கட்பேறு' (புதல்வரைப் பெறுதல்) என்னும் அதிகாரத்தில் வரும்,

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.'

என்னும் குறளுக்குப் 'பழியறியாக பண்புடை மக்களைப் பெறும் ஒருவனை ஏழுபிறப்பிலும் தீயவை தீண்டா' என்று கூறப்படும் பொருளை மறுத்து முனிவர் வேறுபொருள் கூறுகின்றார். 'பழியறியாத பண்புடை மக்களைப்பெறும் ஒருவன் இறந்த பின்னும் கூட தீமைகள் அவனைத் தீண்டா. அதாவது குற்றமில்லாத மக்கள் உனக்கு இருந்தால், இறப்புக்குப் பின்னும் நீ அவர்களால் பயன் பெறுவாய். ஏனெனில் மன்றாட்டு, ஈகை, உண்ணா நோன்பு ஆகியவற்றால் அவர்கள் உனக்கு உதவுவர்' என விளக்கமாகவே கூறுகின்றார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றயவை'

என்னும் குறளுக்குக் 'கல்வியே ஒருவருக்கு அழியாத மிக உயர்ந்த செல்வமாகும். 'பொன்னும் பிறவும் அத்தகை யனவன்று' எனப்பொருள் கூறுவார் முனிவர்.

முனிவரது திருக்குறள் மொழிபெயர்ப்பே பின்னாளில் திருக்குறளைப் போப் ஐயர், எல்லீசு, ட்ரூ ஐயர் ஆகியோர் ஆங்கிலத்திலும், க்ராவ்ல் செர்மன் இலத்தீன் மொழிகளி லும், ஆரியேல் பிரெஞ்சு மொழியில் பெயர்த்துத் திருக்குறள் கருத்துக்களை மேனாட்டில் மேலும் பரப்பிட வழி வகுத்தது என்பது மிகையன்று.

## 8. வள்ளுவத்துக்கு வகுத்த உரை

வீரமாமுனிவர் திருக்குறளை ஐயந்திரிபற ஆழ்ந்து கற்றவர். தமது நூல்களிலெல்லாம் திருக்குறளை மேற் கோளாகக் காட்டி மகிழ்ந்தவர். தேம்பாவணியில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட இடங்களிலும், தொன்னூல் விளக்கத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட இடங்களிலும் திருக்குறளை அவர் எடுத்தாண்டுள்ளார். "வேதநூல்முதல் எவ்வகை நூலும் கல்லாதுணரவும் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி மெஞ்ஞானத் திருக்கடலாகிய ஒரு மெய்க் கடவுள் தன் திருவடி மலரே தலைக்கு அணியெனக் கொண்டேத்தி, இருளிராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும் பாலைச்சுரத்து அரிதலர்ந்த பதுமம் போலவும் மெய்யாம் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின் கண்ணும் கடவுள் ஏற்றிய ஞானத்திருவிளக்கு எறிப்பத் தெளிந்துணர்ந்து எங்குமொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்' எனத் தொன்னூல் விளக்க உரைப்பகுதியில் அவர் குறிப்பிடுவதால் வள்ளுவர் மீது அவர் எத்துணைப் பெருமதிப்புக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

அதனால்தான் அவர் திருக்குறளை இலத்தீன் மொழி யில் பெயர்த்ததோடு, 200 திருக்குறட்பாக்களைப் பரிமே லழகர் உரையுடன் தொகுத்துள்ளார். அத்துடன்

அமையாது 208 திருக்குறட்பாக்களைத் தொகுத்து அவற்றுக்குத் தாமே எளிய உரையும் எழுதியுள்ளார். சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசைப் பழஞ்சுவடி நூலகத்தில் ஓலைச்சுவடியாகப் (எண்: டி. 160) பாது காக்கப்பட்டு வரும் நூலைத் 'திருக்குறள் வீரமா முனிவர் உரை' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகம் (1985) அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இலத்தீன் மொழிபெயர்ப்பில் காமத்துப்பாலைத் தவிர்த்துவிட்ட முனிவர் இவ்வுரையில் காமத்துப்பாலின் நாணுத்துற வுரைத்தல், அலரறிவுறுத்தல் ஆகிய அதிகாரங்களிலிருந்து ஒவ்வொரு குறட்பாவினைச் சேர்த்திருத்தல் காண்கிறோம்.

இது வீரமாமுனிவர் நூலே என்பதற்கு 'ஊழ்' என்னும் சொல்லுக்கும், 'வல்லான் வகுத்த' எனத் தொடங்கும் குறட்பாவுக்கும் அவர் கூறும் பொருளொன்றே தக்க சான்றாகும்.

முனிவரது தொன்னூல் விளக்க உரையிலும் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் மறுத்தல், லுத்தேரினத் தியல்பு போன்ற உரைநடைநூல்களிலும் பயின்றுவரும் நடைச்சிறப்பை நாம் அவரது திருக்குறள் உரையில் காண வில்லை என்பது உண்மையே. ஆனால் அவரது பரமார்த்த குரு கதையின் தமிழ்நடைக்கு இந்நூலின் நடை ஒத்து விளங்கக் காணலாம். ஆகவே கல்வியறிவு மிகுதியும் பெற்றிராத எளிய மக்களும் திருக்குறளைக் கற்றுப் பயன் பெற வேண்டுமென்பதற்காகவே முனிவர் இவ்வுரையை இயற்றினார் என்பது தெளிவு. இந்நூலில் நாம் காணும் எளிய உவமைகளும் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

இவ்வுரையை முனிவர் எவ்வாண்டில் எழுதினார் என்பதற்கு உரிய ஆதாரம் எதுவும் நமக்குக் கிடைக்க வில்லை.

பரிமேலழகர், காளிங்கர் ஆகிய உரையாசிரியர்களின் உரையையே முனிவர் பெரும்பாலும் பின்பற்றுகின்றார்.

ஆயினும் அவ்வப்போது அவர்களது கருத்திலிருந்து விலகித் தாம் சரியென்று தெளிந்த உரையினை வரையவும் அவர் தயங்குவதில்லை. 'ஊழ்' என்னும் அதிகாரப் பொருளாக அவர் கூறும் கருத்து இதற்குரிய சான்றாகும். அவ்வாறே 'நல்லார்கட்பட்ட....' (குறள் 408) என்னும் குறட்பாவுக்கு ஆன்மாவுடன் தொடர்புபடுத்தி அவர் வரைந்துள்ள உரை அவரது சொந்த உரை என்பதை நாம் உணரலாம்.

அறம், பொருள், காமம் ஆகிய மூன்று பாலிலிருந்தும் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து உரைவகுத்துள்ள முனிவர் ஒவ்வொரு குறட்பாவுக்கும் எழுதும் உரையைப் பொருள், விளக்கம், சொற்பொருள் என மூன்றாக வகுத்துக் கொண்டு உரை கூறுகின்றார்.

பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் தமிழ்நடை மிகக்கடினமான தென்பதை அனைவரும் அறிவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த பயிற்சியுள்ளவர்களே அத்தகைய உரையினைப் பயின்று பயன்பெற முடியும். முனிவர் வகுத்துள்ள உரையோ ஓரளவு தமிழ் கற்றோரும் புரிந்துகொள்ளுமளவுக்கு மிக எளிய நடையில் அமைந்துள்ளது.

எக்கச்சிக்கமாய், புழங்கிறவன், எத்தினை, பொல்லாப்பு, வேறொருத்தன், கெட்டுப்போச்சுது, உறமுறையில் பிறத்தியில், காய்மகாரம் போன்ற எளிய பேச்சுத்தமிழ்ச் சொற்களும், பூசை, மோட்சம், பாரிசம், சந்தோஷம், உபவாசம், வேஷம், சாஸ்திரம், ராசா, ஆஸ்தி போன்ற எளிய வடமொழிச் சொற்களும் முனிவரின் உரையில் பரவலாக விரவிக் கிடக்கக் காண்கிறோம்.

இந்நடை எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய நடை என்பதில் ஐயமில்லை. ஆகவே சாதாரணப் பொது மக்களிடையே திருக்குறளை முதல்முதலாகப் பரப்ப

முயன்ற பெருமை முனிவருக்கே உரியது என்பதில் ஐயமில்லை.

## 9. முனிவர் ஒரு முதல்வர்

ஏறத்தாழ முப்பத்தாறு ஆண்டுகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் முனிவர் பணிபுரிந்த பாங்கினை இந் நூலில் விரிவாக கூறியுள்ளோம். முனிவர் பணிபுரிந்த காலத்தில் எத்தகைய அரசியல், சமூகச் சூழ்நிலை தமிழகத் தில் நிலவியது என்பதையும் விளக்கியுள்ளோம். ஐரோப்பாவிலிருந்து தமிழகத்துக்கு வந்து தமிழ்ப் பண் பாட்டைத் தழுவிப் பெயரில் மட்டுமல்லாமல் வாழ்விலும் தமிழ் முனிவராகவே வாழ்ந்த இவரது பணிகளை ஆராய்ந்து பார்க்கும்போது தமிழை இத்துணைச் சிறப்பாகவும் ஆழமாகவும் கற்றிட இவருக்கு நேரமும் வாய்ப்பும் எவ்வாறு கிடைத்திருக்கும் என நாம் வியப்பில் ஆழ்ந்துவிடுகிறோம்.

அதுவும் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கரை கண்டு தேர்ந்த புலமைச் சிறப்பு தமிழருக்கே அரிதாக வாய்ப்பது என்பதை நோக்கும்போது, தமிழோடு தொடர் பில்லாத இத்தாலிய மொழியினைத்தாய்மொழியாகக் கொண்டு, இளமையில் பிற ஐரோப்பிய மொழிகளைப் பயின்ற முனிவர் தமிழில் இத்துணைப்புலமை பெற்றது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்ள இயலாமல் தவிக் கின்றோம்.

முனிவருக்கு முன்பு வாழ்ந்த அண்டிறீக்கிப் பாதிரி யார், அகில்லார், தத்துவப்போதகர் ப்ரொயென்சா போன்றோரும், முனிவர் காலத்தில் வாழ்ந்த தே பூர்சே, சீகன்பால்கு போன்றோரும் தமிழைக் கற்றார்களென்பது உண்மையே. ஆனால் அவர்கள் முனிவரைப்போல தமிழைக் கற்றுத் துறைபோகியவர்களல்லர் என்பதும் உண்மையே,

அவர்கள் இலக்கணம் அல்லது உரைநடை நூல்கள் மட்டுமே இயற்றியவர்கள். ஆனால் முனிவரோ!இலக்கியம், இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு, உரை எனப் பல துறை வல்லுநராகத் திகழ்ந்தவர். மற்றவர்களின் இலக்கண நூல்களுடன் ஒப்பிடும்போது முனிவர் இயற்றிய இலக்கணங்கள் ஈடிணையற்றவை என்பதில் ஐயமில்லை. முனிவரின் இலக்கண நூல்களே அவரது தமிழ்ப்புலமையை எளிதாகவும் உறுதியாகவும் நிறுவ வல்லவை. அவரது அகராதிகளும் இலக்கியங்களும் அவர் ஐரோப்பியத் தமிழறிஞரிடையே தலைசிறந்தவர் என்பதோடு, பிற தமிழ்ப் புலவர்களோடு ஒப்பிடும்போது தலைசிறந்த தமிழறிஞராகவும் புலவராகவும் கருதப்படத் தக்கவர் என்னும் உண்மையை நிலைநாட்ட வல்லவை. முனிவரின் உரைநடை நூல்களும் பிற ஐரோப்பியத் தமிழறிஞர்களின் நூல்களைவிடச் சிறப்பு மிக்கவை என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறப்புமிக்க முனிவரின் வாழ்வும் பணியும் பற்றி முத்துசாமிப் பிள்ளை தொடங்கிப் பலரும் நூலாக்கியுள்ளனர், சிலர் கட்டுரைகள் வரைந்துள்ளனர். வீரமாமுனிவர் கலம்பகம், வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ் என முனிவர் புகழ்பாடும் நூல்களும் வெளிவந்துள்ளன.

இவற்றுள் பெஸ் அடிகளாரும், முனைவர் சூ. இன்னாசி அவர்களும் தவிர மற்றவர்கள் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் முனிவரின் வாழ்வை அணுக வில்லை. ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த செய்தி களோடு, செவி வழிச்செய்திகளையும் கலந்து அவர்கள் எழுதியுள்ளனர். எனவே ஆதாரபூர்வமான உண்மைச் செய்தி எது, ஆதாரமில்லாத செய்தி எது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் கடினமாக இருப்பதை வாசகர்கள் உணர்வர்.

அதோடு, பலரும் முனிவரின் வாழ்க்கைச் செய்தி களைக் கூறிவிட்டு, அவரது தமிழ்த்தொண்டினைத்

தொட்டுக்காட்டுவதோடு அமைந்துவிடுவதைக் காண்கின்றோம்.

இக்குறைகளைக் களைந்து சான்றுகளின் அடிப்படையில் இந்நூலை இயற்றியுள்ளோம். முனிவர் எழுதிய ஒவ்வொரு நூலைப்பற்றிய விளக்கமும் இந்நூலில் வரைந்துள்ளோம்.

இத்தாலி நாட்டிலிருந்து இன்றமிழ்நாடு போந்து, இணையற்ற பணிபுரிந்த வீரமாமுனிவரின் உண்மைச் சிறப்பினை உலகம் உணர்ந்துகொள்ள இந்நூல் துணை புரியும்.

முனிவர் பிறப்பின் மூன்றாம் நூற்றாண்டு விழா (1980) தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்பட்டபோது, முனிவரின் சிறப்பினைத் தமிழகத்துக்கு அவ்விழா நினைவூட்டியது. அவ்வமயம் முனிவர் பிறந்த ஊராகிய காஸ்தில்யோனே மக்களும் முனிவரின் மூன்றாம் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஊரின் முக்கிய சாலை ஒன்றுக்கும் அரசு நடுநிலைப் பள்ளிக்கும் முனிவரின் பெயர்சூட்டி, முனிவரின் பளிங்குச் சிலையை நகராட்சி மன்றத்தில் நிறுவி முனிவரை நினைவு கூர்ந்தனர் அம்மக்கள்.

தமிழை உலகறியச் செய்த வீரமாமுனிவரின் புகழ் தமிழ் கூறு நல்லுலகில் பரவி, உண்மையான புலமையையும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு உண்மை காணும் நடுவுநிலைமையையும் நம் உள்ளத்தில் வளர்க்கவேண்டும். இதுவே இன்றைய உலகுக்குத் தேவையான உயரிய தமிழ்ப்பணியாகும்.

# துணை நின்ற நூல்கள்

## தமிழ் நூல்கள்


அந்தோணி இராசு, ஆ.பி. கிறித்துவ அம்மானைச் சிந்தனைகள், ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சி; 1988.

அந்தோணி குருசு, அ. கன்னிச் சங்கு, தொன் போஸ்கோ அச்சகம், தஞ்சாவூர்; 1981.

அமுதன் அடிகள் தனிநாயகம் அடிகளார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; 1993.

அமுதன் அடிகள் வீரமாமுனிவரின் பன்மொழிப் புலமை (வளன் ஆயம்), தூய வளனார் கல்லூரி, திருச்சிராப் பள்ளி; 1993.

ஆசீர்வாதம், எஸ். தேம்பாவணி தந்த சீரியர், ஜெக செல்வன் கம்பெனி, திருச்சிராப் பள்ளி; 1970.

ஆபிரகாம் அருளப்பன் சில இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், அருள் அச்சகம், பாளையங் கோட்டை; 1971.

இராசமாணிக்கம், ச. (பதிப்) — அடியார் வரலாறு, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1967.

சூ. இன்னாசி, — கிறித்தவமும் தமிழும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; 1990.

" (பதிப்.) — சதுரகராதி, வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், பாளையங் கோட்டை; 1979.

" — சதுரகராதி ஆராய்ச்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை; 1981.

" — தேம்பாவணித்திறன், வளனருள் வெளியீடு, பாளையங்கோட்டை 1983.

" — தேம்பாவணித்தேன், மரியகம், சென்னை; 1994.

" — விரமாமுனிவ மாலைகள்; சென்னைப் பல்கலைக்கழகம்; சென்னை; 1985.

சௌந்தர பாண்டியன் எஸ். — திருக்குறள் — விரமா முனிவர் உரை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 1985,

கௌரி — தமிழ்ச் சான்றோர்கள், முல்லை நிலையம், சென்னை; 1991.

சுப்பிரமணியன், ச.வே. — தொன்னூல் விளக்கம் — திறனாய்வு, மூலம், விளக்கம்; தமிழ்ப் பதிப்பகம், சென்னை. 1978.

சுப்பிரமணியன், ச.வே. மொழிக் கட்டுரைகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை; 1978.

சுந்தரம், ஜே.ஜி. தமிழ்த்தொண்டர், தமிழ் இலக்கியக்கழகம், தூத்துக்குடி; 1950.

,, தேம்பாவணி ஆராய்ச்சி. அர்ச். சவேரியார் பிரஸ், தூத்துக்குடி; 1945.

ஞானப்பிரகாசம், வி.மி., சி க.ப. அறவாணன் வீரமாமுனிவர், தமிழ்ப்பண்பாட்டு மன்றம், சென்னை; 1985.

தனிநாயக அடிகளார் தமிழ்த்தூது, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி; 1952.

முத்துச்சாமிப்பிள்ளை வீரமாமுனிவர் சரித்திர வரலாறு சென்னை; 1843.

பண்டாரம் நம்பியார், ஈ. தமிழ் வளர்த்த தைரிய நாதர் என்னும் வீரமாமுனிவர், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்; 1970.

ரம்போலோ மாஸ்கரேனஸ் கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள், தமிழ் இலக்கியக்கழகம், திருச்சிராப்பள்ளி, 1972.

,, (உரை) திருக்காவலூர்க் கலம்பகம்—மூலமும் உரையும், தமிழ் இலக்கியக்கழகம், திருச்சிராப்பள்ளி; 1975.

| | |
|---|---|
| வளன் அரசு, பா. | தேம்பாவணித்திறன், கதிரவன் பதிப்பகம், பாளையங் கோட்டை; 1988. |
| ,, | வீரமாமுனிவர் ஒரு விளக்கம், நோபிலி, வெளியீட்டகம் 1982. |
| வீரமாமுனிவர் | அர்ச். கித்தேரி அம்மாள் அம்மானை, தே. நோபிலிபிரஸ், மதுரை.1947. |
| ,, | ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம், அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடம், சென்னை; 1891. |
| ,, | அடைக்கல மாலை, அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா. தேவாரம் — கருணாம்பரப் பதிகம், தமிழ் இலக்கியக்கழகம், திருச்சி; 1972. |
| ,, | திருக்காவலூர்க் கலம்பகம், வேதநாயகர் இலக்கிய மன்றம், குடந்தை; 1975. |
| ,, | தேம்பாவணி, மிஷன் பிரஸ், புதுவை; 1956. |
| ,, | பதிகர்பேரில் திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக் கெழுதின நிருபம் ச திருச்சபைக்குப் பொது நிருபம். |
| ,, | வேத விளக்கம், பேதகமறுத்தல், லுத்தேரினத்தியல்பு, மாதா கோயில் அச்சுக்கூடம், புதுவை மதுரை 1936. |

## பிறமொழி நூல்கள்

Babington, B.G. (Trans.) A GRAMMAR OF THE HIGH DIALECT OF THE TAMIL LANGUAGE CALLED செந்தமிழ், The Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal, Library, Thanjavur: 1974,

Beschi, C. J. CLAVIS HUMANIORUM LITTERARUM SUBLIMIORIS TAMULICI IDIOMATIS. Tranquebar: 1876.

,, GRAMMATICA LATINO-TAMULICA (கொடுந்தமிழ்) Pudicherry, 1845.

,, GRAMMATICA LATINO-TAMULICA (செந்தமிழ்) Trichinopoly; 1917.

Bess, Leon FATHER BESCHI: HIS TIMES AND HIS WRITINGS St. Joseph's Industrial School Press; Trichinopoly, 1918.

,, LA MISSION DU MADURE-HISTORIQUE DE SES PANGOUS, Trichinopoly, 1914.

Borghi, Ferrante Luigi — UN CASTIGLIONESE NELL' INDIA, Editrice alce, Mantova; 1962.

Houpert, J.C. — A SOUTH INDIAN MISSION -THE MADURA CATHOLIC MISSION, St. Joseph's Industrial School Press, Trichinopoly: 1937.

" — CONSTANTIUS JOSEPH BESCHI, Catholic Truth Society of India, Trichinopoly; 1937.

Innasi, S. — DIMENSIONS OF TAMIL CHRISTIAN LITERATURE, Mariyakam, Madras, 1994.

Mahon, G.W. (Trans) — A GRAMMAR OF THE COMMON DIALECT OF THE TAMIL LANGUAGE CALLED கொடுந்தமிழ், The Tanjore Maharaja Serofoji's Saraswati Mahal Library, Thanjvur; 1971.

Pope, G.U. (Trans.) — The SACRED KURRAL OF TIRUVALLUVA NAYANAR, Asian Educational Services, Madras, 1990.

Sorrentino, Antonio — L'ALTRa PERLA DELL' INDIa, Editrice Missionaria Italiana, Bologna, 1980.



## நூலாசிரியரைப் பற்றி

பெயர் : அமுதன் அடிகள்
ஆயம் : கத்தோலிக்க சமயக் குரு
பிறப்பு : புன்னைக்காயல்-
சிதம்பரனார் மாவட்டம்
18-4-1943

கல்வி : எம்.ஏ. மெய்யியல் 1966—உர்பன் பல்கலைக்கழகம் உரோமை.
எம்.ஏ. சமயவியல் 1969 உர்பன் பல்கலைக்கழகம் உரோமை.
எம்.ஏ. இதழியல் 1975—மார்க்கெட் பல்கலைக்கழகம் மில்வாக்கி (U.S.A)
எம்,ஏ. உளவியல் 1977—மார்க்கெட் பல்கலைக்கழகம் மில்வாக்கி (U.S.A)
எம்.ஏ. தமிழ் 1987 சென்னை பல்கலைக்கழகம்.

ஆய்வு : முனைவர் பட்டத்திற்காக வள்ளலாரின் ஆன்மிக அனுபவங்கள் பற்றிய ஆய்வு (பாரதிதாசன் பல்கலைக் கழகம்)

எழுதிய நூல்கள் ; நெஞ்சம் நிறைந்தவர் 1986
தமிழர் செல்வம் 1990
உலகெல்லாம் தமிழ் முழக்கம் 1992
தனிநாயகம் அடிகள் 1993
கட்டுரை பல இதழ்களில் சமய, இலக்கிய, வரலாற்றுக் கட்டுரைகள்.

பொறுப்பு : ஆசிரியர், வேளாங்கண்ணி குரலொலி 1977—87
Editor, Velankanni calliny 1977—87
இயக்குநர், தமிழகக் கத்தோலிக்க எழுத்தாளர் பேரவை 1977 முதல்—
செயலர், தமிழ் இலக்கியக்கழகம், திருச்சி 1987 முதல்—
முதல்வர், தனிநாயகம் அடிகள் இதழியல் கல்லூரி திருச்சி 1992 முதல்—
செயற்குழு உறுப்பினர், இந்திய கத்தோலிக்க அச்சுத் துறைக்கழகம் 1992 முதல்—